# கலைக்கல்வி
# வளநூல்

**உயர் தொடர் கல்வி வகுப்புகளுக்கு**

கேரள அரசு
கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2014

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா,
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா,
விந்திய ஹிமாசல யமுனா கங்கா,
உச்சல ஜலதி தரங்கா,
தவ சுப நாமே ஜாகே,
தவ சுப ஆசிஸ மாகே,
காகே தவ ஜய காதா
ஜனகண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா.
ஜய ஹே, ஜயஹே, ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு . இந்தியர் அனைவரும் எனது உடன் பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமை கொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்து கொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

நான் எனது நாட்டினுடையவும், நாட்டு மக்களுடையவும் வளத்திற்காகவும், இன்பத்திற்காகவும் முயற்சி செய்வேன்.

State Council of Education Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala.

website : www.scert.kerala.gov.in
email : scertkerala@gmail.com
phone : 0471-2341883, Fax : 0471-2341869
First Edition : 2014
Printed at : KBPS, Kakkanad, Kochi

நன்பர்களே,

கல்வி உரிமைச் சட்டத்தின் படி கலைக்கல்வியும் பிற பாடங்களைப் போன்று தற்போது முக்கியமானதாக வந்துள்ளது, ஒன்றாம் வகுப்பு முதல் ஒருங்கிணைந்த முறையில் பாட ஏற்பாடு வடிவமைக்கப்பட்டுள்ளது, இதற்கேற்ப வகுப்புச் செயல்பாடுகளுக்கு உதவும் வகையில் ஆசிரியர் களுக்கான வளநூல் SCERT தயாரித்துள்ளது

படம் வரைதல் (ஒவியம்) இசை, நாட்டியம், நாடகம் என்று நான்கு மண்டலங்களாகக் கலைக்கல்வி எடுத்துரைக்கப்படுகிறது, இவை ஒவ் வொன்றினுடையவும் கற்றலை அடைவுகள், கருத்துக்கள், திறன்கள், கற் றல் செயல்பாடுகள், மதிப்பீட்டு முறைகள் ஆகியவை விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன, ஒன்று முதல் நான்கு வரை, ஐந்து முதல் ஏழு வரை, எட்டு முதல் 10 வரை வகுப்புகள் என்று மூன்று புத்தகங்களாக வளநூல் கள் தயாரிக்கப்பட்டுள்ளது.

நமது கல்வி நிலையங்களில் கலைக்கல்வி நல்ல முறையில் நடை முறைப்படுத்த இது மிகவும் பயன்படும் என்று கருதப்படுகிறது.

நல்வாழ்த்துக்களுடன்

**முனைவர் எஸ். இரவீந்திரன் நாயர்**
**இயக்குனர்**
**எஸ். ஸி. இ. ஆர். டி**

## Members

- Kunjuraman Puthuchery chathothu, Let, DIET, Ernakulam,
- R.K Ramadhas, Let, DIET, Kollam
- N.Prasad, let, DIET Kollam,
- Dr. K.S.Vasudevan.let. DIET Kozhikode.
- Sunil kumar, DIET Kannur,
- Dr, Gokuldhansan Pillai, curriculam Head (Rtd) SCERT, Kerala,
- Dr,Venugopu,Reaserch officer (Rtd) SCERT, Kerala,
- Dr. M.S. Radhakrishnan Seniar let DIET,
- Dr, K G. Rajan,Seniar let DIET,(Rtd)
- Dr,Vineetha, Nedungadi,
- C. Rejendran, A.V.G.B.H.S Thazhava,
- B . Karthikeyan pillai,G V HSS, Porvazhi,
- B. Sunilkumar,Pavandoor HSS, Kozhikode
- Madhusoodhanan, GMHSS, Koyilandi
- V. Vargheese Kulathil, GVHSS, Pallikunthu, Kannur
- Dr. Abdul Latheef, GHSS, NGO Quarters, Kozhikode,
- Suvarna chandrath, Thottatta North, LPS Kannur,
- B. Premalatha, GVHSS, Kottakulangara, Chavara,
- M. Jayakrishnan, GUPS Manjery,
- T. Pradeepkumar, CHMKMHS, Karananeer, Malappuram,
- M.P. Balakrishnan, GVHSS, North Edapally
- A.J. Sethunathan Pillai, GVHSS, Vadakkunthukavu, Adoor.
- C.V. Anoop. SSTHSS, Lakkidi,
- P.D. Revamma, KPR GHSS, Kalliachery, Kannur,
- G.S. Jayalakshmi. GHs. Karinkulam,
- R. Prasannakumar. GHS, Kadaminitta,
- A.V. Sindhu GVHS, Agali,
- Kalamandalam Sathyavridhan, AKKR Girls HSS, Chelanoor,
- Dr P A Marylitty CCPL MAI HS Peruman Ernakulam,
- C S Rajendran HSA (Rtd)
- M. Sriharshan, Namrahtkara UPS, Koyilandi, Kzhikode,
- Ramesh Kavil, GLPS, Azhachavattam, Kozhikode
- Subhash chandra Bose, D P GHSS Konni,

## Acadami Co-ordinater

- Dr, N. Gopala Krishna pillai, Research officer, SCERT, Keralam,

# உள்ளடக்கம்


1. கேரளப் பள்ளி பாட ஏற்பாடு-2013 பொது அணுகு முறை ........ 7
2. கலைக்கல்வி-சிறப்பும் முக்கியத்துவமும். ........ 32
3. கலைக்கல்வி-கற்றல் அணுகுமுறை ........ 36
4. கலைக்கல்வி- பல்வேறு மண்டலங்கள் ........ 40
5. கலைக்கல்வி-மதிப்பீடு ........ 45
6. கலைக்கல்வி-மேம்படுத்துவதற்கான வழிகள் ........ 50
7. கலைக்கல்வி-உள்ளடக்க விளக்கங்கள் ........ 51

7.1 ஓவியம் ........ 52
- ஐந்தாம் வகுப்பு ........ 54
- ஆறாம் வகுப்பு ........ 61
- ஏழாம் வகுப்பு ........ 70

7.2 இசை ........ 85
- ஐந்தாம் வகுப்பு ........ 88
- ஆறாம் வகுப்பு ........ 101
- ஏழாம் வகுப்பு ........ 119

7.3 நாட்டியம் ........ 135
- ஐந்தாம் வகுப்பு ........ 138
- ஆறாம் வகுப்பு ........ 146
- ஏழாம் வகுப்பு ........ 156

7.4 நாடகம் ........ 163
- ஐந்தாம் வகுப்பு ........ 167
- ஆறாம் வகுப்பு ........ 175
- ஏழாம் வகுப்பு ........ 183

பிற்சேர்க்கை-1 செயல்பாட்டு நாட்டியக்கலை ........ 189
பிற்சேர்க்கை-2 மாதரி வினாத்தாள் ........ 201

# 1. கேரளப் பள்ளிப் பாட ஏற்பாடு 2011 பொதுஅணுகுமுறை

## 1.1 முன்னுரை

இந்தியாவில் வாழ்க்கைத் தரத்தில் பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியாகத் திகழும் மாநிலம் கேரளமே. பொதுக்கல்வி, கேரள மக்களின் சுகாதாரம் இவற்றின் மேன்மைகளே கேரளத்தின் இச்சிறப்புக்கு காரணம். சமூகத்திலுள்ள எல்லா குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்திருந்தாலும் அவர்களுக்கு தரமான கல்வி அளித்தல் என்பது கல்வித்துறை எதிர்கொள்ளும் மிக்ப்பெரிய சவாலாகும். 1986- இல் ஆரம்பிக்கப்பட்ட தேசியக் கல்விக் கொள்கையின்படி தரமான கல்வியை நோக்கமாகக்க கொண்டு அடிப்படை வசதிகளும் ஆசிரியர் பயிற்சிகளிம் நடத்தப்பட்டன. இத்துடன் பாடத்திட்டத்தைக் குழந்தை மையமாகவும், செயல்பாட்டு வழியிலும், செயல்முறை அடிப்படையிலும் காலத்திற்கேற்ப மாற்றுவதற்கான முயற்சிகள் நடந்தன. இதன் பயனாக அறிவாக்கம் குழந்தைகளிடம் சுயமாக நடக்கும் செயல்முறை என்பதை நாம் கண்டடைந்தோம். இதன்முலம் குழந்தையை மையமாகக் புதிய கற்றல் செயல்முறையை நடைமுறைப்படுத்த வேண்டும்.

வாழ்க்கையின் எல்லாத் துறைகளும் அன்றாடம் மாறிக்கொண்டே இருக்கின்றன. அதற்கேற்ப கற்பிக்கும் முறை, கற்றல் உளவியல், கற்றல் துணைக்கருவிகள், கற்றல் அனுபவ பரிமாற்றம், மதிப்பீடு போன்றவற்றிலும் மாற்றம் ஏற்படுத்த வேண்டும். அனைத்து பிரிவு குழந்தைகளின் கற்றல் வளர்ச்சியை நாம் நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

“வேறுபட்ட சமூக பொருளாதாரச் சூழல்களிலிருந்து வரும் குழந்தைகளாலும் வேறுபட்ட உடல் உள்ளத் திறனுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் படிப்பதற்கும் பள்ளிக்கூடங்களில் வெற்றி கல்வியில் பெறுவதற்குமான வாய்ப்பை உறுதிப்படுத்த வேண்டும். ஆண், பெண், சாதி, மொழி, பண்பாடு, மதம், உடற்குறைகள் இவைமூலம் உருவாகும் ஏற்றத் தாழ்வுகளை எதிர் கொள்ளும் கொள்கைகளும் சட்டங்களும் மட்டும் போதாது. மாறாகக் குழந்தைப் பருவம் முதலே பொருத்தமான கற்றல் நோக்கங்களையும் கற்பித்தல் முறைகளையும் தேர்ந்தெடுத்து வடிவமைக்க வேண்டும்” (N.C.F. 2005 Page-27)

- பலதரப்பட்ட சமூக பொருளாதாரச் சூழலை உடையவர்கள்
- பலதரப்பட்ட உடல் உளத் திறனுடையவர்கள்.

இவ்வாறு எல்லா பிரிவைச் சார்ந்த குழந்தைகளும் கற்றல் அடைவுகளைப் பெற கற்றல் செயல்முறைகளின் எல்லா மண்டலங்களிலும் நுட்பமாகவும் நுணுக்கமாகவும் மாற்றங்களை

ஏற்படுத்த வேண்டுமென NCF கூறுகிறது . காலத்திற்கேற்பப் பாடத்திட்டத்தைச் சீரமைத்து கல்வியைச் செயல்படுத்தும் அமைப்புகள் சீராகச் செயல்பட்டால் மட்டுமே இந்த நோக்கத்தை அடைய முடியும். இக்கண்ணோட்டத்தின் அடிப்படையில் தற்போது பாடப்புத்தகம் சீரமைக்கப்படுகிறது. கல்வித் தொடர்பாக செயல்படும் வல்லுஞர்களின் அனுபவங்களையும், கண்டுபிடிப்புகளையும், ஆராய்ச்சிகளையும் ஒருங்கிணைத்து இச் சீரமைப்பு நடைபெறுகிறது. சரியானதிலிருந்து மிகவும் சரியானதை நோக்கி என்ற அணுகுமுறையே இங்குக் கடைபிடிக்கப்பட்டுள்ளது.

## 1.2 பாடஏற்பாடு சீரமைப்பின் முக்கியத்துவம்

கடந்த 5 வருட காலமாகக் கல்வித்துறையில் ஏராளம் நவீன கொள்கைகள் உருவாகி உள்ளன. இந்தியாவில் 2009 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட கல்வி உரிமைச் சட்டம் குழந்தைகளுக்குத் தரமான கல்வி அவர்களின் உரிமை அடிப்படையிலான பள்ளிக்கூடம் (Right based Educational Institution) என்ற நோக்கத்தை அடைய முழுப் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த நமது ஏற்பாட்டை சர்வதேச தரத்திற்கு உயர்த்த வேண்டும். சர்வதேச தரம் என்பது ஏதேனும் ஒரு நாட்டின் நிலையல்ல. மாறாக ஒரு குறிப்பிட்ட கால அளவைக் கடந்து செல்லும் குழந்தை உலகில் எங்கிருந்தாலும் காலத்திற்கேற்ற அறிவுகளையும் , கற்றல் அனுபவங்களையும் பெற வேண்டும். ஆகவ் உலகளாவிய நிலையில் செயல்படுத்தப்பட்ட நவீனமாக சிறந்த கற்றல் கற்பித்தல் உத்திகள் கேரளக் குழந்தைகளுக்கும் கிடைக்கும் வேண்டும்..

கல்வி உரிமைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள பாட ஏற்பாடு, மதிப்பிடுதல் ஆகியவை தொடர்பான சட்டங்களை பாடத்திட்ட சீரமைப்பிற்கு அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.

---

### கல்வி உரிமைச் சட்டம் – 2009
### பிரிவு – 29 (அத்தியாயம் 5)
### பாடஏற்பாடும் மதிப்பீட்டுச் செயல்முறை வரிசையும்

*(1) ஆரம்பக் கல்விக்கான பாட ஏற்பாடும் மதிப்பீட்டுச் செயல்முறை வரிசையும் அரசு அறிக்கை மூலம் குறிப்பிடும் ஒரு கல்வி அமைப்பினால் செயல்படுத்தப்பட வேண்டும்.*

(2) கல்வி அதிகார நிலை 1- ம் துணைபிரிவின்படி பாடத்திட்டமும் மதிப்பீட்டையும் செயல்முறை வரிசையையும் செயல்படுத்தும் போது கீழே வருவனவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும் :-

*(a) அரசியலமைப்பில் வலியுறுத்தப்படுகின்ற மதிப்புகளுக்கு பொருத்தமாக அமைதல் வேண்டும்.*

*(b) குழந்தையின் பன்முக வளர்ச்சி*

*(c) குழந்தையின் அறிவும் திறனும் புலமையும் படிப்படியாக வளரச் செய்தல்.*

*(d) உடல் உளத் திறமைகளின் முழு வளர்ச்சி*

*(e)* குழந்தைக்கு நெருக்கமானதும் குழந்தைமையமானதுமான செயல்பாடுகள், கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சிகள் இவற்றின் மூலம் கற்றல்.

*(f)* கற்பிக்கும் மொழி குழந்தையின் தாய்மொழியில் அமைய வேண்டும்.

*(g)* பயம் மனஅழுத்தம் ஏற்படும் சூழ்நிலை, மனக்கவலை போன்ற வற்றிலிருந்து குழந்தையை விடுபட செய்வதும் சுதந்திரமாக கருத்துகளை தெரிவிப்பதற்கு குழந்கைக்கு துணிபுரிதலும்.

*(h)* அறிவை உட்கொள்வதற்கும் அதை நடைமுறைப் படுத்துவதற்குமான குழந்தையின் திறனை ஒருங்கிணைத்து தொடர் மதிப்பீடு செய்தல்.

---

கல்வி உரிமைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட சூழலில் தொடர்ச்சி மற்றும் முழுமை யான மதிப்பீட்டை நடத்துவது நமது தலையாய கடமையாகும். இதை உறுதி செய்யும் வகை யில் பாடத்திட்டத்தைச் சீரமைப்பது இன்றியமையாதது. இந்தச் சூழலின் அடிப்படையில் தான் நாம் பாடத்திட்ட சீரமைப்பைப் பார்க்க வேண்டும்.

கேரளப் பள்ளிப் பாடத்திட்டம் (2013) இன் தனித்தன்மைகள் என்னவென்று பார்க்கலாம்.

1. குழந்தை மையமானதும் செயல்முறைகளுடன் இணைந்ததும் சிறந்த செயல்பாடுக ளுடையதும் மதிப்புகளை அடிப்படையாகக் கொண்டதுமான பாட ஏற்பாட்டை அமைக்க வேண்டும்.

2. பௌதீக நிலையிலும் செயல்முறையிலும் மனநிலையிலும் குழந்தைகளைச் சென்ற டைய வேண்டிய கற்றல் அடைவுகளுக்கு முக்கியத்தும் அளிக்க வேண்டும்..

3. அறிவாக்கம் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்ட பாடத்திட்டத்தை உரு வாக்க வேண்டும்.

4. கல்விப் பரிமாற்றச் செயல்களில் பலவிதமான யுக்தி பூர்வமான கற்றல் உத்திகளைக் கையாளவும் உபயோகிக்கவும் ஆசிரியர்களுக்குச் சுதந்திரம் அளிக்க வேண்டும்.

5. கற்றல் அடைவு, பொருளடக்கத் தன்மை குழந்தைகளின் பல்வேறு தரம் போன்ற வற்றைப் பிரித்தறிந்து பல்வேறு கற்றல் கற்பித்தல் உத்திகளைச் செயல்படுத்த வேண்டும்.

6. இலவசமாக அனைவருக்கும் கல்வி அளித்தல் என்பது போலவே அனைத்துக் குழந் தைகளின் கற்றல் அடைவுகளை உறுதி செய்வதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

7. மழலைப் பள்ளி முதல் மேனிலைப் பள்ளி வரை ஒன்றாகக் கருத்திற் கொண்டு பாடத் திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

8. ஒவ்வொரு வகுப்பிலும் வெவ்வேறு பாடங்களின் உள்ளடக்கம் தேசிய அளவில் உருவாக்கப்பட்ட உள்ளடக்கங்களுக்கு இணையாக கேரளத்திலும் புத்தகங்களைத் தயார் செய்ய வேண்டும்..

9. தேசிய அளவிலுள்ளதைப் போன்று ஒன்று இரண்டு வகுப்புகளில் தாய்மொழி ( சுற் றுச்சூழல்- கல்வியை உட்கொண்டு கணிதம் ஆங்கிலம் என மூன்று பாடப்புத்தகங்கள் தயார் செய்ய வேண்டும்.

10. 1 முதல் 4 வரையுள்ள வகுப்புகளுக்கு ஆங்கில வழி புத்தகங்கள் தயார் செய்ய வேண்டும்.

11. செம்மொழி என்ற நிலையிலும் தாய்மொழி என்ற நிலையிலும் தமிழ்மொழி கற்ற லுக்கு அதிக முக்கியத்துவம் அறிக்க வேண்டும்.

12. மழலைப் பள்ளி கல்விக்காக ஒருங்கிணைந்த பாடத்திட்டத்தை உருவாக்கி மழலைப் பள்ளியை அங்கீகரிக்கப்பட்ட கல்வித் திட்டத்தின் பகுதியாக மாற்ற வேண்டும்.

## இலவசமும் கட்டாயமுமான கல்விக்கான குழந்தைகளின் உரிமை– கேரளச் சட்டங்களும் துறைகளும் 2011

### அக்காதமிக பதவி மையம்

1. 29 –ம் பிரிவின் தேவைக்காக மாநில கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT) ஆகும் அக்காதமிக பயிற்சி மையம்.

2. (1) –ஆம் துணைச் சட்டத்தின் கீழ் அறிக்கை செய்யப்பட்டுள்ள அக்காதமிக பதவி மையம், பாட ஏற்பாடும், மதிப்பீட்டுச் செயல்முறைகளும் உருவாக்கும் போது இந்தச் சட்டத்தின் 29–ம்பிரிவின் (2) –ம் துணை பிரிவின் துணைப் பாகம் (a) முதல் (f) வரை யிலான வரையறைகளுக்கு தீங்கு விளைவிக்காத விதம்

   (a) சிறப்பானதும் எளிமையானதுமான பாடத்திட்டத்திற்கும் பாடப்புத்தகங்களுக்கும் அடிப்படை வாழ்க்கைத் திறனை பகிர்ந்து கொடுப்பதற்குத் தேவையான கற்றல் துணைக்கருவிகளுக்கு உருவம் அளிப்பது.

   (b) ஒன்று முதல் எட்டு வரையிலான வகுப்புகளில் ஒவ்வொரு பாடத்திற்கும் தேவை யான குறைந்கபட்ச கற்றல் விளைவை நிர்ணயிக்க வேண்டியதும், குழந்தைகளுக் கான மேன்மையான தரநிர்ணயக் குறிப்புகள் வளரச் செய்வதுடன் குழந்தைகளின் கற்றல் விளைவிற்கான ஆசிரியரின் பொறுப்புணர்வின் எல்லைகளுக்கு வடிவம் அளிப்பதும்

   (c) கற்றல் கற்பித்தல் விளைவின் அடிப்படையில் ஆசிரியரின் பணியிடைப் பயிற்சி தொடர்பான பொருட்கள் வளரச் செய்வது;

   (d) 1995 – ல் ஊனமுற்ற நபர்கள் ( சம உரிமைகள், உரிமைகளின் பாதுகாப்பும், முழு மையான பங்கேற்பும்) சட்டத்தின் வரையறைகளுக்கேற்ப ஊனமுற்ற குழந்தைக ளுக்கு கல்வி அளிப்பதற்காக ஆசிரியருக்கு பணி பயிற்சி (Pre- Service) பணியி டைப் பயிற்சி ஆகியவற்றிற்கு வடிவம் அளிப்பதும்;

   (e) தொடர்ச்சியானதும் முழுமையானதுமான மதிப்பீட்டை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வழிகாட்டுதல்கள் தயாரிப்பதும்;

   (f) நயத்திட்டங்கள், நிகழ்ச்சிகள், பாட ஏற்பாடு குழந்தைகளின் கற்றல் விளைவு ஆகி யவை குறித்த ஆராய்ச்சிளும், கற்றல்களும் பொறுப்பேற்கவும் அது கமிஷன் செய் வதும். .

13. தகவல் தொழில் நுட்பத்தை (ICT).ஒரு தனியான பாடம் என்பதற்கு மேலாக பிற பாடங்களின் பரிமாற்றத்திற்கான கருவியாகவும் உபயோகிக்க வேண்டும்.

14. தனிக்கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு வெவ்வேறானதும் புதியதுமான கற்றல் உத்திகளை உருவாக்கிச் செயல்படுத்துவதுடன் வெவ்வேறு மதிப்பீட்டுச் செயல்பாடுகளையும் உருவாக்கிச் செயல்படுத்த வேண்டும்.

15. கற்றல் அடைவுகளின் அடிப்படையிலான ஒருங்கிணைந்ததும் தொடர்ச்சியானதுமான மதிப்பீட்டை (CCE) உறுதி செய்ய வேண்டும்.

16. சுகாதார உடற்கல்வி, கலைக்கல்வி, பணி அனுபவக் கல்வி போன்ற பாடங்களைக் கட்டாயப் பாடப்பகுதிகளாகக் கட்டாயப் பாடப்பகுதிகளாகக் கருத்தில் கொள்ள வேண்டும்.

17. மேனிலைப் பிரிவில் காலத்திற்கேற்ற பாடப்புத்தகங்களைத் தயார் செய்ய வேண்டும்.

18. தேசியக் கல்விச் சட்டத்தின்படி கல்வி பெறும் உரிமையை உறுதி செய்தல் வேண்டும்.

19. எல்லா ஆசிரியர்களும் ஒரு நெறியாளர் (Mentor) என்ற நிலையில் உயர்ந்த செயல் பாட்டுத் தேவையான வாய்ப்புகளையும் வசதிகளையும் பள்ளிக்கூடத்திலும் வகுப்பறையிலும் குழந்தைகளுக்கு ஏற்படுத்த வேண்டும்..

20. ஆசிரியர்கள் கடைபிடிக்க வேண்டிய நன்னெறிச் சட்டங்களுக்கு (Code of Professional Ethics for School Teachers) முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

21. 21-ம் நூற்றாண்டிற்கு ஏற்றமுறையில் கற்றல் திறன்களை (21st Century Learning Skills) காலத்திற்கேற்ப மாற்றி அமைக்க வேண்டும்.

22. நற்பண்புகளைக் கடைபிடிக்கும் தலைமுறையை உருவாக்கத்தக்க வகையில் பாடத் திட்டம் அமைய வேண்டும்.

23. சமவாய்ப்பும் சமத்துவமும் (Equity and Equality) கிடைக்கும் வகையில் பாடத்திட்டம் அமைய வேண்டும்.

இயல்பான கற்றலை உறுதிப்படுத்தக் குழந்தைகளின் உடல் மன அளவிலும் செயல்பாட்டு முறையிலும் பன்முக வளர்ச்சியை இலக்காகக் கொண்டு அறிவு, எண்ணம் செயல் இவற்றிற் கேற்ற பாடஏற்பாடு (Curriculum for the harmony of Head, Heart and Hand) வேண்டும். எனில், பாடத்திட்ட அணுகுமுறை எவ்வாறு அமைய வேண்டும்? அதன் கொள்கையும் நடைமுறையும் எவ்வாறு இருக்க வேண்டும்?

## 1.3 பாட ஏற்பாடு- அணுகுமுறை

ஐம்புலன்களை உபயோகித்துச் சூழ்நிலைகளிலிந்து சுயமாகவே கற்கும் திறமைகளுடன் ஒரு குழந்தை பிறக்கிறது. உலகத்தைப் புதிய நோக்கில் காண்பதற்கும் புரிந்து கொள்வதற்கும் செயல்படுவதற்கும் மதிப்பிடுவதற்கும் வாய்ப்புகள் முறைசார்ந்த கல்வி மூலம் குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடத்திலிருந்து கிடைக்க வேண்டும்.

குழந்தைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைச் சூழல்களுக்குத் தீர்வு காண்பதன் வழியாகவே கற்றல் நடைபெறுகிறது. பாடத்திட்ட பரிமாற்ற அணுகுமுறையின் சிறப்பியல்புகள் எதுவாக இருக்க வேண்டும்?

$ செயல்பாட்டு அடிப்படையிலானது

$ செயல்முறை தொடர்பானது

$ கற்றலை உறுதிப்படுத்தும் விதம்.

$ கற்றல் அடைவுகளை அடைய உகந்தது.

$ சூழலுக்கு ஏற்றது

$ வளர்ச்சி மண்டலங்களை உட்படுத்தியது

$ கற்பவரின் விருப்பத்திற்குப் பொருத்தமானது.

$ கற்றலுடன் மதிப்பிடலும் ஒருங்கிணைந்து அமைந்தது..

அறிவு உருவாக்கக் கோட்பாட்டின் அடிப்படையிலான கற்றல் முறையே பாடத்திட்டத்தின் அடிப்படை. குழந்தையின் அறிவு, கருத்து, சூழல் இவற்றைக் கருத்தில் கொண்டு சிறந்த கற்றல் செயல்பாடுகள் உருவாக்குவதன் மூலம் இயல்பாக அறிவு பெற இயலும் என்பதே இதன் சிறப்பு.

### கற்றல் அனுபவங்கள்

வெவ்வேறு வாழ்க்கைச் சூழலிலிருந்து வரும் குழந்தைகளின் அறிவுஸகிறமை ஆர்வம் போன்றவை வேறுபட்டதல்லவா? தனிநபர் வேறுபாட்டையும் பன்முக அறிவையும் கருத்தல் கொண்டு கற்றல் அனுபவங்களை உருவாக்குவதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்

### கற்றல் சூழல்

குழந்தைகளின் ஆர்வத்தையும் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு வேறுபட்ட கற்றல் செயல்பாடுகளில் பங்கேற்க இயலும் விதம் வகுப்பறை செயல்பாட்டை அமைக்க வேண்டும். குழந்தை மையமான கற்றல் செயல்பாடுகளைச் செயல்படுத்த எவ்வாறு கற்றல் செயல்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டும்.

### கற்றல் செயல்முறை

- குழந்தைகள் ஒவ்வொருவரும் அவர்களுடைய முன் அறிவுகளுடன் தொடர்புபடுத்தி அறிவு உருவாக்கம் (Knowledge construction) நடத்துகின்றனர்.
- அறிவு உருவாக்கத்தைத் தனிநபர் நிலையிலும் சமூக நிலையிலும் பார்க்க வேண்டும்.
- பலவித கற்றல் நடைகளைக் (Learning Styles) கருத்தில் கொண்டு ஐம் புலன்கள் மூலம் பல்வேறு அனுபவங்களை (Multi sensory experiences) கொடுப்பதன் மூலம் கற்றல் சிறப்படைகிறது..
- குழுவாக கலந்துரையாடல் நடைபெறும் போது கற்றல் கூடுதல் மேன்மையடைகிறது.
- கற்றல் வேகத்தை கருத்தில் கொண்டு கற்றல் அனுபவங்களை அளிப்பதன் மூலம் குழந்தைகளின் கற்றல் மேம்படுகிறது.
- பாடப்பொருள்கள் ஆர்வத்தைத் தூண்டுவதும் பொருள் உடையதுமாக அமைவதன் மூலம் கற்றல் மேலும் சிறப்பாக அமையும்..

*குழந்தைகள் அறிவு உருவாக்கும் கட்டத்தில் ஆசிரியர் சிறந்த முறையில் செயல்பட்டால் அது குழந்தைகளுக்குக் கிடைக்கும் அறிவினை உறுதிபடச் செய்யும். கற்றலில் ஈடுபடும் குழந்தை தனது அறிவை சுயமாகவே உருவாக்குகிறது. தனது பள்ளியில் கற்கும் கருத்துகளை வெளியில் நடக்கும் காரியங்களுடன் தொடர்புப்படுத்தி த் தேவையான கேள்விகளைக் கேட்க குழந்தைக்கு வாய்ப்பளிக்க வேண்டும். மனப்பாடம் செய்து ஒரு சரியான விடையை அளிப்பதற்கு பதிலாக தனது அனுபவங்கள் வாயிலாகத் தனது வாக்கியங்களில் விடை அளிக்க ஊக்குவிக்க வேண்டும். இவையாவும் குழந்தைகளின் அறிவா வளரச் செய்ய உதவும் முக்கியமான படிகளாகும். அறிவுபூர்வமாக ஊகித்தல் என்பது ஒரு கற்றல் உத்தியாகும். இதை நாம் ஊக்குவிக்க வேண்டும். பலவேளைகளிலும குழந்தைகளின் அன்றாட அனுபவங்களிலிருந்தும் ஊடகங்களிலிருந்தும் அவர்களின் மனதில் சில கருத்துகள் உருவாகி இருக்கலாம். ஆனால் ஆசிரியர் எதிர்பார்க்கும் வாக்கியங்களில் அவர்களால் கூற இயலாது. அறிந்த அறிவிற்கும் அறியப்போகும் அறிவிற்கும் இடையில் தான் புதிய அறிவு உருவாக்கப்படுகிறது. பலவேளைகளிலும் பள்ளிக்கு வெளியிலோ அல்லது சமூகத்திலோ புதிய அறிவு உருவாகிறது. இவ்வாறு உருவாகும் எல்லா அறிவுகளையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். அறிவும் பொறுமையும் உடைய ஆசிரியை இதைப்பற்றித் தெரிந்திருக்க வேண்டும். குழந்தையின் அறிவு வளர்ச்சிக்கு உதவும் விதத்தில் செயல்பாடுகள் அளித்தும் கேள்விகள் கேட்டும் குழந்தையை ஆசிரியரால் வழி நடத்திச் செல்ல முடியும்*

*தேடல்கள், கேள்விகள் கேட்டல், விவாதங்கள், கொள்கைகள் உருவாக்குதல், கருத்துகள், நிலைபாடுகள் இவைகளின் உருவாக்கத்திற்கு வழிநடத்தும் செயல்களும் சிந்தையும் ஆசிரியர்களின் பங்கேற்பினால் ஏற்படுகின்றன. பள்ளிக்கூடங்கள் கேள்வி கேட்கவும், விவாதங்கள் செய்யவும் தேடல்களுக்கும் ஊகித்து புதிய கருத்துகளை உருவாக்கவும் வாய்ப்பளிக்க வேண்டும்*

*(N. C. F. 2005, பக்கம் – 41, 42)*

- கற்றல் அனுபவங்களைச் சுழற்சிமுறையில் (Spiralling) அமைப்பதன் மூலம் கற்றல் கூடுதல் சிறப்புடையதாக மாறுகிறது
- கற்றல் செயல்பாடுகளை நெகிழ்வு (Flexibility), கற்றல் செயல்பாடுகளில் எளிய முறையில் அமைத்தல் (Adaptations), கற்றல் செயல்பாடுகளைத் தேரந்தெடுத்தல் (Selection) இவற்றின் மூலம் வேறுபட்ட கற்றல் தேவையுள்ளவர்களையும் விருப்பம் உள்ளவர்களையும் கருத்தில் கொள்ள முடியும்
- போதுமான கற்றல் அனுபவங்கள் ஒவ்வொரு குழந்தைக்கும் கிடைக்கும் போது மட்டுமே கற்றல் அடைவு (Learning outcome) உறுதிப்படுத்தப்படுகிறது.
- கற்றலும் மதிப்பிடலும் ஒருங்கிணைந்து நடைபெறவேண்டும்.
- பாடத்தோடு தொடர்புடைய உள்ளடக்கமும் (Content), குழந்தைகளின் கற்றல் தேவைகளுக்குப் பொருத்தமான பல்வேறு கற்றல் கற்பித்தல் செயல்முறைகளும் உத்திகளும் உபயோகிக்கும் போது எல்லாக் குழந்தைகளும் கற்றல் அடைவுகளை(Learning outcome) அடைய முடியும்.
- ஒவ்வொரு குழந்தையின் பண்முக வளர்ச்சியையும் (All-round development) நோக்கமாகக் கொண்டு கற்றல் செயல்கள் திட்டமிடப்பட வேண்டும்.

## 1.4 கற்றல் அடைவுகள் (Learning Outcomes)

பலவித பாடங்களின் கற்றல் செயல்களின் மூலம் அறிவு திறன்கள், மனநிலைகள் கருத்துகள் என்பவை குழந்தையிடம் உருவாகின்றன. இவற்றுள் சில குறுகிய கால அளவிலும் சில நீண்ட காலத்திலும் கிடைப்பவை ஆகும். இவ்வாறு குழந்தையிடம் உருவாக வேண்டிய மாற்றங்களை முன்னரே நம்மால் தீர்மானிக்க முடியும். பாடத்திட்டம் உருவாக்கும் போது பள்ளிக்கூடக் கல்வியின் வாயிலாகப் பல நிலைகளில் குழந்தை அடைய வேண்டிய இலட்சியங்களே கற்றல் அடைவுகள் ஆகும். கற்றல் செயல்பாடுகளின் வாயிலாக ஒவ்வொரு அலகிலும் பெறுகின்ற கற்றல் அடைவுகள் வளர்ச்சி அடைந்து வகுப்பின் இறுதியில் கற்றல் அடைவுகளாக மாறுகின்றன. கல்வி கற்கும் கட்டத்தில் குறிப்பிட்ட கால அளவில் கற்றல் அடைவுகளாக வளர்ச்சி அடைகிறது. கற்றல் அடைவுகளின் முக்கியத்துவம் என்னவென்றால் அவற்றை உற்றுநோக்கவும் (Observable) அளவிடவும் (Measurable) இயலும். ஒவ்வொரு அலகிற்கும் பருவத்திற்கும் வகுப்பிற்கும் முடிவில் குழந்தை அடைய வேண்டிய அறிவு திறன்கள், கருத்துகள், மனப்பான்மை போன்றவைகளை மதிப்பிடக் கற்றல் அடைவுகளைப் பகுத்தாய்ந்தால் போதும். பாடத்திட்டத்தின் சிறப்பான பரிமாற்றம் மூலம் அனைத்துக் குழந்தைகளும் கற்றல் அடைவுகளைப் பெற்றுள்ளனர் என்று உறுதிப்படுத்த வேண்டும்..

*கற்றல் அடைவுகளின் சிறப்பியல்புகளை இவ்வாறு தொகுக்கலாம்:*

- பாடத்தோடு தொடர்புடைய கற்றல் வழியாகக் குவந்தை பெற வேண்டிய அறிவு (knowledge), திறன்கள் (Skills), மனப்பாங்குகள் (Attitudes), மதிப்புகள் (Values) என்பவையே கற்றல் அடைவுகள்

$ கற்றல் அடைவுகள் உற்றுநோக்கக் கூடியதும் (Observable) அளவிடக்கூடியதுமாக இருக்க வேண்டும் (Measurable) ஆக்ஷய்ப்ஙீய்கில்ஜ்.

$ குறுகிய நீண்ட காலங்களில் பெற்ற கற்றல் அடைவுகள் உள்ளன.

## 1.5 கற்றல் ஆதாரங்களும் கற்றல் அமைப்புகளும்

பாடத்திட்டத்தைப் பரிமாற்றம் செய்வதற்குப் பயன்படுத்துகின்ற பல நிலைகளே கற்றல் உறைவிடங்கள் கற்றல் செயல்முறை முழுமை பெற பலதரப்பட்ட கற்றல் உறைவிடங்களைப் பயன்படுத்த வேண்டும்.

- நூலகம்
- அறிவிப்பு பலகைகள்

- ஆய்வுக்கூடம்( கணிதம், அறிவியல்)
- கற்றல் துணைக்கருவிகள்
- 
- கணினி ஆய்வுக்கூடம்
- தகவல் தொடர்புக் கருவிகள்

இதற்கு மேலாகக் குழந்தைகளின் திறமைகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகள். பள்ளிக்கூடங்களில் உண்டல்லவா? அவற்றையும் கற்றல் அடைவுகளைப் பெறுவதற்காகப் பயன்படுத்த வேண்டும்

- சிறுவர் மன்றம்
- காலைக் கூட்டம்
- மன்றங்கள்
- விவாதமேடை
- கல்விச்சுற்றுலா
- தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் (SPC, NSS, Scout, NCC)
- 

குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கு இது போன்ற அமைப்புகள் இன்றியமையானவையாகும்.

## 1.6 கலைக் கல்வியும் பணி அனுபவக் கல்வியும்

### கலைக்கல்வி

படைப்பாற்றல் உற்றுநோக்கும் திறன் மாற்றுச் சிந்தனை போன்றவற்றை குழந்தைகளிடம் வளரச் செய்யக் கலைக்கல்வி இன்றியமையாததாகும். புதிய பாடத்திட்ட அணுகுமுறையில் பொதுவான பாடங்களைப் போன்ற முக்கியத்துவம் கலைக்கல்விக்கும் அளிக்கப்பட்டுள்ளது. பள்ளிப் பாடத்திட்டத்தில் கலைக்கல்வியில் இசை. நடனம், படம் வரைதல். சிற்பங்கள் உருவாக்குதல் நாடகம், திரைப்படம் போன்றவை உட்படுத்தப்பட்டுள்ளன. குழந்தைகளின் இந்தத் குறைகலிலுள்ள திறமைகளைத் தெரிந்து கொண்டு அவற்றை வளரச் செய்ய வேண்டும்.

*கலைக்கல்வியின் பொதுவான இலக்குகள்:*

- குழந்தைகளிடம் மறைந்திருக்கும் கலைத்திறன்களைக் கண்டுபிடித்து வளர்க்க வேண்டும்.
- கலைகளைப் பிரித்தறியவும் குழந்தைகளின் திறமைக்கேற்பக் கலைகளைப் பயிற்றுவிக்கும் வாய்ப்பை அளிக்க வேண்டும்.
- பல்வேறு கலைகளை இரசிக்கவும் கலைகளின் அழகை உட்கொள்ளவும் வேண்டும்.
- கலையை இரசித்து சமூக வாழ்க்கையில் மனித நேயத்தை உருவாக்க வேண்டும்.
- பண்பாட்டு வேறுபாட்டைப் பிரித்தறிந்து பண்பாட்டு விழிப்புணர்வை வளர்க்க வேண்டும்..
- கலையின் கருத்தை உட்கொண்டு புதுமையான சிந்தனைகளில் ஈடுபடவும் இணையான சமூகச் செயல்களில் ஈடுபடவும் வேண்டும்.
- கலைப் பயன்படுத்தி பிற பாடங்களின் கற்றலைச் சிறப்புடையதாக்க வேண்டும் (Art applied learning).
- பன்முக அறிவு வளர்ச்சிக்கான வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்கு அறியவேண்டும்.
- பல்வேறு திறமைகள் உள்ள குழந்தைகளைக் கற்றல் செயல்பாடுகளில் ஆர்வமடையச் செய்ய வேண்டும்

- குழந்தைகளின் இரசிப்புத் தன்மையை வளரச் செய்ய வேண்டும்..

### பணி அனுபவக் கல்வி

உணர்வு, அறிவு போன்ற மண்டலங்களின் ஒருங்கிணைப்பும் முன்னேற்றமும் உருவாகப் பணி அனுபவக் கல்வி உகந்தது..

ஒவ்வொரு பணி அனுபவக் கற்றல் வகுப்பும் அடிப்படை மனிதவள மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். எல்லாக் குழந்தைகளின் திறன்களும் தனித்தன்மைகளும் நாட்டு நன்மைக்கு ஏற்ற வகையில் வளர வேண்டும் என்பதே மனிதவள மேம்பாட்டின் நோக்கம், தொழிலை நேசிப்பதும் தொழில் செய்பவர்களை மதிப்பதும், சமூக உணர்வுடைய புதிய தலைமுறையை உருவாக்குவதும் பணிஅனுபவக் கற்றலின் முக்கிய இலக்குகளாகும்.

- மனிதவள மேம்பாடு
- தேசிய முன்னேற்றம்
- தொழில் ஆர்வம்
- உற்பத்திதுறையில் தனித்துவம்
- பன்முகத் தனிநபர் வளர்ச்சி
- நற்பண்புகளையும் மனநிலைகளையும் வளர்த்தல்

கலைக்கல்விக்கும் பணிஅனுபவக் கல்விக்கும் முக்கியத்துவம் அளித்துப் பாடத்திட்டப் பரிமாற்றம் நடைபெற வேண்டும். இவைகளின் தனித்தன்மைகளையும் வாய்ப்புகளையும் உட்படுத்திப் பாடங்களை ஒருங்கிணைத்துப் பரிமாற்றம் செய்வது அவசியமாகும்.

## 1.7 விளையாட்டு உடல் நலக் கல்வி

உடல்- மன வளர்ச்சியின் அடிப்படை உருவாவது தொடக்க நிலையிலாகும். எனவே இந்தக் கால அளவில் எல்லாக் குழந்தைகளுக்கும் ஆரோக்கிய உடல்நலக் கல்வியின் அனுவங்கள் கிடைத்துள்ளன என்பதை உறுதி செய்ய வேண்டும். குழந்தையின் ஆரோக்கிய, விளையாட்டு முன்னேற்ற நிலைகளை அறிவியல் முறையில் வளரச் செய்யவும் ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளும் மனநிலைகளும் வளரச் செய்தல் என்பதே ஆரோக்கிய உடல்நலக் கல்வியின் முக்கிய நோக்கம், ஆரோக்கிய உடல்நலக் கல்வியின் வாய்ப்புகளை நிலைநிறுத்துவதோடு வெவ்வேறு பாடங்களை ஒருங்கிணைத்துப் பரிமாற்றம் செய்யவும் வேண்டும்.

*ஆரோக்கிய- உடலநலக் கல்வியின் முக்கிய இலக்குகள் இவை:*

- பல்வேறு குழந்தைகளில் பொருத்தமான முறையில் உடலை அசைப்பதற்கான திறனைப் பெற்றுக் கொள்வது,
- உடல் அசைவை கட்டுப்படுத்தும் பல்வேறு கட்டங்களைப் பிரித்தறியவும் உடலைப் பன்முக அசைவுகளின் ஊடகமாக முன்னேறவும் செய்வது.
- சமூகக் கடமைகள் குறித்த விழிப்புணர்வு உருவாக்கவும் மக்களாட்சி முறையிலான வாழ்க்கை முறைகளைக் கடைபிடிக்கவும்.
- குழந்தையின் பன்முக வளர்ச்சியை உறுதி செய்வது

## 1.8 உட்படுத்திய கல்வி (Inclusive Education)

*தங்கள் வகுப்பிலுள்ள சக மாணவனுக்கு வீடு இல்லை; வழியோரத்தில் குடிநீர்க்குழாயிலி சேர்த்துக் கட்டிய தகரமே அவனுடைய வீடு என்ற தகவலைப் பற்றிக் குழந்தைகள் கலந்துரையாடினார்கள். கவலைகளைப் பங்கிடுவதன் வழியாகத் தீர்வு காண இயலாது எனப் புரிந்து கொண்ட குழந்தைகள் ஆசிரியரின் உதவியுடன் சேகரித்த தொகையை உபயோகித்து நண்பனுக்கு வீடு உருவாக்கிக் கொடுத்து அந்தப் பள்ளிக்கூடம் நல்ல மாதிரியாக அமைந்தது.*

*(ஒரு பள்ளி அனுபவம்)*

வகுப்பறையில் எல்லாக் குழந்தைகளையும் உட்படுத்தி யாரையும் புறக்கணிக்காமல் ஒரு கற்றல் சூழலை உருவாக்க வேண்டும். நமது பள்ளிக்கூடங்களில் இரு பிரிவினருக்கும் தனிக் கவனமும் கற்றல் உதவியும் அளித்து சமசீரான தரமான கல்வி (Equitable Quality Education) உறுதி செய்யப்பட வேண்டும்..

*தனிக்கவனமும் கற்றல் உதவியும் பாதுகாப்பும் தேழைப்படுவோர் யார்?*

(அ) சமூகப் பொருளாதாரக் காரணங்களால் புறக்கணிக்கப்பட்டவர்களின் குழந்தைகள்

$ பல்வேறு பாகுபாடுகளால் சமூகப் பண்பாட்டுக் குடும்பப் பின்னனியில் புறக்கணிக்கப்பட்ட குழந்தைகள் வறுமையில் வாடுபவர்கள், ஆதிவாசிகள், பெண் குழந்தைகள், தாழ்த்தப்பட்ட பிரிவைச் சார்ந்தவர்கள், வெளிநாட்டிலிருந்து குடியேறியவர்கள், நிலையாகத் தங்கும் வசதியற்றவர்கள் போன்ற அனேகப் பிரச்சினைகளை அனுபவிப்பவர்கள் இதில் அடங்குபவர்.

இவ்வாறான குழந்தைகளின் குறைகளையும் குறைபாடுகளையும் பிரித்தறிந்து அவர்களை அங்கீகரித்து மதித்து நடப்பதாக நமது அணுகுமுறை இருக்க வேண்டும். பள்ளிகளில் குழுச் செயல்பாடுகள் வழியாக இவர்களின் பிரச்சினையை ஓரளவு தீர்க்க முடியும்.

(ஆ) உடல்– மனக் குறைபாடுகளைக் கொண்ட குழந்தைகள்

உடல்– மன அளவிலான குறைபாடுகள் குழந்தைகளுக்கும் கற்றலில் சிரமம் அனுபவிக்கும் குழந்தைகளுக்கும் சிறப்புக் கவனம் தேவை (Special Educational Needs). கேள்விக் குறைவு, பார்வைத் திறன் குறைவு, புத்திக் குறைவு, கை, கால் ஊனம், கற்றலில் பின் தங்கிய நிலை ஆட்டிசம், செரிபிரல் பால்சி, பன்முகக் குறைபாடு மனநிலை பாதிக்கப்பட்ட குழந்தைகள், கவனக் குறைவுள்ளவர்கள் ஆகியோர் இதில் அடங்குவர்.

*இவர்களுக்காகப் பாடத்திட்டத்தின் பரிமாற்ற வேளையில் கையாள வேண்டியவை எவை?*

- கற்றல் தேவைகள், ஆர்வம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு கற்றல் செயல்பாடுகளைத் திட்டமிடுதல்.
- கற்றல் செயல்பாடுகளில் எல்லாக் குழந்தைகளும் பங்கேற்கும் வகையில் பாடத்திட்டமிடல் சீரமைக்கப்பட வேண்டும்.
- பல்வேறான கற்றல் வேகம், கற்றல் முறை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு ஐம்புலன்களுக்குட்பட்ட அணுகுமுறையை (Multisensory Approach) நடைமுறைப்படுத்துதல்.
- குறைநீக்கும் செயல்பாடுகள் (Remedial Practices), ஊக்கச் செயல்பாடுகள் (Enrichment Practices) போன்றவற்றை ஒவ்வொரு குழந்தைக்கும் தேவைக்

கேற்பத் திட்டமிட்டுச் செயல்படுத்துதல்

- பல்வேறு மதிப்பீட்டு வாய்ப்புகளை நெகிழ்வுடன் (Flexibility) செயல்படுத்துதல்.
- சிறப்பு வள ஆசிரியர்கள் மற்றும் வல்லுனர்களின் உதவியை உறுதி செய்தல்
- குழந்தையின் கல்வி பாதுகாப்பு ஆகியவற்றில் பெற்றோரின் தொடர்ச்சியான உதவியை உறுதி செய்தல்.

இந்த இரு பிரிவுகளிலுமுள்ள குழந்தைகளைத் தவிர சிறப்பு கவனமும் பாதுகாப்பும் கிடைக்க வேண்டிய குழந்தைகளே தனிப்பட்ட திறனும் புத்திக்கூர்மையும் மிகுந்த குழந்தைகள் (Gifted Children). எல்லாப் பிரிவிலுள்ள குழந்தைகளையும் கவனத்தில் கொண்டு பள்ளிச் செயல்பாடுகளையும் சூழல்களையும் சிறப்பாக அமைக்க வேண்டும்..

## 1.9 தகவல் தொழில் நுட்பக் கல்வியின் வாய்ப்பு (ICT)

தகவல்களைப் பரிமாறுவதற்கு ஏராளமான முறைகள் நடைமுறையில் உண்டல்லவா? இதில் முக்கியமானது ICT கல்வி. குழந்தைகள் பல்வேறு வழிமுறைகளில் இந்தத் தொழில் நுட்பத்தை ஏறக்குறைய தெரிந்திருப்பார்கள். இந்த அறிவை வகுப்பறைக் கற்றலில் உபயோகப்படுத்த வேண்டும். கற்றலை எளிமையாக்கவும் உற்சாகமாக்கவும் இதன் வழி இயலும்.

### ICT இன் தேவை

பாடத்திட்டப் பரிமாற்றத்திற்காகப் பொருத்தமான சூழல்களில் ICT துணைக் கருவிகளை தேவைக்கேற்ப உட்படுத்த வேண்டும். பாடப்புத்தகத்தின் குறைகளாகிய அசைவு இன்மை, ஒலிகள் கேட்க இயலாத நிலை போன்றவற்றை ICT வாய்ப்புகள் உட்படுத்தி எதிர் கொள்ள முடியும். ICT இன் தேவை எந்தெந்தச் சூழல்களில் வேண்டும் என்பதையும் அதை எப்படிச் செயல்படுத்தலாம் என்பதையும் திட்டமிட ஆசிரியர் திறமை வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

### பொருத்தம்

குழந்தையின் படைப்பாற்றலையும் அறிவின் பன்முக தன்மைகளையும் ஊக்குவிக்க ICT வாய்ப்புகளைப் பயன்படுத்த வேண்டும். பாடங்களில் ஆர்வத்தையும் ஊக்கத்தையும் நிலை நிறுத்துவதற்காக ICT வாய்ப்புகளை அமைக்க வேண்டும். ICT இன் உபயோகம் ஐம்புலன்களில் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு அதிகமான பயனளிக்கிறது. ஒலி வழியாகவும் பார்வை வழியாகவும் கருத்துகளை அதிகமாக உட்கிரகிக்க ICT பயன்படுகிறது. வெவ்வேறு கற்றல் திறனுடைய குழந்தைகளைக் கருத்தில் கொண்டு கற்றல் அனுபவங்களை ICT மூலம் அளிப்பதற்கு இது உதவுகிறது.

### நம்பகத்தன்மை

தகவல் தொடர்பு ஊடகங்களின் நம்பகத்தன்மையை உறுதி செய்ய வேண்டும். அரசு வலைதளங்கள், கல்வி வலைத்தளங்கள் Portal, Blog, Social Net Work போன்றவற்றிலுள்ள தகவல்களை அதிகாரபூர்வமாக உறுதி செய்ய வேண்டும். வகுப்பறை பரிமாற்றத்திற்கு உபயோகிக்கக் கூடிய கருவிகளின் செயல்பாட்டுத் தன்மையை உறுதி செய்ய வேண்டும். இத்தகைய கருவிகள் செயல்படுவதற்குப் பொருத்தமான மென்பொருள் எளிதில் கிடைக்கக் கூடியதாகவும் உபயோகிக்க இயன்றதாகவும் இருக்க வேண்டும். ICT வாய்ப்புகள் குழந்தைகளின் வயது, மனநிலை போன்றவற்றிற்குப் பொருத்தமானதாக இருக்க வேண்டும்.

## 1.10 மதிப்புகள், மனநிலைகள், கடமையுணர்வு போன்றவற்றை வளர்க்க உதவும் மண்டலம்

குழந்தைகள் மனித நேயதேதைப் பற்றியும் அரசியலமைப்பின் மதிப்புகளைப் பற்றியும் விழிப்புணர்வு உடையவர்களாக வளர வேண்டும். சமூக வாழ்க்கையை ஊக்குவிக்கும் மனநிலையை உருவாக்குதல் சமூக கடமையுணர்வை வளர்த்தல் போன்றவை பாடத்திட்டத்தில் முக்கியமாக உட்படுத்த வேண்டிய பகுதிகளாகும். இவற்றை வளரச் செய்ய மேற்கூறிய கருத்து மண்டலங்களில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

### மக்களாட்சி உணர்வு

பல்வேறு பாடங்களின் உள்ளடக்கத்தைத் தேர்வு செய்யும் போது மக்களாட்சி தொடர்பான கண்ணோட்டத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும். கற்றல் செயல்பாடுகளின் திட்டமிடுதலிலும் பரிமாற்றச் செயல்களிலும் மக்களாட்சி அணுகுமுறை அமைய வேண்டும். மக்களாட்சி முறையிலான வகுப்பு, பள்ளி இடங்கள் ( மக்களாட்சி அரங்குகள்) மக்களாட்சி வாழ்க்கை அணுகுமுறை போன்றவை வழியாக மக்களாட்சி உணர்வு உருவாக்குதல் என்பது பாடத்திட்டத்தின் இலக்காகும்.

### அரசியலமைப்பு இலக்குகள்

நம்முடைய அரசியலமைப்பு கூறும் மதிப்புகளும் இலக்குகளும் பாடத்திட்டத்தில் பிரதிபலிக்க வேண்டும். அரசியலமைப்பு, மதிப்புகளை மாணவன் அடைவதற்கு உகந்த உள்ளடக்கதைதையும் மரிமாற்று செயல்பாடுகளையும் தேர்வு செய்ய வேண்டும்.

### மதசார்பற்ற மனநிலை

மதசார்பற்ற மனநிலையை வளர்க்க உதவக்கூடிய பாட மண்டலங்களை உள்ளடக்கத்தில் சேர்க்கவும் அதற்கு உதவும் வகையிலான பரிமாற்ற முறையைக் கையாளவும் வேண்டும்.

### சகிப்புத் தன்மை

பொருத்தமானவர்கள் மட்டுமல்ல பொருத்தமற்றவர்களோடும் சகிப்புத் தன்மை காட்ட வேண்டும் என்ற அடிப்படைக் கொள்கையைப் பாடத்திட்டம் இலக்காகக் கொள்ளவேண்டும்.

### செயலாக்க- படைபாற்றல் சிந்தனை

மாணவர்களிடம் செயலாக்கமும் படைப்பாற்றலுமான சிந்தனையும் தேடலையும் வளரச் செய்ய வேண்டும். பாடத்திட்டத்தின் உள்ளடக்க மண்டலங்களிலும் கற்றல் உத்திகளிலும் படைப்பாற்றல் வழியான தேடலுக்கான வாயப்புகள் இருக்க வேண்டும். பன்முக அறிவின் (Multiple Intelligence) தலங்களையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

### பண்பாட்டுடனும் பாரம்பரியங்களுடனும் உள்ள ஆதரவு

நமது பண்பாடு, பாரம்பரியம், வரலாறு இவற்றிற்கு ஆதரவு காட்டும் மனப்பான்மையை உருவாக்குதல் என்பது பாடத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

### சமத்துவம் என்ற கருத்து

பல்வேறு சூழ்நிலைகளிலும் கற்றல் செயல்பாடுகளிலும் சமத்துவம், சமநிலை போன்றவற்றை உறுதி செய்ய வேண்டும்.

## தலைமைப் பண்பு

புதிய நூற்றாண்டின் சவால்களை எதிர் கொள்ளவும் வாய்ப்புகளைப் பயன்படுத்தவும் தகுந்த தலைவர்களை உருவாக்கப் பொருத்தமான கற்றல் உத்திகளை உருவாக்க வேண்டும். வகுப்பறைச் செயல்பாடுகளில் எல்லாக் குழந்தைகளின் பங்கேற்பையும் உறுதி செய்து தலைமையேற்கும் திறனை வளர்க்க உதவும் சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும்.

## வாழ்கைத்திறன் கல்வி

அன்றாட வாழ்க்கையில் தனிநபர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளையும் சவால்களையும் திறம்பட எதிர்கொள்ள உதவும் சாதகமான மற்றும் திறமையான பண்புகளே வாழ்க்கைத் திறன்கள், தன்னைஅறிதல், சகஊடுபாடு, கருத்துப் பரிமாற்றத் திறன், தனிமனித உறவு, படைப்பாற்றல் , விமர்சிக்கும் திறன், முடுவுகளை எடுத்தல். தீர்வு காணுதல், உணர்வுகளைக் கட்டுப்படுத்துதல் மன அழுத்தத்தைக் கையாளுதல் போன்றவை முக்கியமான வாழ்க்கைத் திறன்களாகும். குழந்தைகளின் சூழ்நிலைகளோடு தொடர்புபடுத்தி இந்த மண்டலங்களின் காரணிகளைப் பாடத்திட்டத்தில் உட்படுத்த வேண்டும். வாழ்க்கையைத் தன்னம்பிக்கையுடன் அணுகவும் முன்னேறவும் இத்திறன்கள் குழந்தைகளுக்கு உதவுகின்றன.

## குடிமகனின் கடமை

நாட்டிற்கு மக்களிடம் உள்ளதைப் போன்று குடிமக்களும் நாட்டிற்காகச் சில கடமைகளையிம் பொறுப்புகளையும் கடைபிடிக்க வேண்டும். நாட்டின் வளர்ச்சி என்பது மனிதத் திறனின் வளர்ச்சி என்ற கண்ணோட்டத்தில் பார்க்கும் இந்தக் காலகட்டத்தில் நாட்டிற்கு உதவும் நல்ல குடிமகனை உருவாக்குவதே கல்வியின் முக்கிய நோக்கம். ஒரு சுதந்திரமான சமூகத்தை உருவாக்குவதுடன் ஒழுக்கமான பொறுப்புள்ள சமூகத்தை உருவாக்கும் குடிமக்களைப் படைப்பதே கல்வியின் முக்கிய நோக்கமாகும்.

## மனித உரிமைகள்

தனிமனிதன் என்ற நிலையில் மதிப்புடன் வாழ்வதற்கான உரிமையே மனித உரிமை. ஐக்கிய நாட்டுச் சபையின் மனித உரிமை விளம்பரத்தின் மூலம் உலகமெங்கும் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகளுக்குப் பாடத்திட்ட உருவாக்கத்திலும் அதன் பரிமாற்ற வேளையிலும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

.

## குழந்தைகளின் உரிமைகள்

குழந்தைகளின் எல்லாவித உரிமைகளையும் பாதுகாப்பது நமது கடமையாகும்.

## இயற்கை- இயற்கைப் பாதுகாப்பு- சுற்றுப்புறத் தூய்மை

இயற்கை- இயற்கைப் பாதுகாப்பு, சுற்றுப்புறத் தூய்மை ஆகியவற்றைப் பாதுகாக்கக் கடைபிடிக்க வேண்டிய அடிப்படைக் கண்ணோட்டங்களை ஆரம்ப வகுப்பு முதலே உட்படுத்த வேண்டும். தனிமனிதத் தூய்மையைப் போன்று முக்கியமானதே சுற்றுப்புறத்தூய்மை என்பதையும் தூய்மையுணர்வு குடிமகனின் கடமைகளில் அடிப்படையானது என்ற உணர்வை மாணவர்களிடையே ஏற்படுத்த வேண்டும். இயற்கை மனிதனின் தேவைக்கு மட்டுமுள்ளதல்ல. இயற்கையின் சமநிலையில் ஏற்படும் மாற்றங்கள் எதிர்காலத்தில் சீரழிவுகள் ஏற்படக் காரணமாகும் என்ற மனப்பான்மையைக் குழந்தைகளிடம் வளர்க்க வேண்டும். இயற்கையைப் பாதுகாப்பும் சுற்றுப்புறத் தூய்மையும் உருவாக்குவதற்குத் தகுந்த செயல்பாடுகளை அளிக்க வேண்டும்.

## சமாதானக் கல்வி

தனிப்பட்ட முறையிலும் பிறரோடு சமாதானமாகவும் அன்பாகவும் பழகும் திறனையும் மனப்பான்மையையும் உருவாக்குவதே சமாதானக் கல்வியின் நோக்கம். கலவரங்களையும் கலவரங்களைத் தூண்டும் சூழல்களையும் தவிர்க்கவும் அமைதியை நிலைநாட்டவும் சமாதானம் அன்பு இவற்றின் வாய்ப்புகளைப் பாடத்திட்டத்தில் பல்வேறு பாடங்களின் வழியாகச் செயல்படுத்த வேண்டியது சமாதனக் கல்வியின் நோக்கமாகும்..

## சட்ட அறிவு

சட்டங்கள் பற்றிய அறிவையும் விழிப்புணர்வையும் ஒரு குடியரசு நாட்டில் வாழும் பொது மக்கள் கொண்டிருக்க வேண்டும். சட்ட அறிவு குழந்தைகளுக்குக் கிடைக்கும் விதத்தில் பாடப் பகுதிகளில் இவற்றை உட்படுத்த வேண்டும். சட்ட உதவி மன்றம், சட்ட கிளப், சட்ட கிளினிக், சட்ட விழிப்புணர்வு போன்ற பல்வேறு செயல்பாடுகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்த வேண்டும்.

## சைபர் குற்றங்கள்

தகவல் தொழில் நுட்பத்துறை வளர்ச்சியடைந்துள்ள இன்றைய காலத்தில் அன்றாட வாழ்வில் இவற்றைத் தவறாகப் பயன்படுத்துவதும் குற்றச் செயல்களும் நடைபெறுகின்றன. குழந்தைகள் இதுபோன்ற செயல்களில் ஈடுபடாமலிருக்க உதவும் விழிப்புணர்வுச் செயல்களைப் பாடத்திட்டத்தில் உட்படுத்த வேண்டும். இணையதளம், சமூக வலைதளம், மின்னஞ்சல் போன்றவைகளைப் பயன்படுத்துவது தொடர்பான தெளிவான அறிவும் பகுத்தறிந்து செயல்படும் தன்மையும் மாம் படத்திட்டத்தின் மூலம் அளிக்க வேண்டும். சைபர் குற்றங்களுக்கு வழங்கும் தண்டனைகளைப் பற்றியும், இணைய தளத்தை ணுறையாகப் பயன்படுத்தும் அறிவையும் பாட ஏற்பாட்டில் உட்படுத்த வேண்டும்.

## ஊடக விழிப்புணர்வு

நமது சமூகம் ஒலி, ஒளி ஊடகங்களுக்கு அதிகமுக்கியத்துவம் அளிக்கிறது. குழந்தைகளிடம் ஒளி ஊடகம் பெரும் ஆதிக்கத்தைச் செலுத்துகிறது. எனவே, ஊடக விழிப்புணர்வை உருவாக்கும் பல்வேறு கூறுகளைப் பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டும்..

## நிலைமுன்னேற்றக் கண்ணோட்டம்

நாம் வாழும் பூமி மனிதனுக்கு மட்டும் உரிமையானதன்று என்ற சுற்றுப்புற விழிப்புணர்வைப் பாடத்திட்டம் அளிக்க வேண்டும். சுற்றுச்சூழலுக்கு ஊறுவிளைவிக்கும் மனிதனின் பழக்க வழக்கங்கள் சுற்றுப்புறத்தை இத்தகைய வீழ்ச்சிகளிலிருந்து எப்படிக் காப்பாற்றலாம் என்றும் அறிதல் இக்காலகட்டத்தில் முக்கியமானதாகும். சுற்றுப்புறமும் முன்னேற்றமும் எப்படி ஒருங்கிணைந்து செல்லலாம் என்ற ஆராய்ச்சியும் நிலைமுன்னேற்றம் தொடர்பான கண்ணோட்டமும் ஆராய்ச்சிகளும் பாடத்திட்டம் வெளிக் கொணர வேண்டியதாகும். ஒருங்கிணைந்த சுற்றுப்புற விழிப்புணர்வு உருவாக்குவதென்பது பாடத்திட்டத்தின் நோக்கங்களில் ஒன்றாகும்.

## இளைஞர் கல்வி

குழந்தை உளவியல் வல்லுனர்கள் சுகாதார சேவையாளர்கள். மருத்துவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் கூட்டு முயற்சிகள் வழியாக இளைஞர் கல்விக்குப் பொருத்தமான உள்ளடக்க மண்டலங்கள் பல்வேறு பாடங்களில் உட்படுத்துவதற்கான வாய்ப்பைக் கருத்திற் கொள்ள வேண்டும். கற்பவர்களின் உடல்நிலை, தூய்மை போன்றவை தொடர்பான சந்தேகங்களும் தெளிவின்மையும் அறிவியல் நிலையில் கருத்தில் கொள்ளுவது பொருத்தமானதாகும்.

### நுகர்வோர் பண்பாடு- விளைவுகள்

நுகர்வோர் பண்பாட்டின் தீய விளைவுகள் குறித்த உண்மைகள் தொடக்க வகுப்புகளில் முதல் பாடத்திட்டத்தில் உட்படுத்த வேண்டும். நுகர்வோர் என்ற நிலையில் நமது உரிமைக ளும் நுகர்வோர்ச் சட்டங்களும் பாடத்தோடு தொடர்புடையதாக அமைய வேண்டும்.

### போதைப் பொருள் எதிர்ப்பு மனப்பான்மை

மது, போதை மருந்துகள், புகையிலை போன்றவற்றின் பயன்பாடு புதிய தலைமுறையின் ஆரோக்கியத்தைப் பாதிப்படையச் செயகிறது என்பதை நாம் உணர வேண்டும். வருங்கால தலைமுறையை இவற்றிலிருந்து பாதுகாக்க வேண்டும். இதற்காகப் போதைப்பொருள் உப யோகத்தின் உடல் மன உளைச்சல்களையும் விபத்துகளையும் சித்தரிக்கும் படங்கள், சிறு குறிப்புகள், காட்சிகள் போன்றவை உள்ளடக்கத்தில் உட்படுத்த வேண்டும். போதை எதிர்ப்பு மனப்பான்மையை உருவாக்குவதே இதன் அடிப்படை நோக்கம்.

### ஆண், பெண் சமத்துவம்

பாட ஏற்பாடு ஆண் பெண், சமத்துவத்தை உறுதிப்படுத்துவதாக இருக்க வேண்டும். ஆண் பெண் வேறுபாடு பாட ஏற்பாட்டில் இருந்தல் கூடாது. பாடநூலில் உள்ள பாடங்களில் கூட ஆண் பெண் சமத்துவம் இருக்க வேண்டும். கற்றல் செயல்பாடுகளை நடத்தும் போது ஆண் பெண் சமத்துவத்தை உறுதிப்படுத்துவது ஆசிரியரின் கடமையாகும்.

### சேமிப்பு மனப்பான்மை

ஆரம்பக் கல்வி முதலே குழந்தைகளுக்குச் சிக்கனமாக செலவு செய்து சேமிக்கும் மனப் பான்மையைப் பற்றிக் கற்பிக்க வேண்டும். சிக்கனத்தின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் தெளிவுபடுத்த வேண்டும். சிக்கனப் பண்பினைக் கடைபிடிப்பதற்கான செயல்பாடுகளைச் செய்ய வேண்டும்.

### சாலைப் பாதுகாப்பு

சாலை விதிகள், சாலை விபத்தைத் தடுப்பதற்கான அறிவுரைகள், செயல்கள் போன்றவை சாலைப் பாதுகாப்பு காரணிகளாகும். சாலை என்பது ஒரு பொது இடமென்றும் நம்மைப் போலேவே மற்றவர்களுக்கும் சாலையைப் பயன்படுத்துவதற்குச் சுதந்திரம் உண்டு என்ற மனப்பான்மையையும் உருவாக்க வேண்டும். சாலையைப் பாதுகாப்போடி தொடர்புடைய செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

பாடஏற்பாட்டில் இந்தத் துறைகளை அடிப்படையாகக் கொண்ட கற்றல் அனுபவங்களை உறுதிப்படுத்த வேண்டும். பலவித பாட பாகங்களின் உட்கருத்துகளைத் தேர்ந்தெடுக்கும் போதும் இதற்கு செயல்பாடுகளை முறைப்படுத்தும் போதும் தேவையான முன்னுரிமை கிடைக்க வேண்டும். கற்றல் செயல்பாட்டின் போது இது தொடர்பான அறிவு, நற்பண்புகள் மனப்பாங்கு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். தொடர் மதிப்பீடு மூலம் இந்த இலட்சியங்களை அடைய முடிந்ததா என்று பார்க்க வேண்டும். பலவித மன்றங்களின் செயல்பாடுகள் SPC, NCC, Scout & Guides, JRC, வித்யாரங்கம்- கலை இலக்கிய மன் றம் காந்தி தர்ஷன் ஆகிய இயக்கங்கள் மாணவர்களிடையே நல்ல மனப்பான்மைகளும், கடமை உணர்வும், நற்பண்புகளும் வளர வழிவகுக்கின்றன.

## 1.11 உரிமை அடிப்படையிலான கல்வி

## (Right based Education)

குழந்தைகளின் உரிமைகளைத் தீர்மானித்து அவற்றை உலகமெங்கிலும் நடைமுறைப்படுத்துவதற்காக ஐக்கிய நாட்டு கல்வி சமூக பண்பாட்டு அமைப்பு (UNESCO) முன் வந்தது. இதனைத் தொடர்ந்து பல்வேறு நாடுகளில் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஏராளமான சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் தேசிய கல்வி உரிமைச் சட்டம் 2009- ம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது ஒரு முக்கிய நிகழ்வாகும். குழந்தைகளின் எல்லாவிதமான உரிமைகளையும் பாதுகாக்கின்ற பொறுப்பு பெரியவர்களின் கடமையாகும். கல்வி உரிமைச் சட்டத்தைப் பற்றிக் கூறும் போது அவற்றை முக்கியமாக மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தலாம்.

- பங்கேற்பு (Participation)
- வாயப்பு (Provision)
- பாதுகாப்பு (Protection)

தனக்கு கிடைத்த உரிமைகளைப் பற்றி குழந்தை எவ்வாறு சிந்திக்கும்?

### பங்கேற்பு (Participation)

- குழந்தைகளோடு தொடர்புடைய எல்லாத் தீர்மானங்களைப் பற்றியும் என்னிடம் கலந்தாலோசிப்பது உண்டு.
- எடுக்கக் கூடிய முடிவுகளில் எனது கருத்துகளுக்கு முக்கியத்துவம் கிடைப்பதுண்டு.
- என்னுடைய திறன்களையும் வரைமுறைகளையும் அறிந்து செயல்பாடுகளில் பங்கேற்க வாய்ப்பு கிடைக்கின்றன.
- எனது திறன்கள் வளரவும் , வரைமுறைகளுக்கு அப்பாற் செல்லவும் உதவும் கற்றல் செயல்முறைகளை செயல்முறைகள் எனக்குக் கிடைக்கிறது.
- எனது கருத்துகளுக்கு முன்னுரிமை கிடைக்கிறது.
- எனக்கும் எனது நண்பர்களுக்கும் வகுப்பில் நடக்கும் செயல்பாடுகளில் நல்ல முறையில் பங்கேற்க வாய்ப்பு கிடைக்கிறது.
- எனது திறன்களை வெளிப்படுத்த வாய்ப்பு கிடைக்கிறது.

### வாய்ப்பு (Provision)

- தகுந்த கல்வித் தகுதியுடைய, காலத்திற்கேற்ப அறிவை வளர்க்கும் ஆசிரியர்களின் சேவை எங்களுக்கு கிடைக்கிறது.
- ஒதுக்கப்பட்டுள்ள நேரம் முழுவதும் கற்றல் அனுபவங்கள் எங்களுக்கு கிடைக்கின்றன.
- உடல் மன வளர்ச்சிக்குப் பொருத்தமான வகுப்புச் சூழல் எங்களுக்கு கிடைக்கிறது.
- எங்கள் ஆசிரியர்களால் கற்றல் செயல்பாடுகளுக்கு உகந்த கற்றல் கருவிகளைப் பொருத்தமான நேரத்தில் அளிக்க முடிகிறது.
- கலை, விளையாட்டுத் திறன்களை ஊக்குவிக்கத் தேவையான கருவிகளும் வாய்ப்பு

களும் எங்களுக்கு கிடைக்கின்றன.

**கல்வி உரிமைச் சட்டம் (2009) இப்படி கூறுகிறது**

- *1* முதல் 5 வரை படிக்கும் குழந்தைகளுக்கு 200 வேலை நாட்களும் 800 மணிநேரம் கற்றல் நேரமும் கிடைக்க வேண்டும்.
- 6 முதல் 8 வரை படிக்கும் குழந்தைகளுக்கு 220 வேலை நாட்களும் 1000 மணி நேரம் கற்றல் நேரமும் கிடைக்க வேண்டும்.

### பாதுகாப்பு (Protection)

- பள்ளிக்கூடத்திலும் வெளியிலும் நான் எந்தவிதமான பாகுபாடுகளையும் அனுபவிப்பதில்லை.
- என்னை யாரும் எந்தவொரு வகையிலும் புறக்கணிப்பதில்லை.
- உடல் மனரீதியில் யாரும் என்னைத் துன்புறுத்துவதில்லை.
- பயமின்றி ஆசிரியர்களுடன் பழக முடிகிறது.
- குழந்தை என்றாலும் எனக்கு தனித்துவம், உரிமை உண்டு என்று அனைவரும் அங்கிகரிக்கின்றனர்.
- பள்ளியிலும் வீட்டிலும் நான் மிகவும் பாதுகாப்பாக இருக்கிறேன் என்று என்னால் உறுதியாகக் கூற முடியும்.

**கேரள மாநில பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம்**

*2002 -இல் மே மாதம் சேர்ந்த ஐக்கிய நாட்டுச் சபையின் குழந்தைகளுக்கான சிறப்பு மாநாட்டில் குழந்தைகளுக்கேற்ற ஒரு உலகம் என்னும் தலைப்பில் சட்டம் கொண்டு வரப்பட்டது. 2005 -ஆம் ஆண்டில் மத்திய அரசு உருவாக்கிய பாலர் உரிமை பாதுகாப்புக் குழு சட்டம் 2012 இல் கேரள மாநிலப் பாலர் உரிமைச் சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் கேரள மாநில பாலர் உரிமை ஆணையம் செயல்படுகிறது. அரசியலமைப்புச் சட்டம் உறுதிப்படுத்தும் பாலர் உரிமைகளைப் பாதுகாப்பதே இந்த ஆணையத்தின் முக்கிய கடமையாகும்.*

குழந்தைகளின் உரிமைகளை உறுதிப்படுத்த என்னால் என்ன செய்ய முடிந்தது. நான் இனி என்னென்ன செய்ய வேண்டும் என ஒவ்வொரு ஆசிரியரும் சிந்திக்க வேண்டும்.

## 1.12 நெறிப்படுத்துதல்

தேசிய கல்வி உரிமைச் சட்டத்தில் ஆசிரியர் ஆசிரியை ஒரு நெறியாளர் (mentor) என்று கருதப்படுகின்றார். பள்ளியின் முழுமையான வளரச்சிக்கு நெறியாளர் முக்கியப் பங்கு வகிக்க வேண்டும். கற்றல் அடைவுகளை உறுதிப்படுத்த நல்ல வழிகாட்டுதல் தேவை்..

கற்பித்தல் செயலில் முக்கிய காரணிகளான ஆசிரியர் - குழந்தை உறவில் இன்று நல்ல மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆசிரியரை அறிவை அளிக்கும் நபராகக் கருதாமல் குழந்தைகள் தாமாகவே அறிவை அடைய உகந்த பல்வேறு வாய்ப்புகளை ஏற்படுத்தும் நபராகக் கருதி அவர் செயல்பட வேண்டும்.

சரியாகக் கூறினால் பள்ளிக்கூடம் என்பது தனது வீடு போன்று வேறொரு வீடாகும். எனில் ஆசிரியர்கள் பெற்றோர்களைப் போல செயல்பட வேண்டும். குழந்தைகளுக்கு வீட்டிலிருந்து கிடைக்கும் அன்பு, அரவணைப்பு, முக்கியத்துவம், பாதுகாப்பு உணர்வு, அங்கீகாரம் இவை ஒவ்வொரு குழந்தைகளுக்கும் கிடைக்கச் செய்யவேண்டும். இவற்றைப் பிரித்தறிந்து ஒவ் வொரு குழந்தைக்கும் தேவையின் அடிப்படையில் ஆசிரியர் அளிக்கும்போது தான் அவ ரது பொறுப்பு முழுமையடைகிறது. அப்போது தான் பள்ளி வீடாக மாறுகிறது.

ஒவ்வொரு குழந்தையின் தனிப்பட்ட குடும்பச் சூழலைத் தெரிந்து கொள்ள கீழே கொடுக் கப்பட்டுள்ளவற்றை ஆசிரியர்கள் செய்தல் வேண்டும்.

- குழந்தைகளின் வீடுகளுக்குச் செல்லுதல்.
- பெற்றோர்களுடனான கருத்தப் பரிமாற்றம்
- குழந்தையைத் தொடர்ச்சியாகக் கவனித்தல்
- 
- 

இவ்வாறு குழந்தைக்கு அன்பும் அரவனைப்பும் பாதுகாப்பு உணர்வும் அங்கீகாரமும் அளித்து ஒரு பெற்றோர் போல் நடந்து கொண்டு, குழந்தைகளுக்குக் கற்றல் அடைவுகள் கிடைக்க உதவும் நபராக நாம் மாறும்போது தான் இந்தப் புதிய காலகட்டத்தின் ஆசிரயராக மாறுகிறோம்.

நெறிப்படுத்துதல் மூலமாக வழிகாட்டுதல், அறிவுரை வழங்குதல், ஆதரவு கொடுத்தல் மேம்படுத்துவதற்கான வாயப்பளித்தல் இவற்றை ஆசிரியர் குழந்தைகளுக்கு அளிக்கிறார். அனுபவம் வாய்ந்த நபர் என்ற முறையிலும் பின்பற்றத் தகுந்த மாதிரி நபர் என்ற முறையி லும் நெறியாளர் குழந்தைகளுடன் பழக வேண்டும். கற்றலுக்குத் தேவையான உத்திகளும் ஆலோசனைகளும் அளிக்க வேண்டும். குழந்தைகளிடம் மறைந்திருக்கும் திறமைகளை வெளிக் கொண்டுவர ஒரு நல்ல நெறியாளரால் மட்டுமே முடியும்.

. *நெறிப்படுத்துதல் வாயிலாக;*

- ஆசிரியருக்கும் குழந்தைகளுக்கும் சிறந்த கல்வி அனுபவங்கள் கிடைக்கின்றன.
- ஆசிரியர் மற்றும் குழந்தைகளின் அறிவு மண்டலம் வளர்ச்சியடைகிறது.
- குழந்தை பள்ளி உறவு வலுவடைகிறது.
- குழந்தையின் கற்றல் வளர்ச்சியும் ஆளுமை வளர்ச்சியும் உறுதிப்படுத்தப்படுகின்றன.
- ஒன்று சேர்ந்து சிந்திக்கவும் முடிவு எடுக்கவும் செயல்பாடுகள் செய்யவும் இயலுகின்றது
- பெற்றோருக்கும் பள்ளிக்குமிடையே தொடர்பு வலுப்படுகிறது. குழந்தையின் கற்றல் நிலைப் பற்றிய அறிவு பெற்றோருக்கு கிடைக்கிறது..
- கலை விளையாட்டு. சுகாதாரம், பணி அனுபவக் கல்வி போன்ற மண்டலங்களில் குழந் தையின் பங்கேற்பும் மதிப்பிடலும் வலுப்படுகின்றன.

நெறிப்படுத்துதல் நடக்க உதவும் விதத்தில் பதிவேடுகளை உருவாக்கிப் பதிவு செய்ய வேண்டும் . பள்ளியில் உள்ள எல்லா ஆசிரியர்களையும் நெறியாளர்களாகவும் எல்லாக் குழந் தைகளையும் நெறிப்படுத்துபவர்களாகவும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

வகுப்பிலுள்ள எல்லாக் குழந்தைகளையும் சிறு குழுக்களாகக் கருதி ஒவ்வொரு குழுவின்

வளர்ச்சியை உறுதிப்படுத்த அந்த வகுப்பாசிரியருக்குப் பொறுப்பை அளிக்கலாம்.

## 1.13 ஆசிரியர் தொழில் ரீதியாகக் கடைபிடிக்க வேண்டிய விதி முறைகள் (Code of Professional Ethics for School Teachers)

**1. ஆசிரியர்களின் கடமைகள்**

*1.1 எல்லா மாணவியரிடமும் அன்பும் அரவணைப்பும் காட்ட வேண்டும்.*

- எல்லாக் குழந்தைகளுடனும் ஒரே போல் அன்புடன் பழக வேண்டும்.
- கல்வியில் பின் தங்கிய குழந்தைகளுக்குத் தனிப்பட்ட கவனம் அளிக்க வேண்டும்..
- குழந்தைகளுக்குத் தன்னம்பிக்கை, ஆர்வம், எதிர்பார்ப்பு உருவாகும் விதம் நடந்து கொள்ள வேண்டும்.

*1.2 ஜாதி, மத, இனம், நிறம், பொருளாதார நிலை, மொழி, ஆண்- பெண் வேறுபாடு, பிறந்த இடம் இவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்காமல் நீதியுடன் பாரபட்சமின்றி நடந்து கொள் ளுதல்.*

- ஆசிரியர்கள் ஜனநாயகக் கொள்கை, பொறுமை. சமூக நீதி மீதான நம்பிக்கை ஆகிய வற்றைக் குழந்தைகளுக்கு அளிக்க வேண்டும்.
- ஆசிரியரின் தனிப்பட்ட நம்பிக்கைகள் அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிராக இருந் தால் அது பள்ளிக்கூடத்தை மிகவும் பாதிக்கும்.

*1.3 குழந்தையின் உடல் உள உணர்வு, பண்பாடு சமூக ஆண்ம வளர்ச்சிக்கு ஏற்றசூழலை உருவாக்குதல்.*

- உடல், உளத் திறன்கள் முழு வளர்ச்சியடை.யும் காலம் தான் பள்ளிக்காலம்.
- கல்வியால் அறிவு மண்டலம் மட்டும் வளர்ச்சி அடைந்தால் போதாது.
- முழுமையான தனிமனித வளர்ச்சியே கல்வியின் முக்கிய நோக்கம்.

*1.4 பள்ளி வாழ்க்கையில் எல்லா நிலையிலும் குழந்தையின் தனித்துவத்திற்கு மதிப்பளிக்கப் படுகிறது.*

- மனிதன் என்ற நிலையில் ஒரு குழந்தையின் ஜனநாயக உரிமைகளும் கௌரவமும் பாதுகாக்கப்பட வேண்டும்.
- ஆசிரியரிடமிருந்து உருவாகும் மோசமான செயல்கள் குழந்தைகளின் அபிமானத் திற்கு இழுக்கு ஏற்படுத்திக் கற்றலைப் பாதிப்படையச் செய்கிறது.
- பள்ளியின் எல்லாச் செயல்பாடுகளிலும் எல்லாக் குழந்தைகளின் முழுமையான ஈடு பாட்டை ஊக்குவிக்க வேண்டும்.
- ஐக்கிய நாட்டுச் சபை அங்கீகரித்து இந்தியா ஒப்புதல் அளித்த குழந்தைகளின் உரிமை விளம்பரத்தையும் குழந்தைகளின் உரிமைப் பாதுகாப்பு ஆணையத்தின் அறிக்கை யையும் ஆசிரியர்கள் புரிந்து கொண்டு அதற்கேற்ப செயல்பட வேண்டும்.
- பள்ளிகளில் ஒழுக்கம் கட்டுப்பாடு இவைகளை நடைமுறைப்படுத்துவதற்காக உருவாக் கிய சட்டங்கள் குழந்தைகளின் உரிமைகளை மறுக்கக் கூடியவனாக இருக்கக் கூடாது.

*1.5 குழந்தைகளின் பரம்பரைத் திறன்களும் சிறப்புத் திறன்களும் வெளிப்படும் வகையில் திட்டமிட்ட ஒழுங்குபடுத்திய செயல்பாடுகளை வடிவமைக்க வேண்டும்.*

- ஒவ்வொரு குழந்தையின் கற்றல் அடைவுகளை மட்டுமன்றிக் குழந்தையின் திறன்களையும் சிறப்புத் திறன்களையும் தெரிந்து கொள்வது ஆசிரியரின் முக்கிய கடமையாகும்.
- ஒரு குழந்தையின் எல்லாத் திறன்களும் வளரத் தேவையான செயல்பாடுகளை அவர் அளிக்க வேண்டும்.

*1.6 அரசியலமைப்புச் சட்டம் எடுத்துரைக்கின்ற மதிப்புகளையும், மனப்பான்மைகளையும் உட்கொள்ளும் விதத்தில் பாடத்திட்டம் அமைய வேண்டும்.*

- ஜனநாயகம், மத நல்லிணக்கம், சமத்துவம், நீதி சுதந்திரம் ஆகிய அரசியலமைப்பு மதிப்புகள் பாட ஏற்பாட்டின் முக்கிய கூறுகளாக அமைய வேண்டும்.
- அரசியலமைப்பில் குடிமகன்களின் கடமைகளைப் பற்றிக் கூறும் 51 A புரிந்து கொண்டு அதில் A முதல் K வரையுள்ள பத்திகளை உட்கொண்டு அதன்படிச் செயல்பட வேண்டும்.

*1.7 குழந்தைகளின் தேவைக்கேற்ப ஆசிரியர்/ ஆசிரியையின் கற்பித்தல் முறை புனரமைக்கப்படுகிறது.*

- தொசர் மதிப்பீட்டின் அடிப்படையில் குழந்தைகளின் தன்மை, பெற்ற அடைவு, விருப்பம், கற்கும் முறை முதலியவற்றைக் கருத்தில் கொண்டு கற்பித்தல் உத்திகளில் தேவையான மாற்றங்களைத் தொடர்ந்து செய்ய வேண்டும்.

*1.8 குழந்தைகளின் தனிப்பட்ட தகவல் இரகசியங்களைப் பாதுகாத்து அந்தந்த தகவல்களைச் சட்டப்படியாக யாருக்குத் தெரிவிக்க வேண்டுமோ அவர்களிடம் தெரிவித்தல்.*

- ஒரு கவுன்சிலராக செயல்படும் ஆசிரியருக்குக் குழந்தைகளின் தனிப்பட்ட தகவல்களைத் தெரிந்து கொள்ள முடியும்.
- இந்தத் தகவல்களைக் குழந்தைகளின் நன்மைக்காகப் மட்டும் அறிவுபூர்வமாக பயன்படுத்த வேண்டும்..

*1.9 குழந்தைகளைப் பயமுறுத்துதல், உடல் ரீதியாகத் தண்டனை அளித்தல், மனரீதீயாகவும், உணர்வு ரீதியாகவும் துன்புறுத்துதல் போன்ற செயல்களில் ஈடுபடக் கூடாது.*

- குழந்தைகளைப் பாலியல் கொடுமைகளிலிலிருந்தும் புறக்கணிப்பிலிருந்தும் சுரண்டல்களிலிருந்தும் பாதுகாக்கும் கடமை ஆசிரியருக்கு உண்டு.
- தண்டனை அளித்தால் குழந்தைகள் நன்றாகப் படிப்பார்கள் எனும் கருத்தை மாற்ற வேண்டும்..
- இவ்வாறான சூழலில் குழந்தைகளுக்கு கிடைக்கும் சட்டப் பாதுகாப்பு பற்றி ஆசிரியர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

*1.10 எல்லாவிதமான பாலியல் கொடுமைகளிலிருந்தும் குழந்தையைப் பாதுகாக்க வேண்டும்*

- எல்லா விதமான பாலியல் கொடுமைகளும் உடல்காயங்களை மட்டுமன்றி நீண்ட காலம் நிற்கும் மனக்காயங்களையும் ஏற்படுத்துகின்றன.
- வேலை செய்யும் இடங்களிலும் பள்ளிகளிலும் நடக்கும் பாலியல் கொடுமைகளுக்கு எதிராக இந்திய உச்ச நீதிமன்றமும் தேசிய குழந்தைகள் பாதுகாப்பு சட்டம் விதித்துள்ள விதிகளை ஆசிரியர்கள் மதித்து நடக்க வேண்டும்..

## 2. பெற்றோர்களிடமும் சமூகத்தோடும் உள்ள கடமைகள்

*2.1 பெற்றோர்களுடன் அன்பாகவும், ஆதரவாகவும் தொடர்பு கொள்ள வேண்டும்..*

- ஆசிரியர்கள் குழந்தையைப் பற்றி நன்றாகத்தெரிந்து கொள்ள அவர்களின் பெற்றோர் களுடன் நல்ல உறவுகளை வளர்க்க வேண்டும்.
- ஆசிரியருக்கும் பெற்றோருக்கும் இடையேயுள்ள சிறந்த தொடர்பு குழந்தையை ஆசிரியருடன் கூடுதலாக நெருங்க முடியும்.
- பெரும்பாலான பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளின் பள்ளிச் செயல்களைப் பற்றி ஆசிரியர்களிடமிருந்து தெரிந்து கொள்ள ஆவலாக இருப்பார்கள்
- குழந்தையில் வளர்ச்சிக் கட்டத்தில் ஏற்படும் தவறுகளையும் மேன்மைகளையும் பெற்றோர்களோடு பகிர்ந்து கொள்ளும் போது பெரிய ஆபத்துகளைக் கூட தடுக்க முடிகிறது.

*2.2 குழந்தைகளின் தன்மானத்திற்கு தீங்கு விளைவிக்கும் எந்தச் செயலிலும் ஈடுபடக்கூடாது.*

- பிற குழந்தைகளின் முன்னிலையில் குழந்தைகளின் கௌரவத்தைப் பாதிக்கும் விதத்தில் பேசக்கூடாது.
- அதுபோலவே பெற்றோர்களின் கௌரவத்தைப் பாதிக்கும் விதத்தில் நடந்து கொள்ளக்கூடாது.
- ஏதாவது ஒரு பிருவு குழந்தைகளின் சூழலை ( ஜாதி, மதம் பொருளாதாரம் ) புகழ்வது மற்ற குழந்தைகளிடம் தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தும்.

*2.3 குழந்தைகள் இந்தியாவின் பண்பாட்டைக் குறித்துப் பெருமைப்பட ஆவண செய்ய வேண்டும்.*

- ஏராளமான பண்பாடு மொழி, மதம் நம்பிக்கை கொண்ட நாடே இந்தியா இது ஒவ்வொரு வகுப்பிலும் பிரதிபலிக்க வேண்டும்..
- இந்தியாவில் வேற்றுமையில் ஒற்றுமை கடைபிடிக்கப்படுகிறது.
- பரஸ்பர சகிப்புத் தன்மையும் எல்லாக் கலாச்சாரங்களையும் மதிக்கும் மனப்பான்மை வேண்டும்.
- இந்தக் கொள்கைகள் பாடத்திட்டத்தின் மூலம் வளரச் செய்ய முயற்சிக்க வேண்டும் .

*2.4 பல்வேறு பிரிவினரிடையே ஏற்படும் எதிர்ப்பை உருவாக்கும் செயல்களைத் தவிர்க்க வேண்டும்.*

- வகுப்பறையில் எல்லா மதத்தினரையும் நம்பிக்கைகளையும், மொழிகளையும் சமமாக மதிப்பளிக்கும் விதத்தில் செயல்பாடுகளை அமைக்க வேண்டும்.
- தேசிய ஒருமைப்பாட்டின் அடிப்படை முதலில் இந்தியன், பின்னர் மட்டுமே ஒரு பிரிவின் அங்கம் என்ற கருத்து.
- ஏதாவது ஒரு பிரிவினரின் விளம்பரத்திற்காகப் பள்ளி/ வகுப்பறையைப் பயன்படுத்தக் கூடாது
- தற்கால சமூக அரசியலைப் பற்றி உரையாடும் போது ஆசிரியர்/ ஆசிரியை ஏதாவது ஒரு பிரிவினருக்காகப் பேசக்கூடாது.

**3. ஆசிரியர் என்ற தொழிலோடும் சக ஆசிரியர்களோடும் ஆற்ற வேண்டிய கடமை.**

*3.1 தொழில் திறன் வளரத் தொடர்ச்சியாக முயற்சி செய்ய வேண்டும்.*

- ஒரு குழந்தைக்கு நிரந்தரமாகக் கற்பிக்க முயலும் ஆசிரியரும் அதே போன்று கற்க வேண்டும்,
- எப்போதும் வளர்ந்து கொண்டிருக்கும் அறிவு மண்டலங்களைக் குறித்தும் கற்பிக்கும் முறைகளைக் குறித்தும் தககவல்களைத் திரட்டிச் செயல்படுத்த வேண்டும்.
- எங்கிருந்தெல்லாம் தனக்கு புதிய அறிவுகள் கிடைக்குமென்று விசாரிப்பது ஆசிரியரின் தலையாய கடமையாகும்.

*3.2 பிற ஆசிரியர்களோடும் மற்றுள்ளவர்களோடும் கருத்துப் பரிமாற்றம் நடத்த வேண்டும்.*

- கல்வித் தொடர்பான உணர்வு உருவாக்குவதற்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் தன்னாலான படைப்புகளை உருவாக்கும் வண்ணம் ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்க வேண்டும்.
- இவ்வாறான உணர்வு உருவாக்கத் திட்டமிடலும், பயனுள்ள ஒத்துழைப்பும் ஆசிரியர்களிடம் உருவாக வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலுள்ள எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கு அனைத்து ஆசிரியர்களும் ஒன்று சேர்ந்து கலந்துரையாடித் தீர்மானம் எடுக்கவும் செயல்படவும வேண்டும்.
- ஆசிரியர்கள் மட்டுமன்றிப் பள்ளிக்கூடத்திலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முன்வருபவர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்தல் வேண்டும்.

*3.3 சக ஆசிரியர்களோடு பெருமையோடும் மரியாதையோடும் பழகுகிறேன்.*

- பள்ளியிலுள்ள அனைத்து ஆசிரியர்களையும் அவர்களின் கல்வித் தரத்தையோ அவர்கள் கற்பிக்கும் பாடத்தையோ கருத்தில் கொள்ளாமல் பெருமையோடும் மதிப்போடும் பழகுதல் வேண்டும்.

*3.4 ஆசிரியர்கள் தனியாக டியூசன் நடத்தவோ தனியார் நிறுவனங்களில் செயல்படுவதோ இல்லை.*

- ஆசிரியர்கள் தனியாக டியூசன் நடத்துவது அவருடைய பள்ளிக்கூட செயல்பாடுகளைப் பாதிக்கின்றது.
- சொந்தச் செயலை மேம்படுத்துவதற்கான நேரம் இல்லாமல் போகிறது.
- சொந்த மாணவர்களுக்குத் தனியாக டியூசன் கொடுக்கும் போது பள்ளிக்கூடத்தின் அடிப்படைத் தத்துவங்களுக்கு எதிராகச் செயல்படுவது போன்று ஆகிறது.

*3.5 தன்னுடைய செயல்களிலும் தீர்மானங்களிலும் தாக்கம் செலுத்தி விடுவார்கள் என்பதால் எந்த விதமான பரிசுகளோ வேறு உதவிகளோ வாங்குவதில்லை*

- பலனை எதிர்பார்த்துக் கொடுக்கப்படும் விலை உயர்ந்த பரிசுகளை ஆசிரியர்கள் மானவர்களிடமிருந்தோ பெற்றோர்களிடமிருந்தோ வாங்கக் கூடாது.

*3.6 சக ஆசிரியர்கள் குறித்தோ, பெரிய அதிகாரிகள் குறித்தோ தேவையற்ற குற்றம் கூறுவதில்லை*

- ஒருவருக்கொருவர் குற்றம் கூறுகின்ற குழுக்கள் ஆசிரியர்களுக்கிடையில் தேவையற்றதாகும்.
- சக ஆசிரியர்களுக்கு எதிராக நீருபிக்க முடியாத குற்றங்களைக் கூறுதல் கூடாது.

- ஏதாவது ஒரு சக ஆசிரியர்/ ஆசிரியையிடமிருந்து தவறு தென்படுமெனில் அதனை மூத்த ஆசிரியர்களின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டும்.

*3.7 சக ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் இவர்களின் முன்னிலையில் சக ஆசிரியரைக் குற்றம் கூறுவதில்லை*

- ஆசிரியர்கள் குறித்து வேறுபட்ட கருத்துகள் இருக்கலாம். ஆனால் அவற்றை வெளிப்படுத்தும் முறை சரியானதாக இருக்க வேண்டும்.
- சக ஆசிரியர்கள் கற்பிக்கும் முறையைக் குற்றம் கூறும் விதம் பேசக் கூடாது.

*3.8 சக ஆசிரியர்களின் கற்பிக்கும் முறைகளை மதிக்கிறேன்.*

- சிறப்பாகக் கற்பிப்பவர்களின் செயல்பாடுகளை முறைப்படுத்தவும் அப்படிப்பட்ட சிறப்பை உட்கொள்ளவும் வேண்டும். ஆனால் அவற்றை முழுவதும் கண்மூடித்தனமாக ஏற்றுக் கொள்ளக்கூடாது.

*3.9 சக ஆசிரியர்கள் குறித்து தனிநபர் விவரங்களை இரகசியமாக வைக்கவும், சட்டரீதியாகத் தேவைப்படும் போது மட்டும் வெளிப்படுத்த வேண்டும்.*

- ஏதாவது தேவைக்காகச் சேகரிக்கின்ற சக ஆசிரியர்களின் தனிநபர் விபரம் இரகசிய குணம் உடையதெனில் அவைகளைச் சட்ட ரீதியான செயல்களுக்கு மட்டுமே வெளியிடுதல் வேண்டும்.

## 1.14 கற்பித்தல் கையேடு

ஒரு கற்றல் அடைவுகளை இலட்சியமாகக் கொண்டு ஒவ்வொரு ஆசிரியருக்கும் சுயமானமுறையில் செயல்பாடுகள் உருவாக்க இயலவேண்டும். பாடநூலிலும், கற்பித்தல் கையேட்டிலும் கொடுக்கப்பட்டுள்ள செயல்பாடுகளைத் தன்னுடைய வகுப்பறையில் உள்ள குழந்தைகளுக்கு ஏற்றவாறு மாற்றங்கள் செய்தும், கூடுதல் சேர்த்தும் செயல்படுத்தியும் சிறப்படைய வேண்டும். ஒவ்வொரு கற்றல் அடைவை அடையவும் தேவையான செயல்களைத் திட்டமிடலில் உட்படுத்த வேண்டும்.

கற்றல் செயல்பாடுகளுடன் மதிப்பிடலையும் ஒன்று சேர்த்துத் திட்டமிட்டுச் செயல்பக்கத்தில் எழுத வேண்டும்.

தொடர் மதிப்பீட்டின் வழியாகக் கிடைக்கின்ற விவரங்களை அடையாளப்படுத்துவதே மதிப்பீட்டுப் பகுதியில் அமைய வேண்டும்.

அடுத்து வரும் ஒரு வாரத்திற்குத் தேவையான கற்பித்தல் கையேடு பள்ளி வளக்குழு, பாடக்குழு இவைகளில் வெளியிடுவது நன்று. ஒரு வார காலத்திலுள்ள மதிப்பிடுதல் பகுதியிலுள்ள விவரங்களை அடிப்படையாக்கி ஆசிரியர் ஒரு சிறு பிரதிபலிப்புக் குறிப்பு (Reflection Note) தயாராக்கவும் SRG/Subject Council யில் விவாதிக்கவும் செய்யலாம். இந்தக் குறிப்பின் அடிப்படையில் ஆசிரியரின் தொடர் திட்டமிடல் குறிப்பு தயாராக்க வேண்டும்.

*கற்பித்தல் கையேட்டின் மாதிரி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.*

**கற்பித்தல் கையேடு**

ஆசிரியர்/ ஆசிரியையின் பெயர் :
வகுப்பு :
பாடம் :
அலகு/ மண்டலம்
நேரம் :
கற்றல் அடைவுகள் :
கருத்து :
பாடம் சார்ந்தது :
பணி அனுபவம் சார்ந்தது :
திறன் :
பாடம் சார்ந்தது :
துணைக் கருவிகள் :

| *செயல்முறைப் பக்கம்* | *மதிப்பீட்டு பக்கம்* |
|---|---|
| *(செயல்பாடுகளும் மதிப்பீடும் அடங்கிய செயல்முறை* | *மதிப்பீட்டு விபரங்களை இங்கே எழுத வேண்டும்* |

ஹெட்மிஸ்ட்ரஸ்/ஹெஸ்மாஸ்டருடெ ஒப்பு    அத்யாபகன்/அத்யாபிகயுடெ ஒப்பு

## பிரதிபலிப்புச் சிந்தனை (Reflections)

**எனது கண்டுபிடிப்புகளும், பகுத்தறிவும்**

(கற்றல் செயல்பாடுகளின் மதிப்பீட்டு செயல்முறை வழியாக கிடைத்த தகவல்களின் அடிப்படையில்)

- 
- 
- 
- 

தொடர் செயல்பாடுகளும், தீர்வுச் செயல்பாடுகளும்

- 
- 
- 
- 

**பிரதிபலிப்புச் சிந்தனை ( பிரதிபலிப்புக் குறிப்பு ) எதற்கு?**

குறிப்பிட்ட கற்றல் அடைவுகளுக்கேற்ப கற்றல் செயல்பாடு முழுமையாக நிறைவடைந்த பின்னரே பிரதிபலிப்பு தயாராக்குதல் வேண்டும்.

- இந்தக் குறிப்புகளை SRG கூட்டத்தில் வெளிப்படுத்த வேண்டும்.
- தொடர் திட்டமிடலுக்கு வழிவகுத்தல்
- நிலைத் தேர்வின் தொடர் மதிப்பீட்டு ஒருங்கிணைப்பு.

# 2. கலைக்கல்வி- தேவையும் முக்கியத்துவமும்

உலகின் எந்தப் பகுதியிலுள்ளவர்களுக்கும் கருத்துப்பரிமாற்றம் நடத்துவதற்கு ஏற்றதொரு பொது மொழியாகும் கலை. கலையின் மூலம் ஒரு நபர் தன்னைத்தானே புரிந்து கொள்ளவும் உலகில் அவனுக்குள்ள இடத்தைப் புரிந்து கொண்டு வாழ்க்கையின் பொருளை கண்டுபிடிக்கவும் செய்கிறான் எனக் கூறலாம். அதனால் தான் கலைக்கல்வி என்பதை மனதை அறிந்து கொள்வதற்கான ஒரு வழிமுறையென்று கூறலாம்.

சாதாரணமாக சுகலோப ஆசைகளிலிருந்து தன்னைச் சுற்றியுள்ள அழகான உலகிற்கு குழந்தையை அழைத்துச் செல்லும் மிகமுக்கியமான பங்கையே கலைக்கல்வி நிறைவேற்றுகிறது. தனியாகவும் குழுவாகவும் சேர்ந்துள்ள செயல்களின் வாயிலாக பல்வேறுபட்ட சமூக வாழ்க்கைத் திறன்களில் கைதூக்கி உயர்த்துவதற்கு கலைக்கல்வி உதவியாக உள்ளது. கலாச்சார அறிவு, மதிப்பு, தன்னம்பிக்கை போன்றவற்றை ஊட்டுவதற்கும் கலைக்கல்வி உபயோகப்படுகிறது.

கல்வியின் முக்கிய நோக்கம் ஒருவரின் முழுமையான வளர்ச்சியென்றும், அறிவும்...... மண்டலத்தைப் போலவே உணர்வுபூர்வமாகவும் வளர்ச்சி அடையவேண்டுமென்று உளவியல் சித்தாந்தங்கள் உலகிற்கு எடுத்துரைத்துள்ளது. இதன்மூலம் கலைக்கல்வியின் முக்கியத்துவத்தை அறிந்து கொண்ட பல்வேறு நாடுகள் தங்களின் பாடத்திட்டத்தில் முக்கிய இடத்தைப் பெறவும் செய்துள்ளது. பன்முக அறிவு சித்தாந்தத்தின் அடிப்படையில் அறிவின் பல்வேறு நிலைகள் வளர்ச்சியடைவதற்கு மிகப் பொருத்தமான ஊடகம் கலை ஆகும். இசை இயற்கைச் சார்ந்ததும், உள்ளுணர்வு சார்ந்ததுமான புத்திமண்டலங்களின் வளர்ச்சிக்கான வாய்ப்பை கலைக்கல்வி முன்வைக்கிறது. இத்துடன் மொழிசார்ந்த, கணிதம் சார்ந்த அறிவு வளர்ச்சிக்கான கருத்துகளை உருவாக்குகிறது.

கலைகளுக்கு மனித மனதை விரிவடையச் செய்து வாழ்க்கையில் புத்துணர்ச்சியை ஏற்படுத்தும் தனித்திறன் உள்ளது. பள்ளிகளிலிலிருந்து கலையை மாற்றி நிறுத்துவதென்பது நாம் இராம ராஜ்ஜியத்திற்கு பதிலாக இராவண இராஜ்யமாக இருக்குமென்று காலத்தால் அழிக்கமுடியாத சிறந்த ஆசிரியரும் தீர்க்கதர்சியுமான டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணனின் உற்றுநோக்கல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். குழந்தைகளை கர்மயோகிகளாகவும், அதிக உற்சாகமுள்ளவர்களாக ஆக்குவதற்கான அதிக சக்தியை சரியான வழியில் திசை திருப்பி விடாமலிருந்தால் அது தீய சக்தியை வெளிப்படுத்தும். குழந்தைகளின் இத்தகைய அதிக சக்தியை கலை இரசனையிலும், கலையை வெளிப்படுத்துவதிலும் திருப்பி விடுவோமெனில் அது அவர்களுக்கும் சமூகத்திற்கும் ஒரு முதலீடாக மாறும்

செல்வாக்கும், பரந்ததும், வேறுபாடுகள் நிறைந்ததுமான கலைப் பாரம்பரியம் இந்தியாவிற்கு உள்ளது. சங்கீதம், நாட்டியம், சிற்பம், நாடகம் முதலிய கலைகள் பாரத மக்களின் வாழ்கை யுடன் பிரிக்கமுடியாத விதத்தில் இணைந்திருந்தது. நாட்டிய சாஸ்திரம் போன்ற முழுமை யான மிகப்பெரிய நூல்கள் தோன்றியதே கலைத்திறனுக்கும், கலைக்கல்விக்கும் இங்கு நில வியிருந்த முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகிறது. குருகுல கல்வி முறையிலும், புத்தமத கால கட்டத்தில் நிறைந்திருந்த கல்விக்கூடங்களின் பாடத்திட்டத்திலும் கலைக்கல்வி முக்கிய பாடமாக இருந்தது.

நவீன கல்விமுறை இந்தியாவில் நடைமுறைப்படுத்தப்பட்ட போதும் பாடத்திட் டத்தில் கலைக்கல்வி இடம் பெற்றிருந்தது. காந்தியடிகள் அறிமுகம் செய்த அடிப்படைக் கல்வித்திட்டத்திலும் கைத்தொழிலுடன் கலைகளும் இடம் பெற்றிருந்தன. சுதந்திர இந்தி யாவின் பல்வேறு பாடத்திட்ட சீரமைப்பு கட்டங்களிலும் கலைக்கல்வி இடம் பெற்றிருந்தா லும் அதை நடைமுறைப்படுத்தும் போது ஒதுக்கப்படவே செய்தது. கேரள மக்களின் சமூக வாழ்க்கையில் கலையுடனான உயிரோட்டமான உறவைக் காணலாம். விவசாயத்திலும், பிற தொழில் துறைகளிலும் நம்பிக்கைகளுடன் தொடர்புடைய கலைகள் குருகுல சம்பிரதாயத் திலுள்ள கலைத் திறன்கள் தலைமுறையிலிருந்து தலைமுறைக்கு கைமாறி வந்ததாக சரித் திரம் கூறுகிறது.

நவீன கல்வியின் ஆதிக்கம் வரை குருகுல கல்வி முறையே கலைக்கல்வி கற்றலி லும் இருந்தது. அருபதாம் ஆண்டின் தொடக்கத்தில் உருவாக்கப்பட்ட பாடத்திட்டத்தில் ஒன்றுமுதல் 8 வகுப்பு வரையிலுள்ள மாணவர்களுக்கு பெயிண்டிங், மோடலிங், சங்கீதம் போன்ற துறைகளில் கற்றல் அனுபவங்கள் கொடுப்பதற்கான அறிவுரை வழங்கப்பட்டிருந் தது. தேசிய கல்விக் கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பாடத்திட்டத்தில் பல்வேறு வகுப்புகளுக்கான விரவான பாட ஏற்பாடு உட்படுத்தப்பட்டிருந்தது. பின்னர் நடை முறைப்படுத்திய பாடத்திட்ட சீரமைப்புகளில் எல்லாம் கலைக்கல்வி அவசியமான ஒரு காரணி என்ற நிலையில் உட்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் போதுமான எண்ணிக்கையில் ஆசிரியர் இல்லாததும் நிலவில் இருந்தவர்களுக்கு பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்து வதற்கு தேவையான பயிற்சி கிடைக்காததும் இந்தத் துறையை புறக்கணிப்பதற்கு காரண மாக இருந்தது. கலைக்கல்வியை சரியாக மதிப்பீடு செய்யவோ கற்றல் அடைவுகளை பெற் றோருடன் பங்கிடவோ செய்வதில்லை. இதனால் சமூகமும் இந்தத் துறையை கற்றலின் பாகமாக ஏற்றுக்கொள்ளாத நிலை ஏற்பட்டது.

சர்வதேச அளவில் கலைக்கல்விக்கு கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தைப் பற்றி யுனஸ்கோ போன்ற அமைப்புகள் அறுதியிட்டு கூறிய காரியத்தையும் இந்த சந்தர்ப்பத்தில் கூறவேண்டும். இந்தியாவிலுள்ள பல்வேறு கல்விக்குளுக்களும், அறிக்கைகளும் கலைக்க கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி சந்தேகத்திற்கு இடமின்றி தெளிவுபடுத்தியுள்ளது. இந்த சூழலில் கேரளத்தில் கலைக்கல்வி பாட்த்திட்டத்தில் காலத்திற்கேற்றவாறு சீர்திருத் தத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

### *கலைக்கல்வி- பல்வேறு உற்றுநோக்கல்கள்*

கலைக் கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி சர்வதேச அளவிலும், சேசிய அளவி லும் பல்வேறு குழுக்களும், அமைப்புகளும் முக்கியத்துவம் வாய்ந்த ஏராளமான கருத்து களை கூறியிருக்கிறது. குழந்தைகளில் தன்னம்பிக்கை, சுய அறிவு, பிறரை அங்கிகரித்தல் போன்ற குணங்கலை விரிவடையச் செய்வதில் கலைக்கல்வியின் பங்கினைப் பற்றி யுனஸ்கோ எடுத்துரைக்கிறது. கலைக் கல்வியினால் குழந்தைகளில் மனவெழுச்சியும், சமூ கமுன்னேற்றமும் ஏற்படுமென்று யுனஸ்கோ கருதுகிறது.

பாரதத்திலுள்ள பல்வேறு கல்விக் குழுக்கள் குழந்தைகளின் பன்முக வளர்ச்சிக்கு கலைக்கல்விக்கு முக்கியமான பங்களிப்பு உள்ளதென்று தெளிவுபடுத்தியுள்ளது.

முதலியார் கமிஷன் அறிக்கை (1952–53) இவ்வாறு கூறுகிறது:

'Release of creative energy among the students so that they may be able to appreciate cultural heritage and cultivate rich interest, which can pursue in their leisure and, later in life'

பள்ளிக் கல்வி பாட ஏற்பாட்டில் ஓவியம், கைத்தொழில், சங்கீதம்,, நாட்டியம், நாடகம் போன்றவைகளுக்கு முக்கிய இடம் வழங்க வேண்டுமென்று கமிஷன் கூறுகிறது.

கோத்தாரி கமிஷன் அறிக்கையில் (1962–64) இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

'Adequate facilities for the training of the teachers in music and the visual art do not exist. The neglect of the arts in education impoverishes the educational process and leads to decline of aesthetic tastes and values'

கோத்தாரி கமிசன் சிபாரிசின் அடிப்படையில் கலைக் கல்வியின் அவலநிலையையும், வாய்ப்புகளையும் படிப்பதற்காக வல்லுனர்களின் சிறப்புக் குழு பின்னர் உருவாக்கப்பட்டது.

1986 ன் தேசிய கல்விக் கொள்கையின் பாகமாக 1992 ல் ஏற்படுத்திய செயலறிக்கை (POA) கலைக் கல்வியைப் பற்றி இவ்வாறு கூறுகிறது:

'An illustrated view on the cultural perspective inter linking education and culture in order to promote the process of child personality development particularly in terms of discovering the inherent potentialities of the child'.

இவ்வாறாக மழலையர் பள்ளிமுதல் உயர்கல்வி வரையுள்ள கல்விமுறையில் பாடத்திட்டத்தை சீரமைப்பதற்கான தீர்மானம் ஏற்பட்டது.

என். ஸி. இ. ஆர். டி தயாராக்கிய பாடத்திட்ட வரைவுச் சட்டத்தில் கலைக்கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்கப்பட்டுள்ளது.2005 ன் தேசிய பாடத்திட்ட வரைவுச் சட்டத்தில் கலைக் கல்வியைப் பற்றிய கருத்தை மறு சீரமைக்கவும் அதனுடைய வாய்ப்புகளை பலமுறைகளில் விளக்கவும் செய்யப்பட்டுள்ளது.

- கலைக் கல்வியை கணிதம், அறிவியல் போன்றவையுடன் ஒரு அடிப்படை பாடத்திட்டமாக அங்கிகரிக்கப்பட்டுள்ளது.
- கலைகள் அக்காடமிக பாடங்களுடன் தொடர்புடைய அறிவு பெறும் செயல்பாடுகளை வேகப்படுத்துவதற்கு மட்டுமே உதவி செய்கிறது என்ற பரம்பரை கருத்தை திருத்தியுள்ளது.
- கலை என்பது அறிவு மண்டலம், மனவெழுச்சி, இரசித்தல் வாயிலாக குழந்தைகளில் உட்புகும் செயல்பாடாக மாறுகிறது.
- புதிய கற்றல் செயல்பாடுகளாக வளரவேண்டிய ஒரு மண்டலமாகும் கலைக்கல்வி என்ற கண்ணோட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறது

- குழந்தைகளின் கலைத்திறன் வளர்ச்சியும், மேம்பாடும் நன்றாக பிரதிபலிப்பதற்கு உதவியாக மதிப்பீட்டுத் தந்திரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இத்துடன் கலைக்கல்வி தொடக்க மேல்நிலை வகுப்புகளில் கட்டாயமாக்கப்பட வேண்டுமென்றும் சிபாரிசு செய்கிறது.

அறிவுருவாக்க செயல்பாடுகளில் சுயத்திறனையும் விருப்பங்களையும் உபயோகப் படுத்துவதற்கு குழந்தைகளை தகுதியுள்ளவனாக மாற்றுவதில் கலைக்கல்வியின் முக்கி யத்துவத்தைப் பற்றி 2007 ன் கேரள பாடத்திட்ட வரைவுச் சட்டம் எடுத்துக் கூறுகிறது.

இந்த சிபாரிசுகளின் அடிப்படையில் நடந்த ஒவ்வொரு பாடத்திட்ட சீரமைப்பிலும் தொடர்ந்து அதை நடைமுறைப்படுத்துவதிலும் கலைக்கல்விக்கு எதிர்பார்த்த அளவிற்கு முன்னேற்றமடைய முடியவில்லை. தொழில் வாய்ப்புகளை மட்டும் முன்வைத்து முன் னேறும் பள்ளிக் கல்வியின் இன்றைய நிலையில் குழந்தைகள் சமூக தீமைகளையும் பண்பாட்டு இழப்பையும் நோக்கிச் செல்கிறார்கள் என்பதைக் காணலாம். கலையின் மூலம் குழந்தைகள் பெற வேண்டிய முக்கிய சமூக வாழ்க்கைச் சூழலையும் கலாச்சார அறிவையும், முழு வளர்ச்சியையும் ஏற்றுக் கொள்ளாமல் போவது இந்த பண்பாட்டு இழப்பின் முக்கிய காரணமாகும். இந்த சூழ்நிலையில் பிற பாடங்களைப் போன்று கலைக்கல்வியும் அறிவுமண்டலத்தில் ஒரு பாடமாக வேண்டிய ஒரு சரிசமமான கல் விமுறையை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது

2009 ன் கல்வி உரிமைச் சட்டம் இந்தியக் கல்வி வரலாற்றில் ஒரு மைல்கல்லாக மதிப்பிடப்படுகிறது. குழந்தையின் முழு வளர்ச்சி என்பது அவனுடைய அடிப்படை உரி மையாக மாறியுள்ளது என்பதை எடுத்துக்கூற வேண்டியதாகும். இந்த சூழ்நிலையில் கலைக்கல்வி உட்படும் காரியங்களை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டியது இந்தக் காலகட்டின் அவசியமாகும்.

# 3. கலைக்கல்வி – கற்றல் அணுகுமுறை

கலைக்கல்வி பாடத்திட்டத்தின் அவசியமான பகுதியாக அங்கிகரிக்கப்பட்ட சூழ்நிலையில் கற்றல் அணுகுமுறை எவ்வாறு இருக்கவேண்டுமென்ற சரியான கருத்து இருக்க வேண்டும். முன்காலங்களில் அறிவிற்கு அப்பாற்பட்ட ஒரு மண்டலம் என்ற நிலையில் கலைகல்வியின் அணுகுமுறை இருந்தது. நவீன உளவியலின் கண்ணோட்டத்தில் ஒரு நபரின் முழு வளர்ச்சி என்பது அறிவின் பல்வேறு நிலைகளின் வளர்ச்சியாகுமென்று உணர்ந்துள்ளோம். அறிவு வளர்ச்சியின் பல்வேறு நிலைகளை ஆழமாக சுவாதீனிப்பதும் பரம்பரையான வேரோட்டமுள்ளதுமான கலைகள் தனிநபர் ஆளுமையை உருவாக்குவதில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. மழலையர் கல்வி முதல் மேல்நிலைக் கல்வி வரையுள்ள பள்ளிக்கல்வியில் ஒரு முக்கிய பாடஏற்பாடு என்ற நிலையில் கலைக்கல்வியை அணுகவேண்டும்.

நம்முடைய கல்வித்திட்டத்தில் கலைகள் கற்பிப்பதை ஊக்குவிப்பதில்லை என்று மட்டுமின்றி குழந்தைகளை கலைக்கல்வியிலிருந்து பின்வாங்கச் செய்கிறோம் என்ற பாடத்திட்ட வரைவின் ( 2005) உற்றுநோக்கல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கலைவிழாக்களுக்கான தயாரெடுப்புகளும் அதன்மூலம் கல்வி நிலையங்களுக்கு கிடைக்கும் அங்கிகாரம் என்ற குறுகிய இலட்சியத்தில் பெரும்பாலும் கலைக்கல்வி சுருங்கிவிடுகிறது. பள்ளிக்கூடத்தில் சேரும் அனைத்து குழந்தைகளையும் இலட்சியமாகக் கொண்ட கற்றல் அணுகுமுறையையே பின்பற்ற வேண்டும். அதுமட்டுமன்றி ஒவ்வொரு குழந்தையிடமும் உள்ள சிறந்த கலை ஆர்வத்தையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

குழந்தை மையக் கல்வித்திட்டம் பொதுவாக அங்கிகரிக்கப்பட்டிருந்தாலும் கலைக்கல்வியின் விசயத்தில் அந்த அளவிற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டதாக காண முடிய வில்லை. ஒவ்வொரு குழந்தையின் திறமைகளையும் வாய்ப்புகளையும் பிரித்தறிந்து முழு திறன் வளர்ச்சிக்கு உதவும் வகையில் பாடத்திட்ட செயல்பாடுகள் உருவாக்கப்படும் போதுதான் குழந்தை மையக்கல்வி முழுமையடைகிறது. குழந்தைகளின் கலை என்பது பல்வேறு சிறப்புகளுள்ள ஒன்றாகும். குழந்தையின் கற்பனையில் பொருட்களின் எதார்த்தமான படங்களோ பாவனைகளோ சப்தங்களோ அதே போல் இருக்க வேண்டுமென்பதில்லை. ஒவ்வொரு காரியத்தையும் குழந்தையின் கண்ணோட்டத்தில் பார்ப்பதற்கான திறன் ஆசிரியைக்கு வேண்டும். குழந்தைகளின் பாவனைகளை புரிந்து கொள்ளுதல் என்பதுதான் குழந்தை மையக் கலைக்கல்வியின் நோக்கமாகும். குழந்தைகளுக்கு அறிமுகமான சூழலிலிருந்துதான் எப்பொழுதும் கலைக்கல்வி தொடங்கவேண்டும்.பழக்கமான

குழந்தைக்கு இசையுடன் தொடர்புடைய அனுபவ சூழல் என்பது நாட்டுப்புறப் பாடல் கள், சினிமா பாடல்கள் போன்றவையாகும் . இவ்வாறான பாடல்களுக்கோ வாய்மொழி சிந்துகளுக்கோ ஏற்ற தாளத்துடனான அசைவுகளே குழந்தையின் நாட்டியத் திறனுக்கான அடிப்படையாகும். பிறருடைய தூண்டுதல் இல்லாமல் சுயமாக குழந்தை வரையும் படத் தைப் பார்க்கும் பெரியவர்களுக்கு அந்த நேரத்தில் படம் முழுமையற்றதும், அளவில்லா ததுமாக தோன்றக் கூடிய படங்களே ஓவியக் கலையில் அவர்களின் அடிப்படையாகும்.

இவ்வாறு இயல்பாக தோன்றக் கூடிய கலைஞானத்தை ஆசிரியர்கள் கண்டறிந்து கை கொடுத்து உதவியும் அதை வளரச் செய்தும் சிறந்த கலைஞனாக மாற்ற வேண்டும். இத்துடன் அந்தந்த பகுதியின் கலாச்சார பொக்கிஷம் என்ற நிலையில் வளர்ச்சியடைந் துள்ள இசை, நாட்டிய நாடக கலைகளையும் கலையம்சம் கொண்ட கைத் தொழில்களை யும் குழந்தையின் அனுபவ அறிவுச் சூழலுடன் ஆசிரியர்கள் புரிந்து கொள்ளவேண் டும். குழந்தைகள் இவ்வுலகை அறிந்து கொள்வது ஐம்புலன்களின் மூலமாகும். பார்த்தல், தொடுதல், கேட்டல் போன்றவற்றின் வாயிலாக இயற்கையை முழுமையாக உட்கொள் ளும் போது தான் கலைத் திறன் மேம்படுகிறது. பிற பாடங்களை கற்பதற்கும் அன்றாட வாழ்க்கைக்கும் கலைகல்வியின் முலம் பெற்றுக் கொள்ளும் உற்றுநோக்கல் திறன் மிக அதிகமான பலனைத் தருகிறது.

பள்ளிக்கூடங்களில் கலைத் திறன்களுக்கே எப்பொழுதும் முன்னுரிமை கிடைக்கி றது. ஒலி ஒளிக் காட்சிகளின் அழகுணர்வை புரிந்து கொள்ளவும் இரசிக்கவும் வேண்டு மென்பதே கலைக் கல்வியில் நாம் மேற்கொள்ளும் அணுகுமுறையாகும். ஒவ்வொரு நபரும் திறமைகளை வெளிக்காட்டுவதில் வேறுபட்டவர்களானதால் இரசனையிலும் திறன் களை வெளிக்கொணர்வதிலும் வேறுபாடு இயல்பானதாகும். ஒவ்வொரு குழந்தையும் அவரவர் திறமையை முடிந்தளவு உயர்த்துவதற்கான வாய்ப்பை உருவாக்குவதில் கவ னம் செலுத்த வேண்டும். இயல்பான வளர்ச்சி என்ற நவீன கண்ணோட்டமும் திரும்பத் திரும்ப கற்றலும் ஒன்றுக்கொன்று பொருத்தமுடையதன்று. முடிந்தளவிற்கு குழந்தைக ளின் முழு வளர்ச்சியை கருத்தில் கொண்டு இயல்பான வளர்ச்சியை நோக்கிச் செல் லும் முறையாக இருக்க வேண்டும். இதற்காக ஒருங்கிணைந்த கற்றல் முறைகளை முத லாவதாக ஏற்றுக் கொள்ளவேண்டும். ஆனால் தொடக்கம் முதலே கலைக் கல்விக்கு அதற் குரியதான அடித்தளம் உள்ளது. பிற பாடங்களுடன் ஒருங்கிணைந்த வாயப்புகளை பயன் படுத்துவதுடன் கலையின் பல்வேறு நிலைகளுக்கிடையில் ஒருங்கிணைப்பதும் முக்கி யத்துவம் வாய்ந்ததாகும்.

கலைக்கல்வியில் சங்கீதம். நடனம், ஓவியம், நாடகம் போன்ற பகுதிகள் அடங்கியி ருக்கிறது.

மழலையர் பள்ளிக்குழந்தைகள் (3–5 வயது) எதையும் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வமும் சுறுசுறுப்பும் உள்ளவர்கள். குழந்தைகளின் இத் தன்மையை பல்வகைத் திறன்கள் மூலம் கற்றலுக்கு உபயோகப்படுத்தலாம். இந்த கட்டத்திலும் முதல் இரண்டாம் வகுப்புகளில் முழுமையாக ஒருங்கிணைந்த கற்றல் அணுகுமுறையையே பயன்படுத்த வேண்டும். தொடர்ந்துள்ள கட்டங்களிலும் பலவிதமான கலை வடிவங்களின் மூலம் குழந் தையின் மனதிலுள்ள திறன்களை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும். பல்வேறு கலைத்துறைகளில் நிபுணத்துவமும் பயிற்சியும் பெற்றவர்களின் சேவையை எல்லா கட்டங்களிலும் பயன்படுத்த வேண்டும்.

நிகழ்த்து கலைகள் (Performing Arts) காணொளி கலைகளும் கற்றல் வழிமுறை கள் என்ற நிலையில் பயன்படுத்துவதை மேல்நிலைகல்வி வரை தொடரலாம். ஆனால் இது முடிந்த அளவிற்கு போலிதனமற்றதாக செயல்படுத்த வேண்டும். தேசிய பாடத் திட்ட சட்டக்கூடு. –2005 ன் கலைக்கல்வி பொசிஷன் பேப்பர் எடுத்துரைக்கும் கருத்து கள் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

பல்வேறு பகுதிகளிலுள்ள வகுப்பறைகளில் நடத்தப்பட்ட ஆய்வுகள் சுட்டிக்காட்டுவது என்னவென்றால் குழந்தைகளுக்கு சுதந்திரம் கொடுத்தால் அவர்களின் கலைத்திறனில் சிறந்த முன்னேற்றம் தோன்றுகிறது. குழந்தையின் சிந்தனைத் திறனுக்கு மங்கல் ஏற்படாத வகையில் படைப்பாற்றலை ஊக்குவிப்பதற்கான ஒரு அணுகுமுறையை ஆரம்பத்திலிருந்தே கடைபிடிக்க வேண்டுமென்ற முக்கியத்துவத்தையே இது தெளிவுபடுத்துகிறது.

கற்றலில் ஆசிரியரின் பங்களிப்பை போன்றே பெற்றோர்களின் பங்களிப்பும் பொதுவாக அங்கிகரிக்கப்பட்டுள்ளதல்லவா. கலைக்கல்வியின் முக்கிய சிறப்பம்சங்கள் பொது சமூகம் சரியான முறையில் புரிந்து கொள்ளவில்லை. அதனால் பெற்றோர்களின் உதவி ஒத்தாசைகளை உறுதிப்படுத்துவதற்கான வழிகளைப் பற்றி சிந்திக்க வேண்டும். உள்ளூர் வளங்களை (Local Resources) கண்டறியவும் அதைப்பயன்படுத்தி கலைக்கல்வியை கூடுதல் மேம்படுத்துவதற்கான வாய்ப்பாக பயன்படுத்த வேண்டும்.

## கலைக்கல்வி- பல்வேறு உற்றுநோக்கல்கள்

கலை தனிநபர் அனுபவமாகும். குழந்தையின் கலைத்திறன் ஆளுமை வளர்ச்சிக்கு தேவையான ஊக்கமும், செயல்பாடுகளும், அறிவுரைகளும், உதவியும் கலைக்கல்வி வகுப்பறையின் வாயிலாக குழந்தைக்கு கிடைக்க வேண்டும். அதற்காக நிறம், வடிவம், உருவம், அசைவு, தாளம் சப்தம் போன்றவற்றின் அழகை பிரித்தறியவும் அவற்றுடன் பிரதிபலிப்பதற்கான இரசிப்புத்தன்மையை உருவாக்கவும், வளர்க்கவும் செய்யும் பல்வேறு கற்றல் அனுபவங்களை கலைக்கல்வி வகுப்புகளில் உட்படுத்த வேண்டும். இசை, நடனம், ஓவியம், சிற்பம், நாடகம், சினிமா போன்ற பல்வேறு மண்டலங்களாக இவற்றை ஒழுங்குபடுத்தலாம்.

ஒரு பாடத்திட்டம் என்ற நிலையில் கலைக்கல்வியின் இலட்சியங்களையும், நோக்கங்களையும் கீழ்வருமாறு எடுத்துரைக்கலாம்.

- பிறவியிலேயே குழந்தைகளிடம் காணப்படும் கலைத்திறனை கண்டறிந்து வளரச்செய்தல்.
- பல்வேறு கலைகளை இரசிப்பதற்கும் அழகுணர்வை உட்கொள்வதற்கும்.
- கலைகளை இரசித்து அதனை மனதில் கொண்டு சமூக வாழ்க்கையில் மனிதத்துவ கண்ணோட்டத்தை உருவாக்குவதற்கும்.
- கலாச்சார வேறுபாட்டை பிரித்தறிந்து கலாச்சார அறிவை வளர்ப்பதற்கும்.
- கலையின் சக்தியை மனதில் கொண்டு சிந்தனைகளை நவீனமயமாக்குவதற்கும் பராபட்சமின்றி சமூக சேவைகளில் ஈடுபடுவதற்கும்.
- கலையைப் பயன்படுத்தி பிற பாடங்களை சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கும்.
  (Art applied learning)
- பன்முக அறிவு வளர்ச்சியின் வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்கும்.
- கற்றலில் பலதரக் குழந்தைகளை ஒரே போல் கற்றல் செயல்பாடுகளில் விருப்பமுள்ளவர்களாக்குவதற்கும்.
- உருவமற்ற அனுபவங்களை உருவமுள்ள பிம்பங்களாக மாற்றுவதன் மூலம் மனதில் உற்சாகம் ஏற்படுவதற்கும்.
- பல்வேறு கற்றல் செயல்பாடுகளின் ஒருமித்த வாய்ப்புகளை கண்டடைவதற்கும் உப

யோகிப்பதற்கும்.

- குழந்தைகளின் இரசிப்புத் தன்மையை உயர்த்துவதற்கும்.
- பல்வேறு கலைகளில் தனித்திறனுள்ள குழந்தைகளின் திறமையை வளர்ப்பதற்கும்.
- பல்வேறு கலைகளின் மீது ஆதரவு காட்டுவதற்கும்.
- கலைஞர்களை தெரிந்து கொள்ளவும் அவர்களுடைய நன்கொடைகளை அறிந்து மதிப்பளிப்பதற்கும்.
- பெற்றுக் கொண்ட கலைஞானத்தை தகுந்த சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதற்கும்.
- பல்வேறு கலைகளை சமூக சீர்திருத்த இலட்சியத்துடன் உபயோகிப்பதற்கும்.
- பல்வேறு கலைகளின் தொழில்நுட்ப நுணுக்கங்களை பிரித்தறிவதற்கும் உபயோகப்ப டுத்துவதற்கும்.

# 4. கலைக்கல்வி - பல்வேறு மண்டலங்கள்

மனித இனத்தின் வளர்ச்சியோடு வளர்ந்ததாகும் கலைகள். சுற்றிலுமுள்ள இயற்கையிலிருந்து புலன்கள் வாயிலாக மனதில் உருவான பிரதிபலிப்புகளே கலையாக உருமாறுகிறது. அதனால் வாழ்க்கையின் தவிர்க்க முடியாத ஒரு காரணியாகும் கலை. இயற்கையின் இயல்பு நிலையும், வேறுபட்ட பாவனைகளும் மனிதரிடம் உருவாக்கிய மனவெழுச்சியின் தாக்கமே கலைகளிலும் பிரதிபலிப்பதைக் காணலாம். ஐம்புலன் அனுபவங்கள், காட்சிகள், சப்தங்கள், அசைவுகள், நடத்தைகள் போன்ற அனுபவங்களின் பிரதிபலிப்புகள் முறையே ஓவியமாகவும், சங்கீதமாகவும், நடனமாகவும், நாடகமாகவும் உருமாறியது. அதனால்தான் இக் கலைகளில் பங்காளிகள் ஆவதற்கும் இரசிப்பதற்கும் உள்ள திறன் வளர வேண்டியது வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது.

இந்த நான்கு மண்டலங்களின் வாயிலாகவே கலைக்கல்வி செயல்படுகிறது. குறிப்பிட்ட திறன்களும் திறமைகளும் வளர்ச்சியடைவதே இவற்றைக் கற்பதன் நோக்கமாகும். ஒவ்வொரு வகுப்பிலும் ஒவ்வொரு மண்டலங்களிலும் வேறுபட்ட நிலையிலுள்ள கற்றல் செயல்பாடுகள் நடைபெறுமாறு அவைகளின் கற்றல் செயல்பாடுகள் நடைபெறுமாறு அவைகளின் கற்றல் அடைவுகள் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவுகளின் தன்மைக்கும் குழந்தைகளின் குழந்தைகளின் தகுதிக்கும் ஏற்ப ஒவ்வொரு வகுப்பிற்கும் தனித்தனியாகவே தயாரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவைப் பற்றிய சில விளக்கங்கள் கீழே சேர்க்கப்படுகிறது.

## 4.1 ஓவியம்

கோடுகளும் வண்ணங்களும் ஒன்றுக்கொன்று கூடிக் கலர்வதே ஓவியமாகும். இரு பரிமான மேற்பரப்பில் வெளிச்சத்தையும், நிழலையும் பொருத்தமாக இணைத்து உருவாக்கப்படும் உருவங்கள் தோற்றுவிக்கும் பாவனையை இரசிகனிடம் பகிர்ந்தளிக்கும் செயலே இங்கே நடைபெறுகிறது. கோடுகளும், வண்ணங்களுமே ஓவியனின் சிறப்பம்சங்களாகும். சுற்றிலுமுள்ளவற்றை உற்றுநோக்கி மனதில் தோன்றும் காட்சிகள் ஏற்படுத்தும் பிரதிபலிப்புகளை தனக்கே உரிய கண்ணோட்டத்துடன் அவர் வரைகிறார். அதற்குப் பொருத்தமானதென்று அப்பொழுது தோன்றும் ஊடகங்களை ஓவியர் ஏற்றுக்கொள்கிறார்.

ஓவியத்தின் பல்வேறு நிலைகளை ஒவ்வொரு கட்டத்திலும் அறிமுகம் செய்வதும் பயிற்சி தருவதுமே ஓவியக் கலையின் முக்கிய நோக்கமாகும். மனிதர்கள் குகைகளில் வாழ்ந்திருந்த காலம் முதலே வளர்ச்சியடைந்த சரித்திரம் ஓவியக் கலைக்கு உரியதாகும். வரலாற்றுடனும் வாழ்க்கை கலாச்சாரத்துடனும் இந்த கலைக்கு பிரிக்கமுடியாத உறவை ஏற்றுக்கொள்வதே ஓவியக் கலையின் ஒரு பகுதியாகும்.

***கற்றல் நோக்கங்கள்***

- ஓவியக் கலையின் பல்வேறு கட்டங்களை புரிந்து கொண்டு ஓவியம் வரைவது.
- பலவிதமான ஓவியமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கும் கருத்துகளை அடைவதற்கும்
- ஓவியம் வரைவதன் மூலம் கிடைக்கும் அறிவை உல்லாச வேளைகளாக்கவும் (Infotainment) ஓவியம் வரைவதன் வாய்ப்புகளை உபயோகப்படுத்தி கிடைக்கும் அறிவை (edutainment) உல்லாசமாக்குவதற்கும்.
- ஓவியர்களைப் பற்றி அறிந்து கொள்ளவும் வரலாற்றுக் கருத்துகளை உருவாக்குவதற்கும்.
- பிற பாடங்களைக் கற்பிப்பதற்கு ஓவியத்தின் வாய்ப்புகளை பயன்படுத்துவதற்கான கருத்தை உருவாக்குதல்,
- படங்களை உற்றுப்பார்ப்பதற்கும் இரசிப்பதற்குமான திறனை வளர்ப்பதற்கும்.
- பலவிதமான சிற்பங்களை பார்ப்பதற்கும் சிற்பங்களை வடிப்பதற்கும்.
- சிற்பக் கலைக் கூடங்களை பார்வையிடுவதற்கும் அவைகளின் கலாச்சார முக்கியத்துவத்தை அறிந்து கொள்வதற்கும்.
- சிற்பக் கலையின் வரலாற்றை சேகரிப்பதற்கும் புதிய தேடல் மண்டலங்களை கண்டடைவதற்கும்.

***பல்வேறு பகுதிகள்***

- பென்சில் ஓவியம், கிரையான்கள், கலர் பென்சில்கள். ஸ்கெச் பேனாக்கள் போன்றவற்றை உபயோகித்து வண்ணப்ப படங்கள், வாட்டர் கலர், ஆயில் கலர் போன்றவற்றாலான ஓவியங்கள் வரைகிறார்கள்.
- கோட்டுப் படங்கள், பெயிண்டிங்குகள், கார்ட்டூன்கள், காரிக்கோச்சர்கள் போன்ற பல வகை ஓவியங்கள் உண்டு.
- பல்வேறு மேற்பரப்பில் பலவிதமான கருவிகளைப் பயன்படுத்தி படங்கள் வரையப் படுகிறது.

## 4.2 இசை

இயற்கையின் இன்பமான ஒலிகளே நாதங்கள். நாதங்கள் முறையாக சேர்வதே இசை. ஆதி காலம் முதல் இசை உள்ளது. மனிதர்கள் மாற்றமடைந்ததற்கு ஏற்ப இசையும் மாற்றமடையத் தொடங்கியது. சத்தம், வாரத்தை, அசைவு போன்றவற்றின் ஒருங்கிணைப்பே சங்கீதம். இது ஒரே நேரத்தில் கலையாகவும் அறிவியலாகவும் உள்ளது. மனித உணர்வுகளை மொழிக்கு அப்பாற்பட்டு வெளிப்படுத்த முடியுமென்பதே இசையின் சிறப்பம்சமாகும்.

குழந்தைகளின் மனதை பிரித்தறிந்து நல்ல குணமுள்ளவனாக மாற்றுவதில் இசை முக்கிய பங்கு வகிக்கிறது. மனதை தூய்மையாக்கவும் அறிவை வளர்க்கவும் அதன் மூலம் பாவனையை உயர்த்தவும், திறன்களை வளர்க்கவும் இசைக்கல்வியினால் முடியும். அறிவு வளர்ச்சியையும், புத்துணர்ச்சியையும் இசைக் கல்வியின் மூலம் பெறமுடியும்.

பல்வேறு கட்டங்கள் மூலமே ஒரு குழந்தை இசைக்கல்வியில் முன்னேறுகிறது. சரியான நுணுக்கமான உற்றுநோக்கல், கருத்துப் பரிமாற்றம், வெளியீடு, இரசனை, செயல்பாடு போன்றவையாகுமிது. தாள அறிவும், சப்த எழுங்கமைவும் இசைக்கல்விக்கு தேவையானதாகும். தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆசை ஏற்படவும் அறிவு கிடைக்கவும் செய்வதே இசைக்கற்றல் செயல்பாட்டின் மூலம் நடைபெற வேண்டும். குழந்தைகளின்

திறமைகளை அறிந்து கொள்ளவும் ஏற்றுக்கொள்ளவும் ஊக்குவிக்கவும் பெரியவர்கள் தயாராகும் போது தான் இசை முழுமையான வளர்ச்சி அடைகிறது. பிற பாடங்களைப் போன்று தெரிந்து கொள்ளவும், அனுபவிக்கவும், வெளியிடவும், வாய்ப்புகள் ஏற்படவும், ஏற்கவும் வேண்டும்.

பிற பாடங்களின் கற்றல் செயல்பாடுகளுடன் இசைக் கல்வியை பயன்படுத்துவதற்கான முயற்சி மேற்கொள்ள வேண்டும். குழந்தைகளின் இசைத் திறன்களையும், சாதனைகளையும் சமூகத்தில் எடுத்துரைக்கவும், உபயோகப்படுத்தவும் முயற்சிக்க வேண்டும்.

***கற்றல் நோக்கங்கள்***

- பல்வேறு இசைவடிவங்களை அறிமுகம் செய்வதற்கும் இரசிப்பதற்கும்
- குழந்தைகளுக்கு இசையின் மேல் ஆர்வம் ஏற்படுத்துவதற்கு
- இசை வடிவங்களை அறிமுகம் செய்வதன் மூலம் கலாச்சார தனித்தன்மைகளை பிரித்தறிவதற்கும் கலாச்சார உணர்வை வளர்ப்பதற்கும்
- தேச பக்திப் பாடல்களை பாடுவதற்கும் தேசிய உணர்வை உருவாக்குவதற்கும்
- இசையமைப்பாளர்களை தெரிந்து கொள்வதற்கும் அவர்களுடை நன்கொடைகளை அறிந்து கொள்வதற்கும்
- இசையின் சரித்திரத்தை புரிந்து கொள்வதற்கும்
- இசைக் கருவிகளைப் பற்றி தெரிந்துகொண்டு அவற்றை இசைப்பதற்கான திறனை வளர்ப்பதற்கு
- தனியாகவும் குழுவாகவும் பல்வேறு பாடல்களை பாடுவதற்கு
- இசையின் தாளங்களையும், ராகஙங்களையும் அறிந்து கொள்வதற்கு
- இசையின் வாய்ப்புகளை உபயோகப்படுத்தி பிற பாடங்களை இரசிப்பதற்கு.

***பல்வேறு பகுதிகள்***

- வாய்மொழி சிந்துகள்
- குழந்தை பாடல்கள், விடுகதைப் பாடல்கள், பழமொழிப் பாடல்கள், கதைப் பாடல்கள்
- நாட்டுப்புறப் பாடல்கள்
- மெல்லிசைப் பாடல்கள்
- பல்வேறு கலை வடிவஙங்களுடன் தொடர்புடைய பாடல்கள்
- தேசிய கானம், தேசபக்திப் பாடல்கள்
- வாத்திய சங்கீதம்

## 4.3 நாட்டியம்

உடலே நாட்டியத்தின் ஊடகம். உடல்,போன்ற எல்லா உறுப்புகளும் உடல் அசைவில் உட்படுகிறது. மனவெழுச்சியே நாட்டியம் என்றாலும். நாட்டியத்தின் மூலம் மனவெழுச்சி உணர்வு தோன்றவும் செய்கிறது. சுய வெளிப்பாடென்பதால் நாட்டியமாடுபவரும் பார்பவரும் ஒரே போல் இன்பம் அனுபவிக்கிறார்கள்.

அழகியலுணர்வு வளரவும், தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் ஒழுக்கத்தை கடைபிடிப்பதற்கும் அறிவியல் முறையிலான தாள அறிவு உண்டாவதற்கும் நாட்டியக்கல்வி உதவுகிறது. ஒருமித்த உணர்வு உண்டாவதற்கும் புத்துணர்ச்சியும் சமூக ஒற்றுமையும் ஏற்படுவதற்கும் நாட்டியம் உதவுகிறது..

எல்லா குழந்தைகளுக்கும் நடனத்தில் ஆர்வத்தை ஊட்டுவதே பள்ளிகளில் நடன

வகுப்புகளின் நோக்கமாகும். நடனத்தில் ஆற்றல் மிக்கவர்களுக்கு அவர்களுடைய திறமையை வளர்ப்பதற்கும் நாட்டிய வகுப்பிற்கான வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். பல்வேறு நாட்டிய முறைகளையும் நுணுக்கங்களையும் அறிமுகப்படுத்துவ துடன் பாரத, கேரள நடனங்களின் மேன்மைகளையும் அறிந்து கொள்வதே இதன் நோக் கமாகும்.

***கற்றல் நோக்கங்கள்***

- நான்கு விதமான நடிப்புகளைப் பற்றிய அறிவு உருவாவதற்கு.
- பல்வகையான நடனமுறைகளை தெரிந்து கொள்வதற்கு
- நடனத்தை இரசிப்பதற்குமே நடன விழாக்களில் பங்கேற்பதற்கும்
- பல்வேறு நடனங்களின் கலாச்சார மேன்மைகளின் முக்கியத்துவத்தை புரிந்து கொள் வதற்கு
- நாட்டியத்தின் வரலாற்றுக் கருத்துகளை உருவாக்குவதற்கும் கலையுடன் தொடர்புடைய தேடுதல் செயல்களில் அதிகமாக ஈடுபடச் செய்வதற்கும்
- காணொளிக் காட்சிகளை ஏற்படுத்துவதற்கும் கற்றலை இரசிப்பதற்கும்

***பல்வேறு பகுதிகள்***

- நாடோடி நடனங்கள்
- கிளாசிக் நடனங்கள்
- செமி கிளாசிக் நடனங்கள்

## 4.4 நாடகம்

செயல்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் ஒரு கலையே நாடகம். உள்ளுணர்வுகளை உணர்ச்சி ததும்ப வெளியிடும் ஓர் அரங்க கலையாகவும் நாடகத்தைக் குறிப்பிடலாம். நாடகத்தின் வெளிப்பாடுகள் மனவளர்ச்சிக்கு ஆக்கம் தருவதாக அமையவேண்டும். ஒவ்வொரு நாடகத்திற்கும் அதற்கே உரிய ஓர் உட்பொருள் அமைந்திருக்கும். அந்த உட்பொருளைப் பார்வையாளர்களுக்கு மறைமுகமாக உணர்த்துவதற்கே நாடக ஆசிரியரும் இயக்குனரும், நடிகரும் முயற்சிக்கின்றனர்.

செயல்களுக்கு ஏற்ற பின்புலங்களும் நாடகங்களுக்கு இன்றியமையாததாகும். கதை யின் நோக்கம் கதாபாத்திரம் பிரச்சினைகள், உரையாடல் என்னும் நான்கு அடிப்ப டைக் கூறுகள் ஒன்றோடொன்று இனைந்து வெளிப்படும் போது ஒரு நல்ல நாடகம் உருவாகின்றது. ஓவியம், சிற்பம், இசை, நடிப்பு, நடனம் முதலான எல்லாக் கலைக ளும் நாடகத்தில் ஒருங்கிணைந்திருக்கக் காணலாம்.

***கற்றல் நோக்கங்கள்***

- பல நாடகங்களைப் பார்ப்பதற்கும் அதிலுள்ள சமூக முக்கியத்துவத்தை உணர்வதற் கும்
- எளிய நாடகங்களில் நடித்து நடிப்பைப் பற்றிய அறிவைப் பெறுவதற்கும்
- நாடகங்கள் எழுதுவதற்கும் நடிப்பதற்குமான ஆர்வத்தை வளர்ப்பதற்கும்
- நாடகத்தின் தொழில்நுட்ப நுணுக்கங்களை பிரித்தறிந்து நாடகங்களை அரங்கேற்றுவ தற்கும்
- நாடகத்துடன் தொடர்புடைய காரணிகளை ( மேடை அமைப்பு, உரையாடல், நடிப்பு, இசை...)பிரித்தறிவதற்கும். நாடக நடிப்பின் மூலம் இரசிப்புத் தன்மையை உட்கொள் வ.தற்கும், கலையுடன் தொடர்புடைய கூடுதல் ஆராய்சிகளில் ஈடுபடுவதற்கும்.
- பலவிதமான நாடகக் கூறுகளை புரிந்து கொண்டு அதற்கேற்றவாறு நடிப்பதற்கு.

- நாடகத்தின் கலாச்சாரக் கூறுகளை பிரித்தறிவதற்கு.
- பல்வேறு பாடப் பகுதிகளில் நாடகத்தின் வாய்ப்புகளைப் பிரித்தறிந்து பயன்படுத்து வதற்கும் கற்றலை இன்பமுள்ளதாக்குவதற்கும்

*பல்வேறு பகுதிகள்*

- ஓரங்க நாடகங்கள்
- தனிநபர் நாடகங்கள்
- தெரு நாடகங்கள்

# 5. கலைக்கல்வி- மதிப்பீடு

கலை, கற்பவரின் இரசிப்புத் தன்மையை எப்போதும் வளர்த்துக் கொண்டிருக்கும் முக்கியமான காரணியாகும். நடிப்பதற்கு (Preformance) மிகமுக்கியத்துவம் வாய்ந்த விஷயமாகும் கலை. வளர்ந்து வரும் தலைமுறையிலுள்ள குழந்தைகளுக்கு ஏற்படும் மனச்சிக்கல்களையும், மன அழுத்தங்களையும் குறைப்பதற்கு கலைக்கல்வியின் வாய்ப்புகளை பிரித்தறிய வேண்டும். பள்ளி அளவிலான கலைக்கல்வியில் ஓவியம் (drawing), இசை (music), நடனம் (dance), நாடகம் (drama) போன்றவை உட்படடுகிறது. இந்த நான்கு மண்டலங்களின் சமஅறிவும் பாடத்திட்டத்தில் உட்படுத்தப்பட்டுள்ளது. கலைக்கல்வி தொடபாக பல்வேறு வகுப்புகளில் குழந்தைகள் அடையவேண்டிய கற்றல் அடைவுகள் (Learning outcomes) தயாராக்கப்பட்டுள்ளது. பள்ளிப்பாடத்திட்டத்திலுள்ள பொதுவான பாடங்களான மொழி, கணிதம், அறிவியல், சமூக அறிவியல் போன்றவைகளில் கூறப்படும் கற்றல் முறைகளே கலைக்கல்வியிலும் ஏற்படுத்துவதற்கான வாய்ப்பை குழந்தைகளுக்கு வழங்கவேண்டும். கலைக்கல்வியின் எல்லா மண்டலங்களிலும் கிடைக்கும் அறிவு குழந்தைகளின் விருப்பத்தைக் கண்டடைவதற்கும் திறமையை வெளிப்படுத்தும் மண்டலத்தில் குழந்தையை வழிநடத்தி செல்வதற்கான வாய்ப்பு கிடைக்கும்.

கற்றல் கற்பித்தல் செயல்பாட்டின் முக்கிய காரணியாகும் மதிப்பீடு. கலையுடன் தொடர்புபடுத்தி உருவாக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை திருப்திகரமாக நிறைவேற்றுகிறார்களா? குழந்தைகளின் விருப்பத்தைக் கண்டுபிடிக்கவும் கற்றலை ஆனந்தமுள்ளதாகவும் மாற்ற முடிந்துள்ளதா? போன்றவற்றை மதிப்பீட்டின் மூலமாக மதிப்பிடப்பட வேண்டும். கலைக்கல்வியின் மதிப்பீடு பற்றிய விளக்கங்களையே இங்கே கலந்துரையாடுகிறோம்.

## மதிப்பீடு என்றால் என்ன?

கலைதொடர்பாக பள்ளிக்கு உள்ளேயும் வெளியேயும் குழந்தை அடைந்த திறனும், திறமையும் எவ்வளவு சிறப்பாக அடைய முடிந்தது என்ற தேடலே மதிப்பீடாகும். கற்றல் அடைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மதிப்பீடே வேண்டும். மதிப்பீடு கலைக்கல்வியின் முன்னேற்றத்திற்கான மதிப்பீடாக இருக்க வேண்டும். தவறுகளை சுயமாக திருத்திக் கொண்டு குழந்தைக்கு எந்தளவிற்கு முன்னேற முடிந்தது என்ற மதிப்பீடாக இருக்க வேண்டும்.

## மதிப்பீடு எப்படி?

கற்றல் அடைவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பாடத்திட்டமே 2013 ல்தயாரித்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் மதிப்பீடு செய்யும் போதே கற்றல் அடைவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். கலைக்கல்வியுடன் தொடர்புடைய கற்றல் அடைவுகளை திருப்திகரமாக அடைந்துள்ளார்களா என்ற மதிப்பீட்டை ஆசிரியர் மேற்கொள்ள வேண்டும்.

அதற்காக நிரந்தரமானதும், முழுமையானதுமான மதிப்பீட்டு முறையை நடைமுறைப்படுத்த வேண்டும். இம்முறையிலான ஒரு மதிப்பீட்டு முறையை நடைமுறைப்படுத்தும் போது கலைக்கல்வியின் ஒவ்வொரு அத்தியாயத்தையும் தொடர்புபடுத்தி இரண்டுங்

இத்தகைய ஒரு மதிப்பீட்டு முறையை நடைமுறைப்படுத்தும் போது கலைக்கல்வியின் ஒவ்வொரு வகையான மதிப்பீட்டிற்கு வாய்ப்பளிக்க வேண்டும்

- வகுப்பறையில் கற்றல் செயல்பாடுகளுடனான மதிப்பீடு
- செயல் (Performance) மதிப்பீடும் அறிவுசார் மதிப்பீடும்.

இவை ஒவ்வொன்றையும் பற்றி விரிவாகப் பார்க்கலாம்.

1. ~~வகுப்பறையில் கற்றல் செயல்பாடுகளுடனான மதிப்பீடு ( தொடர் மதிப்பீடு~~ (C.E):

*செயல்பாடுகளை மதிப்பிடுதல்*

கற்றல் செயல்பாடுகளை செயல்படுத்தும் போது ஆசிரியரின் உற்றுநோக்கல், வகுப்பறையில் குழந்தைகளின் செயல்கள், கலைக்கல்வியுடன் தொடர்புடைய விவரசேகரிப்பு, கலைக்கல்வி- நாட்குறிப்பு, போர்ட்போளியோ அலகு மதிப்பீடு முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு கற்றல் செயல்பாடுகளுடனான மதிப்பீட்டை நடத்த வேண்டும். கற்றல் செயல்பாட்டை மதிப்பிடுவதற்கு பொதுவாக கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தலாம்.

- செயல்பாட்டில் பங்களிப்பு
- கருத்துப் பரிமாற்றம்
- திறன்கள் அடைதல்
- செயல்/வெளியீடு
- அடையாளப்படுத்துதல்/தயாரித்தல்

சமூக, மனவெழுச்சி மண்டலங்களின் திறன்களை மதிப்பிடுதல் செயல்பாட்டு மதிப்பீட்டின் பாகமாக நடத்தப்பட வேண்டும்..

கீழே கொடுக்கப்பட்டுள்ள திறன்களை அந்தந்த குறிப்புகளை ஏற்றுக் கொள்ளும் நேரத்தில் மதிப்பீடு செய்து ஆசிரியர் கற்பித்தல் கையேட்டில் அடையாளப்படுத்த வேண்டும்

- ***குழந்தையின் கலைக்கல்வி நாட்குறிப்பு*** :

| *குறிப்புகள்* | *திறன்கள்* |
|---|---|
| செயல்பாடுகளில் பங்களிப்பு | சுயமாக அறிதல், தலைமைப் பண்பு, தனிநபர் திறன், பொறுப்புணர்வு |
| கருத்து | கற்றல் திறன்கள் |
| திறன் பெறுதல் | தீர்மானித்தல், பிரச்சினைக்குத் தீர்வுகாணும் திறன், படைப்பாற்றல் |
| செயல்பாடு/ வெளியீடு | கருத்துப் பரிமாற்றத்திறன் |
| பதிவு செய்தல்/ தயார்செய்தல் | விமர்சன சிந்தனை |

நோட்டுப் புத்தகம் போன்றவற்றை செயல்பாடுகளின் மதிப்பீட்டிற்குள்ள தெளிவாக உபயோகப்படுத்தலாம். இதை அவ்வப்போது பரிசோதனை செய்யவும் அறிவுரை கூறவும் வேண்டும் இதைப் பற்றிய குறிப்புகளை ஆசிரியர் கையேட்டில் எழுத வேண்டும்.

$ ***போர்ட்போளியோ மதிப்பீடு*** : கற்றலைப் பற்றி குழந்தைக்கும், பெற்றோருக்கும், ஆசிரியருக்கும் பின்னூட்டம் அளிக்கும் செயலையே போர்ட்போளியோ செய்கிறது. இது கற்றலை வேகமாக்கும். கற்றல் செயல்பாடுகளின் வழியாக கடந்து செல்லும் போது உருவாகும் எல்லா படைப்புகளையும் போர்ட்டோளியோவில் உட்படுத்தி மதிப்பீடு செய்யவேண்டும். பாடவாரியான கற்றல் தெளிவுகள் இதில் உட்படும்.

போர்ட்போளியோவின் உள்ளடக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

- கலைக்கல்வி நாட்குறிப்பு/ நோட்டுப் புத்தகம்
- பிற படைப்புகள்
- படங்கள்/ சேகரிப்புகள்
- பயிற்சித் தாள்கள்

மிகவும் சிறந்தது/ சிறந்தது/ சராசரி/ இனியும் தெலிவு பெற வேண்டும் 4/3/2/1 இவ்வாறு மதிப்பெண்கள் கொடுக்கலாம்.

**கற்பித்தல் கையேடு (TM)** :செயல்பாடுகளை மதிப்பிடுவதற்கு கற்பித்தல் கையேட்டை(TM) பயன்படுத்தலாம். TM ன் பிரதிபலிப்பு பக்கத்தில் உள்ள குறிப்புகளை இதற்குப் பயன்படுத்தலாம்.

$ ***அலகு மதிப்பீடு*** :அலகுடன் தொடர்புடைய வாய்மொழி மதிப்பீடு, செயல்பாட்டின் மதிப்பீடு, அலகின் பொதுவான மதிப்பீடு, வினாடி வினாப் போட்டிகள் போன்றவற்றின் வாயிலாக அலகு மதிப்பீடு செய்ய வேண்டும்..

## தொடர் மதிப்பீடு (CE) தரக்குறிப்பு

கலைக்கல்வியில் செயல்பாட்டு மதிப்பீடு( கலைக் கல்வி நாட்குறிப்பு, கற்பித்தல் கையேடு, ஆசிரியரின் உற்றுநோக்கல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு) போர்ட்போளியோ மதிப்பீடு, அலகு மதிப்பீடு ஆகிய ஒவ்வொன்றின் தரப்புள்ளிகள் 10 ற்கு கண்டுபிடித்து பிறகு அவற்றின் தொகை காணவேண்டும். இத்தொகைக்கு சமமான தரம் கொடுக்கவும். இதற்காக கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையைப் பயன்படுத்தலாம்.

உதாரணமாக ஒரு குழந்தைக்கு கலைக்கல்வியில் செயல்பாடு, போர்ட்போளியோ,

| *மதிப்பெண் (30 க்கு)* | *சதவீதம்* | *தரம்* |
|---|---|---|
| 23 - 30 | 75 – 100 | A |
| 18 - 22 | 60 - 74 | B |
| 14 - 17 | 45 - 59 | C |
| 10 - 13 | 33 -44 | D |
| 10 –க்குக் கீழ் | 33 –க்குக் கீழ் | E |

அலகு மதிப்பீடு போன்றவற்றில் புள்ளி 10 ற்கு 8,7,7 எனில் மொத்தப் புள்ளிகள் 8+7+7 = 22 ஆகும். அட்டவணைப்படி இதன் CE தரம் B ஆகும்

$ ***செயல்பாட்டு மதிப்பீடும் அறிவு மதிப்பீடும் (பருவ மதிப்பீடு)***:

கலைக்கல்வியில் செயல்பாட்டு மதிப்பீட்டிற்கே மிக முக்கியத்துவம் உள்ளது. ஒவ்வொரு மண்டலத்தையும் தொடர்புபடுத்தி வகுப்பு வாரியாக செயல்பாட்டு வாய்ப்புகளுக்கும் கற்றல் அடைவுகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து கண்டுபிடிக்க வேண்டும். பாடத்துடன் தொடர்

புடைய, முக்கியமாக தெரிந்திருக்க வேண்டிய அடிப்படை அறிவுகள் இத்துடன் பரி சோதனை செய்ய வேண்டும்.

இவ்வாறான செயல்பாட்டு- அறிவு மதிப்பீட்டின் மாதிரிகள் SCERT தயாரித்து கொடுக்கும்.

## மதிப்பீட்டிற்கான படிவம்

தொடர் மதிப்பீடு (CE), பருவ மதிப்பீடு (TE), போன்றவற்றை பருவ மதிப்பீடாக பதிவு செய்வதற்கான படிவம்

பருவம் : 1/2/3

பாடம்: வகுப்பு: பிரிவு ::

| வ. எண் | மாணவரின் பெயர் | CE இனங்கள் | | | CE தரம் | TE தரம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| | | செயல் பாடு | படைப்பு தொகுப்பு | அலகு மதிப்பீடு | | | |
| | | | | | | | |

## தேர நிர்ணய முறை

ஆரம்பப் பள்ளிகளில் தொடர் மதிப்பீட்டிற்கும், பருவ மதிப்பீட்டிற்கும் தனித்தனியாக தரம் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்காக கீழேகொடுக்கப்பட்டுள்ள அட்டவணையைப் பயன் படுத்தலாம்

| மதிப்பெண் விழுக்காடு | தரம் |
|---|---|
| 75 - 100 | A |
| 60 - 74 | B |
| 45 - 59 | C |
| 33 -44 | D |
| 33 -ற்குக் கீழ் | E |

## மதிப்பீடும் ஆண்டு ஒருங்கிணைப்பும்

பருவ மதிப்பீட்டிற்கான CE புள்ளிகள்/ தரங்களை பரிசோதிக்கும் போது மூன்று பருவத்திலும் குழந்தைக்கு கிடைத்த மிக உயர்ந்த புள்ளிகள் தரம் ஆகியவற்றை CE யின் ஆண்டு மதிப்பீட்டின் ஓவரால் கிரேடாக கணக்கிடலாம்.

### *TE கிரேடு :*

மூன்றாம் பருவத்தில் மாணவருக்கு கிடைத்த கிரேட் ஆகும் TE கிரேட்

CE கிரேட், TE கிரேட்டை இவ்வாறு பதிவு செய்வதுடன். சமூக, மனவெழுச்சி, மண்டலங்களிலும் சிறப்பானவற்றை அடையாளப்படுத்துவதும் ஆண்டு மதிப்பீட்டு படிவத்தில் அடையாளப்படுத்த வேண்டும்.

சமூக, மனவெழுச்சி மண்டலங்களில் மாணவர்களின் சிறப்பைப் பற்றி அடையாளப்படுத்தும் போது சிறந்தவற்றை மட்டும் அடையாளப்படுத்தினால் போதும், எதிர்மறையானவற்றை அடையாளப்படுத்த வேண்டியதில்லை.

| வரிசை எண் | மாணவரின் பெயர் | CE பிரிவுகள் | | | | CE தரம் | TE | | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | செயல்பாடு (20) | படைப்புத் தொகுப்பு (20) | அலகு மதிப்பீடு (20) | மொத்தம் (60) | | புள்ளிகள் (100) | தரம் | |
| | | | | | | | | | |

# 6. கலைக்கல்வி – பின்துணை அமைப்புகள்

சிறந்த பின்துணை அமைப்புகள் இருந்தால் மட்டுமே கலைக்கல்வி சிறப்புடையதாகும்.

## பல்வேறு நிலைகள்

*1. பள்ளியில்/ வகுப்பறையில்*

பள்ளியில் எஸ்.எம்.சி.யும் பி.டி.எ.யும் இன்று வலுவானதாகும். வகுப்பறையில் எம். பி. டி. எ. உள்ளது. இந்த அமைப்புகளுக்கு கலைக்கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்க வேண்டும். குழந்தையின் கற்றல் அடைவுகளை விவாதிக்கவும் வேண்டும். கலைக்கல்விக்குத் தேவையான வகுப்பறை வசதிகளும், உபகரணங்களையும், செயல்முறைக்கும், பார்வைக்கும் வைப்பதற்கு தேவையான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு இத்தகைய அமைப்புகளை முடிந்தளவுக்குப் பயன்படுத்தலாம். அந்ததந்த பகுதிகளிலுள்ள கலைஞர்களுடன் பழகுவதற்கும் அவர்களுடைய கலைத்திறனை இரசிப்பதற்கும் பள்ளியிலுள்ள அமைப்புகள் முயற்சிக்க வேண்டும்.

*2. பஞ்சாயத்து/ சி. ஆர். சி. நிலையில்*

நடைமுறையிலுள்ள வளமையங்களை மையமாகக் கொண்டு பொருட்களை சேகரிக்கவும் பங்கிடவும் வேண்டும். சி. ஆர். சி. களுடையவும், பஞ்சாயத்துகளுடையவும் கலைக் கல்வி கூடுதல் மேன்மையடைவற்கு உதவும் கட்டமைப்பு வசதிகளை பெருக்கவும் பொருட்கள்/ நபர்களுடையவும் சேவைகளை ஒழுங்குபடுத்தவும் வேண்டும்.

*3. உபமாவட்டம்/ பி. ஆர். சி. நிலையில்*

பி. ஆர். சி களில் பிற பாடங்களைப் போன்று கலைக்கல்விக்கும் உதவிகளும், பொருட்களை உருவாக்குவதற்குத் தேவையான பொருட்களும் தேவையாகும். பி. ஆர். சி அலவிலான கூட்டங்களும் பயிற்சிகளும் கலைக்கல்வி ஆசிரியர்களுக்கும் போதுமான இடைவேளைகளில் வழங்கவேண்டும்.

*4. மாவட்ட அளவில்*

மாவட்ட அளவில் கலைக்கல்வி ஆசிரியர்களின் ஒரு ரிசோழ்ஸ் பூல்/ ஒரு டி. ஆர். சி அமைப்பும் அவசியமாகும்.

# 7. கலைக்கல்வி- உள்ளடக்க விளக்கங்கள்

## 7.1



# ஓவியம்



# ஓவியம்

## முன்னுரை

ஓவியக்கலையின் வழியாக ஒரு பகுதி தனித்தன்மை வாய்ந்த முறையில் எடுத்துரைக்கப்படுகிறது.நமது காட்சியைத் தனித்தன்மை வாய்ந்த ஒரு இடத்திற்குக் கொண்டு செல்லவும் அதன் வழி மனதில் வேறுபட்ட காட்சிகள் உருவாக்குவதுமே ஓவியங்களைக் காண்கின்ற போது ஏற்படும் அனுபவம். ஓவியக்கலையின் அடிப்படை என்பது ஒளியின் தனித்தன்மை ஆகும். அது பார்வையாளர்களோடு நேரடியாகச் செயல்படுகிறது. ஓவியம் வரைதலும்,ஓவியத்தைப் பார்த்தலும் என்பது மனதிற்கு இன்பத்தையும், உற்சாகத்தையும் தருகிறது. குழந்தைகளின் தனிநபர் மேம்பாட்டிற்கு ஓவியக்கலை கல்வி மிகவும் உதவுகிறது.

கோடுகளுடையவும், நிறங்களுடையவும் ஆச்சரியத்தை மிக வியப்போடு பார்க்கவும் அதனை அனுபவிக்கவும் செய்வதில் குழந்தைகள் உற்சாகமாக இருப்பர். விரல்களை இணைத்துப் பயன்படுத்தத் துவங்குவது முதல் அவர்கள் வரைகின்றனர், நிறம் உருவாகின்ற எந்த பொருளைப் பயன்படுத்தியும் தரையிலும், சுவரிலும் வரைகின்றனர், அறிவு வளர்ச்சியும் முதல்கட்டத்தில் மனதில் பதிகின்ற முதல் தகவல்களை வரைந்தும், நடித்தும், ஆடியும், பாடியும் வெளியிடுவதன் பாகமாக குழந்தைகள் இதுபோன்ற செயல்களில் ஏற்படுகின்றனர். இதற்கு தொடர்ச்சி கொடுக்கவும் தனிமனித மேம்பாட்டின் பாகமாக முறைப்படுத்தவும் செய்ய வேண்டியது கல்விச் செயல்பாட்டின் தர்மமாகும்.

கோடுகளும் நிறங்களுமே ஓவியக்கலையின் அடிப்படை நிலைகள். நிறங்கள் இயற்கையில் உள்ளதெனில் கோடுகள் ஓவியனின் படைப்பாகும். பிறவியிலேயே அல்லது உள்ளுணர்வு வழியாக கிடைப்பதாகும் இது. சிறு வயதுள்ள குழந்தைகள் சாதாரணமாக வரைந்த கோடுகளில் சிறிய குறிக்கீடு செய்து தடங்கள் ஏற்படுத்தாமல் இருப்பதே ஓவியக்கலை கற்றலின் முதல்படியாகும். ஆனால் நிறங்களை பயன்படுத்துவதற்கான வாய்ப்பு அளிக்கவும் அதனை ரசிப்பதற்கான வாய்ப்பு அளிக்கவும் வேண்டும். கற்பனை வடிவம் உருவாக்கவும் வாய்ப்பளிக்க வேண்டும்.

வடிவங்களைக் குறித்துள்ள குழந்தைகளின் கற்பனை பெரியவர்களிலிருந்து மாறுபட்டு காணப்படும். வடிவத்தின் அளவுகளில் பெரியவர்களிலிருந்து வேறுபட்டு காண்கின்ற விதம் அவர்களின் கோடுகளில் காணப்படுகிறது. அதனை புரிந்துகொண்டு குழந்தைகளின் கோடுகளை பார்க்கவேண்டும். இவ்வாறு அவர்கள் சுயமாகக் கண்டடைந்த வடிவத்தின் தனித்தன்மை குறையாமல் அதனை மேம்படுத்தியெடுக்க உதவுகின்ற விதத்தில் இருக்க வேண்டும் ஓவியக் கல்வி, ஆரம்ப நிலையிலுள்ள ஓவியக்கலைக் கல்வியிலிருந்து தொழில் நுட்பமுறையைப் பெரும்பாலும் மாற்றி அமைக்க முயல வேண்டும். சுற்றுமுள்ளவற்றை நன்றாக உற்றுநோக்கவதற்கும் அதே போன்று வரையவும் ஓவியங்களைக் கண்டு இரசிப்பதற்குமான வாய்ப்புகள் கொடுக்க வேண்டும்.

# கற்றல் அடைவுகள்

## ஐந்தாம் வகுப்பு

- இயற்கையை உற்றுநோக்கிக் கோடுகள் அல்லது வரைகளையும் நிறங்களையும் பயன்படுத்திப் படங்கள் வரைகின்றனர்.
- பொருட்களின் வடிவத்தைப் பற்றிய திறன், விகிதம், நிறச்சேர்க்கை என்பவற்றின் அறிவு பெறு கின்றனர்.
- சுதந்திரமாகவும், குறிப்புகளின் அடிப்படையிலும் உள்ள கருத்து வெளியிடும் ஓவியங்களை வரைதல்.
- வடிவியல் வடிவங்களிலிருந்து வேறுவடிவங்கள் தயாரித்தல்.
- முப்பரிமாண பிரதிபலிப்புள்ள பொருட்களைத் தயாரிக்கின்றனர்.
- கணினியில் ஓவியம் வரைவதற்கு ஏற்ற நிலைகளை அறிமுகப்படுத்துகின்றனர்.

## ஆறாம் வகுப்பு

- இயற்கையை உற்றுநோக்கி வரைகளையும், நிறங்களையும் பயன்படுத்தி ஓவியங்களை வரைய முடியும்.
- வடிவங்களைப் பற்றிய திறன், விகிதம், நிறச்சேர்க்கை என்பவற்றில் திறன் பெறுகின்றனர்.
- அடிப்படை நிறங்களிலிருந்து பல்வேறு நிறங்களை உருவாக்க முடிகின்றது.
- உயிரினங்களின் பகுதி,விகிதம் ஆகியவற்றைப் புரிந்துகொண்டு ஓவியம் வரைய முடிகிறது
- மனித உடல்நிலையைப் புரிந்துகொண்டு வரைவதற்கு முடிகிறது.
- நுணுக்கம், சரியான வடிவம், அழகு என்பவற்றை உட்கொண்டுள்ள மாதிரிகளை தயாரிக்கின்றனர்.
- பலவித இதழ்களில் முக்கோணப் பிரதிபலிப்பு சிலைகள் தயாரிக்கின்றனர்.
- நடைமுறைப் பிரச்சினையை அடிப்படையாக்க கொண்டு வரைகின்றனர்.

## ஏழாம் வகுப்பு

- இயற்கையிலுள்ள பொருட்களை உற்றுநோக்கி அவற்றில் உள்ள வடிவியல் வடிவங்களை கண் டறிந்து படம் வரைந்து நிறம் கொடுக்கின்றனர்.
- முப்பரிமாண பிரதிபலிப்புள்ள வடிவங்களில் நிழலும், ஒளியும் தொடர்புகொண்டு விழும் முறைகளைப் புரிந்துகொண்டு சாதாரணமாக வரைகின்றனர்.
- மனித உருவங்கள் சிறு செயல்கள் செய்கின்ற விதத்தில் உள்ள படம் வரைகின்றனர்.
- உற்று நோக்கலின் தனித்தன்மைகளை உட்கொண்டு படம் வரைதல்.
- செய்தித்தாள்களைப் பயன்படுத்தி முப்பரிமாண வடிவங்களைச் செய்கின்றனர்.
- கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு வண்ண ஓவியங்கள் வரைகின்றனர்.
- கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு கேலிச்சித்திரங்கள் வரைகின்றனர்.
- கதை, கவிதை இவைகளிலுள்ள முக்கிய நிகழ்வின் கருத்தை உட்கொண்டு ஓவியம் வரைகின்றனர்.

# ஐந்தாம் வகுப்பு

## அலகு–1: வடிவம், நிறச்சேர்க்கை

ஒவ்வொரு உயிரினத்தையும், பொருளையும் வரைவதற்கு முன்னரே அவற்றின் வடிவத்தைப்பற்றிய தெளிவு குழந்தைகளுக்கு உருவாக வேண்டும். வரைகளின் வரிசையும், முறையுமே ஓவியமாக மாறுகிறது. இரண்டோ அதற்கு மேலான பொருட்களை வரையும் போதும், ஒரு பொருளை வரைக்கும் போதும் அதனுடைய ஒவ்வொரு பாகங்களுக்கிடையிலான விகிதத்தின் தன்மையைக் கவனிக்க வேண்டியது பொருளின் சரியான வடிவம் வரைவதற்குத் தேவையானதாகும்.

### கற்றல் அடைவுகள்

பொருட்களின் வடிவரீதியிலான தெளிவு, விகிதம் நிறச்சேர்க்கை என்பவையில் அறிவு பெறுகின்றனர்.

### கருத்து, திறன்

- வரைவதற்கு முன்னரே பொருட்களுடையவும், உயிரினங்களுடையவும் அவற்றின் வடிவ முறையிலான வேறு நிலைகளைக் குறித்தும் சரியான தெளிவு ஏற்பட வேண்டும்.
- இப்படிப்பட்ட தெளிவிலிருந்து ஒவ்வொன்றினுடையவும் வடிவ முறைகளை பயன்படுத்தி வரைவதே ஓவியம்.
- ஒரு பொருளின் பல பாகங்களுக்கிடையிலோ அல்லது இரண்டோ அதற்கு மேற்பட்ட பொருட்களுக்கிடையிலோ விகிதங்களின் வித்தியாசம் உண்மையான ஓவியங்களில் தேவையானதாகும்.

### திறன்கள்

- பொருட்களையும், உயிரினங்களையும் வரைவதற்காக அவைகளின் வடிவத்தைப் பற்றியுள்ள தெளிவு உருவாகிறது.
- அளவுகளின் விகித வேறுபாட்டை உணர்ந்து முறையாக வரைய முடியும்.

### கற்றல் செயல்பாடுகள்

- சில பொருட்களைக் காண்பித்தல்.
- ஒரு பொருளை வரையும் போது எங்கெல்லாம் வரைகள் உருவாகிறது.
- ஒரு இடத்தின் எல்லைகள், இடத்தின் பல நிலைகளுடையும் எல்லைகள்.

- ஒரு இடத்தின் ஒவ்வொரு பகுதியும் அளவில் எந்த விகித வேறுபாட்டில் உள்ளது.
- விகித வேறுபாட்டை அறிந்து கொள்கின்றனர்.
- இந்த அறிவுகளை வைத்து மேசையின் மேல் வைத்திருக்கின்ற பொருட்களை வரையவும் புதியதாக சேர்க்கவும் செய்யலாம்.

### மதிப்பீடு

- வடிவத்தைப் பற்றிய தெளிவு அடைந்துள்ளான்.
- இடத்தின் நிலைகளை வரைந்து இணைத்துள்ளனர்.
- பொருத்தமான விகிதத்தில் வரையப்பட்டுள்ளது.

### அடைய முடிகின்ற கற்றல் மேன்மைகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் மேன்மைகளை அடைய முடிந்ததா?*

- விகித வேறுபாட்டை முறைபடுத்தியுள்ள சரியான வரைதல் நடைபெறுகிறது.

## அலகு–2: நிறங்கள்

நிறங்களைக் குறித்துள்ள அடிப்படை அறிவு குழந்தை அடைய வேண்டியுள்ளது. அடிப்படை நிறங்களான சிகப்பு, நீலம், மஞ்சள் என்பவற்றைப் பல அளவுகளிலும், ஒன்றோடோன்று கலந்தாலும் எந்த நிறமும் கிடைக்குமென்ற தெளிவு குழந்தை களுக்கு கிடைக்க வேண்டியுள்ளது. இந்தக் காரியங்களில் நடைமுறை அனுபவங்கள் குழந்தைகளுக்குக் கிடைக்க வேண்டும்.

### கற்றல் அடைவுகள்

அடிப்படை நிறங்களைப் பயன்படுத்தி படம் வரைதல்.


### கருத்துகள்

- சிகப்பு, மஞ்சள், நீலம் என்பவையே அடிப்படை நிறங்கள்.
- அடிப்படை நிறங்களைப் பல அளவுகளிலும், ஒவ்வொன்றாகக் கலந்தும் எந்த நிறத்தை வேண்டுமானாலும் உருவாக்கலாம்.
- அடிப்படை நிறங்களைப் போன்று இரு நிறங்களும், மூன்று நிறங்களும், நான்கு நிறங்களும் உண்டு.

### திறன்கள்

- அடிப்படை நிறங்களிலிருந்து இரு நிறங்களும் மூன்று நிறங்களும் தயாரிப்பதற் கான திறன்கள்.

- நிறங்களைக் கையாளும் தன்மை,
- தேவையான நிறங்களைத் தயாரிப்பதற்கான திறமை




## கற்றல் செயல்பாடுகள்

### ஆரம்பச்செயல்பாடுகள்

- ஒரு வெள்ளைப் பாத்திரத்தில் சிகப்பு, மஞ்சள், நீலம் என்ற நிறங்களை எடுத்து வைக்கின்றான்.
- ஆசிரியர் குழந்தைகளோடு கேட்கின்றார். எனக்கு ஆரஞ்சு நிறத்தில் உள்ள பழத்தை வரைய வேண்டும், இதில் அந்த நிறம் இல் லை.......... என்ன செய்வீர்கள்,......என்னென்ன நிறங்களை சேர்த்தால் கிடைக்கும்?
- குழந்தைகள் கூறுவது போன்று செய்து பார்க்கப்பட்டது, இறுதியில் சரியானது.
- குழந்தைகள் ஒவ்வொரு நிறத்தையும் சேர்த்துத் தெரிந்து கொள்ளட்டும்
- இறுதியில் ஆசிரியர் அந்த மூன்று நிறங்களையும் கொண்டு ஒரு இயற்கை காட் சியை வரைந்து காட்டும் போது இந்த மூன்று நிறங்களையும் கொண்டு எதுவும் செய்ய முடியும் என்று குழந்தைகளுக்குப் புரியும்.
- இதுவே அடிப்படை நிறங்கள்.

## மதிப்பீடு

- தேவையான நிறங்கள் கிடைத்ததா?
- இந்த நிறங்களைப் பயன்படுத்தி எவையெல்லாம் வரைக்கலாம்?

## அடைய முடிகின்ற கற்றல் மேன்மைகள்

*கீழே கொடுக்கப்பட்ட கற்றல் மேன்மைகளை அடைய முடிந்ததா?*

- அடிப்படை நிறங்களைப் பயன்படுத்தி வரைகின்றனர்.

# அலகு-3 கருத்துகளின் அடிப்படையில் ஓவியம் வரைதல்

சுதந்திரமாக வரைதலே......

..................................................................................

..................................................................................

## கற்றல் அடைவுகள்

சுதந்திரமாகவும் குறிப்புகளின் அடிப்படையிலும் கருத்துகளை கொண்ட ஓவியம் வரைகின்றனர்,

## கருத்து, திறன்

- சமூகப்பிரச்சினைகளோடு பதில் அளிக்க ஓவியங்களைப் பயன்படுத்தலாம்.
- சுதந்திரமாக வரைவதற்கு வேண்டிய அறிவு பெறுதல்,

## திறன்கள்

- சுதந்திரமாக ஓவியம் வரைவதற்கான திறன்.

## கற்றல் செயல்பாடுகள்

- சமூகப்பிரச்சினையோடு தொடர்புகொண்ட பத்திரிக்கைச் செய்திகள், படங்கள், நிழற்படங்கள் போன்றவை காண்கின்றனர்.
- சமூக நன்மையைப் பற்றியும் முன்னரே கண்ட செய்திகளைக் குறித்தும் கலந்துரையாடல்.
- சமூகக் கொடுமைகளுக்கெதிரான ஓவியம் வரைதல்.
- சுதந்திரமான ஓவியம் வரைதல்.

## மதிப்பிடுதல்

- ஓவியத்தின் கருத்து வெளியீடு.
- ஓவிய நடை.
- கண்ணைக் கவரும் முறை.

## அடைய முடிகின்ற கற்றல் மேன்மைகள்

*கீழே கொடுக்கப்பட்ட கற்றல் மேன்மைகளை அடைய முடிந்ததா?*

- குழந்தைகளின் சொந்த உணர்ச்சிகளை வெளியிட முடிகிறது.

# அலகு–4: வடிவியல் வடிவங்கள்

பொருட்களுடையவும், உயிரினங்களுடையவும் ஓவியம் வரைவதற்கு பொதுவாகப்பயன்படுத்தும் தொழில்நுட்பமுறையே வடிவியல் வடிவங்கள். பொருட்களை நல்ல முறையில் உற்றுநோக்கவும் அவற்றில் பல வடிவியல் வடிவங்களைக் கண்டடைந்து அவற்றின் உதவியோடு வரைவதே இம்முறை. எந்தப் பொருளையும் வடிவியல் வடிவங்களில் கொண்டு வர முடியும். இயற்கையை முறைப்படுத்திய வடிவியல் உட்படுத்துவதே இதன் வழி நடைபெறுகிறது.

## கற்றல் அடைவுகள்

வடிவியல் வடிவங்களிலிருந்து புதிய வடிவங்கள் உருவாக்குதல்.

## கருத்து, திறன்.

- வடிவியல் வடிவங்களப் பயன்படுத்தி எளிதாக ஓவியம் வரைய முடியும்.
- எல்லா பொருட்களிலும் வடிவியல் வடிவங்களைக் காணமுடியும்.
- சில நேரம் ஒன்றோ அதற்கு மேற்பட்ட வடிவியல் வடிவங்கள் ஒன்று சேர்ந்து கூடக் காணலாம்.

**கற்றல் செயல்பாடுகள்**

- இயற்கையிலுள்ள பொருட்களின் வடிவியல் வடிவங்களை அடையாளப்படுத்திய ஓவியங்களைக் காண்பித்தல்.
- எவையெல்லாம் வடிவியல் வடிவங்கள்?.
- எந்த ஒரு பொருளிலும் வடிவியல் வடிவங்கள் அடங்கியுள்ளது என்ற கருத்தில் கலந்துரையாடல், விளக்கம்.
- மேசை மீது வைக்கப்பட்டுள்ள பொருட்களில் என்னென்ன வடிவியல் வடிவங்கள் உள்ளது. உற்று நோக்கல், கண்டுபிடித்தல்.
- கண்டடைந்த வடிவியல் வடிவங்களைப் பயன்படுத்தி இந்த பொருட்களை வரையவும்.

**மதிப்பீடு**

- வடிவியல் வடிவங்களை கண்டடைதல்.
- வடிவத்தை அறிதல்.
- நுணுக்கம்.

**அடைய முடிகின்ற கற்றல் மேன்மைகள்**

*கீழே கொடுக்கப்பட்ட கற்றல் மேன்மைகளை எந்த அளவு அடைய முடிந்தது?*

- இயற்கையிலுள்ள பொருட்களில் வடிவியல் வடிவங்களை கண்டறியவும் அவைகளை வரைவதற்காக வடிவியல் வடிவங்களைப் பயன்படுத்தவும் செய்கின்றனர்.

## அலகு-5 கணினி கிராஃபிக்ஸ்

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி எந்த ஒரு மண்டலத்திலும் கூடுதல் நுட்பத்தோடும், நுணுக்கத்தோடும் மேம்படுத்த முடியும். ஓவியத்துறையில் கணினியுடையவும் பலவித மென்பொருட்களுடையவும் பயன்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நுணுக்கமும் எளிமையும், கவர்ச்சியும், தெளிவுமே அதற்குத் தூண்டும் முக்கிய நிலைகள், ஐந்தாம் வகுப்பில் கணினியைப் பயன்படுத்துவதற்கும் அதில் படம் வரைவதற்கும் குழந்தைகளுக்குத் தெரிந்திருக்க வேண்டும். சில காரியங்களில் கையைவிட கணினி சிறந்தது.

**கற்றல் அடைவுகள்**

கணினி கிரா஼பிக்ஸின் வாய்ப்புகளை அறிமுகப்படுத்துதல்.

**கருத்து, திறன்.**

- ஓவியம் வரைவதற்கு நவீன தொழில் நுட்பங்களான கணினிகளும், பலவிதமான மென்பொருட்களும் உண்டு.

- அதிக நுணுக்கத்தோடும் கவர்ச்சியாகவும் எளிதாகவும் ஓவியம் வரைவதற்கும், வரைந்ததை நகல் எடுப்பதற்கும் இதன் மூலம் முடியும்.

### திறன்கள்

- கணினியைப் பயன்படுத்துவதற்கும் பலவிதமான மென்பொருட்களைப் பயன் படுத்துவதற்குமுள்ள திறன்.
- தேவைக்கேற்பப் பலவித மென்பொருட்களைத் தேர்ந்தெடுப்பதற்கான திறன்.

### கற்றல் செயல்பாடுகள்

- கணினி ஆய்வகத்தில் ஓவியம் வரையப் பயன்படுத்துகின்ற பலவிதமான மென் பொருட்களைத் தெரிந்துகொள்கின்றனர்.(கிடைப்பதற்கேற்ப)
- தெரிந்துகொண்ட மென்பொருட்களில் ஓவியம் வரைகின்றனர், நிறம் கொடுக் கின்றனர்.

### மதிப்பீடு

- கவர்ச்சிகரமான ஓவியம்.
- பிரஷ்கள், பில்டர்கள், டோண்
- தொழில் நுட்ப அறிவு,
- மனப்பான்மை

### அடைய முடிகின்ற கற்றல் மேன்மைகள்

*கீழே கொடுக்கப்பட்ட கற்றல் மேன்மைகளை எந்த அளவு அடைய முடிந்தது?*

- கணினி கிராபிக்ஸைப் பயன்படுத்தி குழந்தைகளுக்கு ஓவியம் வரைய முடிகிறது.

## அலகு–6 முப்பரிமாணப் பொருட்கள்

இயற்கையில் இயற்கையானதும் மனிதனால் உருவாக்கப்பட்டதுமான பொருட்கள் உள் ளன. இதில் மனிதனால் உருவாக்கப்பட்ட பொருட்களில் ஏராளமானதும் முப்பிரமாண வடிவம் ஆகும். பல வித ஊடகத்தைப்பயன்படுத்தி இப்படிப்பட்ட மனிதனால் உருவாக் கப்பட்ட பொருட்களை வகுப்பில் மீண்டும் உருவாக்க முடியும். இப்படிப்பட்ட புனர மைப்பு குழந்தைகளின் உற்றுநோக்கல், தயாரிப்பு திறன்களை வளர்க்க உதவும்.

### கற்றல் அடைவுகள்

முப்பரிமாண வடிவிலுள்ள பொருட்களைத் தயாரிக்கின்றனர்.

### கருத்து, திறன்

- இயற்கையில் மனிதனால் உருவாக்கப்பட்ட பொருட்களில் பெரும்பாலும் நேரானதும் சரியானதுமாகும்.

- இவற்றைத் தயாரிப்பதற்குப் பொருட்களின் எல்லாப் பக்கத்திலிருந்துமுள்ள பார்வை உற்றுநோக்கல் தேவையானதாகும்.
- இயற்கையில் மனிதன் உருவாக்கிய வீடு, அடுக்குமாடி போன்ற கட்டிடங்களை அட்டைக்காகிதங்கள், தீப்பெட்டி போன்ற பொருட்களைப் பயன்படுத்தி எளி தாக உருவாக்கலாம், இவைகளை ஒன்றிணைப்பதற்கு பசை, நூல், ஊசி போன்ற தேவையான பொருட்களைப் பயன்படுத்தலாம்.

- இதற்கு நிறம் கொடுப்பதற்கு மெழுகு கோல், ஸ்கெட்ச் பென், வண்ண எழுது கோல் போன்றவைகளைப் பயன்படுத்தலாம்.

## கற்றல் செயல்முறை

***நிலை-1***

- இயற்கையிலுள்ள மனிதனால் உருவாக்கப்பட்ட பொருட்கள் எவையெனக் கலந் துரையாடுகின்றனர். பட்டியலிடுகின்றனர்.

***நிலை-2***

- கண்டடைந்த பொருட்களில் எவையெல்லாம் வகுப்பறையில் தயாரிக்கலாம் என் றும், எந்த ஊடகங்களைப் பயன்படுத்தி தயாரிக்கலாம் என்றும் கலந்துரையாடல் செய்கின்றனர்.
- எ.டு- ஒரு வீடு உருவாக்கச் சதுரப்பெட்டி (சோக்பீஸ் பெட்டி, மருந்துபெட்டி) மேற்கூரை அமைப்பதற்கு கட்டியான அட்டையை ஒட்டலாம். இதுபோல நீள முள்ள பெட்டியை பயன்படுத்தினால் அடுக்குமாடி கட்டிடங்களும் தயாரிக்கலாம்.
- கண்டடைந்த பொருட்களின் வடிவம் தயாரித்தல்.
- கட்டியான அட்டை, காகிதம் போன்றவையை பசை (பெவிஃகோல்) பயன்படுத்தி ஒட்டி வடிவங்கள் தயாரிக்கின்றனர்.
- தயாரித்த வடிங்களில் வண்ண மெழுகுகோல் மற்றும் எழுதுகோல்களைப் பயன் படுத்தி நிறம் கொடுத்து சிறப்புகளை வரைந்து அழகுபடுத்துகின்றனர்.
- வெளியீடு, சுயமாக-ஒருவக்கொருவர் மதிப்பீடுதல்.
- மதிப்பிடுதலுக்குப் பிறகு பொருளிலுள்ள சிறு தவறுகளைத் திருத்தி சரியானதாக மாற்றிய பின், புதியதாக தயாரிப்பில் குறைபாடுகளை திருத்தவதற்கான வாய்ப்பு அளிக்க வேண்டும்.

## மதிப்பீடு

- சிற்பம் தயாரிப்பதற்கான பொருட்கள்/ கருத்துக்களைக் கண்டடைதல்.
- பொருட்களின் வடிவத்திற்கு ஒத்த..............கண்டுபிடித்தல்.
- ஊடக வழக்கம்.
- நுணுக்கம்.
- நிற அழகு.

இவைகளில் நின்று கொண்டு நன்மையுள்ள மதிப்பீடு.

# ஆறாம் வகுப்பு

## அலகு –1: இயற்கை ஓவியங்கள்

ஓவியம் வரைவதற்காகத் தேர்ந்தெடுக்கும் இயற்கை நிலைகளை அதனுடைய தனித் தன்மைகளைப் புரிந்து கொண்டு வரைப்பதற்காக அதன் நிலைகளை நுட்பமாக உற்று நோக்க வேண்டும். அதற்காக இயற்கையை உற்று நோக்க வேண்டும். இயற் கையை உற்று நோக்குவதன் வழி இயற்கைப் பொருட்களையும், நிறங்களையும் கூடுதலாக நுட்பத்துடன் உற்று நோக்கக் குழந்தைகளால் முடிய வேண்டும். தனித் தன்மைகளை இழந்து விடாமல் உண்மையான பொருட்களை வரைவதற்கான வாய்ப்பு கிடைப்பதன் வழி இயற்கையை நுட்பமாக தெரிந்து கொள்ளவும், இயற் கையை நேசிப்பதற்குமான ஒரு செயல்பாடாகும்.

### கற்றல் அடைவுகள்.

இயற்கையை உற்று நோக்கி வரைகளையும், நிறங்களையும் பயன்படுத்தி ஓவியம் வரையமுடிகிறது.

### கருத்து, திறன்

- பொருட்களின் நிஜமான படம் வரைவதற்கு நுட்பமான உற்று நோக்கல் தேவை யாகும்
- ஒவ்வொரு பொருளுக்கும் அதற்கான தனித்தன்மைகள் உண்டு.
- நிஜ ஓவியத்திற்கு நிஜமான பொருளையே மாதிரியாக எடுக்க வேண்டும்.

### கற்றல் செயல்பாடுகள்

***நிலை – 1***

- ஒரு மரத்தின் படத்தைக் காண்பித்தல்.
- இது ஒரு மரம் என்று அறிய முடிகின்றதா? கலந்துரையாடல்
- தெரிந்துகொள்ள வேண்டுமெனில் மரத்தின் நுணுக்கமான பகுதிகளையும் வரைய வேண்டியுள்ளது.
- நுணுக்கமான பகுதிகளைக் கண்டறிந்து மரத்தை நேரடியாக உற்று நோக்க வேண்டும்.
- மரத்தை நுணுக்கமாக உற்று நோக்குகின்றனர்.(வெளியில்)
- தனித்தன்மைகளின் உதவிப்படம், நகல் தயாரிக்கின்றனர்.
- வகுப்பறையில் கண்ட நுணுக்கப்பகுதிகளைக் குறித்துக் கலந்துரையாடல் நடத் துகின்றனர்.

- தனிப்பட்ட முறையில் அடையாளம் காணும் வகையில் மரம் வரைகின்றனர்.
- வெளியிடுகின்றனர்.

***நிலை – 2***

- வரைந்த ஓவியத்திற்கேற்ற நிறம் கொடுத்து முழுமையாக்குகின்றனர்.
- நிறம் கொடுப்பதற்கு வண்ணச்சாயம், மெழுகு கோல், வண்ண எழுதுகோல் போன்ற பொருட்களைப் பயன்படுத்துகின்றனர்.
- நிறம் கொடுத்த ஓவியத்தை வெளியிடுகின்றனர்.

## மதிப்பீடு

- மரத்தை (பொருளை) தனிப்பட்ட முறையில் அடையாளம் காணும் விதத்தில் வரைய முடிகிறது.
- பொருளின் நுணுக்கமான பகுதிகளும் இணைக்கப்பட்டுள்ளன.
- பொருளின் நிஜமான தன்மை பிரதிபலிக்கும் முறையில் நிறம் கொடுப்பதற்கான திறன் கிடைக்கிறது

# அலகு–2 சிற்பங்கள்

ஒரு பொருளின் நுட்பமான கற்றல் செயல்களுக்கு பயன்படும் ஒரு ஊடகமே சிற்பங்கள். பல ஊடகங்களை ஒரு உருவத்திலேயே பயன்படுத்த முடியும், வேறுபட்ட ஊடகங்களை ஒரே உருவத்தில் பயன்படுத்தும் போது பல ஊடகங்களை ஒரே நேரத்தில் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு கிடைக்கும். இது மட்டுமல்லாமல் பொருட்களின் நிஜமான வடிவத்தைக்குறித்துள்ள சரியான அறிவு உருவாகும். சிற்பங்கள் தயாரிப்பதன் வழி முடிகிறது, ஏனெனில் சிற்பங்கள் தயாரிக்கும் போது அப்பொருளின் எல்லா பகுதியிலிருந்துமுள்ள உற்று நோக்கல்/ கற்றல் மிகத்தேவையானதாகிறது

## கற்றல் அடைவுகள்

பலவித ஊடகங்களில் சிற்பங்கள் தயாரிக்கின்றனர்.

## கருத்து, திறன்

- சிற்பங்கள் முப்பரிமாண முறையில் உள்ளன.
- சிற்பம் உருவாக்கும் போது அப்பொருளின் நான்கு திசைகளிலிருந்துள்ள கண்ணோட்டத்தை அறிய வேண்டும்.
- பொருளுக்கு உருளை, பருமன். உயரம், அடுக்குகள் போன்ற நிலைகள் இருக்கும்.
- சிற்பம் தயாரிப்பதர்கு களிமண், மரக்கட்டை, உலோகம், போன்ற பரம்பரிய பொருட்களும்..... காகித கூழ், மெழுகுபோன்ற நவீன பொருட்களும் குடைக்கம்பி, சகரி, ஈர்க்கில் ,காகிதம் போன்றவற்றையும் பயன்படுத்தலாம்.

## கற்றல் செயல்பாடுகள்

- எந்தப் பொருளைத் தயாரிப்பது என்பதைக் கண்டறிவதற்கான கலந்துரையாடல், பட்டியல் இடுதல்.
- கண்டடைந்த பொருளத் தயாரிப்பதற்கு என்னென்ன ஊடகங்களைப் பயன் படுத்தலாம்– கலந்துரையாடல், பட்டியல் இடுதல்,

  எ;க.ஒரு பாய்கப்பல் தயாரிப்பதற்கு
  வள்ளம்–களிமண்ணையோ நெகிழி மெழுகோ பயன்படுத்தலாம்
  பாய்தயாரிப்பதற்கு,
  அதனை ஓடத்தோடு இணைப்பதற்கு ஈக்கில், பசை, நூல் போன்றவை பயன்படுத்தலாம்.
  கண்டடைந்த பொருளின் வடிவம் தயாரித்தல்
  சிற்பம் தயாரிப்பதற்கான ஊடகம் தயாரித்தல்
  எடுத்து மாற்றுவதற்கு ஏற்ப அட்டை, வைக்கோல்
  அட்டை போன்றவையின் மேலே சிற்பம் தயாரிக்கவும்.

- வெளியிடுதல், சயமாகவும்– ஒருவருக்கொருவரும் மதிப்பிடுதல் நடத்துகின்றனர்.
- மதிப்பிட்ட பிறகு சிற்பத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து குறைபாடில்லாமல் ஆக்க புதிய சிற்பம் தயாரித்து பார்ப்பதற்கான வாய்ப்பு கொடுக்க வேண்டும்.

## மதிப்பீடு

- சிற்பம் தயாரிப்பதற்கான பொருள்/ கருத்தைக் கண்டடைதல்.
- பல ஊடகங்களைக் கண்டறிந்து பயன்படுத்துவதற்கான திறமை.
- ஊடகத்தைப் பயன்படுத்துதல்.
- தயாரிக்கும் திறன்
- நிஜ பொருளோடு உள்ள ஒப்புமை இவையில் நின்று கொண்டுள்ள மதிப்பீடு.

# அலகு–3 வடிவம், நிறச்சேர்க்கை

இயற்கையின்/ பொருட்களின் உண்மையான ஓவியமே காண்பவரை அதிகமாகக் கவரக்கூடியது, கருத்துக் கட்டுப்பாடு இல்லையென்பதும், இயற்கையின் அழகை அப்படியே காணலாம் என்பதுமே இப்படிப்பட்ட ஓவியங்கள் மக்களைக் கவரக் கூடியதாக அமைகிறது

பொருள்/ பொருட்களின் முழுமையான வடிவமும் அவற்றின் பல பாகங்கள் தம்மிலுள்ள/ பல பொருட்கள் தம்மிலுள்ள விகித சதமான அளவு, அதைப்போன்று அவைகளிலுள்ள நிறச்சேர்க்கையிலுள்ள வாய்ப்பு என்பவையும் நுணுக்கமாகப் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது

## கற்றல் அடைவுகள்

வடிவம், விகிதம், நிறச்சேர்க்கை என்பவற்றில் திறன் பெறுதல்.

## கருத்து, திறன்


- இடம்/பொருட்களின் வடிவத்தை மொத்தமாக ஒரேயொரு எல்லைக்கோட்டில் ஒதுக்கிக் காணக்கூடிய முறையே வடிவமுறையிலான தெளிவு.
- இடத்தின் அமைப்பு, திசை என்பவைக்கேற்ற முறையிலேயே வடிவத்தின் தெளிவு அமைகிறது.
- இடத்தின் ஒவ்வொரு பாகமாகவோ. பல இடங்களை ஒன்றாகவோ முழுமை யாக ஒரே வடிவத்தில் காண முடியும்.
- ஒரு இடத்தின் பல பகுதிகளை ஒன்றாக்கியோ, பல இடங்களுக்கிடையிலோ அளவிலுள்ள விகிதத்தை நுணுக்கமாகப் புரிந்து கொண்டு படம் வரைய வேண் டும்
- ஒரு இடத்தின் மொத்த நிறம் ஒன்றாக இருப்பினும் அதில் விழும் ஒளியின் அளவைப் பொறுத்து நிறத்தில் வேறுபாடு காணப்படும்.

## திறன்கள்

- இடத்தை/பொருட்களை முழுமையாகக் காண்பதற்கான திறன்.
- இடத்தை/பொருட்களை பல நிலைகளாகப் பிரிக்கவும், விகிதம் காண்பதற்குமான திறன்
- இடத்திலுள்ள நிறங்களின் தனித்தன்மையைப் புரிந்துகொள்ளவும் அதைப் போன்று வரைவதற்குமுள்ள திறன்.

## கற்றல் செயல்பாடுகள்

- உண்மையான படங்களை வரைவதற்கான கலந்துரையாடல்
  - பொருட்கள்/பொருட்களின் படம் தனித்தன்மையோடு அதைப்போன்று வரைதல்.
  - வரைய வேண்டிய பொருட்களின் முழுமையான வடிவத்தைப் பற்றி தெளிவு பெறுதல்.
  - வடிவியல் வடிவங்களைப் பயன்படுத்தி முழுமையான வடிவுத் தெளிவு பெறுதல்.(ஆசிரியர் அட்டையை காண்பிக்கிறார்)
- சிறப்புகள் எவையெல்லாம்?
  - தூரத்திலுள்ள மரத்தை உற்றுநோக்குதல்
  - மரத்தின் பல பாகங்கள் எந்தெந்த வடிவியல் வடிவங்களுக்கு நிகரானது.
  - கண்டைடைந்த வடிவங்களை அடையாளப்படுத்தல்.



- ஒவ்வொரு வடிவத்தின் அளவுகளின் விகிதம் எவ்வாறெல்லாம்? கலந்து ரையாடல்
- மரத்தின் கீழேயுள்ள தண்டின் நீளத்தின் எத்தனை மடங்கு இலைகளின் நீளமும், வீதியும்- நுட்பமாகப் பார்க்கவும்.
- பொதுவாக மரத்தின் இந்த வடிவங்களை ஒன்றாக வரையலாமா?
- குழந்தைகள் வடிவங்களை விகிதமுறையில் அடையாளப்படுத்துகின்றனர்.
- இந்த வடிவங்களிலிருந்து மரத்தை வரைந்து பார்க்கவும்.
- குழந்தைகளுக்கு வரைவதற்கு நேரம் அளிக்கப்படுகிறது.
- படங்களைக் கலைக்காட்சிக் கூடத்தில் வெளியிடவும்.
- ஆசிரியர் மதிப்பிடுதல் குறிப்புகளைக் கரும்பலகையில் எழுதுகின்றார்.
- கரும்பலகையில் உள்ள குறிப்புகளின் அடிப்படையில் குழந்தைகள் சுய மாக வரைந்து மதிப்பிடுகின்றனர்.

# அலகு-4 உயிரினங்கள்

உயிரினங்களை வரையும் போது உயிரற்ற பொருட்களை வரைவதைவிட மிகவும் கவனிக்கப்பட வேண்டியதாகும். உயிரினங்களின் உடல்நிலை சிக்கலானதும், நகரும் போது மாற்றம் வருவதுமாகும். அதனால் உயிரினங்களை வரையும்போது அவைக ளின் (நிலையைக்) அமைப்பைக் குறித்தும் நகரும் போது ஏற்படும் மாற்றங்களைக் குறித்தும் தெளிவான கருத்து வேண்டும்.

## கற்றல் அடைவுகள்

உயிரினங்களின் அமைப்பைப் புரிந்துகொண்டு ஓவியம் வரைகின்றனர்.

## கருத்து, திறன்

- ஒவ்வொரு உயிரினத்திற்கும் வித்தியாசமான உடல் அமைப்புகளுண்டு.
- இந்த அளவுகளைப் பயன்படுத்தி உயிரினங்களின் ஒவ்வொருபாகமும் தெளி வாக வரைய முடிகின்றது.
- வடிவியல் வடிவங்களின் கற்பனைத்திறன் உயிரினங்களை வரைவதற்கு உதவி யாகயிருக்கும்.

## திறன்கள்

- உயிரினங்களின் உடலமைப்புகளை உற்றுப்பார்ப்பதற்கான திறமை.
- அளவு முறைகளைப் பயன்படுத்தி உயிரினங்களின் இயல்பான அமைப்புகளை வரைவது எளிதாகும்.

## கற்றல் செயப்பாடுகள்

***செயல்பாடு- 1***

- யானை, ஒட்டகச்சிவிங்கி இவற்றின் படம் காட்டப்படுகிறது (புகைப்படம்).
- இந்த மிருகங்கள் தம்மிலுள்ள பார்வை வித்தியாசங்கள் எவை?கலந்துரையாடல்.
- இவை தம்மிலுள்ள அளவு வித்தியாசங்கள் புரிந்துகொள்ளவும்.

- யானையின் அருகில் ஆடு நிற்கும் போது என்ன வித்தியாசம் கானப்படுகிறது?
- உங்களுக்குப் பிடித்த விலங்கு/உயிரினத்தை வரையலாமா?
- வரைந்த ஓவியங்களை வெளியிடுதல், மதிப்பிடுதல்.

***செயல்பாடு- 2***

- யானையின் படத்தை மீண்டும் உற்றுநோக்குகின்றனர். ஏதாவது வடிவில் வித்தியாசம் காணமுடிகிறதா? கலந்துரையாடவும்.
- அப்படியெனில் வடிவியல் வடிவங்களில் யானையை எளிதாக வரையலாம் அல்லவா?
- படத்தை வரைந்து பார்ப்போம், வரைகின்றனர், வெளியிடுகின்றனர்.

வேறுபட்ட விலங்குகளை உற்றுநோக்கவும். வரைவதற்கான வாய்ப்பை உருவாக்கவும்.

***செயல்பாடு- 4***

- நிறம் கொடுக்கின்றனர்.
- வண்ண எழுதுகோல்களைப் பயன்படுத்தி ஓவியத்திற்கு நிறம் கொடுக்கின்றனர்.
- ஆசிரியரின் மதிப்பீடு.
- யாரெல்லாம் முழுமையாக்க வில்லை?.
- இனியும் மேம்படுத்த வேண்டியவர்கள்.
- நிவர்த்திசெய்வதற்கான குறிப்புகள்.
- வகுப்பறைக் கலைக்களஞ்சியத்தில் வெளியிடுதல்,

## மதிப்பீடு

- வடிவ நிலையில் தெளிவு கிடைக்கிறது.
- விகிதமுறை பாதுகாக்கப்பட்டுள்ளது.
- சாதாரணத்தன்மை, கருத்து, ஒப்புமை.

# அலகு–5:மனித உடல்நிலை

மனித உடலை வரைப்பது என்பது மிகச்சிக்கலான செயலாகும். ஒவ்வொரு உயிரினத்தைப்போலவும் மனித உடல்நிலையை நுட்பமாகப் புரிந்து கொண்டால் மட்டுமே கவர்ச்சிகரமாக வரையமுடியும்.


## கற்றல் அடைவுகள்

மனித உடல்நிலையைப் புரிந்துகொண்டு வரையமுடிகிறது.

## கருத்து, திறன்.

- மனித உடல்பகுதிக்குத் தெளிவான நிலையும் விகிதமும் உள்ளது.
- மனிதனின் தலையை அடிப்படையாகக் கொண்டு மற்ற பகுதிகளை

விகித முறையில் சரியாக வரையலாம்.




## திறன்கள்.

- விகிதமுறையில் படம் வரையும் திறன்.
- மனித உடல்நிலை வரையும் திறன் பெறுகின்றனர்.

## கற்றல் செயல்பாடுகள்

- முழு வளர்ச்சியடைந்த மனித உடல்நிலையை தலையின் அளவிற்கேற்ப விகித முறையில் அடையாளப்படுத்தி மனித உடல் படத்தை காண்பிக்க வேண்டும்.
- மனித உடலின் உடல்பகுதியின் அளவு தலையின் அளவை அடிப்படையாக்கி அடையாளப் படுத்தப்பட்டதை படத்தில் காணலாமல்லவா? கலந்துரையாடல்.
- இப்படிப்பட்ட அளவுகளை வைத்து ஒரு முழுமையடைந்த மனித வடிவத்தை வரைய லாமா?.
- இப்படிப்பட்ட அளவுகளை வைத்து ஒரு முழுமையடைந்த மனித வடிவத்தை வரைய லாமா?.
- வரைவதற்கான நேரம் ஒதுக்கப்படுகிறது.
- வெளியிடுதல், மதிப்பிடுதல்.




## மதிப்பீடு

- சரியான முறையில் வரையப்பட்டுள்ளது.
- தலையில் அளவிற்கேற்ப மொத்த உடல் பகுதியும் வரையப்பட்டுள்ளது.

## அலகு-உருவ ஒற்றுமை அலங்காரம்

அழகை உற்று நோக்குவதன் வழி அலங்காரத்தை சிறப்பிக்கலாம். மனதை மகிழ்ச்சியடையச் செய்கின்ற அலங்காரத்தைக் கொண்டு எவ்விடத்திலும் வடிவங்களை உருவாக்கலாம். வரைகளை அழகாக வரைவதன் வழி அலங்கார வடிவங்களைத் தயாரிக்கலாம். இப்படிப்பட்ட வடிவங்களை மீண்டும் மீண்டும் உருவாக்கும் போது அது அலங்கார அடுக்குகளாக மாறுகிறது.

### கற்றல் அடைவுகள்.

நுட்பம், ஒழுங்கான வடிவம், அலங்காரம் இவைகள் ஒன்றிணைந்த மாதரிகள் வரைகின்றனர்.

### கருத்து, திறன்

- அலங்காரத்தின் முக்கிய படிகளே நுட்பமும், ஒழுங்கும்.
- கோடுகளின் அழகும், ஒருங்கிணைப்பும் ஆகும் அலங்காரத்தின் பாற்றேன் கள்
- அலங்கார அடுக்குகளைப் பயன்படுத்தி மேற்பரப்புகளைக் கண்ணைக் கவரும் விதத்தில் அலங்கரிக்க முடியும்.
- வடிவியல் அடுக்குகளைப் பயன்படுத்தியும் அடுக்குகள் உருவாக்கலாம்.

### திறன்கள்

- வரைகளை அழகாக வரையவும் இணைப்பதற்குமுள்ள திறன்.
- அலங்கார அடுக்குகள் தயாரிப்பதற்கான திறன்.

### கற்றல் செயல்பாடுகள்

- வரைகளின் அடுக்குகளைப் பயன்படுத்தி வடிவமைத்த அலங்காரப் பொருட்களைக் காண்பிக்கின்றனர்.
- இவற்றில் வரைகளை முறையாகக் காண முடிகிறதா?.
- வரைகளின் முறையே உருவான அடுக்குகளைக் கொண்டே இது அலங்கரிக் கப்பட்டுள்ளது.
- இது போன்ற அலங்கார அடுக்குகள் தயாரிக்க முடியுமா?.
- மேலே கூறப்பட்ட கருத்துக்களை ஒருங்கிணைத்துக்கொண்டு அலங்கார அடுக் குகள் தயாரிப்பதற்கு வாய்ப்பு கொடுக்கப்படுகிறது.
- வெளியிடுதல், சுயமாக மதிப்பிடுதல்.

### மதிப்பீடு

- நுட்பம். வடிவஒப்புமை போன்றவை.
- கண்ணைக் கவரும் முறையில் உள்ளது.

## அலகு–7: கேலிச்சித்திரங்கள்

மிகக் குறைந்த வரைகளால் விரிவான கருத்துக்களை எடுத்துரைக்க முடியும். என்பதே கேலிச் சித்திரத்திரங்களின் தனித்தன்மை. வரைதலில் அறிவியல் முறையிலான ஒரு பகுதியும் ஏற்றுக்கொள்ளப்படாத கோலியாகவும் மிகைப்படுத்தியும் தேவையான வரைகளை பயன்படுத்தியும் கேலிச்சித்திரம் வரைக்கின்றனர்.

### கற்றல் அடைவுகள்

நிலவிலுள்ள நிகழ்ச்சிகளை அடிப்படையாக்கி கேலிச்சித்திரங்கள் வரைகின்றனர்.

## கருத்து, திறன்

- புன்னகை உருவாகும் முறையிலுள்ள கேலிச்சித்திரங்கள், கண்ணைக் கவரவும், சிந்தனையைத் தூண்டவும் செய்யும்.
- கைப் பழக்கமே கேலிச்சித்திரங்கள் வரைப்பதற்கு மிக முக்கியம்.
- மிகவும் தேவையான வரைகளை மட்டும் பயன்படுத்துகின்றனர்.

## திறன்கள்

- கேலிச்சித்திரம் வரைவதற்குத் தேவையான வரைகளைக் கண்டுபிடிப்பதற்கான திறன்.
- கேலிச்சித்திரம் வரைவதற்கான திறன்.

## கற்றல் செயல்பாடுகள்

- பல கேலிச் சித்திரங்களின் மாதரிகளைக் காண்பித்தல்.
- கேலிச்சித்திரங்களின் தனித்தன்மைகள் யாவை? கலந்துரையாடல்.
- நிலவிலுள்ள பிரச்சினைகளைக் கண்டறிதல். தேவையான வடிவங்களையும் கண் டறிதல்.

  எ.கா–

  சுற்றுப்புறத் தூய்மை (விஷயம்)
- மிகைப்படுத்தியுள்ள வரைதல்.
- எளிமையாக வராந்துள்ளனர்.
- நகைச்சுவை தன்மையுடையதாக உள்ளது.
- விமர்சனத்திற்குரியது
- சிந்தனையைத் தூண்டுவது.
- வேகமாக வாசித்தெடுக்க முடியும்.
- உண்மையான அளவுமுறையைப் பயன்படுத்தவில்லை.
- வடிவங்களை அதன் உண்மையான நிலைக்கேற்ப வரைய வேண்டுமா? மிகைப் படுத்துதலின் தேவை என்ன?
- மேற்கூறிய கருத்துக்களில் கவனத்தை செலுத்தி கலந்துரையாடி ஒருங்கிணைக்கவும்.
- கேலிச்சித்திரம் வரைவதற்கு தேவையான கருத்துக்களை கண்டறிவீர்களா?
- நடைமுறையிலுள்ள கருத்தைக் கண்டடைந்து. எளிமையான கேலிச்சித்திரம் வரை கின்றனர்.
- எவ்வளவு மிகைப்படுத்த வேண்டும்? கலந்துரையாடல்.
- மனதில் உருவான கேலிச்சித்திரங்களை வரைகின்றனர், வெளியிடுகின்றனர்.

## மதிப்பீடு

- கருத்து வெளியீடு.
- மிகைப்படுத்தலின் அளவு.
- வரைகளின் தன்மை.

# ஏழாம் வகுப்பு

## அலகு–1: நிழலும் ஒளியும்

முப்பரிமாண ஓவியம் வரைதலில் மிக முக்கியமான பகுதியே நிழலும் ஒளியும், ஒளியின் உதவியோடு தான் பொருட்களை நாம் பார்க்கமுடிகிறது, எனவேதான் பொருட்களின் மேற்பரப்பிலும், சுற்றிலும் விழுகின்ற ஒளியின் தன்மைக்கேற்ப ஒளி யுடையவும், நிழலுடையவும் பாகங்கள் வரையப்படுகின்றன. ஒளி விழும்பகுதியில் எளிமையான நிறமும், ஒளிவிழாத பகுதியில் கட்டியான நிறமும் காணப்படுகிறது, அவ்வாறு நிறங்களின் பல வித்தியாசத்துடன் படத்தின் பகுதிகளை ஒழுங்குபடுத் துகின்றனர்.

### கற்றல் அடைவுகள்

பொருட்களின் நிழல் ஒளியுடன் தொடர்புடைய முறையைப் புரிந்துகொண்டு சாதாரண வரைதல் நடத்துகின்றனர்.

### கருத்து, திறன்

- ஒளி விழுகின்ற பகுதியில் எளிய நிறமும், ஒளி விழாத இடத்தில் கட்டியான நிறமும் காணப்படுகிறது.
- ஒளியின் தன்மைக்கேற்ப நிழலும் இருக்க வேண்டும்.

### திறன்கள்


- ஒளி விழுவதற்கேற்ப நிறங்களில் மாற்றம் வருத்துவதற்கான திறன்.
- கற்பனையில் ஒளியின் கட்டியை முடிவெடுக்கவும் அதற்கேற்ப நிழலைக் கட்டி யாக்குவதற்கான திறன்.

### கற்றல் செயல்பாடுகள்

- மேசையின் மேல் ஒன்றோ இரண்டோ பொருட்கள்(பளபளப்பற்ற)வெளியிடு தல்.
- இந்த பொருட்களில் சிறிய அளவில் ஒளி விழுகின்ற நிலை உருவாக்கவும், உற்று நோக்குவதற்கு அறிவுரை கொடுக்க வேண்டும்.







- இவற்றில் எந்தப் பகுதியிலிருந்து ஒளி விழுகிறது? நிழல் காண்பது எந்தெந்தப் பகுதியிலிருந்து?.
- மேல் கூறப்பட்ட கருத்துக்களை ஒருங்கிணைத்துக் கொண்டு கலந்துரையாடல் முடிவுக்குக் கொண்டு வரப்படுகிறது.
- எனில் இந்தப் பொருளில் ஏதாவது ஒரு திசையிலிருந்து ஒளி விழுகின்ற முறையில் வரைந்து பார்க்கவும்.
- வரைந்த பிறகு வெளியிடுதல், சுயமாக வெளியிடுதல்.

### மதிப்பிடுதல்

- உற்று நோக்கல்.
- ஒளியின் உறைவிடத்திற்கேற்ப நிழலை உருவாக்குதல்.
- வரையும் முறை.

## அலகு-2 மனித வடிவங்கள்.

மனித வடிவங்களை சரியான அளவைப் பயன்படுத்தி வரைய முந்தைய வகுப்பில் படித்தோமல்லவா?. இலகுவான செயல்களைச் செய்யும் மனித வடிவங்களை இந்த வகுப்பில் வரைய வேண்டும். மனித உடலின் நிலையைப் புரிந்து கொண்டு, அசையும் உறுப்புகளையும் ஒன்றிணைத்து இப்படிப்பட்ட மனித வடிவங்கள் வரையலாம்.

### கற்றல் அடைவுகள்

விகித முறையிலுள்ள மனித வடிவங்கள் சிறிய செயல்களை (வேலைகளை) செய்கின்ற படம் வரைகின்றனர்.


### கருத்து, திறன்.

- முழுவளர்ச்சியடைந்த மனித வடிவத்தை வரைய தலையின் நீளத்தை அளவாகக் கொண்டு, விகித முறையைப் புரிந்து கொள்ளவும்.
- வேலை செய்கின்ற மனித வடிவத்தில் அதே விகிதத்திலுள்ள உறுப்புக்களின் அசைவையும் புரிந்து கொள்ள வேண்டும்.

### கற்றல் செயல்பாடுகள்

- இலகுவான வேலை செய்கின்ற மனித வடிவத்தின் படம் வகுப்பில் காண்பிக்க வேண்டும், ஒருங்கிணைத்தல்.
- எந்தெந்த உறுப்புகள் அசைந்ததாகக் காணப்படுகின்றன.
- எவ்வளவு தூரத்தில் அசைந்துள்ளது.

  ஆனால் அவைகளின் விகிதத்தில் எந்த மாற்றமும் இல்லை.



- பல மாதிரியான படங்களைக் குழந்தைகளுக்குக் காண்பித்தல். (எ.கா) விளையாட்டுப் படங்களைக் காண்பித்தல்.
- இவையில் எந்த படத்தை எளிமையாக வரையலாம்.?
- குழந்தைகள் விருப்பமான படங்களை வரைகின்றனர்.
- வெளியிடுகின்றனர், சுயமாக மதிப்பிடுகின்றனர்.



## மதிப்பீடு

- சமமாக
- அசைகின்ற மனித உறுப்புகள்.
- கண்ணைக் கவரும் தன்மை.
- செயல்குறிப்பு.

# அலகு-3:ஓவியக்கண்ணோட்டம்

ஓவியம் வரைதலின் தொழில் நுட்பமுறைகளில் முக்கியமானது அவரது கண்ணோட்டத்தின் தனித்தன்மை. இயற்கையான படம் வரையும் போது இந்தத் தனித்தன்மைகள் இணைந்தாலே படத்திற்கு இயற்கையான காட்சியிருக்கும். படத்திலுள்ள பொருட்களின் இடம், அதற்கிடையே உள்ள அகலம், ஒழுங்கு போன்ற தனித்தனமைகள் கண்ணோட்டத்திற்கேற்ப உட்கொள்ளப்படுகிறது, இயற்கை ஓவியம் வரையும் போதே இது அதிகமாகக் காணப்படுகிறது.

## கற்றல் அடைவுகள்

கண்ணோட்டத்தின் தனித்தனைகளை உள்வாங்கி படம் வரைகின்றனர்.

## கருத்து, திறன்

- ஒரே அளவிலுள்ள பொருட்கள் பக்கத்தில் இருக்கும் போதும், தூரத்தில் இருக்கும் போதும் ஒரே அளவில் காணப்படுவது இல்லை.
- அனுபவத்தைக் குறித்துள்ள தெளிவு பெறுதல்.
- தூரம் கூடும் தோறும் பொருட்களின் அளவு சிறியதாகவும். தெளிவில்லாமலும் காணப்படுகிறது.ஒரு புள்ளியில் முடிவடைவதாகத் தோன்றுகிறது.
- மறையும் பகுதி என்ற கருத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது.

## திறன்கள்

- கண்ணோட்டத்தின் தனித்தன்மையோடு பொருட்களைக் கற்பனையில் காண்பதற்கான திறன்.
- படத்தில் பொருட்களைக் கண்ணோட்டத் தனித்தன்மையோடு சேர்ப்பதற்கான திறன்.
- தூரத்திற்கும், அளவிற்கும் இடையிலுள்ள தொடர்பை அறிந்து கொள்கின்றனர்.


## கற்றல் செயல்பாடுகள்

- இயற்கையோடு தொடர்புகொண்டு வரைகின்ற படங்களில் கண்ணோட்டத்தின் தனித்தன்மைகள் அதிகமாகக் காணப்படுகின்றன.
- ஒரே உயரத்தில் அருகாமையிலும், தூரத்திலும் இருக்கின்ற பொருட்களை உற்று நோக்குதல்.

- வானத்தையும், பூமியையும் வேறுபடுத்துகின்ற காட்சியில் எல்லை(அடிவானக் கோடு) வரைந்த மறைவு எல்லையை அடையாளப்படுத்துகின்றனர். அருகில் இருக்கும் பொருளிலில் இருந்து மறைவு எல்லைக்குக் கோடு வரைந்து தூரத்தில் இருக்கின்ற பொருளின் உயரம் கண்டறிகின்றனர்.
  எ.கா: இரயில் பாலங்கள் ஒரு புள்ளியில் ஒன்றிணைவதாகத் தோன்றுகின்றது போல்.
- அருகில் நிற்கின்ற பொருளையும் தூரத்தில் இருக்கின்ற பொருளையும் ஒரே அளவில் காணமுடிகிறதா? தூரம் கூடும்போது பொருளின் அளவில் வேறுபாடு ஏற்படுகிறதா?. கலந்துரையாடல் நடத்துகின்றனர்.

## மதிப்பீடு

- கலந்துரையாடிய கருத்துக்கள் படத்தில் காணப்படுகின்றன.
- தூரத்தைக் காண்பிக்க முடிகிறது.
- படத்திற்குத் தெளிவும் கலரும் தன்மையும் உண்டு.
- படம் முழுமையானதாகும்.



# அலகு-4: கருத்துப்படம்(கருத்தோவியம்)

படங்கள் கருத்துப் பரிமாற்றத்திற்கு பயன்படும் ஒரு ஊடகமாகும். கருத்துப்பரி மாற்றத்திறக்கு இயற்றை ஓவியத்தையோ, கற்பனை ஓவியத்தையோ பயன்படுத்த லாம், கற்பனை ஓவியமே.............................................................................................................. கவ னிக்கின்ற ஒவ்வொரு நிலையிலும் பல கருத்துக்களை வெளியிடும் திறன் கற் பனை ஓவியத்திற்குறியதே. இரசனையின் தன்மை உயர்வதற்கேற்ப கருத்துக்க ளும் சிறந்ததாகும்.

## கற்றல் அடைவுகள்.

கருத்துக்களை அடிப்படையாக்கிப் படங்கள் வரைகின்றனர்.

## கருத்து, திறன்

- கருத்துப் பரிமாற்றத்துக்கு பயன்படுவதே ஓவியங்கள்.
- படங்கள் கருத்துக்களை உட்கொண்டதாகும்.
- வரைந்து நிறம் கொடுக்க வேறுபட்ட ஊடகங்களைப் பயன்படுத்தலாம்.
- ஒரே போன்ற படங்கள் பார்வையாளர்களின் கருத்துகளை பெருக்கும்.

## திறன்கள்

- கருத்துக்களின் அடிப்படையில் படம் வரைவதற்கான திறன்
- பல ஊடகங்களைக் கையாளும் திறன்.
- நிறங்களைப் பயன்படுத்துவதற்கான திறன்.

## கற்றல் செயல்பாடுகள்

***செயல்பாடு -1***

- காண்பிக்கப்பட்டுள்ள படத்தை நுட்பமாக உற்றுநோக்குகின்றனர். இந்தப் படம் எடுத்துரைக்கின்ற கருத்தை இயற்கையாக எழுதுதல். கருத்தை வெளியிட என் னென்ன குறிப்புகள் (நிலைகள்) படத்தில் உள்ளன என்பதைக் கண்டுபிடிக் கின்றனர்

***செயல்பாடு -2***

- முன்னரே செய்த கற்றல் செயல்முறையுடன் தொடராக வரைதலுக்கு உதவு கின்ற கருத்தை கண்டறியவும்.
- வெளியிடுகின்றனர், ஆசிரியர் வரிசை படுத்துகின்றனர்.
- வரிசைப்படுத்திய கருத்துகள் பொதுக் கலந்துரையாடலுக்கு வைக்கப்படுகின்றன.
- சில கருத்துக்களை ஒன்றிணைக்கலாம், சிறப்பில்லாதவையை மாற்றலாம், பொதுக் கலந்துரையாடல் வழி பொது கருத்தை தேர்ந்தெடுக்கின்றனர்.

- கருத்து, வரைவதற்குத் தேவையான நிலைகள் ஒவ்வொருவரும் எழுதுகின்றனர்.
- வரைகின்றனர்.
- குழந்தைகள் குழுக்களாகப் பிரிந்து வரைந்த படங்களை ஒருவருக்கொருவர் மாற்றி எடுக்கவும். ஒரு முறை கூடப் படத்தை உற்று நோக்கவும், வாசித்தல் குறிப்பு தயாரிக்கவும் செய்கின்றனர்.

*ஒரு படத்தை ஒவ்வொருவரும் ஒரே முறையில் புரிந்து கொள்கின்றனர்,(குழந்தையின் முன்னறிவு, சமூக கண்ணோட்டம், உற்றுநோக்கிய அனுபவங்கள்,இவைகள் படத்தை புரிந்து கொள்ளும் நிலைகள் ஆகும்ஷட்திலீ*

- குறிப்புகளைக் குழுவில் வெளியிட்டு கலந்துரையாடுகின்றனர்.
- குழு வெளியிடுதல்.
- வெளியிடுதலுக்குப் பிறகு மீண்டும் படத்தை அழகு படுத்தவும்.முழுமையாக்கவும் வாய்ப்பு கொடுக்கவும்
- புதிய படம் வரைந்து நிறம் கொடுப்பதற்கான வாய்ப்பு கொடுக்கவும்.

### மதிப்பீடு

- படத்தை உற்று நோக்கிக் கருத்துக்களைப் புரிந்துகொள்ள முடிகிறது.
- புதிய கருத்துக்களைக் கண்டுபிடிக்கின்றனர்.
- கருத்தைப் பட வடிவில் மாற்ற முடிகிறது.
- நிறம் கொடுத்து அழகு படுத்துகின்றனர்.

## அலகு-5: கேலிச்சித்திரம்

ஓவியத்துறையில் மிகப் பிரபலமான முறையே கேலிச்சித்திரம். பத்திரிக்கை, ஊடகங்களே கேலிச்சித்திரத்தை உயர்ந்த நிலையில் கொண்டு வந்துள்ளன. இப்போது கேலிச்சித்திரத்தை உட்படுத்தி இதழ்கள் வெளிவருகிறது. மின்னணு ஊடகங்களும் கேலிச்சித்திரங்களை அதிகமாகப் பயன்படுத்துவதுண்டு. கேலிச்சித்திரங்களுக்காக மட்டுமே சில தொலைக்காட்சி அலைவரிசைகளும் உண்டு. கேலிச்சித்திரம் வரையும் கற்றல் முறை ஒரு தொழில் என்ற முறையிலும் சிறப்பனாதாகும். சித்திரப்படங்களிலும் கேலிச்சித்திரத்தைப் பயன்படுத்துகின்றனர்.. CTP (Cartoon Television Programme)

### கற்றல் செயல்பாடுகள்

கருத்தின் அடிப்படையில் கேலிச்சித்திரம் வரைகின்றனர்.

### கருத்து, திறன்

- திறனாய்வு, நகைச்சுவை, மிகைப்படுத்துதல் இவை இணைந்ததே கேலிச்சித்திரம்
- ஒரு முறைபார்க்கும் போதே பார்ப்பவருக்குக் கருத்தை உட்கொள்ள முடிய வேண்டும்
- எளிமையான முறையைப் பயன்படுத்துகின்றனர்

### திறன்கள்

- கருத்துக்களை எளிமையாக வெளியிடுவதற்கான வரைகளைத் தேர்ந்தெடுக்கின்றனர்
- கருத்துக்களை மிகைப்படுத்தி வரைகின்றனர்.



## கற்றல் செயல்பாடுகள்

- பலவித கேலிச்சித்திரங்கள் காண்பிக்கப்படுகின்றன.
- படத்தைக் காண்பித்தல். தனித்தன்மைகள் எவையெல்லாம்.
- கேலிச்சித்திரத்தின் கருத்தைக் குறித்துக் கலந்துரையாடல்.
- இதுபோன்ற வேறு விஷயங்களைக் கண்டுபிடிக்கக் கூறவும்.

  தலைப்புகள்

  - சுற்றுப்புறச் சீர்கேடு, காட்டை அழித்தல், ஒலி மாசடைதல். ஆரோக்கியம், சாலைப்பாதுகாப்பு
- குழந்தைகள் இதுபோன்ற வேறு தலைப்புகளைக் கண்டுபிடித்துக் கேலிச்சித்திரம் வரைய கூறப்படுகிறது.
- வரைந்தவைகளை கலந்துரையாடுகிறன்றனர், மதிப்பிடுகின்றனர்.

## மதிப்பீடு

குறிப்புகள்

- கருத்துத் தெளிவானது
- மிகைப்படுத்தப்பட்டது.
- எளிமையானது.
- கற்பனைத் திறனுண்டு.

# அலகு–8: வரைதல்

கதை, கவிதை என்பவற்றிலுள்ள முக்கிய நிகழ்ச்சிகளை வரைவதற்கு அதற்கான கற்பனைத்திறனும் அறிவியல் அறிவும் தேவையானதாகும், கதாபாத்திரங்கள், ஏற்ற இடம், வேடம், வயது போன்ற நிலைகள் கருத்துக்களின் அடிப்படையில் இருக்க வேண்டும். கருத்துக்கேற்ற கற்பனை உருவாக்கும் திறன் ஓவியத்திற்கு இருக்க வேண்டும்.

## கற்றல் அடைவுகள்

கதை, கவிதை இவைகளிலுள்ள முக்கிய நிகழ்வுகளின் கருத்தை உட்கொண்டு வரை கின்றனர்

## கருத்து, திறன்

- முக்கிய நிகழ்வுகளை வரைவதற்கு கதாபாத்திரங்களின் தனித்தன்மையும் தேவை யான பின்னணியும் வேண்டும். கதாபாத்திரங்களின் வேடம், பாவனை, வயது என்பவை முக்கிய நிலைகளாகும்.
- காலத்திற்கேற்ற பிண்ணணித் தேவை.

## திறன்கள்

- கற்பனை ஓவியம்/கற்பனை வடிவமாக்குவதற்கான திறன்.
- கற்பனைக் கேற்ப வரைவதற்கான திறன். கதைக்கேற்பக் கண்ணைக் கவரும் முறையில் வரைவதற்கான திறன்.

## கற்றல் செயல்பாடுகள்

- கவிதையோ, கதையோ கொடுத்த பிறகு அதிலுள்ள ஒரு முக்கிய நிகழ்வைக் குறித்த கலந்துரையாடல்–(கதாபாத்திரங்கள், வேடம், வயது, பாவனை, அசைவு)
- இந்த கதை நிகழ்வின் பின்னணியில் என்னென்ன வரையலாம்? கலந்துரையா டல்
- கற்பனை ஓவியம் உருவாகிறது,
- இப்போது உங்கள் கற்பனையிலுள்ள ஒரு காட்சியை வரையலாமா? வரைவ தற்கு வாய்ப்பு கொடுக்கவும்.
- வரைந்த பிறகு வெளியிடவும், சுயமாக மதிப்பிடுதல்.

## மதிப்பீடு

குறிப்புகள்

- சிறப்பாக வரைதல்.
- தனித்தன்மை
- ஏற்ற பின்னணி.
- ஒன்றோடொன்றுள்ள தொடர்பு

# அலகு-9:வடிவியல் வடிவங்கள்

நல்ல முறையில் படம் வரைவதற்கு சில தொழில் நுட்ப முறையைப் பண்டைய காலத்திலிருந்தே பயன்படுத்தி வருவதுண்டு. வடிவியல் வடிவங்களைப் பயன்படுத்தி பொருட்களை முழுமையாகக் கண்டபின் அடையாளப்படுத்தவும். அதில் நின்று கொண்டு இடத்தை/பொருளை வரையும் முறையே இது. ஒரு பொருளை முழுமையாகவும் அதன் பல நிலைகளாகவும் இப்படிப்பட்ட வடிவியல் வடிவத்தில் நின்று கொண்டு உற்றுநோக்கலாம். பொருட்களின் முழுமையான வடிவத்தை இவ்வாறு எளிதில் வரைய முடியும்.

## கற்றல் அடைவுகள்

இயற்கையான பொருட்களை உற்றுநோக்கி அவற்றில் உள்ள வடிவியல் வடிவங்களைக் கண்டறிந்து படம் வரைந்து நிறம் கொடுக்கவும்.

## கருத்து, திறன்.

- சில தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தினால் எளிதில் பொருட்களை வரையலாம்.
- வடிவியல் வடிவங்கள் மிக எளிதாக வரையலாம் என்பதால் அதனைப் பயன்படுத்தி இயற்கையிலுள்ள பொருட்களையும் எளிதில் வரையலாம்.
- பொருட்களைத் தனியாகவும், கூட்டமாகவும் இதனைப் பயன்படுத்தி எளிதில் வரையலாம்.

## திறன்கள்.

- பொருட்களைத் தனியாகவோ, கூட்டமாகவோ வடிவியல் வடிவங்களில் நின்று கொண்டு உற்று நோக்குவதற்கான திறன்.
- ஒரு பொருளின் பல பகுதிகளை வடிவியல் வடிவங்களின் வழி காணும் திறன்.

## கற்றல் செயல்பாடுகள்

***செயல்பாடு-1***

- மேசையின் மேல் ஒரு ஆரஞ்சும், ஜாடியும் வைக்கப்பட்டுள்ளன.
- இந்த மேசையின் மேல் என்னென்ன பொருட்கள் இருக்கின்றன.
- குழந்தைகளின் பதில்.
- எவையெல்லாம் வடிவியல் வடிவங்கள்?.
- குழந்தைகளின் பதில்.
- மேசையின் மேலுள்ள பொருட்களில் ஏதாவது வடிவியல் வடிவங்கள் உள்ளனவா?
- குழந்தைகளின் பதில்.
- மேசையின் மேலுள்ள பொருட்களில் கோளம், உருளை போன்ற வடிவங்களைக் காண முடிகிறதா?

- எனில் இந்த வடிவியல் வடிவங்களை வரைந்து அதில் நமக்கு பொருட்களை வரையலாம்.
- குழந்தைகளுக்குப் படம் வரைவதற்கு நேரம் கொடுக்கப்படுகிறது.
- இவ்வாறு ஒரு பொருளின் பல பகுதிகளையோ ஒன்றிற்கு மேற்பட்ட பொருட் களையோ வடிவியல் வடிவங்களில் நின்று கொண்டு எளிதில் வரையலாம்.

***செயல்பாடு -2***

- இயற்கைக் காட்சிகளை வரையும்போது வடிவியல் வடிவங்களைப் பயன்படுத்தி வரைய முடியுமா?
- நாம் வெளியில் இறங்கி உற்றுநோக்கவும்.
- உற்றுநோக்குகின்ற இயற்கையின் படத்தைத் தீர்மானிக்கின்றனர்.
- இயற்கைக் காட்சியிலுள்ள ஒன்றோ, இரண்டோ பொருளை முழுமையாக ஏதா வது ஒரு வடிவியல் வடிவத்தில் இணைத்துப்பார்க்க முடியுமா?

  (ஒவ்வொரு குழந்தையும் வேறுபட்ட முறையில்,வெவ்வேறான வடிவியல் வடி வங்களில் உற்று நோக்குவார்கள்).
- ஆசிரியர் ஒருங்கிணைப்பு.
- ஒன்றோ அல்லது அதற்கு அதிகமான வடிவியல் வடிவங்களின் வழி இயற்கைக் காட்சிகளைக் காணலாம்.
- இவ்வாறு கண்ட வடிவியல் வடிவத்தை முதலில் வரையலாம்.
- அதற்குள் நின்றுகொண்டு இயற்கைக் காட்சிகளை வரைகின்றனர்.
- இயற்கைக் காட்சியை முழுமையாக இதன் வழிக் காணலாம்
- இயற்கைக் காட்சியை வரைய இந்தத் தொழில் நுட்ப முறை மிகவும் சிறந்ததாகும்.

## மதிப்பீடு

- உற்று நோக்கிக் கற்றல்
- வடிவியல் வடிவங்களைக் கண்டறிதல்.
- வரைகளின் தன்மை, நிறம், வேகம், வரையும் திறன்.
- வெளிப்பகுதி வரைதலோடு குழந்தைகளுக்குள்ள சிறப்பு.
- அடைவுகள்.
- இயற்கையை நுட்பமாக உற்றுநோக்கினால் அவன் ஒரு சிறந்த ஓவியராகலாம்
- இயற்கையை நேசித்தல், பாதுகாத்தல் என்பவைக்குத் தூண்டல்.
- இயற்கையிலிருந்து வடிவியல் வடிவங்களைக் கற்றல்.
- உயிரினங்களோடு உள்ள நட்பு அதிகரிக்கிறது.

# அலகு-10 சிற்பங்கள்.

சிற்பம் என்பது ஒரு பொருளை எல்லாத் திசைகளிலிருந்தும் காணும் காட்சியே ஆகும். ஒரு சிற்பத்தை உருவாக்கும் போது , உருவாக்க நினைக்கின்ற பொருளின் எல்லா திசையிலிருந்துமுள்ள உற்றுநோக்கல் தேவையாகும். அதனால் தான் ஒரு முப்பரிமாண பொருளை உருவாக்கத் தேவையான கற்றல் என்பது அதனை நுணுக் கமாக உற்று நோக்குகின்ற கற்றல் எனப்படும். எனவேதான் சிற்பம் உருவாக்குவது என்பது ஒரு பொருளின் மிக நுட்பமான பகுதிவரை செல்ல குழந்தைகளின் விருப் பம், திறன் என்பதை வளர்த்துவது என்பதாகும்.

## கற்றல் அடைவுகள்

மும்பரிமாணமான சிற்பங்கள் பல ஊடகங்களிலும் தயாரிக்கிறன்றனர்.

## கருத்து, திறன்.

- சிற்பம் முப்பரிமாணமானது,
- சிற்பம் தயாரிக்கும் போது அதனுடைய நான்கு திசைகளிலிருந்துமுள்ள கற்றல் நடத்த வேண்டும்.
- சிற்பம் உருவாக்க களிமண், மரக்கட்டை, உலோகம் போன்ற இயற்கைப் பொருள் களும், காகித குழம்பு, நெகிழி மெழுகு போன்ற நவீன பொருட்களும் மட்டுமல் லாமல் இயற்கையிலிருந்து கிடைக்கும் கரு, சகிரி, ஈர்க்கில் போன்ற பொருட்க ளைப் பயன்படுத்தலாம்.
- நாம் தயாரிப்பதற்கு நினைக்கின்ற பொருளுக்கு ஏற்ற ஊடகத்தைத் தேர்ந்தெ டுத்து சிற்பம் உருவாக்க வேண்டும்.

## கற்றல் செயல்பாடுகள்

- பல பொருட்களில் செய்த சிற்பங்களை வெளியிடுதல் (ICT பயன்படுத்தலாம்)
- எதை தயாரிக்க வேண்டும் என்பதைக் குறித்த கலந்துரையாடல், அட்டவணைப் படுத்துதல்.
- கண்டடைந்த பொருளைத் தயாரிக்க எந்தெந்த ஊடகங்களைப் பயன்படுத்தலாம் என்று ககலந்துரையாடல், அட்டவணைப்படுத்துதல்

  எ.கா: ஒரு கூட்டில் கிளி இருக்கின்ற சிற்பம் தயாரிக்கும் போது கிளியைக் களிமண்ணாலும்,,மெழுகினாலும் தயாரிக்கலாம், கிளிக்கூடு சகரியினால் தயாரித்தால் இயற்கையான தோற்றம் உண்டாகும்.
- தயாரிப்பதற்கு நினைக்கின்ற பொருளின் திட்டவரைவு வரைந்து உருவாக்குகின் றனர். மேலிருந்து கீழும் எல்லா திசைகளிலுமுள்ள கண்ணோட்டம்.
- ஊடகத்தைப் பருவப்படுத்துதல், அடித்தளம் உருவாக்கல்
- சிற்பம் தயாரித்தல்.
- பொருத்தமான நிறம் கொடுத்து அழகு படுத்துகின்றனர், நிறம் கொடுக்க நிற எழுதுகோல், மெழுகு எழுதுகோல், சுண்ணாம்பிலான நிற எழுதுகோல் போன் றவையைப் பயன்படுத்தலாம்


- வெளியிடுதல், சுயமாக- ஒருவருக்கொருவர் மதிப்பிடுதல்.
- மதிப்பிட்ட பிறகு சிற்பத்திலுள்ள குறைகளை நிவர்த்தி செய்ய வாய்ப்பளிக்க வேண்டும். இல்லையெனில் புதிய சிற்பம் தயாரிக்க வேண்டும்.

## மதிப்பீடு

குறிப்புகள்

- தயாரிப்பதற்கான பொருள்/கருத்து கண்டறிதல்.
- பலவித ஊடகங்களைக் கண்டறிந்து பயன்படுத்துவதற்கான திறன்.
- ஊடகங்களைக் கையாளும் திறன்.
- உண்மையான பொருளோடுள்ள ஒப்புமை.
- நிறத்தின் அழகு.

7.2



# இசை



# இசை

## முன்னுரை

அனைத்துக்கலைகளுமே மனதை இனிமைப்படுத்துவதாகும். அந்த மகிழ்ச்சி உலகத்திற்கே விருப்பமானதாக மாறுவதே கலாச்சாரம். இயற்கையையும், மனிதனையும் வேறுபடுத்தி பார்க்காமல் நமக்கு காண்பிப்பது இவ்வாறாகும். அனைத்து உயிரினங்களும் ஒரே போன்று இரசிக்கலாம் என்பதால் இசை என்பது வேறு கலைகளிலிருந்து வேறுபட்டு நிற்கிறது, மனிதர்களின் மனதினை தூய்மையாக்குவதற்கும் மேன்மை நிலைக்குக் கொண்டு செல்வதற்கும் முடிகின்ற கலையே இசை. பொதுவான உலக வாழ்கையோடு மனிதனை ஒன்றாகக் காண்பதற்கான பரந்த கண்ணோட்டமும் இசை பராம்பரியத்தின் வழி உருவாகிறது, அதனால் தான் இசையை கற்றல் என்பது தனிநபர் மேன்மைக்கும் சமூக ஒற்றுமைக்கும் அடிப்படையானதாகும்.

சுற்றுப்புறத்தைக் குறித்துத் தெரிந்து கொள்வதற்கு முன்னரே இயற்கையின் இசை ஒரு குழந்தையின் உடல்ரீதியிலும், மன ரீதியிலுமான வளர்ச்சிக்கு காரணமாகிறது என்று அறிவியல் பூர்வமான கற்றல்கள் நிருபிக்கப்பட்டுள்ளது. பள்ளிக்கூட கல்வி காலகட்டத்தில் குழந்தைகளில் ஏற்படும் மன பிரச்சினைகளை இல்லாமலாக்கி மனதை தெளிவுடையதாகவும், அறிவு உடையதாகவும் மாற்றுவதற்கு இசைக்கல்வியால் முடியும் என்று ஆராய்ச்சிகள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இசையை இரசிக்கும் குழந்தை தான் செய்யும் எந்த ஒரு செயலிலும் உட்கொண்டுள்ள தாளத்தை கண்டறிவதன் வழி வாழ்கையயின் உண்மை நிலையைப் புரிந்து கொள்ள முடிகிறது, இந்த ரசிப்புத்தன்மையை மேம்படுத்த சரியான கற்றல் முறை தேவைப்படுகிறது. இது அவரவரில் ஒளிந்திருக்கும் திறமையை சுயமாக அறிந்துகொள்வதற்கும் மேம்படுத்துவதற்கும் உதவுகிறது, அது குழந்தைகளில் அளவுக்கு அதிகமான தன்னம்பிக்கையை உருவாக்கவும் அனைத்து பாடங்களையும் ஆர்வத்தோடு விளக்கும் விதம் உற்சாகமுடையராகவும் செய்கிறது

மகத்தான இசைப் பாரம்பரியம் நமக்கிருந்தது, இசையை அதனுடைய மிக உன்னதமான இடத்திற்கு உயர்த்திக் காட்டிய பலநபர்கள் நமது நாட்டிலுண்டு, சாதாரண மனிதனின் மனதில் உயிர்தாளமாக இசை இருந்திருந்த ஒரு பாரம்பரியம் நமக்குண்டு, இசையை வாழ்க்கையின் வழி பாடமாக மாற்றிய எத்தனையோ இசைஞானிகளை பெற்றெடுத்த நாடு நம்நாடு. இங்கு தொடர்ச்சியாக நிலை கொண்டிருந்த இசை பாரம்பரியம் நம்மை எப்போதும் ஊக்குவித்துக்கொண்டிருந்தது. உலக இசையின் அனைத்து நல்ல பகுதிகளையும் உட்கொண்டு மேம்பட்டதே நமது இசை என்பதால் அனைத்துலக வாழ்கையோடு கூடிய அழகுகளை ஏற்றுக்கொண்டதாகும்.

# கற்றல் அடைவுகள்

## ஐந்தாம் வகுப்பு

- பல்வேறு வாய்மொழிச் சிந்துகளைக் கேட்டுப் பாடுகின்றனர். தாளம் இடுகின்றனர்.
- இசைக்கருவிகள், பாட்டு என்பவை வழியாக பாடல் கேட்கின்றனர், கேட்ட பாடலை மனதிற் குள்ளும் பாடுகின்றனர்,
- குழுவாகப் பாடும் போது பாடலின் வேகம், ஏற்றம் முகபாவனை என்பவை குறிப்புகளுக்கேற்ப இராகத்திலும் தாளத்திலும் பாடுகின்றனர்.
- தாய்மொழிப்பாடல்களும், வேறுமொழிப்பாடல்களும், தேசபக்திப்பாடல்களும், கருத்துக்கேற்ப இராகத்திலும், தாளத்திலும் பாடுகின்றனர்,
- தேசியகீதம், தேசபக்கிபாடல் இவைகளை சரியான குறிப்புகளின் அடிப்படையில் நேரத்திற்திற் கிணங்க பாடுகின்றனர்.
- கவிதையின் கருத்திற்கேற்ப இராகம் இடுகின்றனர், பாவனையுடன் கூறுகின்றனர்.

## ஆறாம் வகுப்பு

- இசையின் தனித்தன்மைகளுக்கேற்ப பாடுகின்றனர்.
- தனியாகவும், குழுவாகவும் பாடும் போது பாடலில் உள்ள இராகம், தாளம் இவற்றைப் புரிந்து கொள்ள முடிகிறது.
- தேசியகீதத்தை முறையாகப் பாடமுடிகிறது.
- இசைக் கருவிகளின் உதவியோடு இராகத்துடன் பாட முடிகிறது.
- மெல்லிசைப் பாடல்களை எளிய இசைக் கருவிகளின் உதவியோடு பாட முடிகிறது.
- வேறுபட்ட நாட்டுப்புறப்பாடல்களும், வாய்மொழி சிந்துக்களும் சிறப்புடன் பாடுகின்றனர்.
- வேறு மொழிகளிலுள்ள தேசபக்தி பாடல்கள் பாடுகின்றனர்.
- பல்வேறு கவிதைகளை இராகத்துடன் வெளியிடுகின்றனர்,
- பல மொழியிலுள்ள தேசபக்கி பாடல்களை ஒன்றிணைத்துப் பாடுகின்றனர்.

## ஏழாம் வகுப்பு

- பல்வேறு தாளத்திலுள்ள பாடல்களைப் பாடுகின்றனர்.
- கர்நாடக இசையுடன் தொடர்புடைய கதைகள், வரலாற்று நிகழ்ச்சிகள் என்பவைகளை எடுத்து ரைக்க முடிகிறது.
- பாடல்களைக் குறுந்தட்டுகளின் உதவியுடனும், இசைக்கருவிகளின் உதவியுடனும் பாடுகின்றனர்.
- இசையின் அடிப்படைப் பாடங்களான சப்தஸ்வரங்கள் முதல் அலங்காரம் வரை உள்ளவை யில் சிலவற்றைப் பாடுகின்றனர்.
- பாடப்புத்தகத்திலுள்ள கவிதைகளுக்கோ வேறு கவிதைகளுக்கோ கருத்துக்களை உட்கொண்டு இராகத்துடன் பாடுகின்றனர்.

# ஐந்தாம் வகுப்பு

## அலகு – 1 :

### முன்னுரை.

ஒவ்வொரு ராகமும், தாளமும் பல நேரங்களில் இனிமையும், எளிமையுமாய் வாய்மொழி சிந்துக்களின் வாயிலாக ரசிகர்களிடம் சென்றடைகிறது. நம்முடைய அன்றாட வாழ்கையின் ஒவ்வொரு செயல்களின் இடைவேளைகளில் அறிந்தும் அறியாமலும் மனிதன் பாடியும் போலச் செய்தும் இசையை நம்முடன் இனைத் துக் கொள்கிறோம். இலக்கியம் நமக்கு புரியாதது எனினும் அதன் ராகம் நமக்கு நன்கு தெரிந்ததே ஆகும். இப்படிப்பட்ட இராகங்கள் சில எழுத்துக்களை ஒண்றிணைத்தோ, சிலநேரம் ஒரெழுத்தாகவோ வெளிவருகிறது. இரகமும், தாள மும் பகிர்ந்தளிப்பதற்கு நாம் முதலில் பயன்படுத்தும் ஊடகம் வாய்மொழி சிந் துக்களே. நமது இசையில் எல்லா பாடல்களிலும் வாய்மொழி சிந்து பயன்படுத்து வதைக் காணலாம். குறிப்பிட்ட பொருள் இல்லையெனினும் இராகத்தின் தனித்த னைமையுடன் சில பாவனைகள், சூழ்நிலைகள் உருவாகின்றன. வாய்மொழி சிந் துவின் வழி இசையின் முக்கிய கருத்துக்களை பகிர்ந்தளிக்கவும், அதை உட்கொணர செயல்பாடுகள் உள்ளார்ந்து இசையின் நிலைகள் கூடுதல் தெளிவுடன் குழந்தைகளில் சென்றடையச் செய்வதே இப்பாடத்தின் நோக்கம்.

### உள்ளடக்கம்.

பல்வேறு வாய்மொழிச் சிந்துக்களும் அவையின் தனித்தன்மைகளும் எடுத்து ரைக்கப்படுகிறது. அதிகமான தெளிவுடன் பாடி உறுதிப்படுத்துவதற்காக அதே போன்ற பாடல்களைத் தேர்ந்தெடுத்து திரும்பத் திரும்பப் பாடுவதற்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.வாய்மொழி சிந்துவிலுள்ள சிறப்புக்களை புரிந்துகொள்வதற் காக பயிற்சி கொடுக்கப்படுகிறது. குழந்தைகளின் சிந்தனை பாரமான திறனை பயன்படுத்தி உருவாக்குகின்ற வாய்மொழி சிந்துவை சூழ்நிலைக்கு ஏற்றவாறு பயன்படுத்த இந்த அலகில்வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

### கற்றல் அடைவுகள்.

பல்வேறு வாய்மொழிச் சிந்துக்களைக் கேட்டு பாடுகின்றனர். தாளம் போடுகின்ற னர்.

## கருத்து, திறன்.

- வாய்மொழிச் சிந்து பலவிதங்களில் உண்டு.
- வாய்மொழிச் சிந்துகள் தாளத்திற்கேற்றதாகும்.
- வாய்மொழிச் சிந்துவிற்கேற்ப தாளம்போடுவதற்கான திறன்.

## செயல்முறை.

- பலவிதமான வாய்மொழிச் சிந்துக்களை கேட்கின்றனர்.
- இவற்றைத் தாளத்திற்குப் பாடுகின்றனர்.
- ஒரே போன்றதும், அல்லாதவையையும் வேறுபடுத்துகின்றனர்.

## மதிப்பிடுதல்.

- வாய்மொழிச் சிந்துவைத் தாளத்திற்கேற்ப சொல்லவும், பாடுவதற்குமான திறன்.
- தரம் பிரிப்பதற்கான திறன்.

## கற்றல் செயல்பாடுகள்.

***செயல்பாடு –1***

- வடக்கன் பாட்டினையும், வஞ்சிப்பாட்டினையும் இராகத்தில் வாய்மொழிச் சிந்துக்களைப் பாடிக் கேட்டல். குழந்தைகள் வாய்மொழிச் சிந்து பாடுவதுடன் அதற்கேற்ற வடக்கன் பாட்டினுடையவும்/வஞ்சிப்பாட்டினுடவும் வரிகளை ஆசிரியர் பாடுகின்றார். இந்தச் செயலை மீண்டும் மீண்டும் செய்கின்றனர்.
- குழந்தைகள் வாய்மொழி பாடும்போது ஆசிரியர் வரிகளைப் பாடுகின்றார். ஆசிரியர் வரிகளைப் பாடும்போது குழந்தைகள் வரிகளைப் பாடுகின்றனர்.
- தெரிந்த நாட்டுப்புறப் பாடல்களையும் இம்முறையில் பாடலாம்.

1. தந்தானா தானாரோ தந்தின்னா/ரோ
தாதின்ன தாநாரோ தகதைதா ரோ
பூத்தூரம் வீட்டில் ஜனிச்சவரெல்லாம்
பூபோல அழகுள்ளோராயிருன்னு.

2/ தித்தித்தாரோ தித்தித்தாரோ தித்தை தக தித்தித்தாரோ
தித்தித்தாரோ தித்தித்தாரோ தித்தித்தாரா தை...
குட்டநாடன் பூஞ்சயிலே கொச்சுபெண்ணே குயிலாளே
கொட்டு வேணம் குழல் வேணம் குரவ வேணம்...

3. தந்தானோ தானா த நம் தினம் தானா..../
தந்தானோ தானா த நம் தினம் தானா..../
வாவரிசம் காற்றடிச்சே மதிலகத்தோ தீ பிடிச்சே
தப்புரான்ட குந்தக்காரோ குந்தம்கொண்டு தீகெடுத்தீ...

4. ராரீரம் ராராரோ ராரிராரோ ராரிரம் ராராரே../
ராரீரம் ராராரோ ராரிராரோ ராரிரம் ராராரே.../
கண்ணே உரங்குரங்கு குஞ்ஞோமன கண்ணே உரங்குரங்கு
கண்ணனெக்கண்டுகொண்டு சிரிச்சுகொண்டோமனமுத்துரங்கி./

5. உந்துந்துதந்துதுந்துதுந்துதுந்துதுந்துதுந்
துந்துதுந்துதுந்துதுந்துதாளயத்து
கண்ணனெகான்மதிநாயல்லோ போகுண்ணு
புண்ணியவானெந்து நிர்ணயம் தான்../

- பாடிய வாய்மொழிச் சிந்துவின் சிறப்பைத் தரம்பிரிப்பதற்கு நான்கு குழுக் களாகப் பிரிந்து கலந்துரையாடவும். கண்டறிவதற்கு நேரமும் அளிக்கப்படு கிறது. குழுவில் கலந்துரையாடுவதற்கு உதவும் குறிப்புகளைச் சார்ட்டில் எழுதி இடவும்.

<u>குறிப்புகள்.</u>

❖ இராகத்தை இரசித்தல்.
❖ கேட்ட இராகத்தின் தனித்தன்மை.
❖ தோற்றுவிக்கப்படும் பாவனை.
❖ வாய்மொழிச் சிந்துக்கள் உருவாக்கிய தாளங்கள்.

- வாய்மொழி சிந்துவின் பாடல், இராகம் என்பவையை புரிந்துகொள்ள முடிந்ததா?
- வாய்மொழிச் சிந்துவுடன் வரிகளை பாடும்போது ஏற்படும் அனுபவம்.(.பொருத் தம் பொருத்தமல்லாதவை)
- வாய்மொழிச் சிந்துவின் வேறுபாடுகள், ஒற்றுமைகள்.
- கலந்துரையாடலின் கருத்துக்கள்/கண்டடைதல்கள்-குழுவாக வெளியிடுதல்.
- வெளியிடுதலின் தனித்தன்மையை மதிப்பிட வேண்டும்.
- முழுமையான உள்ளடக்கம்.

***<u>செயல்பாடு –2</u>***

- இந்த வாய்மொழிச் சிந்துக்களுக்கோ அல்லது புதிதாகக் கண்டறிந்தவற்றிக்கோ ஏற்ற தாளப்படிற்றியை உருவாக்கல்.
- வஞ்சிப்பாட்டின் இராகத்தில் முறைப்படுத்திய வாய்மொழிச் சிந்துவை ஆசிரிய ரும், குழந்தைகளும் சேர்ந்து பாடுகின்றனர்.
- பாட்டிற்கேற்ப குழந்தைகளை விரலால் நொடிப்பதற்கு கூறப்படுகிறது.
- புதிய வாய்மொழிச் சிந்துவிலும் இதே செயல்பாட்டைச் செய்ய வேண்டும்.
- மீண்டும் மூண்டும் செய்யும் போது விரலை நொடிப்பதும், கை கொட்டுதலும், சிறியதாக உடலை அசைப்பதுமாக மாறுகிறது.
- வாய்மொழிச் சிந்துவின் தனித்தன்மைக்கேற்ப அசைவுகளிலும் வேறுபாடு உரு வாகும்.

***<u>செயல்பாடு –3</u>***

- பாடியதும், கண்டடைந்ததுமான வாய்மொழி சிந்துகளில் ஒரே போன்றதும், வேறு பாடு உள்ளனவையும் வகைப்படுத்தக் கூறப்படுகிறது.

<u>குறிப்புகள்.</u>

- இராகத்தின் ஒற்றுமை/வேறுபாடு.
- தாளத்தின் ஒற்றுமை/வேறுபாடு.

***செயல்பாடு -4***

- கிடைத்த சில பொருட்களை ஒவ்வொரு குழுவிற்கும் கொடுக்கப்பட்டுள்ளது.
  *1. சிரட்டை, 2. கல்லுகள், 3. உடைந்த வளையல்கள், 4. ஓட்டுத்தண்டுகள், 5. மூங்கில்கள், 6. அப்பகுதியில் குழந்தைகள் உருவாக்கிய கருவிகள்.*
- முன்னரே தரம்பிரித்த ஒவ்வொரு குழுவிற்கும் அறிவுரை கொடுக்கப்படுகிறது.
- பாட்டு பயிற்சியளித்த வாய்மொழிச் சிந்துவுடன்/கண்டடைந்த வாய்மொழி சிந்துவுடன் கிடைத்த பொருட்களும் எளிய இசைக்கருவிகளும் உபயோகித்து வெளியிடலாம்.(உடைந்த வளையல்கள், கல், சிரட்டை போன்றவை).

***தொடர்செயல்பாடுகள்***

- உங்கள் வட்டாரத்தில் பாடுகின்ற வாய்மொழிச்சிந்துகளைச் சேகரித்தல்.

## மதிப்பிடுதல்.

- இராகத்தை உட்கொள்வதற்கான திறன்.
- குழுக்களில் தாளத்தோடு பாடுவதற்கானத் திறன்.
- சரியான தாள அசைவு.
- வேறுபடுத்தல் (ஒற்றுமை/வேற்றுமை).
- வெளியிடும் தன்மை.
- இசைக்கருவிகளை கையாளும் தன்மை.

## ஒருங்கிணைத்தல்.

- நமது நாட்டின் இசை என்பது பல்வேறு வாய்மொழிச் சிந்துகளின் மிகுதியாகும். வாய்மொழிச் சிந்துக்களுக்கு பொருளில்லை எனினும் பல நேரங்களிலும் இவையை பாடும் தனித்தனைமையை வைத்தும் இராக, தாள சிறப்பினாலும். பாரம்பரியத்தையும், முறைகளையும், உணர்ச்சிகளையும் கருத்துக்களையும், பல பாவனைகளையும் வெளியிட வாய்மொழிச் சிந்துவினால் முடிகிறது. பல்வேறு தாள அசைவுகள் பாடுவதற்கும், வெளியிடுவதற்கும் தனித்தன்மை கொடுத்து அனைவரையும் கவருகிறது.

# அலகு-2.

## முன்னுரை.

பாரதிய இசை என்பது இசைக்கருவிகளின் சிறப்புகளினால் மிக முன்னிலையில் உள்ளது. ஒவ்வொரு இசைக்கருவியும் ஒலியின் தனித்தன்மையால் உருவாக்கும் பாவனை என்பது வர்ணிக்க முடியாததாகும் கம்பிக்கருவிகளும், துணைக்கருவிகளும் ஏராளமுள்ள நமது இசை என்பது வேற்று நாடுகளின் சங்கீதத் துறையுடன் ஒப்பிடும் போது மிக முன்னிலையில் இருப்பதை கானலாம்.

ஊடகங்களின் வாயிலாக நாம் கேட்கும் பாடலின் இரசனை ஒரு போதும் வாய் மொழிச் சிந்துவை விட இரசனை குறைந்ததாக இருக்காது. இரண்டு முறைகளுக் கும் அதற்கான தனித்தன்மைகள் உண்டு. வரிகள் இல்லாமல் ஒலிகளால் மட்டும் உருவாக்கப்படும் இப்படிப்பட்ட இசை நிகழ்ச்சிகள் முழுமையாக இரசிகர்களைத் திருப்தி அடையச் செய்பவையாகும்.

## உள்ளடக்கம்.

பல கருவிகளையும் அவையின் தனித்தன்மைகளையும், கருவிகளின் வாயிலாகத் தெரிந்தது கொள்ளவும், நமது இசையின் இசைக்கருவிகளுடைய பாரம்பரியம் போன்ற வையைக் குழந்தைகளில் கொண்டு செல்வதற்கும் வேண்டியுள்ள கற்றல் செயல்பாடு கள் ICT வாய்ப்புகளை மிகவும் பயன்படுத்தி இந்த அலகில் உட்படுத்தப்பட்டுள்ளன.

## கற்றல் அடைவுகள்.

இசைக்கருவிகள், பாடல் என்பவை வழியாக வேறுபட்ட பாடல்களைக் கேட்கின்ற னர். கேட்ட பாடல் வரிகளை அதேபோல் பாடுகின்றனர்.

## கருத்து, திறன்.

- பல்வேறு இசைக்கருவிகள், தனிச்சிறப்புகள்.
- பல்வேறு முறைகளில் பாடுதல், தனிச்சிறப்புகள்.
- அதேபோல் பாடுதல்.

## செயல்பாடு.

- பலவித இசைக்கருவிகளைத் தெரிந்து கொள்கின்றனர், (ICT வாய்புகள்).
- பல வித இசைக்கருவிகளை பயன்படுத்தும் முறைகளைத் தெரிந்துகொள்கின்ற னர், (ICT வாய்ப்புகள்).
- தனித்தன்மைகளை அடையாளப்படுத்துகின்றனர்.
- அதே போன்று பின்பன்றுதல், பாடுதல்.

## மதிப்பீடு

- இசைக்கருவிகளைப் பற்றிய அறிவு.
- பின்பற்றும் திறன், பாடும் திறன்.
- இசையைக் கேட்டு கருவிகளைக் கண்டறிவதற்கான திறன்.

## கற்றல் செயல்பாடுகள்.

***செயல்பாடு –1***

- பல வாயப்புகளைப் பயன்படுத்தி வேறுபட்ட மூன்று அல்லது அதிகமான பாடல் களைக் கேட்கவைத்தல். பாடல்களைத் தேர்ந்தெடுக்கும்போது பல்வேறு வடிவங் களில் உள்ளவையாதல் நன்று. பாடல்கள், வயலின், வீணை, புல்லாங்குழல், கித் தார் என்பவை வழியாக இசைப்பதாக வேண்டும். கேட்ட பாடல்களின் இரச னையைத் தெரிந்து கொள்கின்றனர் (கேள்விகளின் அடிப்படையில்).

- மூன்று பாடல்களும் ஒரே போல் இருந்தனவா?
- இசையைமட்டும் ஊடகங்கள் வழியாகக் கேட்கும்போது என்ன தோன்றுகிறது?.
- ஒவ்வொரு பாடலும் எந்த நடையில் இருந்தது, (குறிப்பு).
- இந்தப் பாடலை வாய்க்குள் பாடி மீண்டும் உருவாக்க முடியுமா?.

- இந்தக் கேள்விகளை அடிப்படையாக்கிக் குழந்தைகள் பிரதிபலிப்புக் குறிப்பு வாசிக்கின்றனர். முக்கியமானவற்றை ஆசிரியர் கரும்பலகையில் எழுதியிடுகின்றார்.
- முன்னரே கேட்ட ஒரு பாடலின் இசை மீண்டும் இடப்படுகிறது. கேட்ட பாடலின் இசையை வாய்ப்பாட்டின் வழி மீண்டும் உருவாக்கலாமா?. தனித்தனியாக குழந்தைகள் வெளியிடுகின்றனர்.
    - இலக்கியங்களில்லாமல் இந்தப் பாடல் சிறப்பானதா?
    - உண்மையான பாடலின் தனித்தன்மையும், நடையும் இதிலிருந்து கிடைத்ததா?.
- குழந்தைகளின் பிரதிபலிப்பு எழுதப்படுகிறது. (கரும்பலகை/சார்ட்).

***செயல்பாடு –2***

- பலவித இசைக்கருவிகளை இசைத்த பல பாட்டுகளை கேட்கின்றனர்.

    *(நாட்டுப்புறப் பாட்டு, மாப்பிள்ள பாட்டு, பக்தி பாடல்கள்)*
- ஒவ்வொரு பாடலும் வெளியிட்ட கருவிகள் எவை?

    *(கருவிகளின் பெயர், ஒலியின் தனித்தன்மை, நிலை பரமான தனித்தன்மை)*
- மனிதன் பாடுவதுடன் இணைந்து நிற்பதா இந்த இசை? சிறப்புகள் என்ன?
- இலக்கியமில்லாத கருவிகளின் வழியாக கேட்ட பாடலின் முழுமைக்கு ஏதாவது குறைபாடுகள் ஏற்பட்டதா?
- குழந்தைகள் கூறட்டும்.
- பிரதிபலிப்பை மதிப்பிடுகின்றனர். ஆசிரியரின் உதவியுடன் ஒவ்வொரு பாட்டினுடையவும் தனித்தன்மைகள் விளக்கப்படுகின்றன. குழந்தைகளின் குறிப்பை ஆசிரியரின் உதவியால் முறைப்படுத்தவும். முழுமையாக்கவும்.

*குறிப்பு*

- இராகம் உருவாக்குகின்ற பாவனை, நடை.
- கருவிகளின் ஒலியின் தனித்தன்மைகளும் வாய்ப்புகளும்.
- கருவிகளின் வழியாக கேட்கும் இசையின் இனிமை.
- கேட்டுணர்ந்த பாடல்களில் பயன்படுத்தியுள்ள பலவித இசைக்கருவிகளை ICT வாய்ப்பைப் பயன்படுத்தி அறிமுகப்படுத்தப்படுகிறது.
- படமும், இசையும் காண்பிக்கப்படுகிறது.
- ஒரு கருவியின் படம் கான்பிக்கப்படுகிறது. அதேநேரத்தில் இசையையும் கேட்டல்.
- இதன் வழிக் கருவிகளைக் குறித்தும் அதிலிருந்து வெளிவரும் ஒலியின் தனித்தன்மையும் புரிந்துகொள்ளப்படுகிறது.

- <u>காண்பிக்க வேண்டிய இசைக்கருவிகள்.</u>
  வீணை, வயலின், புல்லாங்குழல், கிற்றார், ஹார்மோணியம், செகனாய், நாதஸ்வரம்,


கிற்றார்


செண்டை


புல்லாங்குழல்


கஜிறா


ஹார்மோணியம்


மத்தளம்


மிருதங்கம்


நாதஸ்வரம்


செகனாய்


தபலா


வீணை


வயலின்

*தபலா, கஜிறா, மிருதங்கம், செண்டை, மத்தளம், இலத்தாளம்,கைமணி.*

## தொடர்செயல்பாடுகள்.

- குழந்தைகள் உற்று நோக்கிய சில கருவிகள் பயன்படுத்தும் முறையையும், ஒலியையும் பாடக் கூறப்படுகிறது, இப்படிப்பட்ட கருவிகள் பின்னனி இசையுடன் பாடல்களை சேகரிக்கின்றனர்.

## ஒருங்கிணைத்தல்.

ஒவ்வொரு கருவிகளின் ஒலிக்கும், அதனைப்பயன்படுத்தும் முறைக்கும் தனித்தன்மைகளுண்டு. அவைகளின் நிலைக்கேற்ற தனித்தன்மையுடன் சில தரம்பித்தல் நடத்தப்பட்டுள்ளது. பாடுதல் என்பது வரிகளை உட்கொண்டு பாடுவது மட்டுமல்ல, கருவிகளின் வழியாக வரும் இசைகளும் இதில் உட்படும். வரிகள் இல்லையெனினும் பாடலின் நடையும், இனிமையும் வேறுபடாமல் இரசிக்கும் விதத்தில் வெளியிடுவதே கருவிகளின் வழியாக கேட்கும் பாடல்கள். கேட்கின்ற ஒலியின் அடிப்படையில் கருவிகளையும் அறிய முடிகிறது.

## முன்னுரை.

# அலகு-3

பொருளறிந்து பாடும்போதே பாடலுக்கு நேர்தத்தியும்,மேன்மையும் உருவாகிறது. வேற்று மொழிப்பாடல்கள் மட்டுமின்றி எந்தப் பாடலினுடையவும் கருத்துக்களை நன்கு அறிந்து பொருத்தமான இராகங்கள் சேர்த்துப் பாடும்போது பாடல் நன்கு இரசிக்கும் தன்மையிலிருக்கும். பள்ளிக்கூடங்களில் பல சூழ்நிலைகளில் பாடவேண்டிய பாடல்கள் நேர்த்தியோடு வெளியிட குழந்தைகளின் இசைத்திறமையைப் புரிந்துகொண்டு அவர்களை இசை உலகத்திற்குக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. எப்போதும் கேட்கின்ற பாடல்வரிகளின் வழியாகக் குழந்தைகள் இசையை இரசிக்கும் தன்மையில் கொண்டு வரவும், கூடுதல் பாடல்களைக் கேட்பதற்கு வாய்ப்பளித்து முழுமையான இசை அறிவு உள்ளவராக மாற்ற வேண்டியுள்ளது தேவையானதாகும். பாடல் வரிகளையும், பாடலுடைய மேன்மையையும், சிறப்பையும் குழந்தைகளுக்கு காண்பிக்க முடிந்தால் அவர்களின் உலகம் சிறந்ததாக அமையும். பாடல் முழுமையடைவது என்பது பல நிலைகளின் வழியாகும். ஒலியை ஒவ்வொரு நடையிலுள்ள பாட்டிற்கும் இணங்கும் வகையில் பதப்பொடுத்தி தேவையான திருத்தங்கள் செய்து பாட வேண்டும். இசையின் பகுதிகளை உட்கொண்டு குழுவாகவும், தனியாகவும் பாடும் பாடல்கள் அனைவரையும் கவரக்கூடியதாகும். மொழிக்கு அப்பாற்பட்ட இசையின் இரசனை, இசையின் சிறப்பு பல நேரங்களிலும் வேற்று மொழிப்படல்களை இரசிக்க தூண்டுமெனினும் அவைகளின் கருத்தையும் அறிந்து பாடினால் பாவனையோடு அதிக மேன்மையோடு இரசிப்பதற்கு வாய்புண்டு.

## உள்ளடக்கம்.

தாய் மொழியிலும், வேற்று மொழியிலும் எழுதிய பாடல்கள் தனது நடையில் கருத்

திற்கேற்ப பாடுவதன் அவசியம் இந்த அலகில் எடுத்துரைக்கும் பகுதியாகும். குழுப் பாடல்களில் கவனிக்க வேண்டிய குறிப்புகள், பல முறையிலுள்ள ஒலியின் ஏற்ற இறக்கம் நடக்கின்ற செயல்பாடுகள் போன்றவை இந்த அலகில் உட்படுத்தப்பட்டுள்ளன.

## கற்றல் அடைவுகள்

தாய்மொழிப் பாடலுடன், வேற்றுமொழிப் பாடலும், தேசபக்திப் பாடலும் கருத்திற்கேற்ற இராகத்திலும், பாவத்திலும் பாடுகின்றனர். குழுவாகப்பாடும் போது பாட்டின் வேகம், ஏற்றம், பாவனை என்பவையில் குறிப்புகளுக்குகேற்ப மாற்றம் வருத்துகின்றனர்.

## கருத்து, திறன்.

- கருத்துக்களைப் புரிந்துகொள்வதற்கான திறன்.
- தேசபக்தி.
- பாடும் திறன்.
- குழுப்பாடல்கள் குறிப்புகளுக்கேற்ப பாடுவதற்கான திறன்.
- வேகம், ஏற்றம், பாவனை, இராகம் இவை குறித்த அறிவு.
- குழு என்ற அறிவு.

## செயல்பாடு

- பல சூழ்நிலைகளுக்கு ஏற்ற பாடல் வடிவங்களைக் கேட்டல்.
- பாடல்களைத் தேர்ந்தெடுத்தல்.
- அட்டவணைப்படுத்துதல்.
- பாட்டுப் பயிற்சி, பாடுதல்
- தனியாகவும், குழுவாகவும் பாட்டு கேட்டல்.
- ராகம், தாளம் இவையை அடிப்படையாகக் கொண்டு குழுக்களாகப் பாடுவதற்கான திறன்.
- வரிகளுக்கும், இராகத்திற்கும் ஏற்ற ஒலி கொடுத்தல்.

## மதிப்பிடுதல்.

- சிறப்பானதைத் தேர்ந்தெடுத்தல்.
- குழவாகப் பாடுதல்.
- குறிப்புகளை ஏற்றுகொண்டுள்ள வெளியீடு.

## கற்றல் செயல்பாடுகள்

***செயல்பாடு-1***

| | |
|---|---|
| ஜீன் பள்ளி விழா | ஆகஸ்ட் 15- சுதந்திர தினம் |
| நவம்பர்-1 கேரளப் பிறவி | டிசம்பர் 25- கிறிஸ்துமஸ் |

- சிறப்பு நாட்களோடு தொடர்புகொண்டு நான்கு மாதங்களும் முக்கியமான நாட்களும் அடையாளப்படுத்தப்பட்ட குறிப்புகள் குழந்தைகளுக்குக் கொடுக்கப்படுகின்றன.

ஆபேரி, ஆரவி, அட்டான, ஆகரி

- ஒரே குறிப்புகள் கிடைத்த குழந்தைகள் நான்கு இராகங்களின் பெயரில் குழுக்க ளாக மாறுகின்றனர்.
- ஒவ்வொரு குழுவிற்கும் கிடைத்த குறிப்புகளில் உள்ள நாட்களுக்குத் தொடர்புள்ள பாடல்களை ஆசிரியர் கொடுக்கின்றார்.
- கொடுக்கப்பட பாடல்களின் சூழ்நிலைக் கேற்ற வகையில் இராகம் கண்டறியக் கூறப்படுகிறது.

*1. புலரிசெங்கதிருகள் புல்காம் காலம் புலர்காலம்*
*புதுப்பூக்கள் நம்மள்க்காடாம் காலம் புலர்காலம்*
*ஆகாசப் பட்டு விரிப்பில் பொன்னச்சரமெழுதாம்*
*ஆமோததிரயிலொரு உத்சவமேளம்மெருக்கிடாம்.*
*புள்ளோடும், பூங்குயிலோடும் புன்னாரம் சொல்லாம்*
*துள்ளிக்களியாடும் மழயுடை வெள்ளிக் கொலுசணியாம்.*

*2. சொர்க்கத்தேகாள் பிரியதாரமமென்*
*ஜன்மபூவிது பாரதம்*
*ஸத்தியமாகிம்ச சுவாஸதர்மம்*
*விளயும் பாரதகேதாரம்*
*ஸமஸ்தசுந்தர சுரநில சுனம்*
*விடரும் புண்ணிய க்ஷேத்திரமிதா*
*மாமுனிமாருட பரபிரசாதம்*
*ஆர்ஷபாரத சம்ஸ்காரம்*

*3. பிறந்த மண்ணிது மலையாளம்*
*பறஞ்சு போயது மலையாளம்*
*மறந்திடல்லோ ஒரு நாளும்*
*பிறந்த மண்ணின் மலையாளம்*
*உணர்ந்து பாட்டிது மலையாளம்*
*உணர்ந்து பாடும் மலையாளம்*
*கிளி பாடுந்னது மலையாளம்*
*களியாடுன்னது மலையாளம்*

*4. புல் குடிலில் கல்தொட்டியில்*
*மரியத்தின் பொன் மகனாய்*
*பண்டொரு நாள் தெய்வதூதன்*
*பிறந்நதினு உல்சவமாய்*

**இராகம் போடும் போது கவனிக்க வேண்டியவை.**

- நாட்களின் முக்கியத்துவத்திற்கேற்ப வரிகளின் கருத்தை உட்கொண்டு இராகம் இட வேண்டும்.
- குழுக்களில் உள்ளவர்களுக்குப் பாடுவதற்கு ஏற்ற இராகம்.

- பயிற்சி அளித்த பாடல்களைப் பாடுகின்றனர்.
- பாடலைக் குழுக்கள் தம்மில் மதிப்பிடுகின்றனர்.
- பள்ளிக்கூடச் சிறப்பு நாட்களின் பாகமாகவும், விழாக்களின் பாகமாகவும் பாட வேண்டிய பாடல்களின் பட்டியல் தயாரிக்கின்றனர். இந்த பட்டியலில் வேற்று மொழிப் பாடல்களும், தேசபக்கதிப் பாடல்களும் இடம் பெற வேண்டும்.
- இவையில் தேர்ந்தெடுத்த பாடல்களை பாடி பயிற்சி எடுக்கின்றனர்.
- பயிற்சி கிடைத்த பாடல்களைக் குழுக் களாக பாடுதல், வெளியிடுதல்.
- வெளியிடுதலை மதிப்பிடும் போது ஆசிரியர் பாடலில் சேர்க்க வேண்டி யவற்றை அடையாளப்படுத்தி அவை களையும் சேர்த்து மீண்டும் பாடி பயிற்சி அளிக்க வேண்டும்.

***வேற்றுமொழி தேசபக்தி பாடல்கள்***

1. ஒடி விளையாடு
2 பாரத சமுதாயம்
3. ஓ குண பீஜ்
4. செலுவின முந்திய மக்களே
5. ஜவகத் கீ ஆவாஸ்
6. ஸாரே ஜஹாம்ஸே அச்சா
7. பாசலனி வேஹன்னா.

*குழுக்களாக பாடும்போது கவனிக்க வேண்டியவை.*

- ஒண்றிணைந்து பாடுதல்.
- ஒண்றிணைந்து இராகமிடுதல்.
- ஒண்றிணைத்து தாளம்.
- பாவனையோடு கூடிய பாடல்.

- குழுவாகவும், தனியாகவும் பாடும் போது கவனிக்க வேண்டிய அதிக இசை நிலைகளைக் குறித்து அறிந்து கொள்வதற்கான செயல்பாடுகள்.

1. பாடல் கேட்கின்றனர்.

எ.கா– கங்கா யமுனா..
சாஞ்சாடி யாடி
கங்கே...
எந்தினு வேறொரு சூரியோதயம்

- இதெல்லாமல் எளிமையான பாடல்களை உட்படுத்தலாம்.
- கேட்ட பாடலில் பாடும்போது உண்டான தனித்தன்மைகளை கேட்கப்படுகிறது.

*குறிப்புகள்*

- வரிகளை ஏற்றத்தில் பாடியது (ஏற்றம்).
- ஒழுங்கான வேகம்.
- ஏற்ற இறக்கத்தில் பாடும் போது ஏற்பட்ட தனித் தன்மைகள்.
- ஒரே பாட்டில் ஒலி எவ்வாறெல்லாம் பயன்ப டுத்தப்படுகிறது.?

- குறிப்புகளுக்கு ஏற்ற பிரதிபலிப்பு.
- மதிப்பிடுதல்(பேச்சுவழக்கில்–தனிநபராக).
- பாடல்களின் தனித்தனைமைகளை குறித்தும், ஒலி யின் ஏற்ற இரறக்கத்தைக் குறித்தும் உள்ள சிறு குறிப்பு கொடுத்தல்.

***ஏற்றம்***

ஒலிக்கு இராகத்தினுடைய வோ, வரிகளுடையவோ தனித்தன்மைகளுக்கேற்ப/ கருத்துக்களுக்கேற்ப ஏற்றம்.

- எல்லா இராகங்களும் ஒரே ஒலியில் பாடும்போது இரசிக்க முடியாது. சில ஏற்றத்திலும் வேறு சில இறக்கியும் சில இராகங்கள் இரண்டிற்கிடையிலும் பாடும் போதே அவையில் தனிச்சிறப்பு வெளிப்படுகிறது.

**இசையின் வேகம். (Tempo)**

ஒவ்வொரு பாடலின் இரசனைக்கும் அதனுடைய தாள முறைகளுண்டு. தாளங்கள் வேகம் கூடியும், குறைந்தும் இருக்கலாம். சில பாட்டுக்கள் ஒரே வேகத்தில் இருக்கு மெணினும் வேறு சில வரிகள்கும். சூழ்நிலைக்கும் ஏற்ப பல வேகத்தில் பாடுவதைக் காணலாம். பாட்டின் தாள அசைவே வேகம். இப்படிப்பட்ட பாடல்கள் தேர்ந்தெடுத்து கேட்கின்றனர்.

| ஒரே வேகம் உள்ளவை | வேறுபட்ட வேகம் உள்ளவை |
|---|---|
| ஜன்மகாரணிபாரதம்<br>மின்னாமின்னி<br>மின்னா மினுங்கோ | ஆறுமுகம் முன்பில்<br>வந்தால்<br>சம்ஸ்கிருதபமகரி<br>பள்ளிவாளு |

- “அந்திக் கடப்புறத்தொரு ஓலக்குடையெடுத்து ”
  “தாங்கிணத்தில்லம் தில்லம்”
  “படகாளி சண்டி சங்கிரி”
  இந்த பாட்டுகளில் ஏதாவதொரு பாட்டை மெதுவான வேகத்தில் பாடுதல். இந்த பாட்டின் உண்மையான ஆடியோ கேட்டகவைத்தல்
- குழந்தைகள் வேறுபாட்டை மதிப்பிடுகின்றனர்.

<u>*குறிப்புகள்*</u>

- ♦ இரசிப்பதற்கு ஏற்ற வேகத்தில் பாடுதல்?
- சரியான வேகத்திலுள்ள பாட்டு அதே போன்று பாடுதல்.

## மதிப்பிடுதல்.

- சிறப்பாகப் பாடுதல்.
- தேர்ந்தெடுத்த பாடல்களின் சிறப்பு.
- பாவனையைப் புரிந்து கொள்ளுதல்.
- குழுக் கலந்துரையாடலில் வெளியிடுதலின் திறமை.
- ஒலியை முறைப்புத்துவதற்கான திறன்.
- டெம்போ வேகம் என்பவைகளை அறந்து கொள்வதற்கான திறன்.

**ஒருங்கிணைத்தல்.**

- பாவனைக்கேற்ப பாட்டுகள் பாடும்போது அதற்கு கூடுதல் இனிமை தோன்றுகிறது. தாய்மொழிப் பாட்டானாலும், வேறுமொழிப் பாட்டானாலும் பாவனைக் கேற்று பாடுதல் தேவையானதாகும். ஒவ்வொரு இராகத்திற்கும் அதனுடைய பாவனை உண்டு. குறிப்புகளின் அடிப்படையில் ஒவ்வொரு பாட்டும் பாவனை உள்ளதும் அதிக இரசனை உள்ளதாகவும் இருக்கும் வகையில் தேவைப்பட்ட மாற்றங்களை வருத்திப் பாட வேண்டும்.

# ஆறாம் வகுப்பு

## அலகு–1

### முன்னுரை.

பாடல்கள் பல விதத்திலுள்ளன. நன்கு இரசிப்பதற்கு உதவுவதும் இரசனை இல்லலாததும் உள்ளன. கேட்பதற்கு அதிக வாய்ப்புகள் கொடுத்தால் மட்டுமே பாடல்களை/இசையை நுணுக்கமாக இரசிக்க முடியும். ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு தனித்தன்மைகளைக் கொடுக்கின்றது. பாடல்கள் கருத்துப்பரிமாற்றத்தின் ஊடகமாக மாறும் போது, கருத்துப் பரிமாற்றத்திற்கு முழுமை கிடைக்கும் விதத்தில் இசையின் பகுதிகளை உட்கொண்டு பிரதிபலிப்பு நடத்த வேண்டும்.

இசை இல்லாத ஒரு பாடலும் (ஒரு இராகமும்) ரசிகர்களுக்கு முழு திருப்தியை கொடுக்க முடியாது. ஒவ்வொரு பாடலுக்கும் முழுமையும், மேன்மையும் உருவாக்குவது இசையின் வழியாகும்.

### கற்றல் அடைவுகள்.

- இசையின் பகுதிகளை உட்கொண்டு பாடுகின்றனர்.
- தனியாகவும், குழுவாகவும் பாடும் போது உருவாகும் இசையின் குறைபாடு, தாளக்குறை இவைகளைப் புரிந்து கொள்கின்றனர்.

### கருத்து, திறன்

- இராகம், தாளம், லயம் போன்றவை இசையின் பகுதிகள் ஆகும்.
- இசையின் பகுதிகள் ஏற்றவாறு ஒன்றினையும் போது பாடலின் மேன்மை உருவாகிறது.
- இராக்குறை, தாளக்குறை இசையினால் பாடலின் மேன்மையும் குறைகிறது.

### செயல்பாடுகள்

- பாடல்களைக் கவனித்து இசையின் பகுதிகளை அறிந்து கொள்ளுதல். (Audio, நூல்களின் உதவியால்)
- குழுவாகவும், தனியாகவும் பாடுதலும், பயிற்சி எடுத்தலும்.
- இசையைக் குறித்துள்ள தேடல்,சுருதி, தாளம், பாவனை ( மேற்கோள்களைப் பயன்படுத்தி தகவல்களைச் சேகரிக்கின்றனர்.
- ஆலோசனை களரி
- ஒருவருக்கொருவர் மதிப்பிடல். மேன்படுத்தல்
- பாடலை பாவனையோடு மதிப்பிடல் (.வெளியிடுதல்)
- பாடுதல்.
- பாடுதலை மதிப்பிடுதல்.
- பிரச்சினை கண்டடைதல் கலந்துரையாடல்.

- சுருதி, தாளம் -சிறப்பைக் கலந்துரையாடல்.
- வல்லுநர்களோடு கருத்துப் பரிமாற்றம்.

## மதிப்பீடு.

- கலந்துரையாடலில் பங்களிப்பை மதிப்பிடுதல்.
- சிறு வினாக்களைக் கேட்டு, உற்று நோக்கி மதிப்பிடுதல்.
- பாடுவதை மதிப்பிடுதல்..
- பாடலை மதிப்பிட்டு இராக்குறை/தாளக்குறை இவற்றைக் கண்டறிதல்.
- உற்று நோக்கி மதிப்பிடுதல்.

## உள்ளடக்கம்

இசையின் முக்கியமான நிலைகளின் விளக்கம், அவைகளின் தனித்தன்மைகளை குறித்துள்ள அறிவு, இசையின் பல நிலைகளை புரிந்துகொள்வதற்கு வேண்டி வேறு பட்ட முறைகளை பயன்படுத்தியுள்ள கற்றல் செயல்பாடுகள், இவை அனைத்தும் இந்த அலகில் உட்படுத்தப்பட்டுள்ளன.

## கற்றல் செய்லபாடுகள்

***<u>செயல்பாடு-1</u>***

- சாரே ஜஹாம்சே அச்சா என்ற தேசபக்திப் பாடலைக் குழுவாகப் பாடக்கூறப்ப டுகிறது (பல்லவி, அனுபல்லவி மட்டும்) வகுப்பிலுள்ள மூன்றோ நான்கோ குழந் தைகளை அழைத்துப் பாட்டைக் குறித்துள்ள கருத்துக்களை அடையாளப்ப டுத்தக் கூறுதல் வேண்டும்.
    - அனைவரும் ஒரே போல் பாடுகின்றனரா?
    - குழுவில் யாருடையதாவது ஒலி வேறுபட்டு காணப்படுகிறதா?
    - ஆண் குழந்தைகளும், பெண் குழந்தைகளும் பாடிய போது வித்தியாசம் இருந்ததா?
- வகுப்பிலுள்ள குழந்தைகளை நான்கே, ஐந்தோ குழுவாகப் பிரித்து மீண்டும் இந்தப் பாடலைப் பாட வைத்தல்.
- மற்ற குழுக்கள் மேற்கூறிய குறிப்புகளைப் பயன்படுத்தி ஒருவருக்கொருவர் மதிப்பிடுகின்றனர். இதில் சிறந்தவற்றைக் கண்டுபிடிக்கின்றனர்.
- இதர குழுக்களின் குறைகளைக் கூறுகின்றனர்.
- பாட்டு சிறந்தாதக இருக்க என்னென்ன தேவை?
- நமது நண்பர்களில் சிலர் பாடிய பாடல்களைக் கேட்போம், கவனிக்கவும்.

***<u>செயல்பாடு-2</u>***

- மீரா, நீலிமா, அஞ்சு, ஸ்னேகா, ரிஷாத், என்பவர்கள் பாடிய பாட்டுகளின் குறுந் தட்டு வகுப்பில் குழந்தைகளைக் கேட்க வைத்தல். ( இனிமையாகப் பாடியதும் மேன்மையில்லாது பாடியதுமான பாட்டுக்கள் குறுந்தட்டில் உட்படுத்த வேண் டும்).

- பாடல்களைக் கேட்டபிறகு அவற்றின் இரசனையை மதிப்பிடுவதற்கு குழந்தைகளுக்கு நேரம் அனுமதிக்க வேண்டும்.
- இரசனையை மதிப்பிடுவதில் கவனிக்க வேண்டியவை;
- ஒவ்வொரு பாட்டும் விருப்பபட்ட முறையில் வரிசைப்படுத்தவும்.
- மிக நன்று/நன்று/ சிறிது விருப்பமுள்ளது/விருப்ப மில்லாதது என்ற வரிசையை பின்பற்றவும்.
- கருத்துக்கள் வெளியிடுதல்.
- சுயமாகக் கூறுதல் சுழற்சி முறையைப் பயன்படுத்தலாம்.
- குழந்தைகளின் கருத்துக்களை ஆசிரியர் கரும்பலகையில் எழுதவும்.
- குறிப்புகளின் அடிப்படையில் அதிகக் குழந்தைகள் விருப்பப்பட்ட பாடலை கண்டுபிடிக்கின்றனர்.
- நல்ல பாடலைத் தேர்ந்தெடுக்கக் குழந்தைகள் கடைப்பிடித்த முறைகளை ஆராய்ததல். (கேள்விகள் கேட்கலாம்).

  ***வினாக்கள்***

  - மிகவும் அதிகமான விருப்பபட்ட பாடலைத் தேர்ந்தெடுத்தது எவ்வாறு?.
  - மற்ற பாடல்களின் குறைகள் எவை?
  - மிக மோசமான பாடலை எவ்வாறு கண்டுபிடித்தீர்கள்?
- குழந்தைகளுக்கு வெளியிடுவதற்கு வாய்ப்பு-தனிநபர்,சுழற்சி.
- பாடலில் கண்டுபிடித்த மேன்மைகள், குறைபாடுகள் அவைகளின் பகுத்தாய்வு.
- குழந்தைகளின் இரசனையின் மதிப்பிடுதலை அடிப்படையாக்கி மிகவும் நன்றாக பாடிய பாடகி/ பாடகனை கண்டடைந்தனர். நீலிமா முதல் இடத்தைப் பிடித்தார்.
  - நீலிமா பாடியதன் தனிச்சிறப்புகள் எவை?
  - மேன்மையான இந்தப் பாடலில் இசையின் எந்தெந்த பகுதிகள் இணைந்துள்ளன.
- சார்ட்டிலுள்ள கேள்விகளுக்கான குழந்தைகளின் பதிலைக் கரும்பலகையில் எழுதவும். எழுதப்பட்ட பதில்கள் இவ்வாறிருக்கலாம்.
  - நல்ல இராகத்தில் பாடினார்.
  - தாளமிருந்தது.
  - கேட்பதற்கு இனிமையாக இருந்தது.
  - சிறந்த ஓவியமாக இருந்தது.
  - கருத்துற்றதாக இருந்தது.
  - சுருதி இருந்தது.
- எழுதப்பட்டருப்பவைக்கும் இசைக்கும் இடையிலுள்ள தொடர்பு-பகுப்பாய்வு(சுருக்கமாக)
- இசையில் மாற்றி வைக்க இயலாத பகுதிகள் இவைகள்

பாடலின் முழுமைக்கு இவையனைத்தும் தேவையான விதத்தில் ஒன்றிணைக்க வேண்டும்.

- இசையின் நிலைகளைக் குறித்துள்ள சிறு குறிப்பு.
- சிறப்பான ஒரு பாடலைக் கேட்கின்றனர்.

- இந்தப் பாடலைக் கட்டுப்பாடில்லாத ஒலியில் ஏற்ற, இறக்கம் வருத்தி அதன் உண்மையான முறையிலிருந்து வேறுபடுத்தி ஆசிரியர் பாடுகிறார்.(ஒவ்வொரு வரிகளும் கட்டுப்பாடில்லாமல் ஏற்ற இறக்கத்தில் பாடுதல்.)
- பாடுதலைக் குறித்துள்ள குழந்தைகளின் கருத்துக்களை அடையாளப்படுத்துதல்.
- வெளியிடுகின்றனர்.
- இனிமை இல்லாததன் காரணத்தை விளக்குதல்.
  - முதலில் பாடியது இனிமையானதும், முறையானதும் ஒலி முறைகள் முறை யாக உட்கொண்டதாக இருந்தது. ஒலியின் தனித்தன்மைகளுக் கேற்று பாடு தல் வேண்டும். எளிதாகப் பாடலை ஏற்ற இறக்கத்துடன் பாட முடியாது.
  - இரண்டாவது பாடியது மிக மோசமாக இருந்தது. இராகத்தின் சிறப்பு, ஒலி யின் சிறப்பு இவைகளை நிலைநிறுத்த முடியவில்லை. கட்டுபாடில்லாத ஒலி யின் நிலை பாடலைக் குறைபடுத்தியது. எளிமையான பாடலைப் பாடவும் முடியவில்லை.
- பாடுதலை இரசனை உள்ளதாக மாற்றக் கடைபிடிக்க வேண்டியவை.
  - சிறப்பாக ஒலியின் ஒற்றுமை உருவாகின்ற விதம்.
  - சுருதி என்ற இசையின் முக்கிய நிலையை அறிமுகப்படுத்துதல்.
  - சுருதியின் தர்மத்தை விளக்குதல்.

***சுருதி என்றால் என்ன?***

ஒவ்வொரு மனிதனுடையவும் ஒலியின் தனித்தன்மைக் கேற்ப ஏற்றத்துடனும்இறக்கத்துடனும் இரண்டிற்கிடையிலும் எளிதாக பாடுவதற்கு தேர்ந்தெடுக்கின்ற அடிப்படை நாதமே சுருதி எனப் படும்.

***செயல்பாடு-3***

- பொருத்தாமான சுருதியைத் தேர்ந்தெடுப்ப தின் நன்மைகள்.
- குழந்தைகளுக்கு இடையில் ஒலி வேறுபா டுள்ள மூன்று குழந்தைகளை வைத்து ஒரு பாடலை பாட வைத்தல்.
- ஒலியின் சிறப்புகள்
  - ஒருவருடைய ஒலி- ஏற்றம் இல்லாதது. (அடிப்படை ஒலி)
  - ஒலியை இறக்கிப் பாட முடியாமல் ஏற்றத்துடன் பாடுதல் (உயர்ந்த ஒலி)
  - ஏற்றத்துடனும், இறக்கத்துடனும் எளிமையாக ஒலியைப் பயன்படுத்த முடி கிறது.
  - அதிக ஏற்றத்துடனோ, இறக்கத்துடனோ அல்லாமல் மையப்பகுதியில் பாடு தல் (மிடில் டோண்)
- குழந்தைகளின் பிரதிபலிப்பு
  - மூன்று குழந்தைகளுக்கும் ஒரே போன்று பாட முடிவதில்லை.
  - ஒருவர் மட்டும் பாட்டின் எல்லாப் பகுதியையும் பாடுதல்.
  - ஒருவர் தாழ்ந்த பகுதியைப் பாடவில்லை.
  - ஒருவர் ஏற்றத்துடன் பாடவில்லை.

- குழந்தைகளிடம் கேட்கவேண்டிய கேள்வி.
  - ♦ பாட்டைத் தெளிவாகவும் முழுமையாகவும் பாட வேண்டாமா?
- அவரவருடைய சுருதியைக் கண்டுபிடிக்க வேண்டியதன் தேவையை உணர்த்து தல்.
- பாடுதல் என்பது ஒவ்வொருவருடையவும் ஆசையாகும். பாடுகின்ற பாட்டை முழுமையாகப் பாடுதல் என்பதும் தேவையானதாகும். அதற்காக அவரவரின் ஒலியின் தனித்தனைமைக்கேற்ப ஓரடி நாதத்தைக் கண்டறிதல் வேண்டும்.
- சுருதிக் கருவிகள்/சுருதிப் பெட்டி என்பவையை அறிகின்றனர்.
- சுருதிகள் ஒவ்வொருவரின் ஒலியின் தன்மைக்கேற்ப தேர்ந்தெடுக்கலாம். பலவித சுருதிகள் உண்டு.
- சுருதிப்பெட்டி வழியாகக் குழந்தைகள் சுருதிகளை அறிகின்றனர். *(குழந்தைகளின் ஒலிக்கேற்ப சுருதிகளை தேர்ந்தெடுக்கின்றனர், சுருதியில் பாடுகின் றனர். அவரவரின் அடிப்படை சுருதியை உணர்கின்றனர்.).*

***செயல்பாடு-4 ; இராகம்.***

- பாடப்புத்தகத்திலுள்ள ஒரு கவிதையின் சிறப்பான சில வரிகளைப் பாடிக் காண் பிக்கப்படுகிறது.
- இந்த வரிகளின் பொருளுக்கேற்ப ஒலியில் சில ஒழுங்குபடுத்தல்கள் நடத்தி மீண் டும் வாசித்தல்.
- கருத்துப்பகுதி வெளிப்படும் முறையில் ஒலியை முறைப்படுத்தி மீண்டும் பொருத் தமான முறையில் பாடுகின்றனர்.
- மூன்று வெளியிடுதல்களுடையவும் தனிச்சிறப்புகளை ஆராய்கின்றனர்.
  - ♦ முதல் வாசிப்புக்கும் இரண்டாவது வாசிப்புக்கும் இடையில் வேறுபாடு இருந் ததா?
  - ♦ மூன்றாவது வாசித்தல் மற்ற வாசித்தலில் இருந்து எவ்வாறு வேறுபடுகிறது?
- குழந்தைகள் வாய்மொழியாகப் பிரதிபலிப்பைக் கூறுகின்றனர்.
  - ♦ முதலில் சாதரணமாக வாசிக்கப்பட்டது.
  - ♦ இரண்டாவதில் சிறிது ஏற்றமும் இறக்கமும் இருந்தது.
  - ♦ மூன்றாவதற்கு ஒரு நல்ல இராகம் இருந்தது. நல்ல முறையில் இருந்தது.
- குழந்தைகளின் கருத்துக்களின் அடிப்படையில் எந்த முறை நல்லது? இராகம் என்றால் என்ன என்பது நிர்ணயிக்கப்படுகிறது.
  - ♦ கேட்பதற்கு அதிக இன்பம் கிடைப்பதற் காக ஒலியை அழகாக முறைப்படுத்திப் பயன்படுத்தும் போது இராகம் உருவா கிறது. என்பது இராகம் உருவாக்கப்படு வதாகும்.
  - ♦ ஒருமையுள்ள சில நாதங்கள் ஒன்றிணை யும் போது இராகம் உருவாகிறது.
  - ♦ இராகம் உருவாகும் பல நிலைகள்.
  - ♦ வாசித்தல், கூறுதல், பாடுதல்.
  - ♦ இராகத்தின் தனித்தன்மைகள்.

***இராகம்***

ஒரு பாடலை, வேறு பாடல்களி லிருந்துவேறிட்டு காண்பிப்ப தில் முக்கியமானதும், தனித் தன்மை வாய்ந்ததுமான இசை வடிவமே இராகம்

***செயல்பாடு-5 தாளம்***

- ஆசிரியர் ஒரு கவிதையைத் தாளத்தோடு கூறுகிறார்.
- தாளத்திற்கேற்ப கை தட்டுமைறு கூறுகிறார்.
- குழுக்களாகக் கை தட்டும் போது சிலர் பாட்டிற்கு ஏற்றார்போல் கை தட்டுவதும் உண்டு சிலர் அல்லாது கை தட்டுவதும் உண்டு.
- ஆசிரியரின் கேள்வி,
    - அனைவரும் ஒரே போல் கை தட்டினார்களா?
    - எவ்வாறு ஒரே போல் கை தட்டலாம்.
- முதலில் கூறிய பாட்டின் கை தட்டலுக்கு ஏற்ப எண்களைக் கூட்டுதல்.

/123/123/123/123/123/123/123/....
மலையபுலயனா மாடத்தின் முற்றத்தில்
மழ வன்ன நாளொரு வாழநட்டு
மனதாரிசாலகள் போலத்திலோரோரோ
மரகதகாம்பு பொடிச்சுவண்ணு

- குழந்தைகள் பாடும்போது ஆசிரியர் எண்ணிக் கையைத் தட்டுகிறார்.
- பிறகு இராகத்தோடு கையைத் தட்டுகிறார்.(எண்களை எண்ணி)
- இந்தச் செயலை மீண்டும் மீண்டும் செய்கின்றனர்.
- இதைப்போன்ற இரண்டு பாடல்களையும் ஆசிரியர் பாடுகிறார்.
- மாணவர்களும் சேர்ந்து பாடுகின்றனர்.

பச்சைப்பனம் தத்தை.......
கண்ணீர் பூவின்றே..........

- ஆசிரியரின் அறிவுரைப்படி கையைத் தட்டுகின்றனர்.
- பாடலோடு ஆசிரியரும் மாணவர்களும் சேர்ந்து பாடுகின்றனர்.
- பாடுவதுடன் கையைத் தட்டி வேகத்தை முறைப்படுத்திய போது பாட்டிற்கான மேன்மை கிடைத்தது.
- மாணவர்ளின் பிரதிபலிப்பு.
    - ஒரே நேரத்தில் அனைவராலும் ஒரே போல் பாட முடிகின்றது.
    - ஒரோ போல் தொடங்குவதற்கும் முடிப்பதற்கும் முடிந்தது.
    - பாட்டுடன் சேர்ந்த சம முறை என்னவென்று அறிய முடியும்.
    - பாடலுக்கு இடைஇடையே நுணுக்கமான முறையில் வருகின்ற அசைவுகளே தாளம்.
    - இந்தத் தாளங்களே பாட்டின் அலங்காரம், வேகம் இதனை கட்டுப்படுத்துகி றது

பாடலின் முறைப்படுத்திய நேரமே தாளம். இப்படிப்பட்ட சிறப்பார்ந்த நேரங் களை பாடலில் பயன்படுத்தப்படுவது அவை சிறப்பான தாளத்திற்கு வழி வகுக் கிறது.

***செயல்பாடு-6 பாவனை***

- இடசேரியினுடைய புதுப்பாட்டின் சில வரிகளை சார்ட்டில் எழுதுதல்.

  *“அப்பொண்ணும் நோக்காதெ அம்மணி நோக்காதெ*
  *அம்மதன் கண்ணுகள் சூழ்ந்தெடுத்து.*
  *புலரிசெந்தாமரபோலவபுதத்தின்*
  *திருமும்பலர்பிச்சு தொழுதுரச்சு*
  *இதிலும் வலியதாணென்ற பொண்ணேமன*
  *அதிநெந்திரிகென்ற பூதமே நீ...”*

- மாணவர்களை வைத்துப் பாடச்சொல்ல வேண்டும்.
- கருத்தைப் புரிந்து கொண்டவர்களைச் சொல்வதற்குக் கூறப்படுகிறது.
- கருத்தை நன்கு புரிந்து கொள்வதற்கு ஆசிரியர் கதையின் பின்னணியைக் கூறுகிறார்.
- அதன் பிறகு ஒன்றிரண்டு மாணவர்களைக் கொண்டு வரிகளைக் கூறுதல்.
- ஆசிரியர் வரிகளைக் கூறுகிறார்.
- பலமுறையில்.
  - கருத்தைக் உட்கொள்ளாமல்
  - கருத்தை சிறிது உட்கொண்டு.
  - கருத்தை முழுவதுமாக உட்கொண்டு.
- ஆசிரியர் கூறுகின்ற முறையை மாணவர்கள் கவனிக்கின்றனர்-பதிலளிக்கின்றனர்.
- விருப்பமான முறையையும், விருப்பமல்லாத முறையையும் மாணவர்கள் தரம் பிரித்து வெளியிடுகின்றனர்.
- விருப்பமானதைத் தேர்ந்தெடுப்பதற்கான வரைமுறைகளை ஆராய்கின்றனர்.
- மாணவர்கள் கூறிய பதிலை மீண்டும் உறுதிப்படுத்துவதற்காக ஆசிரியர் நன்குவிருப்பட்ட முறையை ஒரு முறை கூடச் சொல்கிறார்.
  - வரிகளிலுள்ள கருத்தைப் புரிந்து கூறும்போது கருத்திற்குக் கூடுதல் தெளிவு ஏற்பட ஒலியை ஒதுக்கவும், திறக்கவும் செய்வதுவழி பாடல் மிகச் சிறந்ததாகிறது.
  - வரிகளிலுள்ள கருத்திற்கேற்ப பாடகன் ஒலியை ஒதுக்கவும், திறக்கவும் செய்வதன் வழி கருத்தை உட்கொள்ளுதல் எளிமையாகுகிறது.
  - வரிகளுக்கும் இராகத்திற்கும் ஏற்ப பாடலில் ஒலியில் ஏற்படுகின்ற ஒழுங்கு முறைகளே பாவனையை உருவாக்குகிறது.
  - பாடலில் இசைப்பகுதிகளின் சிறப்பு.
  - பாடலுக்கு சுருதி, இராகம், தாளம், பாவனை என்பவை பொருத்தமான முறையில் ஒன்றிணையும் போது சிறந்த பாடலாகிறது.

  இசையின் நிலைகளான இராகம், சுருதி, தாளம், பாவம் இவை குறித்து அந்தந்த நேரத்தில் மாணவர்கள் வகுப்பில் அடையாளப்படுத்திய குறிப்புகளை ஆசிரியர் உதவியோடு சரிபார்த்துக் கையேட்டில் எழுத வேண்டும்.

**பாவனை**

ஒலியை வரிகளுக்கு ஏற்ப/ இராகத்திற்கு ஏற்ப பக்குவப்படுத்தி பயன்படுத்துகின்ற இசையின் தனித்தன்மையே பாவனை.

### மதிப்பிடுதல்.

- இரசனையின் சிறப்பு.
- குறிப்புகளின் தன்மை.
- பாடுதலின் சிறப்பு.
- சரியான தாளம்.
- பாவனை, இராகம்.
- இசையின் நிலைகளை அறிதல், உட்கொண்டு பாடுவதற்கு உள்ள திறன்.

### ஒருங்கிணைத்தல்.

சுருதி இனிமையாகப் பாடும் போது ஒரு பாடல் முழுமையடைகிறது, சுருதி கவனத்துடன் தாளமும், சரியான இராகமும் ஒன்றினைய வேண்டும். இசையின் நிலைகளை அறிந்து அவைகளின் ஒற்றுமையை மதிப்பிட்டு இரசிக்கும்போதே பாடுதலின் இரசனை உயர்ந்த நிலையில் அமைகிறது.

## அலகு-2

### முன்னுரை.

இசையில் மிக முக்கியமானதும் அடிப்படையானதும் ஆனது சுருதி ஆகும். சுருதியை புரிந்துகொண்டுள்ள பாடலும், சுருதி இல்லாத பாடலுக்கும் இடையில் பெரிய வித்தியாசம் உண்டு. எந்த ஒரு பாடகனுக்கும் மிகத் தேவையான அடிப்படை குணமே சுருதி அறிந்து பாடுதல். சுருதியில் சேர்ந்து இணைந்துள்ள பாடலைக் கேட்கும்போது உருவாகின்ற ஆனந்தும் சிறந்ததாகும், ஒவ்வொருவருடையவும் ஒலியின் தனித்தன்மைக்கேற்ப பொருத்தமான சுருதி உண்டு. சுருதி சேர்ந்துள்ள பாடலின் தனிச்சிறப்பை இரசிக்காத மனித மனசுகளைப் பார்க்கமுடியாது. சுருதியுடன் சேர்ந்து பாடும் பாட்டிற்கு இசைக்கருவிகளின் சிறப்பும் கூடச்சேரும் போது உருவாகின்ற பிரதிபலிப்பு என்பது மிகச்சிறந்ததாகும். கேட்பவர்களுக்குச் சிறந்த இசையை கேட்க வைப்பது எந்த ஒரு பாடகனுடையவும் கடமையாகும், இதற்காக சுருதி அறிந்து பாடுதல் தேவையானதாகும்.

### கற்றல் அடைவுகள்.

எளிமையான பாடல்களை சுருதிக் கருவிகளுடையவும், சிறிய இசைக்கருவிகளுடையவும் உதவியோடு பாடுகின்றனர்.

### கருத்து, திறன்.

- சுருதி அறிந்து பாடுதல்.
- இசையின் தாயாக சுருதியைக் கருதுகின்றனர்.
- வேறுபட்ட சுருதிப் பெட்டிகள்.

- சிறிய இசைக்கருவிகளின் உதவியோடு பாடுதல்.
- பாடும்போது இசைக்கருவிகளைப் பயன்படுத்துவது பாட்டை அதிகமாக இரசிக்க உதவுகிறது.
- சிறிய தாள வாத்தியங்கள் உருவாக்க முடியும்.
- சிறிய கருவிகளுக்கும் பாடலுக்கும் இடையிலுள்ள சுருதி உறவு.

## செயல்முறை.

- வேறுபாட்ட சுருதிப்பெட்டிகளை அறிகின்றனர்.(ICT வாய்ப்புகளை பயன்படுத் தலாம்)
- சுருதியோடு கூடியுள்ள பாடல்.
- சுருதியின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ளுதல்.
- பாடுதல்-ஒருவருக்கொருவர் மதிப்பிடுதல்- மேம்படுத்துதல்.
- வேறுபட்ட இசைக்கருவிகளைத் தெரிந்துகொள்ளுதல்.
- சிறிய இசைக்கருவிகளைப் பயன்படுத்தும் பயிற்சி.
- சிறிய இசைக்கருவிகளுடன் சேர்ந்துள்ள பாடல்.

## மதிப்பீடு.

- சுருதிப்பெட்டிகளை அறிதல்.
- சுருதி இணைந்து பாடல்.
- இசைக்கருவிகளோடு சேர்ந்து பாடுதல்.
- சிறிய இசைக்கருவிகளைப் பயன்படுத்தும் முறை.
- பாடுதலை மதிப்பிடுதல்.
- இசையைக் குறித்துள்ள திறனை மதிப்பிடுகின்றர்.

## உள்ளடக்கம்.

சுருதியைக் குறித்து அறிந்து கொள்வதற்கும், சுருதிக் கருவிகளைத் தெரிந்து கொள் வதற்கும் இந்த அலகில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. சுருதியின் சிறப்பை அறிந்து கொள்வதற்காகப் பல செயல்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. சுருதிக்கரு விகளின் படத்தை ஒலியுடன் காண்பிக்கப்படுகிறது. இசைக்கருவிகள் பாடலுடன் பொருத்தமான முறையில் இயங்கும் போது உருவாகும் இசையின் முழுமையும், சிறப்பும் இதில் கூறப்பட்டுள்ளன.

## கற்றல் செயல்பாடுகள்

***செயல்பாடு -1***

- சுருதிப்பெட்டியின் உதவியில்லாமல் ஆசிரியர் ஒரு பாடலைப் பாடுகிறார்.
- சுருதிப்பெட்டி /தம்புரு இவையின் ஒலியைப் பதிவு செய்த குறுந்தட்டைப் பயன் படுத்தி சுருதியை வகுப்பில் கேட்டு கொண்டிருக்கின்றனர். கேட்டுக்கொண்டி ருக்கும் சுருதிக்கேற்ப அந்தப் பாடலை ஆசிரியர் பாடுகிறார்.( சுருதி அப்போதும் பின்னணியில் உள்ளது).
- மாணவர்கள் இரண்டு பாடலையும் கேட்கின்றனர்.

- வினாக்கள்–
    - சுருதியுன் இணைந்திருந்த பாடல் எது?
    - எந்தப் பாடல் சுருதியுடன் இணையாமல் இருந்தது?
    - கேட்பதற்கு இனிமையாக இருந்தது எது?
- குழந்தைகள் தனியாகப் பதிலளிக்கின்றனர்.

    *இரண்டாவது பாடல் சுருதி சேர்ந்ததும், அழகானதும், இனிமையானதுமாக இருந்தது.*

- சுருதிப்பெட்டிகளை அறிமுகப்படுத்தலாம். அறிகின்ற சுருதிப்பெட்டிகளை ஆசிரியர் கரும்பலகையில் பட்டியல் இடுகிறார்.
    - தம்புரு.
    - சுருதிப்பெட்டி.
    - ஹார்மோணியம்.
- இவைகளின் படங்கள் காண்பிக்கப்படுகிறது.
- செயல்படும் முறையும் ஒலியும் கேட்பிக்கப்படுகிறது. (ICTவாய்ப்பு)
- எல்லாக் குழந்தைகளுக்கும் பாடுவதற்கு முடிகிற விதத்தில் ஒரு பாடலை படிப்பிக்கிறார். மெல்லிசையாகலாம்.
- வரிகளைக் கரும்பலகையில் எழுதுகிறார்.

    "மானசத்தின் மணிச்செப்பில் மதுவூறும் பால்யத்தில்
    நிறமுள்ள மஞ்சாடி மணிகளுண்டு
    வான நீலிம கண்டு பெற்று பெருகாத போயரென்
    மயில்பீலித் துண்டு உண்டு மசித்தண்டுண்டு"

- பாவனையோடு பாடுவதற்காக வரிகளின் கருத்தைச் சுருக்கிக் கூறலாம்.
- ஆசிரியர் பாடுகிறார்–சுருதியின் பின்னணியில்
- பிறகு சுருதியோடு இணைந்து ஒவ்வொரு வரியாகப் பாடிக்கொடுக்கிறார்.
- மாணவர்களும் சேர்ந்து பாடுகின்றனர்.
- நான்கோ ஐந்தோ மாணவர்களைத் (நன்றாகப் பாடுபவர்) தேர்ந்தெடுத்து அவர்களைக் குழுத்தலைவராக்கி அவர்களின் தலைமையில் பாடப் பயிற்சி கொடுக்கப்படுகிறது.
- ஒவ்வொரு குழுவும் வெளியிடுகிறது.
- சுருதி, தாளம் இவைகளை ஆசிரியர் மதிப்பிடலாம்.
- சுருதியைப் பயன்படுத்தியுள்ள பாடலைக் குறித்தும், பாடலிலுள்ள சுருதி சேர்க்கையைக் குறித்தும் கேள்விகள் கேட்கலாம்.
    - சுருதியோடு இணைந்து பாடும்போது பாட்டு சிறப்பாக உள்ளதா?
    - இரசிக்கும் வித்ததில் உள்ளதா?
- மாணவர்களின் பிரதிபலிப்பை ஆசிரியர் TM இல் குறிக்கிறார்.
- இந்தப்பாடலை குழுக்களாக்கி சுருதியோடு கூடி பாட வைக்கிறார்.
- ஒவ்வொரு குழுவின் பாடலையும் அடுத்த குழு மதிப்பிடுகிறது.
    - சரியான சுருதியிலா பாடினார்கள்?
    - எல்லா பகுதிகளும் சுருதி சேர்ந்து பாடப்பட்டதா?
    - பாடல் சிறப்பாக இருந்ததா?

*செயல்பாடு –2*

- முன்னரே தயாரித்ததும் பழக்கத்திலுள்ளதுமான சிறிய இசைக்கருவிகளைப் பயன்படுத்தி பாடுதல்.
- சுருதி சேர்ந்து பாடிப்படித்த பாட்டு சிறிய இசைக்கவிகளின் பின்னணியோடு பாடுதல்.
- சிறிய இசைக்கருவிகள் கைமணி, கப்பாஸ் முன்னரே வகுப்பில் தயாரித்த இசைக்கருவிகள்.
- குறுந்தட்டு இருக்குமெனில் வேறுசில இசைக்கருவிகளின் படங்களைக் காண் பித்து அறிமுகப்படுத்தலாம்.

*இசைக்கருவிகளைப் பயன்படுத்தும் போது கவனிக்க வேண்டியவை அறிவுரைகள்.*

- பாடலின் தாளத்தோடு இணைந்து பயன்படுத்துதல்.
- பாடல் தெளிவாக கேட்கின்ற விதத்தில் கருவிகளின் ஒலியைக் கட்டுப்படுத்தி வாசித்தல்.
- குழந்தைகளை இரு குழுக்களாக்கிப் பயிற்சிக்குத் தயாராக்குதல்.
- பாடும்குழு/ இசைக்குழு
- இவர்களின் பயிற்சிக்கு நேரம் கொடுக்க வேண்டும்.
- பயிற்ச்சிக்கிடையில் ஆசிரியர் பங்குகொள்ளுதல்– உதவிசெய்தல் வேண்டும்.
- ஆசிரியர் பங்குபெற வேண்டிய சூழ்நிலைகள்.
  - இராகத்தில் மாற்றம் ஏற்படும்போது.
  - தாளக்குறைவு உருவாகும் போது.
  - சுருதிக்குறைவு ஏற்படும்போது.
  - கருவிகளைப் பயன்படுத்தும் போது.
- பயிற்சி எடுத்த பாடல்கள்– வெளியிடுதல். ஆசிரியர் மதிப்பிடுகிறார். அத்து டன் மாணவர்கள் சுயமாக மதிப்பிடுகின்றனர்.

## மதிப்பீடு.

- சுருதியை அறிந்து கொள்ளுதல்.
- சுருதி சேர்த்துப் பாடுதல்.
- இசைக்கருவிகளோடு பாடுதல்.
- இசைக்கருவிகளை கையாளுவதற்கான திறன்.
- ஒருங்கிணைந்த சுருதி.

## ஒருங்கிணைத்தல்.

எந்த ஒரு பாடலும் முழுமை அடைவது என்பது சுருதி சேர்த்துப் பாடுவதாலா கும். பின்னணி இசை இல்லையெனினும் சுருதி சேர்த்து பாடுவதன் தனித்தன்மை சிறந்ததாகும். இப்படிப்பட்ட பாடலுடன் இசைக்கருவிகளும் இணையும் போது பாடல் சிறப்பாகவும் முழுமையான முறையிலும் அமைகிறது.

# அலகு – 3

## முன்னுரை.

நாட்டின் சங்கீத கலாச்சாரத்தின் உண்மையான வெளிப்படலே நாட்டுப்புறபாடல்கள். நாடும், நாட்டுமக்களும், விழாக்களும், அனுபவங்களும் பாட்டின் வடிவத்தில் முற்கால தலைமுறைகளுக்கு வாய்மொழியாகப் பகிர்ந்து கொடுத்து கடந்து கடந்து செல்கின்ற மகான்கள் நமக்காக பாட்டுக் கலாச்சாரத்தின் பெரிய சேகரிப்பைத் தந்தனர். எளிமையான இராகமும், சிறப்பான தாள அசைவுகளும் ஒன்றினைந்து உருவாகின்ற பாவனை சிறப்பானதாகும், சிறப்புகளின் கலவறையே நாட்டுப்புறப்பாடல்கள், கருத்துச்சிறப்பு, சிறப்பான கருவிகள், சிறப்பான தாளங்கள் இவையெல்லாம் இப்பாடலின் கிளைகளாகும். சிறப்பான வாய்மொழிச் சிந்துக்களை ஒன்றிணைத்துப் பாடலுக்கு இனிமை கொடுத்து இந்த பாட்டுக்களை நமது முன்னில் சில அனுபவங்கள்/சடங்குகள்/விழாக்கள் வழி வேறொரு உலகிற்கே கொண்டு செய்கின்றனர். நாட்டுப்புறபாட்டின் சிறப்பை அறிந்து கொள்வதர்கான முயற்சியே இவ்வலகின் நோக்கமாகும்.

## கற்றல் அடைவுகள்.

வேறுபட்ட நாட்டுப்புறப் பாடல்களையும் வாய்மொழிச் சிந்துவையும் தனிச்சிறப்போடு பாடுகின்றனர்.

## கருத்து, திறன்.

- வேறுபட்ட தாளத்திலும், பாவனையிலும் நாட்டுப்புறப்பாடல்கள் உண்டு.
- நாட்டுப்புற பாடல்களுக்கு என்றே ஒரு பாட்டு முறையுண்டு.
- ஒவ்வொரு பகுதியிலும் அவருக்கென்ற பாட்டு முறை உண்டு..
- தாள அறிவு உருவாக வாய்மொழிச் சிந்து உதவும்.
- வட்டார இசையோடு கூடியுள்ள பாடல்.

## செயல்முறை

- வேறுபட்ட நாட்டுப்புறப் பாடல்களை வெளியிடுதல்.
- நாட்டுப்புறப் பாடல்களைச் சேகரித்தல், வேறுபடுத்துதல் (வட்டாரம், தொழில்)
- சேகரித்த பாடல்களைக் குழுவாக வெளியிடுதல்.
- பாடலுடன் வாய்மொழிச் சிந்துவும் சேர்ந்து பாடுதல்.
- நாட்டுப் புறப்பாட்டைக் குறித்துக் கலந்துரையாடல்.

## மதிப்பீடு

- வெளியிடுதலையும், சேகரித்தலையும் மதிப்பிடுகின்றனர்.
- (மாணவர்கள் குறிப்பேட்டில் எழுதிய நாட்டுப்புறப்பாடலிகளும் வாய்மொழிச் சிந்துவும் மதிப்பிடப்படுகிறது.)
- திறன்களை மதிப்பிட வினாடி வினா நடத்தப்படுகிறது.

### உள்ளடக்கம்.

நாட்டுப்புறப் பாட்டிலிலுள்ள இராக தாள சிறப்புகள், பாடும் திறன், வட்டார நாட்டுப்புறப்பாடல்கள், என்பவை இந்த இந்த அலகில் எடுத்துரைக்கப்படுகின்றன. தாள அறிவும், குழுவாகப்பாடும் அறிவும் உருவாக பலவித வாய்மொழிச் சிந்துகளும் இந்த பாடப்பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளன.

### கற்றல் செயல்பாடுகள்.

***செயல்பாடு-1***

- கதை கூறுதல்.

  *கல்யாண வயது கழிந்த ஒரு பெண்மனி, அவளுடைய வாழ்க்கையில் எதிர்பார்ப்பதற்கு எதுவுமில்லை, வீடு இல்லை, தங்கம், பணம், குடும்ப பாரம்பரியம் எதுவுமில்லை எனினும் அவள் எதிர்பார்க்கிறாள்,. என்றாவது ஒரு நாள் தன்னைக் கட்டுவதற்கு ஒருவர் வருவாரென்று. அவளுடைய கனவிற்கு தோழிகள் உயிர்கொடுக்கின்றனர். எதிர்பார்ப்பிற்கு மேன்மையேறுகிறது.*

- இந்த கதைச் சூழலை எடுத்துரைக்கின்ற ஒரு நாட்டுப்புற பாடலை மாணவர்களிடம் கூறப்படுகிறது.

  *“உன்னைக் கான என்னை விட....*
  *அழகாதோன்றும் சின்னப்பெண்ணே............”*

- இராகத்தில் சாதாரண மனிதன் வாழ்க்கை அனுபவங்களை எடுத்துரைக்கும் மூன்று பாடல்களைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

  எ. கா-

  *“நேரம் வெளுத்தில்லே....*
  *செக்கலுவிட்டில்லா...*
  *காட்டில் சிலந்தி வலவெச்சில்லா...”*

  *“மழபெய்யும்போளே நம்முடெ*
  *குஞ்சுகளங்களை ஆடி...”*

  *“நேரம்போய் நேரம் போய்*
  *பூக்காதெ மரபற்றி...”*

- (ஆசிரியருக்கு நன்றாக தெரிந்த எந்த நாட்டுப்புறப் பாடலையும் சார்டில் எழுதியிடலாம்.).
- இவைகளைப் பாடுவதற்கான வாய்ப்பு கொடுக்க வேண்டும்.
- அறிமுகமில்லாத பாடல்களைப் பாடுவதற்குப் பயிற்சி எடுக்கின்றனர்.
- பாடிய பாடல்களின் கருத்து பகுப்பாய்வு.
- இராகத்தைக் குறித்துள்ள கலந்துரையாடல், பாடுதல்.

***செயல்பாடு -2***

- வேளாண்மை, கேளிக்கை, விழாக்கள்,பழக்க வழக்கங்கள், என்று பெயர் கொடுத்து குழந்தைகளை நான்கு குழுக்களாக்கவும். வேளாண்மை, கேளிக்கை, விழாக்கள்,

பழக்க வழக்கங்கள் என்ற வரிசையில் கரும்பலகையில் எழுதப்படுகிறது. மாணவர்கள் ஒவ்வொருவராக ஒரு எண் வரிசையில் வாசித்த வார்த்தையின் அடிப்படையில் அதனோடு தொடர்புடைய நாட்டுப்புறப் பாடல்களைச் சேகரிப்பதற்கும், தேர்ந்தெடுக்கப்பட்ட சிலவற்றை பாடுவதற்கும் அறிவுரை கொடுக்கப்படுகிறது.

- குழுக்கள் கண்டடைந்த பாட்டுகளைக் குழுத்தலைவர் ஒருங்கிணைக்கிறார். வெளி யிடுகிறார்.
- சேகரித்த நாட்டுப்புறப்பாடல்களில் தாளச்சிறப்பும், இராகச்சிறப்பும் உள்ள சில பாடல்களின் நான்கு வரி வீதம் பாடுகின்றனர்.
- ஒவ்வொரு குழு வெளியிடுவதை மற்றகுழுக்களும் ஆசிரியரும் மதிப்பிடுகின்ற னர்.
- குழுக்கள் தேர்ந்தெடுத்த நாடுப்புறப்பாடல்களின் வரலாறு, தாளம் அதன் இரா கம் என்பவை குறித்து சிறிய கேள்விகள் கேட்கப்படுகிறது.
  - நாட்டுப்புறப்பாடல்கள் தோன்றியது எவ்வாறு?
  - நாட்டுப்புறப்பாடலின் தனிச்சிறப்புகள் யாவை?
  - இராகத்திலுள்ள எளிமை நன்கு இரசிக்க முடியுமா?
  - தனது வட்டாரத்தில் பாடிக்கேட்ட நாட்டுப்புறப்பாடல்கள் உள்ளனவா?
  - நாட்டுப்புறப்பாடல்களின் உட்கருத்து என்ன?
  - தானிச்சிறப்புகள் உள்ளனவா?
  - இசை ரீதியிலான சிக்கல்கள் உள்ளனவா?
- பதில்களைத் தனித்தனியாகக் கூறுகின்றனர். மாணவர்களின் பதில்களை உட் கொண்டு விளக்குதல்.
  - வாய்மொழியாகப் பகிர்ந்து கிடைத்ததே நாட்டுப்புறப்பாடல்கள்.
  - நாட்டிலுள்ள பாட்டுகள்/நாட்டுப்புறம், எளிமையானதாகும்.
  - சாதாரண மக்களின் அனுபவங்களே பாட்டின் உட்கருத்தாகும்.
  - நாட்டுப்புறப்பாட்டுக்கு பின்னணி கொடுக்கும் வண்ணம் நாட்டுப்புற இசைக்க ருவிகளும் உண்டு.
  - ஒவ்வொரு மக்கள் பிரிவிற்கும் அவர்களுடைதான நாட்டுப்புறப் பழக்கவ ழக்கங்களும்/பாட்டுக்களும் உண்டு.
  - இராகத்திலும், தாளத்திலும் உள்ள எளிமை இன்பத்தையும், பாவனையை யும்.............................................................................
  - எல்லாவருக்கும் பின்பற்றவும், பாடவும் முடியும்.
  - நாட்டின் தனித்தனமை/ கலாச்சாரம் போன்றவையை பல பாட்டுகளிலிருந்து புரிந்து கொள்ளமுடியும்.
- புதிய சில நாட்டுப்புறப்பாடல்களைத் தேர்ந்தெடுக்கவும்.(பாடப்புத்தகத்திலிருந்தோ/ நாட்டின் பழக்கத்தில் உள்ளதோ)
- அவைகளை குழுக்களாகவோ, தனியாகவோ பாடுகின்றனர்.
- இந்தப் பாடலுக்கு ஏற்ற வாய்மொழிச் சிந்துக்களைச் சேர்க்கின்றனர்.

*“என்ட சக்கீ.... அனியத்தீ....*
*சக்கி கைநடி காயலில் போவாட்டியே...*
*தக தெய்தக தெய்தாரோ தக*
*தானாதினந்தக தெய்தாரோ...*
*அத்திந்தோ திந்தாரோ தக*
*திந்தகத்தாரா...”*

- ஒவ்வொரு நாட்டின் தனித்தன்மையும், கலாச்சாரத்தையும் எடுத்துக்காட்டுகின்ற நாட்டுப்புறப் பாட்டுக்களை சேகரித்து மலர் தயாரிக்கலாம்.

### மதிப்பிடுதல்.

- பாடல்களைக் கண்டறிதல்.
- பாடுதல்.
- வாய்மொழிச் சிந்துவோடுள்ள பாடல்.
- தாள அறிவு.
- தனித்தன்மை.
- சூழ்நிலைக்கேற்பப் பாடலைத் தேர்ந்தெடுத்தல்.

### ஒருங்கிணைத்தல்.

தலைமுறைகளாக நம்மிடம் வாய்மொழியாக கைமாறிவரும் இப்படிப்பட்ட பாட்டுக்கள் ஒரு காலத்திலுள்ள மக்களின் வாழ்க்கை முறையைக் குறித்தும், அனுபவங்களைக் குறித்தும் எடுத்துக் காட்டுகிறது. இராகங்கள் எளிமையானாலும் பாவனை மிகக் கடினமானதாகும்.

## அலகு – 4

### முன்னுரை.

இசையின் இரசனை என்பது மொழிக்கு அப்பாற்பட்டது ஆகும். வேற்றுமொழிப் பாடல்களின் மொழி அறியாது இராகத்தின் இனிமையை மட்டும் கேட்டு இரசிப்பவர்கள் உண்டு. எனினும் கருத்தை புரிந்துகொண்டு இரசிப்பதன் மேன்மை தனித்தன்மை வாய்ந்ததாகும். தேசபக்திப்பாடல்களுக்கு இந்திய வரலாற்றில் என்றும் முக்கிய இடமுண்டு. எல்லா மொழிகளிலும் உயர்வான ஏராளம் தேசபக்திப் பாடல்களை உருவாக்கப்பட்டு அவைகளெல்லாம் கால, தேசிய வேறுபாடின்றி வெளியிடவும் செய்யப்பட்டுள்ளது. தேசபக்தி நிறைந்திருப்பதும், இராகங்களாலும், பொருளுள்ள வரிகளினாலும், சிறந்தாகும் இப்பாடல்கள். தேசத்தின் விலைமதிப்பற்ற சொத்தாக தேசபக்திப் பாடல்களை வகுப்பில் அறிமுகப்படுத்தவும். அதன் வழி தேசபக்திபாடலின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளவும் செய்வது இன்றைய தலைமுறையின் கடமையாகும்.

### கற்றல் அடைவுகள்.

பல மொழிகளிலுள்ள தேசபக்திப் பாடல்களைப் பாடுகின்றனர். அவைகளை ஒன்றிணைந்து பாடுகின்றனர்.

### கருத்து, திறன்.

- பலமொழிகளிலுள்ள தேசபக்திப் பாடல்கள் உண்டு.
- கருத்திற்கேற்ற இராக-தாள சிறப்பு
- பலமொழிப் பாடல்களின் கானமாலிகா

## செயல்முறை.

- தேசபக்திப் பாடல்களை வெளியிடுதல்.
- பாட்டின் தாளம், இராகம் மாற்றி வெளியிடுதல்.
- படித்த பல மொழிப்பாடல்களைக் கோர்த்து பாவனையோடு பாடுதல்.

## மதிப்பிடுதல்.

- பாடுதல்.
- இராகத்தை மதிப்பிடுதல், இராகம் கொடுப்பதை மதிப்பிடுதல்.
- கலந்துரையாடலில் பங்களிப்பு.

## உள்ளடக்கம்.

பலமொழி தேசபக்திபாடல்கள், கருத்தை புரிந்து பாடுவது எவ்வாறு, தேவையைப் புரிந்து கொள்ளுதல், பலமொழி தேசபக்திபாடல்களைப் பயன்படுத்தி 'பாமாலை' உரு வாக்குதல், இவையனைத்தும் இவ்வுலகின் உள்ளடக்கமாகும். பழக்கமுள்ள வரிக ளுக்குப் புதிய இராகத்தைக் கண்டறிதல். பாடிப்பயிற்சி எடுத்த பாடல்களைக் குழு உணர்வுடன் சுருதி சேர்த்துப் பாடுதல் என்பவை இவ்வலகில் உண்டு.

## கற்றல் செயல்பாடுகள்

***செயல்முறை -1***

- கீழே கொடுக்கப்பட்டுள் வரிகளை எழுதிய சார்ட் வகுப்பில் கொண்பிக்கவும்.

  *''நாநாபாஷைகள் அமிர்தம் சொரியும்*  
  *நாவும் புஞ்சிரியும்*  
  *நாநா தேசகாருடை நாகா*  
  *வேஷத்தின்னொளியும்.''*

- வினாக்கள்–
  - ♦ இவ்வரிகளின் கருத்தென்ன?
  - ♦ இவ்வரிகளை எந்தப் பாட்டுக்களில் உட்படுத்தலாம்?
  - ♦ இந்தக் கருத்தை உணர்த்தும் வேறு வரிகளைக் கண்டுபிடிக்கலாமா?

    எ.கா:–

    1. "மொழி வேடம் ஜாதி மதங்கள்  
    வேற்றுமையெனினும் ஒரே குலம்  
    ஓர் தாய் பெற்றவர் நாமெல்லாம்  
    ஓர் சிப்பியின் முத்துக்கள் நாம்"

    2. "ஹிந் தேச் க் நிவசி  
    ஸபிஜன் ஏக் ஹே  
    ரங் ரூப் வேஷ் பாஷா  
    ஷாகி அனக் ஹே..."

- மாணவர்கள் பதில்கள் வாய்மொழியாகக் கூறுவதிலிருந்து–
  - ♦ இந்தியாவை குறித்துள்ள பாடல்.

- தேசபக்திப் பாடல்.
- மொழிகள் வேறெனினும் மதமொன்று.

- மாணவர்கள் கண்டறிந்த சமமான வரிகளை அவர்களே பாடுகின்றனர். .
- தேசபக்திப் பாடலின் சிறப்பை ஆராயும் கேள்விகள் மாணவர்களோடு கேட்கப் படுகின்றன.
  - தேசபக்தி பாடலின் கருத்தென்ன?
  - வேறு மொழியிலும் இதுபோன்ற பாடல்கள் உருவாக்கப்பட்டுள்ளதா?
  - இதுபோன்ற பாடல்களுக்கு என்னென்ன தனித்தன்மைகள் உள்ளன?
  - இதனைப் பாடுவதற்கான தேவை என்ன?
- பதில்களைத் தெளிவாக எழுதுமாறு கூறப்படுகிறது. எழுதியதை ஒவ்வொருவ ராக வெளியிடுகின்றனர். மாணவர்களின் குறிப்புகளின் அடிப்படையில் இதற்கு கூடுதல் தெளிவு கொடுக்கின்ற விளக்கமளிக்கப்படுகிறது.
  - தேசத்தை ஆதரவுடனும், மதிப்புடனும் காண வேண்டும்.
  - இந்தியர் அனைவரும் ஒன்றே என்ற கருத்து.
  - நமது நாட்டைப் பாதுகாக்க வேண்டியதன் தேவையை உணருகிறார்கள்.
  - பலகாலங்களிலுள்ள முக்கியத்துவத்திற்கேற்ப பல மொழிகளிலும் தேசபக்தி பாடல்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
  - தேசபக்தி உருவாகும விதத்திலுள்ள இராகமும், இலக்கியமும் இதன் தனிச் சிறப்பாகும்.
  - நாம் ஒவ்வொருவரும் நமது நாட்டின் பகுதியின் காவல்காரன் என்ற எண் ணத்தை உறுதிப்படுத்த இப்படிப்பட்ட பாட்டினால் முடிகிறது.
- அதிகமான தேசபக்திப் பாடல்களை தெரிந்து கொள்ளுதல்.
- இந்தியா முழுவதும் பழக்கத்திலுள்ள பல மொழிகளிலுள்ள பாடல்களை தேர்ந் தெடுக்கின்றனர். பின்னணி இசையை விளக்குகின்றனர்.
- பாடலாசிரியர்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றனர். அதன் பாடும் முறை கற்பிக் கப் படுகிறது.
  - “ஓடி விளையாடு பாப்பா ( சுப்பிரமணியபாரதி
  - “ஹிந் தேஷ் கே நிவாஷி) (Vinaya chandra Mandgalya)
  - “பாஷயென்னி வேறென்ன....” (நவ்வுகானி சுப்பறாவு)
  - “ஜோதி தொரு...” (இரவிந்திரநாத் தாகூர்.)
- இவைகளை முறையாகப் பாடி படிக்கின்றனர்.
- படித்த பாடல்களை மாணவர்கள் பாடுகின்றனர்.(குழுவாக)
- அதன் இராகம், தாளம், பாடும் முறை இவை மதிப்பிடப்படுகிறது.
- பலமொழிகளிலுள்ள பாடல்களை உட்படுத்தி பாமாலை உருவாக்குதல்.
  - மொழிச்சிறப்பு இருக்க வேண்டும்.
  - இராகச் சிறப்பு.
  - தாளச் சிறப்பு.
  - குழுவிலுள்ளவர்களுக்குப் பாடுவதற்கு முடிகின்ற விதத்தில் உள்ளவை.

- உருவாக்கிய பாமாலையை வெளியிடுதல்.

## செயல்பாடு -2

- தேசபக்தி பாடல்களை கூடுதல் இராகமும், தாளமும் மாற்றி புதிய வடிவில் பாடு தல்.
- பழக்கத்திலுள்ள வரிகள் மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது
  - “இமய மலைமுதல் குமரிவரை....”
  - “ஒளி படைத்த கண்ணினாய்....”
  - “ஜெய ஜெய பாரதம்...”
  - “ஓடி விளையாடு பாப்பா...”
- இவைகளுக்குப் பொருத்தமான இராகமும், தாளமும் கண்டுபிடிக்கக் குழுக்க ளுக்கு நேரம் அனுமதிக்கவும்.
- குழுக்கள் வெளியிடுதல்- மதிப்பிடுதல்.
- கண்டறிந்த இராகத்தில் திருத்தல்கள் தேவையெனில் ஆசிரியர் பங்கு கொள்ள வும்.
- திருத்தல்களின் தேவை-
  - இராகத்திற்கும் வரிகளுக்கும் இடையில் ஒற்றுமையில்லாமல் வரும் போது.
  - இராகத்திற்கு ஏற்ற பாவனை இல்லாமல் வரும்போது.
  - தாளத்தில் தவறு ஏற்படும்போடு.

## மதிப்பீடு.

- இராகத்தை மதிப்பிடல்.
- பாடுதலை மதிப்பிடுதல்.
- பாடுதலின் சிறப்பு.
- பாமாலை மதிப்பிடுதல்.

## ஒருங்கிணைப்பு.

ஒரு நாட்டின் பெருமையும், சக்தியுமான பாட்டின் நிலையே தேசபக்திப் பாடல் கள். இசையின் அடிப்படையிலும், மேம்பட்டிருக்கும் இந்தப் பாடல்கள் நமது தேசிய அன்பிற்கும், நம்பிக்கைக்கும் அதிக சக்தி கொடுக்கின்றன.

# ஏழாம் வகுப்பு

## அலகு – 1

### முன்னுரை.

எல்லாக் கலைகளுடையவும் நிலையான பாவனையே தாளம். தாளமில்லாது இவ்வுலகில் ஒன்றுமில்லை. நேரத்தை நுட்பமாகவும் முறையாகவும் கணக்கிட பயன்படுத்துகின்ற சிறப்புச் செயலே தாளம். இசையில் தாளத்திற்கு முதலிடமுண்டு. பாடலில் சரியான நேர ஒழுங்கு முறையே தாளம். பாரதீய இசைப்பாரம்பரியம் எக்காலத்திலும் தாளத்திற்கே முக்கியத்துவம் கொடுத்திருந்தது. வேறு நாடுகளில் உள்ளதை விட நமது நாட்டின் இசையில் தாளச்சிறப்புகள் அதிகமாக உள்ளது. பாரதீய இசையின் முக்கிய நிலையைத் தென்னிந்திய தாளச்சிறப்புகளின் களஞ்சியமாகும்.........................................................................................................................................................

தாளச்சிறப்புகளைப் பழக்கமான மண்டலங்கள் வழியாக தெரிந்து கொள்ளவும். பயன்படுத்தவும் நமது மாணவர்களைத் தயாராக்கவும் என்ற நோக்கத்துடனே இவ்வலகின் செயல்பாடுகள் முறைப்படுத்தப்பட்டுள்ளன.

### கற்றல் அடைவுகள்.

பல்வேறு தாளத்திலுள்ள பாடல்களைப் பாடுகின்றனர்.

### கருத்து, திறன்.

- வேறுபட்ட தாளங்கள் உண்டு.
- அடிப்படை தாளங்கள் ஏழு.
- தாளத்திற்கு ஐந்து நடைகள் உண்டு.
- ஒவ்வொரு தாளத்திற்கும் ஐந்து பிரிவுகள் உண்டு.
- பாவனை (தாளச்சிறப்பின் பாவனை)

### செயல்முறை.

- பல்வேறு தாளத்திலுள்ள பாட்டுக்களைக் கேட்கின்றனர்.
- தாளத்தை உற்று நோக்குகின்றனர்.
- ஒற்றுமை வேற்றுமைகளை அறிகின்றனர்.
- பல விதத் தாளத்திலுள்ள பாடல்களைக் கண்டறிகின்றனர், பாடுகின்றனர்.

## மதிப்பிடுதல்.

- குறிப்புகளின் அடிப்படையில்.
- தெளிவாகத் தாளத்தை வெளியிடுதல்.
- தாளத்தைப் புரிந்துகொள்வதற்கான திறன்.
- தாளம் பிடித்துப் பாடுவதற்கான திறன்.

## உள்ளடக்கம்.

தாளச்சிறப்புகளைப் புரிந்துகொள்வதற்குப் பழக்கமுள்ள பாடல்களை உட்படுத்தி முறைப்படுத்திய செயல்பாடுகள் அளித்திருப்பது இவ்வுலகின் தனிச்சிறப்பாகும். பல விதத் தாளங்களைக் குறித்தும் அவைகளை பயன்படுத்தும் முறை, இந்த தாளம் பயன் படுத்தும் பல பாடல்கள், தனிச்சிறப்பு என்பவைகளை புரிந்துகொள்ள இந்தப் பாடப் பகுதி உதவுகிறது. தினமும் நாம் கேட்கும் ஒவ்வொரு பாட்டிற்கும் பலதரப்பட்ட தாளங் கள் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை உற்றுநோக்கி அறிந்து கொள்கின்றனர். தாளத் தின் வேறுபாட்டிற்கேற்ப பாடலின் பாவனையிலும் வேறுபாடு உருவாகிறது என்பதை இப்பாடப்பகுதியின் செயல்பாடுகளின் வழி தெளிவாகிறது.

## கற்றல் செயல்பாடுகள்

***செயல்பாடு-1***

- சிலபாட்டுகள் எழுதிய சார்ட் வெளியிடப்படுகிறது, அவற்றைப் பலமுறை வாசித்துப் பழக்கப்படுவதற்குக் கூறப்படுகிறது. அவ்வாறு குழந்தைகளுக்குப் பழக்கமான பழமையும், புதுமையுமான சினிமாபாடல்கள், மெல்லிசைப்பாடல் கள், நாடகப்பாடல்கள் போன்றவையை ICT-ன் உதவியோடு கேட்கின்றனர். அதனுடன் கேட்கின்ற பாடலுடன் தொடர்புடைய தெரிகின்ற பொருட்களையும் குறிப்பிடல் வேண்டும்
- ஆசிரியர் கொடுக்க வேண்டிய பாடல்கள்.
    1. “அடி பூங்குயிலே கேழு...”
    2. “சின்னச் சின்ன ரோஜாப் பூவே”
    3. “குயிலே குயிலே பூங்குயிலே”
    4. “பொண்ணு பொண்ணு பொண்ணு...”
    5. “புதிய பூவிது பூத்தது...”
    6. “பிள்ளை நில இறண்டும் வெள்ளை நிலா...”
    7. “நெஞ்சிலோர் நிம்மதி”
    8. “பூவே பூச்சூட வா”
    9. “செந்தாழம் பூவில் வந்தாடும்”
    10. “அம்மா அம்மா எந்தன் ஆருயிரே...”
- மாணவர்கள் நோட்டுப்புத்தகத்தில் எழுதியவற்றை வெளியிட வாய்ப்பு கொடுக்க வேண்டும். (சுழற்சியாக வெளியிடுதல்)
- மாணவர்கள் இவ்வாறு எழுதலாம்.

- சினிமாப் பாடல்கள்.
- பாடகர்களின் பெயர்கள்.
- நாடகப்பாட்டுகள்.
- சினிமாவின் பெயர்கள்.
- பொருத்தமான இராகங்கள்.
- தாளத்தின் ஒற்றுமை, வேற்றுமை.

- கேட்ட பாடல்களைக் குழுவாகப் பாடுகின்றனர். ( முழுமையாக வேண்டுமென்றில்லை, பல்லவி போதும்.) அதே போன்ற பாடல்களைக் கண்டுபிடித்திருந்தால் பாடுவதற்கு வாய்ப்பு கொடுக்கலாம். அதன் பிறகு மாணவர்களை ஐந்து குழுக் கலாக்கலாம். முன்னரே கேட்ட பாடலுடன் தொடர்பு கொண்ட பெயர்களைக் குழுக்களுக்கு கொடுக்கலாம்.

*1. பூங்குயில், 2. பிள்ளை நிலா, 3. செந்தாழம் பூ, 4. ரோஜா, 5. அம்மா*

- இந்த ஐந்து குழுக்களும் சினிமா பாட்டுக்களும், மெல்லிசைப்பாட்டுக்களும் உட்படுத்தி பாட்டுக்குப்பாட்டு போட்டி நடத்தக் கூறவும். ஒவ்வொரு குழு பாடும் பாடலையும் குழுவில் ஒருவர் எழுதிக்கொண்டிருக்க வேண்டும். பாடல்களை கைதட்டிப்பாடுவதற்குக் கூறவும். 10 நிமிடம் இந்த போட்டி தொடர்கிறது. ஒரு இடைவேளை கொடுத்து ஆசிரியர் சில கேள்விகளை கேட்கிறார்.
  - ஒவ்வொரு குழுவும் எத்தனை பாடல்கள் பாடியுள்ளீர்கள் எனத்தெரியுமா?
  - பாட்டுக்குப்பாட்டு பாடும் போது கை தட்டினீர்கள் அல்லவா? ஒவ்வொரு பாட்டின் வேகத்திற்கும் வித்தியாசம் இருந்ததா?
  - பாட்டின் தாள வேறுபாட்டை கவனித்தீர்களா?
- மாணவர்களிடம் இருந்து எதிர்பார்க்கும் பதில்கள்.
  - பாட்டின் வேகத்திற்கு வேறுபாடிருந்தது. அதற்கு பொருத்தமான தாளம் பிடிக் கப்பட்டது.
  - பல தாளத்திலுள்ள பாடல்கள் பாடப்பட்டன.
- முதலில் கேட்ட பாடல்கள் ஒவ்வொன்றாக மாணவர்களைக் கொண்டு குழுவாகப் பாடப்படுகிறது. எண்களால் எண்ணி கை தட்டுமாறு கூறப்படுகிறது. ஒரு குழுபாடும் போது வேறு குழு கை தட்டுகின்றனர். எண்களை எண்ணித் தாளத்தின் எண்ணம் அடையாளப்படுத்தப்படுகிறது. எண்ணின் அடிப்படையில் மாண வர்கள் புரிந்து கொள்ள வேண்டிய அறிவுகளை ஆசிரியர் விளக்குகிறார்.

  - 1.மாரிவில்லின் தேன்மலரே<br>II1,2,3I1,2,3Iதகிட்டIதகிட்ட<br>(மூன்று எண்ணுதல்) = திசரக்தி
  - 2. லாலிலாலியோ ... –<br>II1,2,3,4I1,2,3,4IதகதிமிIதகதிமி<br>(நாலு எண்ணுதல்) = சதுரஸ்தி
  - 3. இல்லிமுளம் காடுகளில்<br>II1,2,3I1,2,3IதகிடIதகிட<br>(மூன்று எண்ணுதல்) = திசரகதி
  - 4. சூர்யகாந்தி...–<br>I1,2,3,4I1,2,3,4IதகதிமிIதகதிமி

(நான்கு எண்ணுதல்) = சதுராகிருதி

- 5. தளிரிட்ட கினாக்கள்
  I1,2,3, 1,2,3,4I1,2,3, 1,2,3,4IதகிடதகநிதிIதகடதகநிதி
  (ஏழு எண்ணுதல்) = மிஸ்ரகதி
- 6. பூமுகவாதில்கள்
  I1,2,3I1,2,3I1,2,3Iதகிட்டIதகிட்டIதகிட்ட
  (மூன்று எண்ணுதல்) =திஸ்ரகதி
- 7. சௌபர்ணிகமிர்த-
  II1,2,1,2,3,4I1,2,1,2,3,4Iதகதகிட்டIதகதகிட்ட
  (ஐந்து எண்ணுதல்) = வண்டிகதி
- 8. பதினேழின்ற-
  II1,2,3,4I1,2,3,4I1,2,3,4IIதகதிமிIதகதிமி
  (நான்கு எண்ணுதல்) = சதுரஸ்ரகதி
- 9. காயலரிகத்து
  II 1, 2, 3,1, 2, 3, 4 I 1, 2, 3, 1, 2, 3, 4 II தகிடதக்கதிமி I
  (ஏழு எண்ணுதல்) = மிஸ்ரகதி
- 10. பின்னெயும் பின்னெயும்
  II1,2,1,2,3,4I1,2,1,2,3,4IIதகதகிட
  (ஐந்து எண்ணுதல்) = கண்டகதி

- முதலில் பாடிய 10 பாட்டுகளை பரிசோதிக்கும் போது எண்ணல்கள் நான்க விதத்தில் வருகின்றது.
  - II1,2,3II
  - II1,2,3,4II
  - II1,2,31,2,3,4II
  - II1,2,1,2,3II

> **நடை**
>
> *தாள பிரயோகத்தின் அசையும் நிலையை குறிப்பிடுவதே நடை*

- 3 எண்ணி வரும் கதியை/ நடயெ- திஸ்ர கதி/ நட எனக்கூறலாம்.
- 4 எண்ணி வரும் கதியை / நடையெ சதுரகதி/ நடை எனக்கூறலாம்
- 7 எண்ணி வரும் கதியை / நடையெ மிஸ்ரகதி/ நடை எனக்கூறலாம். (3+4= திஸ்ரம்+ சதுரசம்)
- 5 எண்ணி வரும் கதியை / நடையெ கண்டடை எனக்கூறலாம். (2+3= 5, கண் டநட)
- மெல்லிசை துறையை அபூர்வமாக மட்டும் காணும் வேறொரு நடையுமுண்டு
  II1,2,3,4+1,2+1,2,3II= IIதகதிமி+தக+தகிடII= 9 எண்ணும்-சங்கீர்ன நடை
- இவ்வாறு நடைகளும் ஜதியும் தாளத்தில் 5 வீதமுண்டு
- என்றால் நீங்கள் நடத்திய அந்தாகஷரியில் பாட்டுகளை எண்கள் எண்ணி நடைகள் கூறலாமா?
- மாணவர்கள் ஒரு குழு பாடுகிறது. பிற குழுக்கள் எண்ணம் மனதிலாக்கி கரும்

பலகையில் எழுதுகின்றனர். பாடிய குழு எண்ணம் வைத்து சரியான முறையில் வெளியிடுகின்றனர்.

***தொடர்செயல்பாடுகள்***

- புதிதாக மாணவர்கள் கேட்டுக்கொண்டிருந்த பாட்டுக்களை நோட்டுப்புத்தகத்தில் எழுதி எண்ணம் பார்த்து நடைகளைச் சரியாக எழுதக்கூறப்படுகிறது.
- வாரத்தின் 5 செயல்தினங்களில் வகுப்பிலுள்ள கலைக்கல்வி சுவரில் பல நடையிலுள்ள பாட்டுக்களைத் தொடர்ந்து வரும் 5 வாரங்களில் எழுதிச்சேர்க்க கூறப்படுகிறது.

## மதிப்பீடு

- குறிப்புகள் ( சரியாக)
- தெளிவான தாளம்.
- தாளத்தைப் புரிந்து கொள்வதற்கான திறன்.
- தாளத்திற்கேற்பப் பாடுவதற்கான திறன்.

## ஒருங்கிணைப்பு.

இசையின் அடிப்படை நிலைகளில் மிக முக்கியமான ஒன்றே தாளம். ஒரு தாளத்தில் பல நடைகள் உண்டு. தாளகதிகள்/நடைகள் பாட்டினுடைய பாவனையும். லயத்தையும் பாதிக்கிறது. பல கருத்துக்களை உட்கொள்கின்ற பாட்டுக்கள் இனிமையாக மாற சரியான தாளம் வேண்டும்.

# அலகு – 2

## முன்னுரை

மூன்றாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான பழமையார்ந்த அரிதான இசைச்சிறப்பை கொண்டவர்கள் பாரதியர்கள். தனிச்சிறப்பும் அரிதுமான பாரதிய இசையின் வரலாற்றைப் பார்க்கும் போது பிற நாட்டு ஏகாதிபத்தியத்துடையவும், போராட்டங்களுடையவும் பலனாக சில மாற்றங்களும், வேறுபாடுதல்களும் நமது இசை பாரம்பரியத்தில் ஏற்பட்டுள்ளன என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. இவ்வாறு உருவாக்கப்பட்டதே பாரதத்தின் முக்கியான இரண்டு இசைகளான ஹிந்துஸ்தானி இசையும். தென்னிந்திய இசையும். பழமையான பாரதிய இசை பாரம்பரியத்தை அதிகமாக உட்கொண்டுள்ள கர்நாடக இசைப்பிரிவு தென் இந்தியாவின் இசை பாரம்பரியத்தின் சிறப்பு அம்சங்களாகும். உலகம் முழுவதும் ஆச்சரியத்தோடு உற்றுப்பார்க்கின்ற இந்தக் பாரம்பரியத்தின் விரிவான வரலாற்று அடிப்படையான சில படிகளைப் புரிந்துகொள்வவதற்குத் தகுந்த பாடப்பகுதியின் வழி செல்லும் எந்த ஒரு இசை ஆர்வராலும் முடியும். துவக்கம், வரலாறு, முக்கிய இசை சம்பவகதைகள் இவைஎல்லாம் இந்த அலகில் விவாதிக்கப்பட்டுள்ளது

கர்நாடக இசையின் பெருமையை எடுத்துக் காட்டுகின்ற இந்தப் பாடப்பகுதி நமது இசைப்பாரம்பரியத்தின் ஒளியை மாணவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்க உதவும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

## கற்றல் அடைவுகள்

- கர்நாடக இசையோடு தொடர்புடைய கதைகள், வரலாற்று நிகழ்ச்சிகள் என்பவை களைப் புரிந்து கொள்கின்றனர். இசையின் அடிப்படைப் பாடல்களாகிய சப்தஸ் வரங்கள் முதல் அலங்காரம் வரை உள்ளவற்றில் சிலவற்றைப் பாடுகின்றனர்.

## கருத்து, திறன்.

- கர்நாடக இசை வரலாறு, பாரம்பரியம்.
- பாடும் திறம்.
- இசைக் கதைகள்.
- அடிப்படை ஸ்வரங்கள்.
- சுருதியை அறியவும் ஸ்வரஸ்தானங்களை அறியவும் ஏராளம் வரிகள் உண்டு.
- பலதரப்பட்ட தாளத்திலுள்ள வரிகள்
- பல வேகத்தில் வரிகள் (தாளவேகம்.........)
- வரிசையாக பாடுகின்றனர்.

## செயல்முறை.

- இசையின் துவக்கம், பாரம்பரியம் இவைகளோடு தொடர்புள்ள நூல்கள், குறுந் தட்டுகள் என்பவைகளைப் பரிசோதனை செய்கின்றனர். விபரங்களை சேகரிக் கின்றனர்.
- ஸ்வரங்களை சுருதியோடு பாடுகின்றனர்.
- வரிசையாக பாடுகின்றனர், கேட்கின்றனர்.
- ஸ்வரஸ்தானங்களைக் குறித்து விளக்கப்படுகிறது. கலந்துரையாடல்
- பாடுதல்.

## மதிப்பீடு.

- சிறு வினாக்கள்.
- பிரதிபலிப்பை மதிப்பிடுதல்.
- பாடுதலை மதிப்பிடுதல்.
- இசைகளை குறித்துள்ள திறனை மதிப்பிடுதல்.

## உள்ளடக்கம்.

கர்நாடக இசையின் வரலாறு, துவக்கம், முறை பாரம்பரியம் என்பவையைக் குறித் துள்ள விளக்கங்கள் இந்த அலகில் உட்படுத்தப்பட்டுள்ளது. இதன் வழி கர்நாடக இசை பாரம்பரியத்தைக் குறித்துள்ள ஏறக்குறைய தெளிவு மாணவர்களிடம் உரு வாக்க முடியும்.

## கற்றல் செயல்பாடுகள்

*செயல்பாடு 1*

- முக்கிய நாட்டுப்புறப் பாடலைப் பாடுதல் சி. டி கேட்டல்/ ஆசிரியர் பாடிக் கொடுத்து குழந்தைகள் ஏற்றுப்பாடுதல்

*வந்னுநிச்சே நின்னுதிச்சே ஆதித்தயன் பகவானும்*
*இந்நெந்த பகவானும் வன்னுதிக்கான் தாமசிச்சே.*
*மயிலுகேறா மாமலயில் மயிலுகளி கண்டு தாமசிச்சே*
*காளகேறா மாமலயில் காளகளி கண்டு தாமசிச்சே*
*ஆடுகேறா மாமலையில் ஆடுகளி கண்டு தாமசிச்சே*
*கொக்கு கேறா மாமலையில் கொக்கு களிகண்டு தாமசிச்சே*
*குயிலு கேறா மாமலையில் குயிலு களிகண்டு தாமசிச்சே*
*குதிர கேறா மாமலையில் குதிரை களிகண்டு தாமசிச்சே*
*ஆன கேறா மாமலையில் ஆன களிகண்டு தாமசிச்சே.*
*ஹிஸ் கைனஸ் அப்துல்லாவின் பாடலை கேட்கின்றனர்.*
*தேவசபாதலம் ராகில மாகுவான்*
*நாதமயூகமே சுவாகதம்..*
*....................................................*
*மயூரநாதம் சுரமாய் விடரும் ஷட்ஜம் அநாகதமந்தரம்.*
*....................................................*
*ரிஷப சுரங்களாய் பொருஷமேகும் சிவவாகனமே நந்தி....*
*சந்தோஷகாரஸாரம் அனுரவ காந்தாரம்*
*....................................................*
*சௌஞ்சம் சுருதி உணர்த்தும் நிசனம் மத்திமம்*
*....................................................*
*பஞ்சமம் வசந்த கோகில சுனம்*
*மேகராகங்களே ....................................................*

- இந்தப் பாடலில் கூறப்பட்டுள்ள பறவை மிருகங்களின் பெயர்களை சார்ட்டில் வரிசையாக கீழே எழுதுகின்றனர்.

| | | |
|---|---|---|
| மயில் | ஸ | ஷட்ஜம் |
| காள | ரி | ரிஷபம் |
| ஆடு | க | காந்தாரம் |
| கிரவைப் பக்ஷி | ம | மத்திமம் |
| குயில் | ப | பஞ்சமம் |
| குதிரை | த | தைவதம் |
| ஆன | நி | நிஷாதம் |

- ஸரிகமபதநி– சப்தஸ்வரங்கள் ஒவ்வொரு உயிரினத்தின் நேராக எழுதுகின்றனர். சில கேள்விகளை ஆசிரியர் கேட்கிறார்.

- ♦ உயிரிகளுக்கும் இசைக்கும் இடையில் தொடர்பு உள்ளதா?
- ♦ மேலே கொடுக்கப்பட்டுள்ள உயிரிகளுக்கும் ஸ்வரங்களுக்கும் இடையில் எந்த வகையான தொடர்பு உள்ளது?
- ♦ சரிகமபதனி-ஸ்வர வரிசையை எந்த.......பயன்படுத்தி கூறலாம்.?

- மாணவர்களிலிருந்து எதிர்பார்க்கும் பதில்களைச் சார்ட்டில் எழுதியிடவும்.
  - ♦ இசை இயற்கையிலிருந்து உருவானதாகும்.
  - ♦ பல இசை ஒலிகளும் இயற்கை ஒலிகளோடு ஒத்துப்போவதாகும்.
  - ♦ பறவைகளின் ஒலியோடு இணைத்துக் காணப்படுகிறது.
  - ♦ ஸ்வரங்கள், சப்தஸ்வரங்கள் (ஏழு ஸ்வரங்கள்)
- ஸ்வரங்களைக் குறித்துள்ள பகுப்பாய்வு.
  - ♦ இசையின் துவக்கம்- விளக்கக்குறிப்புகள்.
  - ♦ இயற்கையே இசையின் உறைவிடம்.
  - ♦ இயற்கையிலுள்ள இனிமையான ஒலிகள் ஒண்றிணைந்ததே இசையின் துவக் கத்திற்குக் காரணமாகிறது.
  - ♦ வாயு, நீர், மண், நெருப்பு, வானம், இவைகளெல்லாம் இசை ஒலிக்கு அடிப் படையானதாகும்.
  - ♦ இயற்கையிலுள்ள சில தனிப்பட்ட உயிரினங்களின் ஒலியின் தன்மைக்கேற்ப சப்தஸ்வரங்கள் முறைப்படுத்தப்பட்டுள்ளன.
  - ♦ சப்தஸ்வரங்களின் பெயர்கள் ஷட்ஜம், ரிஷிபம், காந்தாரம், மத்யமம். பஞ்ச மம். தைவதம். நிஷாதம்.
- ஒலியின் உறைவிடங்கள்.

1. வாயு (காற்று)-காற்று அசையும் போது, பொருட்களில் தொடும்போது.
2. நீர்-நீர் ஒழுகும்போது, மேலிருந்து கீழே விழும்போது (மழை)
3. மண்- குலுங்கும்போது, ஒன்றுக்கொன்று உரசும்போது.
4. நெருப்பு-பிரகாசிக்கும் போது, படரும் போது.
5. வானம்- வானத்திலுள்ள பல காட்சிகள்(மழை,இடி, மின்னல்)

***செயல்பாடு-2***

- இசையின் வளர்ச்சியின் பலநிலைகள்.
  - ♦ ஆதி மனிதர்களின் அன்றாட வாழ்க்கைச் செயல்கள் இசை வடிவில் மாறுகிறது. பல சூழ்நிலைகளில் பல கருத்துகளுக்கேற்ப ஒலி எழுப்புதல் ( கூவல், மூளல், அட்டகாஸம், ஏறுவரிசை-இறங்கு வரிசையிலுள்ள சில ஒலி எழுப்புதல்.)
- மாணவர்களை நான்கு குழுக்களாக்குகின்றனர். ஒவ்வொரு குழுவிற்கும் கொடுப் பதற்கு பல சூழ்நிலை உருவாகின்ற ஒலியை எழுதிய குறிப்புகள் கொடுக்கப்ப டுகிறது. குழுக்களுக்கு வெளியிடுவதற்கான வாய்ப்பு கொடுக்கவும்.
  - ♦ *குறிப்பு-1 தூரத்தில் உள்ளவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்கான ஒலி எழுப்பவும்.*
  - ♦ *குறிப்பு-2 அரிதான ஒன்றை கிடைத்தபோதுள்ள சந்தோசம்.*

- *குறிப்பு-3 வேலை செய்யும் போதுலுள்ள ஒலி*
- *குறிப்பு-4 பழக்க வழக்கங்கள், கேழிக்கைகள் போன்ற வேளைகளில் உருவாகும் ஒலி*

- ஒவ்வொரு குழுவும் வெளியிடதல்.வெளியிடும் தன்மையை ஆசிரியரும் மற்று குழுக்களும் மதிப்பிட வேண்டும்.
- சிறு விளக்கம்.
  - இப்படிப்பட்ட சூழ்நிலைக்கேற்ப ஒலிகள், செயல்பாடுகளுடன் உள்ள உடன் அசைவுகளுடன் தாளத்தோடு வெளியிடும் போது இசை வடிவில் ஆகிறது. முதல் இசை உருவானது ஆதிகால மனிதனிலிருந்தாகும்.
- ஒருங்கிணைப்பு
  - இயற்கை ஒலிகளை வாய்ப்பிற்கேற்ப முறைப்படுத்திப் பயன்படுத்தும் போது அது இசையாகிறது.
  - ஆதிகால மனிதன் பயன்படுத்திய இசை வடிவங்களுக்குக் காலங்கள் மாறும் போது பல மாற்றங்கள் உருவாகவும் முன்னேற்றம் ஏற்படவும் செய்தது. பிற் காலங்களில் இசையுலகில் அதிகமான சிறப்புகள் உருவாகின.

***செயல்பாடு-3 நமது இசை-முறை ; கர்நாடக இசையை அறிமுகப்படுத்துதல்.***

- பழக்கத்திலுள்ள இரண்டு சினிமாப்பாட்டுக்களைக் கேட்க வைத்தல். (ஒரு பாடல் கர்நாடக இசை, மற்றொன்று ஹிந்துஸ்தானி இசை)

  எ.கா–

  1. *“காற்றில் எந்தன் கீதம்..”*
  2. *“நதியே நதியே...”*
  3. *“மலர்ந்தும் மலராத...”*
  4. *“பலமுதிர்சோலாயிலே...”*

- கேட்ட நான்கு பாடல்களை அடிப்படையாக்கியுள்ள வினாக்கள்.
  - இந்த இரண்டு பாடல் முறைகளிலும் எந்த முறையை அதிகமாக கேட்டீர்கள்.
  - இவைகளுக்கு இடையிலான வேறுபாடென்ன?
- பிரதிபலிப்புகள்– ஒவ்வொருவராக. பிரதிபலிப்புகளை அடிப்படையாக்கி சிறுவிளக் கம்.

*நாம் அதிகமாகக் கேட்கின்ற பாடல்கள் நமது செந்த இசையமுறையான க்ரநாடக இசை யோடு தொடர்புகொண்டதாகும். இதனைத் தென் இந்திய என்கிறோம். மற்றுள்ள பாடல் கள் ஹிந்துஸ்தானி இசை முறையோடு தொடர்பு கொண்டுள்ளது.*

***கர்நாடக இசை***

*தென் இந்திய மாநிலங்களில் பழக்கத்திலுள்ள இசை.*

*அடிப்படைத் தத்துவங்கள்: ஏழு ஸ்வரங்களும் அடிப்படையான சங்கீத முறை ஷட்ஜம் (ஸ), பஞ்சாங்கம் (ப), என்பவைகளுக்கு அப்புறம் ரி,க,ம,த,னி என்ற ஐந்து ஸ்வ*

ரங்களுக்கு இரண்டு வகை பிரிவுகள் உண்டு.

ரி- சுத்த ரிஷபம், சதுர்சு ருதிரிஷபம்.

க- சாதாரண காந்தாரம், சுந்தர காந்தாரம்.

ம- சுத்த மத்யமம், பிரதிதைவதம்.

த- சுத்த தைவதம், சதுர் சுதி தைவதம்.

னி- கைசிகி நிஷாதம், காகனி நிஷாதம்.

கர்னாடக சங்கீத ராகங்கள்

ஜன்னிய ராகங்களும், ஜனக ராகங்களும் அடங்கியதே கர்நாடக சங்கீதம். 72 ஜனக ராகங்களுண்டு. இவற்றிலிருந்து பிறக்கும் ஏராளம் ஜன்னிய ராகங்கள் உண்டு. ஜனக ராகங்கள் வேறொரு ராகத்தின் பிறவிக்கு காரணமாகும் ராகமாகும். முழுமையான ராகம் எனவும் மேளகர்த்தா ராகம் எனவும் இவற்றிற்கு பெயருண்டு. ஏற்ற இறக்க சுரங்கள், சுரங்கள் முழுவதும் வரிசையாக வரும் ராகங்கள் ஜனக ராகங்கள்.

உதா- கல்யாணி, மாயாமாளவ கௌளா, சங்கராபரணம்

**ஜன்னியராகங்கள்**

ஜனக ராகத்தில் இருந்து உருவாகும் ராகங்கள் ஏற்ற இறக்கங்களில் சுரங்கள் முழுமையாக வேண்டுமென்பதில்லை. ஜன்னிய ராகங்கள் ஏராளம் உண்டு. புதியதாக இப்போதும் சங்கீத வல்லுனர்கள் உருவாக்கிக் கொண்டிருக்கின்றனர்.

ஜன்னிய ராகத்திற்கு (உதா) மோகனம், ஹம்ஸதொனி, வசந்த...

கர்னாடக சங்கீதம்- சங்கீத பிதாமகன்

ஶ்ரீனிவாச நாய்க்கர்- புரந்தரதாசனாக மாரிய கதை

(செல்வந்தனும் பேராசை காரணுமான சந்தன ரத்ன வியாபாரி சீனிவாசன் பக்தனாகவும் சங்கீக வித்வானாகவும் ஆகி கர்னாடக சங்கீதத்தின் பிதாவாக மாறிய புரந்தர தாசரின் கதை.)

**மேற்கோள் நூல்கள்–**

கர்னாடக சங்கீத வரலாறு

| | | |
|---|---|---|
| தென்னிந்திய சங்கீதம் | - | கெ.டி ரவீந்திரநாத் |
| சங்கீத கல்பமுத்துமம் | - | முத்தையா பாகவதர் |
| ராகசுதார்ணவம் | - | கெ. டி.ரவீந்திரநாத் |
| சங்கீத சாஸ்திர நவசுதா | - | ஜி தேவராஜன் மாஸ்டர். |

**கர்னாடக சங்கீதத்தின் ஒழுங்கமைப்புகள்**

கர்னாடக சங்கீதத்தின் அடிப்படை ராகம் மாலமாளவகௌள் ஆகும். இந்த ராகத்தில் பயிற்சி பாடங்கள் முழுவதும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. இவை மட்டுமன்றி அலங்காரங்கள், கீதங்கள், சுரஜதிகள், வர்ணங்கள் தில்லானாக்கள், தரங்கங்கள் என்றிவ்வாறு சங்கீத ரூபங்களை அவையின் தனித்தன்மையின் அடிப்படையில் வரிசைப்படுத்தி கர்னாடக சங்கீதத்திற்கு சரியான அமைப்பை தந்தவர் புரந்தரதாசராகும். கர்னாடக சங்கீதத்தின் பிதாவென இவர் அறியப்படுகிறார்.

*சங்கீத பாடங்களைப் பற்றிய எளிய விளக்கம்*

*வரிகள் : ;சப்தஸ்வரங்களை சில தனிப்பட்ட வரிசையில் அமைத்து சுரஸ்தானம் பலப் படுத்தவும் சப்தவரிசைகள் கூடுதல் உருவாக்கவும் உபயோகிக்கும் சுர கூட்டங்கள்.*

*அலங்காரங்கள்: சப்த ஸ்வரங்களை புரிந்து கொள்ளவும். பல்வேறு சுரசஞ்சாரங்கள் இலகு வாக பாடுவதற்கும் வேண்டும் முறையில் வரிசைப்படுத்திய சுரகூட்டங்கள்.*

*கீதங்கள்: எளிய சங்கீத வடிவம், ராக ,தாளங்களின் வடிவம், சுரங்களின் பயன்பாட்டிற்கு ஏற்ப இலக்கியங்கள் சேர்த்து பாடுகின்றனர்.*

*வர்ணம்: ராக, தாளத்தின் சிறந்த பயன்பாடும் ஜீவசுரபயன்பாடும் அடங்கிய சங்கீத வடி வம் அதிகமான நாட்கள் ஆலாபனத்தின் பிறகே பாட இயலும்.*

*கீர்த்தனம்: பக்திமார்க்கமான இலக்கியங்கள் உள் அடக்கிய சங்கீத வடிவம். ராக, தாளங்க ளின் ரசனைகளின் சஞ்சாரங்கள் பயன்பாடு உட்படும் எளிய சங்கீத வடிவம்.*

*கிருதி ராகபாவத்தை அதிகம் சேர்ப்பதும் இலக்கியமும் சங்கீதமும் சமமாக முறையில் இடம் பெறுவது ராகத்தின் ஜீவபயன்பாடும் தனிசிறப்பு வாய்ந்த சஞ்சாரங்களும் இலக்கி யத்தின் தனித்தன்மையும் அதிகமாக உட்படும் விரிவான ஆலாபனம் வாய்ப்பு நிறைந்த சங்கீத வடிவம்*

*சங்கீத கதைகள்*

*சட்கல கோவிந்தமாரார்- தியாகராஜ சுவாமிகள் அடுக்கல்*

*எந்தரோ மகாவானுபாவுலு- எழுதுவதற்கான சந்தர்ப்பம்*

*ராகவிசேசங்கள் வெளிப்படுத்தும் கதைகள்- அமிர்தவருஷினி( முத்துச்சுவாமி தீட்சிதர்) ஆசிரி ( சியாமசாஸ்திரி), தீபக் ( தான்சன்)*

*சங்கீத வித்தவானின் கதைகள் : திருமூர்த்திகள், சுவாதிதிருநாள், செம்பை*

*மேற்கோள்- தென்னிந்தியன் சங்கீதம்- ஏ. கே. ரவீந்திரநாதன்*

*History of Indian Music - Sambamoorthy)*

## தொகுப்பு

கர்னாடக சங்கீதம், உலக சங்கீதத்திற்கு கிடைத்த மகத்தான பரிசாகும். ராக, தாள வேறுபாடுகளாலும் பிற சாஸ்திரங்களிலிருந்து வேறுபட்டு காணப்படும் நமது சங் கீதத்தின் பரிணாம வரலாறும், முற்போக்கும் சிறந்ததாகும். கர்னாடக சங்கீதத்தின் பல்வேறு பிரிவுகளைப் பற்றி அடிப்படை தேவையான அறிவை பெறுவதே இது போன்ற சங்கீத செயல்களால் நாம் பெற இயலும்.

# அலகு - 3

## முன்னுரை.

பாடுதல் எனும் செயலுக்கு இசைக்கருவிகள் கொடுக்கின்ற மேற்பட்ட நிலை கவரும் தன்மையுடையதாகும். கேட்பவர்களை உற்சாகப்படுத்தவும் மீண்டும் கேட்பதற்குத் தூண்டுவதற்கும் பின்னணி இசை வழிவகுக்கிறது. அதற்கு மேல் பாடகனுக்கு அவனுடைய பாடலை அதிகமான தன்னம்பிக்கையுடன் பாடுவதற்கு இப்படிப்பட்ட கருவிகள் உதவுகின்றன. முழுமையான இசை அறிவு பாடகனுக்கு உருவாக இசைக்கருவிகள் உதவுகிறது. ஆரம்பகாலம் முதலே பாரதிய இசை வரலாற்றில் முக்கிய இடத்தைக் குழு இசைக்கருவிகள் பிடித்துள்ளது. இன்று ஏராளமான சிறப்பார்ந்த கருவிகளின் சங்கமமே ஒவ்வொரு இசை நிகழ்ச்சிகளும். இசை கருவிகளுக்கேற்ப குழந்தைகளைத் தயாராக்குதல் என்பதே இவ்வலகின் நோக்கமாகும்.

## கற்றல் அடைவுகள்.

- பாடல்களை முறையோடும் இசைக்கருவிகளோடும் பாடுகின்றனர்.

## கருத்து, திறன்.

- இசைக்கருவிகளுடனோ, பின்னணி இசை முறைகளுடனோ பாடும்போது நன்கு இரசிக்கலாம்.
- தாளம், சுருதி, இராகம் இவைகளை கவனித்துப் பாட வேண்டும்.
- வாய்மொழிப்பாட்டும் கருவிகளை மீட்டுதலும் ஒத்துபோதல்.
- இசைக்கருவிகளின் சிறப்புகளை அறிதல்.

## செயல்முறை.

- பாடல் இல்லாது பின்னணி இசை முறையோடு கூடியுள்ள பயிற்சி (ICT)
- நுட்பமான நேரம், பாடுவதற்குள்ள பயிற்சி, உட்கொள்ளுதல். வெளியிடுதல்.

## மதிப்பீடு.

- நன்றாகப் பாடுதல்– இசைக்கருவிகளுடன் பாடுவதற்கான திறன்.
- சிறு வினாக்கள்.

## உள்ளடக்கம்.

நுட்பமான இசையின் நிலைகளை உட்கொண்டு இசைக்கருவிகளுக்கேற்ப பாடுவதற்கு வேண்டியுள்ள செயல்பாடுகள் இவ்வலகில் உட்படுத்தப்பட்டுள்ளது. உயர்ந்த உற்று நோக்கல் திறன். இரசிக்கும் திறன் என்பவை வளர்வதற்கு இதனுடன் உட்படுத்

தப்பட்டுள்ள செயல்பாடுகள் உதவுகின்றன.

## கற்றல் செயல்பாடுகள்.

***செயல்பாடு–1***

- பழக்கமுள்ள சினிமா பாடல்கள்/ தேசபக்திப்பாடல்கள்/திருவிழாப் பாடல்கள் இவைகளின் பின்னணி இசையைக் கேட்கின்றனர்.
- புகழ்பெற்ற பாடல்களின் முன்னரே தயாராக்கிய/ பின்னணி இசையுடன் பாடுதல்.
- கேட்ட பாடலை அறிந்து கொள்ளல்– வினாக்களின் அடிப்படையில்.
- கேட்ட கருவிகளின் இசை எந்த பாடலுடையது?

**பாடல் இல்லா பின்னணி இசை**

*பாட்டின் வரிகள் இல்லாது இசைக்கருவிகளின் இசை மட்டும் இருப்பதே.*

- பாட்டில்லாமல் இசையை மட்டும் கேட்டபோது முழுமையாக இரசிக்க முடிந்ததா?
- எந்த வகையான கருவிகள் இந்தப் பின்னணி இசையில் பயன்படுத்தப்பட்டது?.

***செயல்பாடு –2***

- விடைகளை வரிசைப்படுத்தல் (தனிநபர்) வெளியிடுதல்/ அடையாப்படுத்துதல்.
  - கேட்ட பின்னணி இசையின் பாடலின் பெயரைக் கூறுகின்றனர்.
  - பாடல் இல்லாமல் இசையை .மௌனஸ்ட்ராக் மட்டும் கேட்ட போது அதிகமாக இரசிக்க முடிந்தது.
- பின்னணி இசைக்கருவிகளைப் பட்டியல் இடுதல்.
- முதலில் கேட்ட பின்னணி இசையின் பாடலோடு பிசால் ட்ராக் கேட்கின்றனர். இரசிப்பதற்கு நேரம் கொடுக்கப்படுகிறது.
- பாட்டில்லாமல் இசைமட்டும் இருக்கும் நிலையிலும், இசையோடு பாடலும் உள்ள நிலைக்கும் இடையிலுள்ள நிலமையை ஒப்பிடுகின்றனர். அதிகமாக இரசிக்கக்கூடியதைத் தேர்ந்தெடுத்துத் தனிப்பட்ட முறையில் இரசனைக் குறிப்பு எழுதுகின்றனர்.
- வெளியிடுகின்றனர், அதன் சிறப்பை ஆசிரியர் மதிப்பிடுகின்றார்.
- பின்னணி இசையுடன் மாணவர்கள் பாடுகின்றனர்.
- தேர்ந்தெடுத்த பாடல்களின் வாய்மொழிப் பாட்டுடன் கூடிய குறுந்தட்டை பயன்படுத்திப் பாட்டைக் கேட்கின்றனர். ஒரு பாட்டை மூன்றிற்கு மேற்பட்ட முறை கேட்கின்றனர்.

***செயல்பாடு –3***

- கேட்டுக்கொண்டிருக்கும் பாடலுடன் மாணவர்களும் பாடுமாறு கூறுகின்றனர்.
- மூன்றோ அதற்கு அதிகமான முறையோ மீண்டும் மீண்டும் பாடலைக் கேட்கலாம்.

  மாணவர்கள் பாடிய பிறகு இசைக்கருவிகளுடன் வாய்மொழியும் இணையும் போது வெளிவரும் தனிச்சிறப்புகளைக் கண்டறிதல். ( வினாக்களின் அடிப்படையில்)

  - வாய்மொழியும் இசைக்கருவிகளும் இணைந்து வரும்போது சுருதி ஒருங்கி

ணைப்பு தேவைதானா? (சுருதி ஒருங்கிணைப்பு ஒரே முறை சுருதி)

- வாய்மொழியுடனும் இசைக்கருவிகளுடையவும் தாள முறை ஒருங்கிணைக் கப்பட்டது தானா? ஒரே போன்றா.)
- இந்த வெளியிடுதலில் கருவிகளின் ஒலிகளுக்கா அல்லது வாய்மொழி பாட் டிற்கா முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது?
- இந்தப் பாடலில் வரிகள் துடக்கம் இறுதி வரை இசையுடன் கேட்கிறதா?
- இசைக்கருவிகளின் ஒலி பாடலில் எந்தெந்த பக்கத்தில் முக்கியத்துவம் கொடுக் கப்பட்டது? எதனால்?

● மாணவர்களின் பதில்கள்.

- ஒரே சுருதியில் கேட்டால் மட்டுமே கேட்பதற்கு இனிமையாக இருக்கும்.
- தாளம் பாடலுடன் இணைந்து வந்தால் மட்டுமே கேட்பதற்கு சுகமாக இருக் கும்.
- பாடலின் முன்னரும் வரிகள் 4, 6 என்ற வரிசையில் இடையில் பல்லவி முடிந்து நிறுத்தப்படுகிறது. இசைக்குழுவின் வாசிப் பிற்குப் பிறகு அடுத்த வரிகள் பாடுகின்ற னர்.
- பல்லவிக்கு முன், பல்லவிக்குப் பிறகு அனுபல்லவி பாடித் தொடங்கும் போது, சரணம் பாடித் தொடங்குவதற்கு முன் துண்டு பல்லவி பாடுவதற்கு முன்.

> **துண்டு பல்லவி**
>
> *பல்லவி, அனுபல்லவி, சரணம் பாடித்தீர்த்த பிறகு மாண்டும் பாட்டின் முதல் பகுதியின் இரண்டு வரிகலை பாடுவதே துண்டு பல்லவி.*

● ஆசிரியர் மாணவர்களின் பதில்களைத் தனித்தனியாக எடுத்துக்கூறவும் அவை யின் முக்கிய பகுதிகளை சார்ட்டில் எழுதியிடவும் செய்கிறார். மாணவர்களின் பதில்களை மதிப்பிட்டதன் அடிப்படையில் அதிக விளக்கம் கொடுக்கிறார்.

*குறிப்புகள்.*

- இசைக்கருவிகளும் வாய்மொழியும் சுருதி சேர்த்து வரும்போதே பாடல்கள் இரசிக்கும் தன்மையிலிருக்கும்.
- பாடலோடு இசைக்கருவிகளை மீட்டுவதற்கு நன்கு கவனித்துக் கேட்டுப் புரிந் தால் மட்டுமே சரியாக அவையுடன் வரிகளை இனிமையோடு சேர்த்துப் பாட முடியும்.
- தொடக்கத்திலும், இடையிலும் பாட்டின் இறுதியிலும் பயன்படுத்தப்படும் வாசிப்பு சிறப்பை சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும்.
- பல்லவி, அனுபல்லவி, சரணம் இவைகளின் இடையில் வருகின்ற சிறு இடை வேளைகளில் இசைக்கருவிகளில் மீட்டிய இசைகள் அடுத்துவரும் வாக்குகளை யோ,வரிகளையோ மீண்டும் நன்றாகப் பாடுவதற்கான சிறப்பு கொடுக்கிறது.
- பாட்டும் இசைக்கருவிகளும் ஒலியும் மிகவும் ஒற்றுமையுடன் இணைந்து வரும் போது மட்டுமே அந்த இசை கேட்பதற்கு சிறப்பும், இரசனையும் கொடுக்கிறது.
- அதிக பாடல்களைக் கேட்டு நல்ல இசையறிவை ஏற்படுத்தினால் மட்டுமே நல்ல

முறையில் பாட முடியும்.

- இசைக்கருவிகளை இயக்கி அதனுடன் பாடுதல்.
- சிறிய இசைக் கருவிகளுடனே உள்ள பாட்டின் பயிற்சியும் பாடுதலும்.
- முன்வகுப்புகளில் படித்ததன் சிறு முன்னுரை.
- பயன்படுத்த வேண்டிய கருவிகள்: சுருதிப்பெட்டி, ஜாலறா, கைமைணி,கீபோர்ட். ஹார்மோணியம் என்பவை.

***செயல்பாடு-4***

- பழக்கமுள்ள பாட்டுக்களுடன் தேர்ந்தெடுத்த அனைவருக்கும் பாட முடிகின்ற ஒரு பாட்டை வகுப்பில் உள்ளவர்கள் அனைவரையும் உட்படுத்தி வெளியிடு கின்றனர்.
- பாடும் குழுவும், விருப்பத்திற்கேற்ப தேர்ந்தெடுக்கும் குழுவை வாத்திய உபகர ணங்களின் குழுவாகவும் பிரித்தல்
- தாள அறிவுள்ள சில மாணவர்களைத் தாளக்கருவிகள் பயன்படுத்தத் தேர்ந்தெ டுக்கப்படுகிறது.
- பாடுதல்- குழு அடிப்படையில் மதிப்பிடுதல்-ஆசிரியர் மதிப்பிடுதல்.

***தொடர்செயல்பாடுகள்***

- பழக்கமுள்ள பாடல்களைச் சிறந்த இசை ஞானிகளுடன் வெளியிடுதல்: (சினிமாப் பாடல்கள் ,மெல்லிசைப்பாடல்கள், கவிதைகள் ஒருங்கிணைந்த இசை............,தேச பக்திபாடல்கள்).
- பயிற்சி கொடுத்தல் :
    - சினிமா பாடல்களுக்கு அதனுடைய பின்னணி இசையோடு கூடியுள்ள பாடலைப் பயிற்ச்சியளித்தல்.
    - கவிதைக்கு அதனுடைய கருத்திற்கேற்ற இராகத்திற்குப் பொருந்தும் பின்னணி இசையைச் சேர்த்துப் பயிற்சி கொடுக்கவும்.
- தேசபக்தி பாடல்கள், வேறு பாடல்கள் இவையெல்லாம் பொருத்தமான நிலையில் முறைப்படுத்தி இசைக்குவிகளின் முன்னிலையில் கலைஞர்களுடன் பாட்டுப் பயிற் சியளித்தார்.

  *<u>பாடும்போது கவனிக்க வேண்டியவை.</u>*

    - இசைக்கருவிகளை மீட்டும்போது அதன் எப்பகுதியில் இருந்து பாட்டு துவங்க வேண்டும் என்று புரிந்து கொள்ளவும்.
    - தாளத்தை முறைப்படுத்துதல், சுருதியை ஒழுங்கு படுத்தல், ஒலியை முறைப்ப டுத்துதல்.
    - சூழ்நிலைக்கேற்ப பாடும்போது பாவனை கொடுத்தல்.
    - பின்னணி இசையைக் குறித்து சரியான தெளிவு, கேட்டுப் பெற வேண்டும்.
- வாய்ப்புகளைக் கண்டறிதல்: தின விழக்கள், கலை விழாக்கள் இவையெல்லாமல் வேறு கலாச்சார நிகழ்ச்சிகளிலும் பள்ளிக்கூடத்தில் பாட்டுக்குழு உருவாக்கி நிகழ்ச்சி நடத்தலாம்.

**மதிப்பீடு.**

- கருவிகளை அறிந்து கொள்ளுதல்.
- இசை அறிவு.
- பின்னணி இசையைப் பயன்படுத்தி சரியாகப் பாடுதல்.
- இசைக்கருவிகளின் முன்னிலையில் பாடுதல்.
- சொற்பொழிவு குறிப்பு/ வாய்மொழியாகக் கருத்துகளைக் கூறுதல்.

**ஒருங்கிணைத்தல்.**

- ஏராளமான இசைக்கருவிகளைக் கொண்டு இசை நிகழ்ச்சி நடத்தவும். அவையின் சிறப்பையும், தனித்தன்மையையும் அறிந்து இரசிப்பவர்களே நமது இரசிகர்கள்.
- இசைக்கருவிகள் பாட்டிற்கு கொடுக்கும் மேன்மை, முழுமை என்பது மிகச்சிறந்ததாகும்.
- சுருதி ஒத்தும், தாளம் ஒத்தும், முழுக் கவனத்தோடும் முறையாகப் பயிற்சி எடுத்து நடத்துகின்ற இசை நிகழ்ச்சிகள் இரசிகர்களில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்துகிறது.
- சிறந்த இசையறிவை உருவாக்கி பாடலையும், இசை பாரம்பரியத்தையும் வளர்த்தியெடுப்பது என்பது ஒவ்வொரு பாடகனுடையவும் கடமையாகும்.
- பாடகனும், கலைஞரும் சமமானவரே. பெரியது சிறியது என்ற வேறுபாடு இல்லை என்ற அறிவும். பாட்டிற்கும், கருவிகளுக்கும் நமது இசை பாரம்பரியத்தில் ஒரே முக்கியத்துவம் உள்ளது என்று தெரிவிப்பதே இப்படிப்பட்ட பாட்டுக் கச்சேரிகள்.

## 7.3



# நடனம்



# நடனக்கலை

## முன்னுரை

இவ்வுலகம் அசைந்து கொண்டே இருக்கிறது. உடல் அசைவுகளில் ஒளிந்திருக்கும் தாளத்தை அழகுபடுத்தி வெளிப்படுத்துவதே நடனம். உடலின் சக்தியை கட்டுப்பாடுடன், முறைப்படுத்தி வெளியிட நடனம் உதவுகிறது. சமூக ரீதியிலான ஒருங்கிணைப்பு உடலின் திறன், அழகைக்குறித்துள்ள அறிவு என்பவையை மேம்படுத்த நடனம் மிகப்பெரிய பங்களிக்கிறது.

எல்லாக் கலைகளுக்கும் இருப்பது போன்று நடனத்திற்கும் முக்கியமான இரண்டு பகுதிகளுண்டு. வடிவம், பாவனை என்பவையாகும் அது. இதில் சாதாரண மக்கள் பாவனை என்பதையே விரும்புகின்றனர். ஒரு நடனத்தோடு கூடிய கதையே, சூழலே, கருத்தோ என் ஏதெனினும் அது பாவனை எனப்படும். பாவனையை வெளியிடும் உடலே அதன் வடிவும்.

எடுத்துக்காட்டாக ஒரு மனிதன் கலை எனில் அவனுடைய மனது பாவனையையும், உடல் வடிவமும் என்று பொருள். சாதாரண இரசிகர்கள் வடிவத்துடன் வெளிவரும் பாவனையை இரசிக்கின்றனர். பண்டிதர்கள் பாவனை வெளிவரும் முறையை வடிவத்தின் வழி இரசிக்கின்றனர். பாவனையின் வடிவ வேறுபாடுகளே பல நடன வடிவங்கள்.

நமது மாணவர்களும் முதலில் பாவனையை இரசிக்கின்றனர். அதனால் தான் அவர்கள் முதலில் பாவனையை தெரிந்துகொள்ளட்டும் போலச் செய்யட்டும் கதை வடிவத்தில் ஒரு நடனம் ( ஒரு தனிப்பட்ட கலை வடிவம் என்ற முறையில் அல்லாமல் சாதாரண வேடத்தில் செய்வது நன்று) வெளியிட வாய்ப்பு அளிக்கவும்.

இவ்வாறு கண்டறிந்த, இரசித்த, பாவனையை சுயமாக செய்து அனுபவிப்பதாக வேண்டும். அடுத்த நிலை அதன் வழி உருவாகும் அசைவு முறைகளே 'நடனம்' என்ற பெரிய பின்னணியிலுள்ளது என்று மாணவர்கள் அறிய வேண்டும். திறனோடு கூடி, தாளத்தோடு 'உடல்' என்ற உடகத்தின் வழி இசையோடு கூடி அசைவது எவ்வாறு என்று மாணவர்கள் தெரிந்து கொள்ளும் வண்ணம் பயிற்சி அமையவேண்டும். பூ மூக்கின் அருகில் வருகின்ற உத்தி. நுகர்வதற்கு அவனுக்கு தெரியும். தெரிந்து கொள்ளும்வரை இதைத் தேர்ந்தெடுக்கலாம். உடலின் வாய்ப்புகளைப் பாடப்புத்தகத்தின் வழி அல்லது சிக்கலான கோட்பாடுகளின் வழி அவர்கள் அறிய வேண்டும். முழு சுதந்திரத்துடன் ஆடுவதற்கான சூழல் ஏற்படுவதே இங்கு தேவை. முழு சுதந்திரமாக என்றாலும் சூரியனும், சந்திரனும், காற்றும் அசைவதில் உள்ள உள்ளார்ந்த கட்டுப்பாடு போன்று. பின்னணி இசையும், தாளமும் அவர்களைக் கட்டுப்படுத்துகிறது என்பதைக் கவனிக்க வேண்டும்.

# கற்றல் அடைவுகள்

## ஐந்தாம் வகுப்பு

- சில பழக்கமுள்ள நடனங்களின் தனித்தன்மைகளை அறிகின்றனர்.
- மெய் வழக்கம் பெறுகின்றனர்.
- ஐம்புலண்களின் அசைவுகளையும் அறிகின்றனர்.(செயல்பாடு)
- கைவிரல்களைப் பயன்படுத்தி சுற்றுமுள்ள பொருட்களைக் காண்பிக்கின்றனர்.
- பள்ளிக்கூடங்களின் சிறப்பு தினங்களுக்கேற்ப நடனங்களை வெளியிடுகின்றனர்.
- பாடப்பகுதியிலுள்ள கருத்துகளுக்கேற்ற நடன வடிவங்களை வெளியிட முடிகிறது.

## ஆறாம் வகுப்பு

- நாட்டுப்புற நடனங்களை வெளியிடுகின்றனர்.
- முறையான நடனச் சுவடிகளைக் கண்டு பின்பற்றுகின்றனர்.
- சுற்றுமுள்ள பொருட்களை கை முத்திரைகளின் வழியாக வெளியிடுகின்றனர்.
- அடிப்படை முத்திரைகளை பார்க்கவும் பின்பற்றவும் செய்கின்றனர்.
- அடிப்படை முத்திரைகளைப் பயன்படுத்தி கருத்துப்பரிமாற்றம் செய்கின்றனர்.
- கதை களி சமயங்கள் ஆகனபிநயம் என்பவைகளை குறித்த தகவல்களை சேகரிக்கின்றனர்.
- சொந்தமாக தயாராக்கிய வாய்மொழிச் சிந்துவிற்கேற்ப நடனச்சுவடுகள் வைக்கின்றனர்.

## ஏழாம் வகுப்பு

- கேரளத்தின் நடனவடிவங்களை இலக்கிய நயம் வாய்ந்தது என்றும் நாடுப்புற நடனம் என்றும் வகைப்படுத்துகின்றனர்.
- குறிப்பிட்ட பாடல்களுக்கு ஏற்ப ஒற்றுமையோடு நடனம் ஆடுகின்றனர்.
- நடன சங்கேதங்கள் உபயோகித்து கருத்துகள் கையாளும் முறையிலான அரங்க வெளியீடு நடத்துகின்றனர்.
- அடிப்படை முத்திரைகளை (.சம்யுக்தம்) அறிகின்றனர்.
- வேறுபட்ட தாளங்களுக்கு நடனமாடுவதற்கான திறமையைப் பெறுகின்றனர்.

# ஐந்தாம் வகுப்பு

## அலகு-1 நடன வடிவங்கள், சிறப்புகள்

### முன்னுரை;

மாணவர்கள் ஏராளம் நடனங்களைப் பற்றித் தெரிந்துவைத்துள்ளார்கள். அவற்றில் சிலவற்றை ஆடிக் காண்பிக்கவும் முடியும். அவர்களுக்கு தெரிந்த நடன நிலைகளின் தனிச்சிறப்புகளை மீண்டும் கூடுதல் தெரிந்துகொள்வதற்கு அவற்றின் கண்டுபிடிப்பதற்கும், ஒவ்வொன்றினுடயவும் தனிச்சிறப்புகளை அறிந்து கொள்வதற்குமான செயல்பாடுகள் இந்த அலகில் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த அலகைக் கற்பிக்கத் தொடங்கும்போது மாணவர்களுக்கு ஏதாவது ஒரு நடனவடிவத்தை அறிமுகப்படுத்த வேண்டும். ஒவ்வொரு நடனவடிவமும் மற்றவையிலிருந்து எவ்வாறு வேறுபட்டு காணப்படுகிறது, அதற்கான காரணம் என்ன? இவைகளைக் குறித்து கலந்துரையாடல் நடத்தவும்.

### கற்றல் அடைவுகள்.

- தெரிந்த நடனவடிங்களின் சிறப்புகளை அறிகின்றனர்.

### கருத்து, திறன்.

- தாராளம் நடனவடிவங்கள் நமக்கு இருக்கின்றன.
- ஒவ்வொரு நடனத்திற்கும் அதற்கான சிறப்புகள் இருக்கின்றன.
- வேடங்கள் இசைக்கருவிகள், என்பவற்றின் வழியாக நடனங்களை கவனித்தால் வேறுபாடுகளை பிரித்தறிய முடியும்.
- இயக்கிய நடனங்கள், நாட்டுப்புற நடனங்கள் என்று வகைப்படுத்த முடியும். தொழில், சாதி, மதம், தேசம் போன்றவற்றிகு ஏற்ப நடனங்கள் வேறுபடுகின்றன.

### செயல்பாடு.

- நடன விழா (பலவித நடனங்களின் கூட்டம்).
- காலடிகள், வேடங்கள்.
- நான, என்னுடைய கதை(நடனங்களை குறித்த சுயசரிதை வடிவத்தில்.)
- ஒரு குடும்பம், பல உறுப்பினர்கள்.

## கற்றல் செயல்பாடுகள் .

- நடனவிழா.

  பலவித நடனங்களின் காட்சி அமைக்கப்பட வேண்டும். இலக்கிய நடனங்களும், நாட்டுப்புற நடனங்களும் இதில் உட்படுத்த வேண்டும்.

  எ.கா: மோகினியாட்டம், பரதநாட்டியம், குச்சிப்பிடி, கதகளி, திருவாதிரக்களி, மார்க்கம் களி, ஒப்பனை.

- குறுந்தட்டு காட்சிக்குப்பிறகுச் சிறப்புகளைப் பட்டியலிடுகின்றனர்.
- மாணவர்களைக் கலைவடிவங்களின் பெயரில் குழுக்களாக்கிய பிறகு கலந்துரையாடல்- பொது முடிவு- உற்றுநோக்கலின் வழியாக (முடிவுக்கு வருதல்) ஒருங்கிணைத்தல்.
- வேடங்கள், அலங்காரம், இசைக்கருவிகள், பின்னணிப்பாடல்கள் என்பவற்றின் வேறுபாடுகளைக் கண்டுபிடித்தல், கலநதுரையாடல்-பொதுமுடிவு-ஒருங்கிணைப்பு
- காலடிகள், வேடங்கள் என்பவற்றிலுள்ள ஒற்றுமை, வேற்றுமை-கலந்துரையாடல்-பொதுமுடிவு-ஒருங்கிணைப்பு.
- நான, என்னுடைய கதை.

  நடனவடிவங்களின் அடிப்படையில் மாணவர்கள் குழுக்களாகின்றனர். ஒவ்வொரு குழுக்களும் அவர்களுக்குக் கிடைத்த நடனவடிவங்களைப் பற்றிய சிறு குறிப்பு தயாராக்குகின்றனர். வகுப்பு வாரியாக பதிப்புகள் தயாராக்குகின்றனர். மேலும் படங்களும் பயன்படுத்தலாம். இந்தப் படைப்புகளைப் பற்றிய நடன வினாடி-வினா. இதற்கு தேவையான வினா-விடை(பொதுஅறிவுத் தேர்வை) மாணவர்களே நடத்த வேண்டும்.

- மாணவர்களுக்குக் கிடைத்த நடன வடிவங்களை எவ்வாறு படிக்க வேண்டும் என்று தேடுதல், இலக்கிய நடன கலைஞர்கள், நாட்டுப்புற நடனக் கலைஞர்களிடம் நேர்காணல் நடத்தல்.
- நேர்காணல் நடத்துவதற்கு தேவையான வினாநிரல் தயாராக்க வேண்டும். இலக்கியக் கலைகளின் பயிற்சி வாய்ப்புகளை அறிவதற்கு நாட்டுப்புற நடனக்கலைகளோடுள்ள ஒற்றுமை, வேற்றுமைகளைக் கண்டறிவதற்கும் முடிந்தவரை இதை நடத்த வேண்டும்.
- ஒரு குடும்பம்.

  நடனத்திலுள்ள வடிவங்கள் பல விதத்தில் வேறுபட்டதாகும். இவைகளுக்கிடையே உள்ள ஒற்றுமைகளைக் கண்டுபிடிக்கவும்.(வேடம், அலங்காரம், காலடிகள், பின்னணிப்பாடல், இசைக்கருவிகள் என்பவைகளில் வேறுபாடு உண்டெனினும் தோற்றம் ஒன்றாகும்)

# அலகு-2நடைகள் சுவடுகள்

## முன்னுரை.

பொதுவாக இயற்கையின் அசைவுகெல்லாம் இசை நாட்டமுடயவையாகும். இந்த இசைகளை யெல்லாம் அறிவியல் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது நமக்கு தெரிந்த கொள்ளமுடியும்.

.................நமக்கு தெரிந்து கொள்ள முடியும். இந்த அடிகள், காலடிகளை வலிமையிடையதாக ஆக்குவதற்கு ஒவ்வொரு நடனக்காரர்களின் அடிப்படை செயலில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நடனத்தில் வேறு கற்றல் அடைவுகளைப் பொறுத்தவரை கூடுதல் நேரம் செலவாக்கி அடைய வேண்டிய ஒரு அறிவாகும். காரணம் இந்த திறமையால் தான் நடனத்தின் வேறு காலடிகளைப் பயிற்சி எடுக்க வேண்டியதும், வெளியிட வேண்டியதுமாகும்.

## கற்றல் அடைவுகள்.

- பஞ்ச நடைகளின் சுவடுகளை அறிகின்றனர்.

## கருத்து, திறன்,

- பஞ்ச நடைகளை திசரம், சதரஸ்ரம், மிஸ்ஸரம், கண்டம், சங்கீர்ணம் என வகைப் படுத்துகின்றனர்.
- இயற்கையின் அசைவுகள் இந்த அடிகளுக்கு முக்கிய காரணமாகும்.
- ஒவ்வொரு அடிகளுக்கும் அதற்குரிய எழுத்து வரிசைகள் உண்டு.

## கற்றல் செயல்பாடுகள்.

- அடிகளிலுள்ள தெரிந்த திரைப்படப்பாடல்களைக் கேட்க செய்தல். கைகள் பயன் படுத்தி தாளம் போடக் கூறுகின்றனர்.

எ.கா; தகதிமி

*மானென்னும் விளிக்கில்லா*
*மயிலென்னும் விளிக்கில்லா*
*மாடத்தின் மணிவிளக்கே*
*நின்னை ஞான்*
*மடத்தின் மணிவிளக்கே*

<u>தக்கிட்ட</u>

*எல்லாரும் சொல்லுன்னு*
*எல்லாரும் சொல்லுன்னு*
*கல்லாண் நெஞ்சிலென்னு*
*கரிங்கல்லாண்,*
*கரிங்கல்லாண் நெஞ்சிலென்னு*

<u>தகதகிட</u>

*கண்ணீர் பூவின்ற கவிழில் தலோடி*
*ஈணம் முழங்கும் பழம் பாட்டில் முங்கி*
*மறுவாக்கு கேட்கான் காத்து நில்காதே*
*பூத்தும்பி எங்கோ மரஞ்சு*
*என்ற புள்ளோர் குடம் போல தேங்கி...*

<u>தக்கிட்ட தகதிமி</u>

*பாட்டுப்பாடி உறக்காம் ஞான்*
*தாமரப் பூம் பைதலே*
*கேட்டு கேட்டு நீ உறங்கான்*
*கரளின்ற காதலே..*

- இந்த பாடல்களுடைய தாளம் முன்பு படித்த அடிகளைப்பயன்படுத்தி செயல் படுத்துதல். பாடல்களுக்குப் பதிலாக இதே தாளத்திலுள்ள வாய்மொழிச்சிந்துக் கள் பயன்படுத்துதல்.இதற்கேற்ற தாளத்தில் வேறு பாடல்களைக் கண்டுபிடித் தல்.
- தாளத்திற்கேற்றவாறு சுவடுகளை எடுத்து வைத்தல்.
- ஒவ்வொரு வாய்மொழிச் சிந்துவிற்கும் ஏற்ப பஞ்ச நடை சுவடுகளை திடப்ப டுத்துதல். இதைக் குறைந்த வேகத்தில் தொடங்கி, வேகம் கூட்டிப் பயிற்சி அளிக்க வேண்டும். காலத்திற்கேற்ப
- குழந்தைகளை அடிகளின் பெயரில் குழுக்களாக்குதல். நான்கு அடிகளைப் பயன் படுத்தினால் போதும்.

  தகதிநி-தர்கிட்ட-தடதக்கிட்ட-தக்கிட்டதகதிமி

  (சதுரஸ்திரம்.) (தில்ஸம்) (கண்டம்.) (மிஸ்ரசம்)
- ஒவ்வொரு குழுவும் அவரவர்களுக்குக் கிடைத்த அடிகளிலுள்ள பாடல்களைக் கண்டுபிடித்துப் பாடுதல். வேறு குழுக்கள் அதற்கு தாளம் இடுகின்றனர். தொடர்ந்து ஒரு குழு தாளம் போடும் போது அதற்கு பொருத்தமான பாடல் களைக் கண்டுபிடித்துப் பாடுகின்றனர். இதை எல்லா அடிகளிலும் செய்கின்ற குழுவிற்குப் புள்ளிகள் கொடுத்து வெற்றிபெற்றவர்களை கண்டுபிடிக்கின்றனர்.
- விளையாட்டுக்கள் பல விதம்.

  இலக்கிய நடனத்தின் வேறுபட்ட முறைகளை குறுந்தட்டு பயன்படுத்தி காண் பித்தல்.
- இதைப் பயன்படுத்தி அவற்றில் பயன்படுத்திய அடிகளைக் கண்டுபிடிக்கின்ற னர்.(குழு)
- தனித்தனியாக வெளியிட வேண்டும்.
- <u>சிக்கல் சிக்கல்.</u>

  தகதிமி தகதகிட்ட என்ற வரிசையில் கைதட்டுவதை மாணவர்கள் கேட்கின்ற னர். வேறுபாட்டைக் கண்டுபிடிக்கக் கூறுதல். 5 அடிகளிலும் பயன்படுத்தியிருக் கின்ற காலடிகள் உட்படுத்திய குறுந்தட்டு காண்பிக்கப்படுகிறது. சிக்கலான நிலையைக் கண்டுபிடிக்குமாறு கூறுதல். சிக்கலை ஆசிரியரின் கை தட்டலுக்கு அனுசரித்து மாணவர்கள் காலடிகள் வைக்கின்றனர்

### மதிப்பிடுதல்.

- சரியானனமுறையில் வெளியிடுதல்
- சிறிய வினாக்கள்

# <u>அலகு-3 விரல் மொழி</u>

### முன்னுரை

மனிதன் தோன்றிய காலம் முதல் நிலவியிருந்த குணங்களில் சிலவற்றை தவிர்க்

காமல் இன்றும் பாதுகாக்கின்றான் என்பதற்குச் சான்று தான் விரல்மொழி

அல்லது முத்திரைகள். தீவிரமான உணர்ச்சிகள்-சிந்தனைகளை அதே போன்று உணர முடிவதற்கு மொழியால் முடியாதாகும் போது முத்திரைகளும், உடல் அசை வுகளும் உதவிபுரிகிறது. பேச்சு மொழியும், எழுத்து மொழியும் வளர்ச்சி அடை யாத காலத்தில் மனிதன் உடல் அசைவுகள் கொண்டு கருத்துப் பரிமாற்றம் நடத்தி இருப்பார்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றார்கள். ஆதி மனிதன் பயன்ப டுத்திருந்த கைவடிவங்களே பிற்காலத்தில் முத்திரைகளாக மாறி இலக்கிய நடனங் களில் இடம் பெற்றது. விரல்மொழியைக் குறித்துள்ள கற்றலை இந்த அலகின் வழி யாகத் துவங்கலாம்.

### கற்றல் அடைவுகள்.

- கைவிரல் பயன்படுத்திச் சுற்றியுள்ள பொருட்களைக் காண்பிக்கின்றனர்.

### கருத்து, திறன்,

- அன்றாட வாழ்க்கையில் கைமுத்திரைகளைப் பயன்படுத்திக் கருத்துகளை வெளி யிடுவதுண்டு. கைவிரல்களை பயன்படுத்தியே இந்த முத்திரைகள் வெளியிடப்ப டுகின்றன. இயற்கையிலுள்ள பொருட்களையும், உயிரினங்களையும் இவ்வாறு வெளிப்படுத்த முடியும்.

### கற்றல் செயல்பாடுகள்.

- விரல் நடனம்

  *ஒன்றாம் பெருவிரல் ஓரடிமெதுவாக- ஒன்று,*  
  *இரண்டாம் ஆள்காட்டி விரல் இரண்டடி மெதுவாக-ஒன்று, இரண்டு,*  
  *மூன்றாம் நடுவிரல் மூன்றடி மெதுவாக- ஒன்று இரண்டு,மூன்று,*  
  *நான்காம் மோதிர விரல் நான்கடி மெதுவாக-ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு*  
  *ஐந்தாம் சிறுவிரல் ஐந்தடி மெதுவாக-ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு,ஐந்து.*

- இந்தப்பாடலை வலதுகையின் ஒவ்வொரு விரலும் கொண்டு இடதுகையில் தாள மிட்டு பாடத்துவங்குகின்றனர். தொடர்ந்து மெதுவாக என்ற வார்த்தைக்குப் பதில் வேகமாக என்று சேர்த்து பாடலை வேகமாகவும், விரலைப் பயன்படுத்தி தாளமி டவும் செய்ய வேண்டும்.

- பொருட்களுடையவும், உயிரனங்களுடையவும் பெயர் எழுதிய குறிப்புகள் குழந் தைகளுக்கு கொடுக்கப்படுகிறது. கிடைத்த குறிப்புகளில் எழுதியிருப்பதை கைவி ரல்கள் பயன்படுத்தி வெளிப்படுத்துகின்றனர். மற்ற குழந்தைகள் பெயர் கூறுகின் றனர். திறமையான குழந்தைகளை கண்டுபிடிக்கின்றனர். குழந்தைகள் வேறு பொருட்களையே, உயிரினங்களையோ கைவிரல்களைப் பயன்படுத்தி வெளியி டுகின்றனர். வெளியிட்டவை எவை என்று குழந்தைகள் எழுதுகின்றனர்.

### தொடர்செயல்பாடுகள்

பலவித முத்திரைகளின் படங்களை உற்றுநோக்குகின்றனர்.

# அலகு-4 நடனம்.... ஆனந்த நடனம்.

## முன்னுரை.

நம்முடைய நாட்டில் ஏராளமான நடனவடிவங்கள் பழக்கத்தில் உள்ளன. எல்லா நடனங்களும் மகிழ்ச்சியைத் தருவதாகும். என்றாலும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சூழ்நிலையில் வெளியிடப்படுகின்றதாகும். அதாவது சிறப்பு தினங்களை மகிழ்ச் சிகரமாக்குவதற்குப் பண்டைய காலம் முதலே மனிதன் நடனத்தைப் பயன்படுத் தி இருந்தான், திருவாதிரை விரதம் இருந்து பெண்கள் பக்தியோடு பகவானை வணங்கிப் பாடி, ஆடிக்கொண்டாடிய நாட்டுப்புற நடனமே திருவாதிரைக்களி. திருமணத்திற்காக மணப்பெண்ணை அலங்காரம் செய்து, அவளின் வெட்கத்தை மாற்றுவதற்காக தோழியர்கள் பாடல்கள் பாடியும், தாளத்துடன் கூடிய காலடிகள் பதித்தும், கைகள் கொட்டி சப்தம் ஏற்படுத்தவும் செய்கின்ற சடங்கே ஒப்பனை ஆகும். இந்த நேரத்தில்...... வெட்கத்திற்கும் அழகு கூடுகிறது. என்றால் சுதந்திரதி னத்தையொட்டி நண்பர்கள் தயாராக்குகின்ற நடனம் தேசபக்தியை உணர்த்தக்கூ டியதாக அமையவேண்டும். அவ்வாறே புது வருடத்தை வரவேற்பதற்காக தயா ராக்குகின்ற புதுவருடப் பாடல்களுக்கு ஏற்ற நடனம் புது வருடத்தை உற் சாகத்தோடு வரவேற்பதாக இருக்க வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு சிறப்பு தினங் களையும் மகிழ்ச்சிகரமாக்குவதற்கு நம்மால் முடியும். இந்த அலகில் இது போன்ற சில செயல்பாடுகள் வெளியிடப்பட்டுள்ளன.

## கற்றல் அடைவுகள்.

- பள்ளிக்கூடங்களின் சிறப்பு தினங்களுக்குப் பொருத்தமான நடனங்களை வெளி யிட முடிகிறது.

## கருத்து,திறன்.

- இசைக்கருவியின் உதவியோடு இசைக்கு ஏற்ப உடல் அசைவுகளை இயற்கை யிலுள்ள உயிரனங்களை உட்கொண்டு வெளியிடுதல்.

## உள்ளடக்கம்.

பள்ளிக்கூடங்களின் சிறப்பு தினங்களைக் கலை நிகழ்ச்சிகளின் வழியாக மேம்படுத் துதல். சிறப்பு தினகொண்டாட்டங்களின் வாயிலாகப் பலவிதமான கருத்துகளைக் குழந் தைகளுக்கு நல்குதல். எடுத்துக்காட்டாக- சுதந்திரதினவிழா, குடியரசுதினவிழா, இளை ஞர்தினவிழா, பிரிவுஉபச்சார விழா, பள்ளிதுவக்கவிழா. குழுவாக வெளியிடுகின்ற வேறுபட்ட நடனவடிவங்களின் வாயிலாக ஒற்றுமையும், குழுமனப்பான்மையும் மாண வர்களிடம் வளர்க்க முடிகிறது. பலவித நடனங்களைப் பார்ப்பதற்கும், அதனை இர சிப்பதற்கும் அதில் பங்குபெருவதற்கும் முடிகிறது.

## கற்றல் செயலபாடுகள்.

- நண்பர்கள் கூட்டம்.

  பள்ளித்துவக்க விழா அன்று பள்ளிக்கு முதன் முதலாக வரும் மாணவர்களை

வரவேற்பதற்காகத் துவக்கவிழாப்பாடல்களை இசையோடு கூடிப்பாடி, ஆடி வெளியிடுகின்றனர்.

- ஆகஸ்ட்-15, அக்டோபர்-2, ஜனவரி-26, போன்ற தினங்களில் தேசபக்திப் பாடல் களுக்கு ஏற்ப எளிய நடனங்கள் ஆடுகின்றனர்.
- பள்ளி ஆண்டுவிழாக்களில் குறுந்தட்டில் இருந்து கற்ற நடனங்களை வெளியி டுகின்றனர். இதற்காகப் பள்ளிக் கலைவிழாக்களில் குறுந்தட்டுக்களைப் பயன்ப டுத்தலாம். நடனத்தில் ஆர்வமும், தனிப்பயிற்ச்சியும் பெற்ற திறன்படைத்த குழந் தைகளை இதற்காகப் பயன்படுத்தலாம்.
- சுற்றுப்புறசூழல் தினம். ஹிரோஷுமா-நாகசாகி தினம், போதைமருந்து ஒழிப்பு தினம் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் விதம் பாடல்களுக்கு நட னவடிவம் கொடுக்கவேண்டும்.

## மதிப்பிடுதல்.

- சிறப்பான வெளியிடுதல்.

# அலகு-5 நடனக்கலை

## முன்னுரை

நடனம் மகிழ்ச்சிகரமானது மட்டுமல்லாம், கருத்துபரிமாற்றமும், அறிவியல் பூர்வ மானது என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டியதாகும். பாரத முனியின் நாட் டிய சாஸ்திரம் தான் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். நாட்டிய சாஸ்திரத்தை அரங்கேற்றம் செய்த பிறகுதான் அது மக்களைச் சென்றடைந்ததும். சாதாரண மக் களுக்கு புரிந்து கொள்ளவும் முடிந்தது. இவ்வாறு இலக்கியத்தில் சிக்கலான நிலையை முறியடித்து, கருத்துகள் பார்வையாளர்களைச் சென்றடைய நடனத்தால் முடிந்தது. பாடப்பகுதில் கதையையோ, கவிதையையோ அரங்கேற்றம் செய்வ தன் வாயிலாகக் கருத்துக்களைக் குழந்தைகளுக்கு எளிதாக முடிகிறது. இது போன்ற செயல்பாடுகளே இந்த அலகில் குறிப்பட்டுள்ளன.

## கற்றல் செயல்பாடுகள்.

- பாடப்பகுதியின் கருத்துக்களுக்குப் பொருத்தமான நடனக்கலைகளை வெளி யிட முடிகிறது.

## கருத்து, திறன்.

- கவிதைகள், கதைகள் போன்றவற்றை நடனவடிவத்தில் வெளியிடலாம்.

## செயல்பாடு.

- கருத்துக்களைக் கண்டுபிடித்தல்.
- நடனத்திற்காக ஒரு பாட்டு (கானம்)
- நடனக்கலை.
- கலை வெளியிடு.

- நடனக்களைளலைகள் எவ்வாறு

## உள்ளடக்கம்

பாடப்பகுதியில் கருத்துகளைக் கலந்துரையாடலின் வாயிலாகக் கண்டுபிடிக்கின்றனர்..........வடிவத்திற்கு மாற்றிகின்றனர். நடனக்கலைக்குத் தேவையான அரங்கமைப்பு, வேடத்திற்கான திட்டம், அலங்காரப்பொருட்கள் போன்றவற்றை சேகரிக்கவும். குழுப்பயிற்சி நடத்தவும் செய்கின்றனர். வெளியிடுதலின் மேன்மைகள், குறைகள் போன்றவற்றைக் கலந்துரையாடலின் வாயிலாகக் கண்டுபிடித்து வெளியிடவும் செய்கின்றனர். புதிய நடனக்கலைகள் தயாரிப்பதற்கான திறனைப் பெறுகின்றனர்.

## கற்றல் செயல்பாடுகள்.

- வகுப்பில் குழந்தைகளைப் பலவித குழுக்களாக்கிய பிறகு பாடப்பகுதிகள்
- கலந்துரையாடலுக்காக கொடுக்கப்படுகிறது. அவற்றின் கருத்துக்களைக் கண்டுபிடிக்கும் படிக் கேட்டுக்கொள்ளப்படுகிறது. பொது விவாதத்திற்கு உட்படுத்த வேண்டியவற்றைக் கண்டுபிடிக்கவும்.
- பாடத்திட்டதின் பகுதியாகவோ, சமூக நன்மைதரும் கருத்தாகவோ அமைய வேண்டும்.
  *எ கா: சுற்றுப்புறப்பாதுகாப்பு, தண்ணீரை வீணாக்குதல், குறும்பு அன்பு, பெரியோர்களிடம் மரியாதை, தேசப்பற்று போன்றவை*
- கண்டுபிடித்த கருத்துக்களின் முக்கியத்துவம், கலந்துரையாடல், ஒருங்கிணைப்பு

  நடனக் கலைகளுக்குத் தேவையான பாடப்பகுதி/கருத்தைக் கண்டுபிடித்தல்
- பாடப்பகுதியில் கவிதை முழுவதுமாக அமையலாம்.
- கண்டுபிடித்த கருத்துகள் நடனக்கலைஞர்களுக்குப் பொகுத்தமான விதத்தில் பாடல் வடிவத்தில் வெளியிடுகின்றனர். தேவையான விவரங்களைச் சேர்த்து நடனக்கலையை முழுமையாக்குகின்றனர். குழுக்கள் தயாரித்ததை மேன்மைபடுத்த வேண்டும் (மொழி ஆசிரியர்களின் உதவியை நாடலாம்)

  <u>நடனப்பயிற்ச்சி</u>

  ஆசிரியரின் உதவியோடோ, நடனப்பயிற்சி பெற்ற வகுப்பு மாணவியோடோ அல்லது மூத்த மாணவிகளின் உதவியோடோ பாடலுக்கு ஏற்ற நடனம் தாயராக்குகின்றனர்.
- தொடர்ந்து வகுப்பு நேரத்திற்குப் பிறகு அதிக நேரம் செலவாக்கி பயிற்சி பெறுகின்றனர்.
- வேடங்கள் ,அலங்காரங்கள், அரங்கமைப்பு போன்றவற்றிற்கு பெற்றோர்–ஆசிரியர் கூட்டமைப்பை நாடலாம்.
- குறிப்பிட்ட நேரத்தில் வரவேற்கப்பட்ட முக்கிய நபர்களின் முன்னிலையில் வெளியிடுகின்றனர்.
  (தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினர், தலைவர்கள், பள்ளியில் முக்கிய மாணவர்கள், போன்றோரை குழந்தைகள் சுயமாக தயாரித்த அழைப்பிதழைப் பயன்படுத்தி அழைக்க வேண்டும்)
- வெளியிட்டபின்னர் அழைக்கப்பட்ட நபர்களை உட்படுத்திக் கலந்துரையாடல் நடத்துகின்றனர். அவற்றின் முக்கிய குறிப்புகளை உட்படுத்தி புதிய நடனக்கலைகள் வெளியிட வேண்டும்

# ஆறாம் வகுப்பு

## அலகு-1 :

### முன்னுரை :

நம்முடைய பாரம்பரியத்தின் முக்கியமான ஒரு பகுதியே நடனங்கள். ஒவ்வொரு நடனத்திற்கும் அதற்கே உரித்தான தனித்தன்மைகள் உண்டு என்று அறிவதுடன் , இவற்றிற்கிடையில் ஏராளமான ஒற்றுமைகளும் காண்பிக்கப்படுகிறது என்பதை நாம் அறிய வேண்டும். நுணுக்கமான உற்றுநோக்கலின் வாயிலாக மட்டுமே நம்மால் புரிந்துகொள்ள முடியும். இதற்கு முறையான பயிற்சி தேவையாகும். அறிவியல் பூர்வமான தொடர்பு கற்றலுக்குத் தேவையாகும். நமக்கு சுற்றிலுமுள்ள உயிரினங் கலைப்போல் பின்பற்றுவதற்கு நடனவடிவங்களின் வெளியிடுதலே ஒரு முக்கிய காரணியாக அமைந்தது. நம்முடைய குழந்தைகளிடம் இந்த ரசனை அதிகமாகவே காணப்படுகிறது.அதை முறையான கற்றலுக்கு வழிவகுத்துக் கொடுப்பதே அறிவியல் பூர்வமான தொடர்பு என்று பொருள்படுகிறது. எனவே தான் முத்திரைகளுடையவும், விளையாட்டுகளுடையவும், நடிப்பினுடையவும் அறிவியல்பூர்வமான இடத்திற்குக் குழந்தைகளைக் கொண்டு செல்ல இவ்வலகை இரசிக்கும் தன்மையில் வெளியிடுவதற்குத் தேவையான கவனம் செலுத்த வேண்டும்.

### கற்றல் அடைவுகள்

- நாட்டுப்புற நடன வடிவங்களை வெளியிடுதல்.

### கருத்துகள், முடிவுகள்

- நாட்டுப்புற நடனவடிவங்கள் ஒவ்வொன்றிலும் அதன் வேகத்தில் வேறுபட்டுள்ளது.
- பலவிதமான நடன வடிவங்களைக் கண்டு அசைவுகளைப் புரிந்து கொண்டு வெளியிடுவதற்கான திறன்.

### உள்ளடக்கம்

நடனக் கலாச்சாரத்தின் வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணியாகயிருப்பது நாட்டுப்புற நடனமேயாகும். அதன் அடிப்படையில் தான் இன்று இலக்கிய நடனங்கள் வளர்ச்சிப்பாதையில் சென்றுகொண்டிருக்கின்றது. எனவே தான் இது போன்ற நடனங்களின் கற்றலும், வெளிப்படுத்தலும் இப்பாடப்பகுதில் முக்கிய பாடமாகிறது. ஒவ்வொரு பகுதியுகளுடையவும் நடனக்காலடிகளின் வேகம் நுட்பம் அசைவுகளின் சிறப்புகள் என்பவையெல்லாம் குழந்தைகளுக்குப் புரிந்துகொள்கின்ற முறையில் வெளியிட வேண்டும். இதற்கு நடனக்கலைஞர்களின் உதவியையோ, கணிணியின் உத

வியையோ நாடலாம். இரண்டு அல்லது மூன்று நாட்டுப்புற நடனங்களையாவது கட்டாயம் படித்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட செயல்பாடுகள் குழந்தைகளை நடன வகுப்புகளுக்கு ஆர்வமூட்டக்கூடியதாக அமைகிறது.

## கற்றல் செயல்பாடுகள்.

- வட்டாரப் பழக்கதிலுள்ள ஏதேனும் ஒரு நடனத்தை எவ்வாறு வெளியிடலாம் என்று குழுக்களில் கலந்துரையாடல் நடத்துகின்றனர். அதற்கு பிறகு அதன் கால டிகளைப் பற்றி பயிற்சியைத் தொடங்குகின்றனர். இதற்கு இந்த நடனத்தில் பயிற்சி பெற்ற குழந்தைகளையோ, ஆசிரியர்களையோ, வட்டாரத்திலுள்ளவர்களையோ பயன்படுத்தலாம். பயிற்சி பெற்ற ஒரு நாட்டுப்புற நடனத்தைக் பற்றிய குறிப்பை எல்லாக் குழந்தைகளும் தயாராக்குகின்றனர். அதற்கு தேவையான படங்களும் தயாராக்க வேண்டும். எடுத்துக்காட்டாக நம்முடைய கேரளத்தில் பழக்கத்திலுள்ள ஒரு நடனத்தைப்பற்றி ஆராய்வோம்.
- ஆசிரியர் ஒரு குறுந்தட்டை இட்டுக் காண்பிக்கின்றார். குழந்தைகள் அவற்றின் சிறப்புகள் ஒவ்வொன்றாக கூறுகின்றனர். சிலவற்றை ஆசிரியர் எடுத்துரைக்கி றார்.
- வேறொரு நாட்டுப்புற நடனத்தைப்பற்றிய குறுந்தட்டு இட்டுக் காண்பிக்கப்படு கிறது. குழுவாகப்பயிற்சி எடுக்கின்றனர். ஆசிரியரின் உதவியையும் நாடலாம். இவையுடன் தொடர்புடைய விவரங்களைச் சேகரித்து வருமாறு கூறப்படுகிறது. இவற்றை எல்லாக் குழந்தைகளும் செய்ய வேண்டும். தேவையான விவரங்களை ஆசிரியர் நல்க வேண்டும்.
- திருவாதிரை
  எட்டு அல்லது அதற்கு அதிகமான பெண் குழந்தைகள் பங்கு பெறும் ஒரு நட னமே திருவாதிரை. கேரளத்திற்கே உரிய வேடங்களே இதற்குப் பயன்படுத்தப் படுகிறது, தலையில் கொண்டை கட்டி முல்லைப்பூ, தசபுஸ்பம். என்பவை சூடி, சந்தணக்குறியிட்டு, எளிய கேரளியர் ஆபரணங்கள் அணிந்து, கசவு முண் டும், நேரியலும், ஜாக்கெட்டும் அணிந்து அரங்கத்திற்கு வருகின்றனர். கணப தியை வணங்கி நடனத்தை ஆரம்பிக்கின்றனர். பிறகு சரஸ்வதியை வணங்கிக் கொண்டு பாதத்தை பாடலுக்கு ஏற்றவாறு பதிக்கின்றனர். இவ்வளவு நேரம் கடவுளை வணங்குகின்ற முறையில் கைகூப்பியும், இதற்கிடையே தாளவரி சைக்கனுசரித்து காலடிகளை மாற்றிப் பதித்தும் நடனமாடுகின்றனர். பதம் பாடத் துவங்கியதுடன் பதித்த காலத்தில் காலடிகளை வைத்து அதற்கடுத்த காலத் திற்கு கடந்து மேல்காலத்தில். செய்கின்ற முறையில் காலடிகளை வைக்க வேண் டும். கைகளின் அசைவுகள் மிகவும் அழகுடையதாகும். வேறுநடனங்களு மாக கலந்து விடாமல் கவனிக்க வேண்டும். பதம் பாடிய பிறகு குறத்தி, கும் மி, வஞ்சி, நாடன் போன்ற பாட்டுகள் பாடி ஆரவாரத்தோடு நடனமாட வேண் டும். இந்த மூன்றாம் பகுதியின் முடிவில் மங்களஸ்துதி பாடி ஒன்றோ இரண்டோ தரம் காலடிகளை பதித்து முடிக்க வேண்டும். ( இந்த முறையில் ஆக வேண் டும் நாட்டுப்புற நடனங்கள் பற்றிய தகவல்கள் சேகரித்தல்.)
- குழந்தைகள் அவர்களுடைய வட்டாரத்தில் பழக்கத்திலுள்ள ஏதாவது ஒரு நாட் டுப்புற நடனத்தை வெளியிடுவதற்கு ஏற்ற முறையில் விவரங்களைத் தயாராக் குகின்றனர். அதனுடன் தொடர்புடைய வரலாற்றையும் திரட்டுகின்றனர். வெளி யிடல்,தகவல் திரட்டல் போன்றவற்றை தொடர் மதிப்பீடு செய்கின்றனர்.

### மதிப்பிடுதல்.

*குறிப்புகள்.*

- வெளியிடுதலின் இசை அறிவு.
- அசைவுகளின் தன்மை.
- மெய்வழக்கம்.
- முழுமையான விவரங்கள் சேகரித்தல்.
- மொழி.
- உற்றுநோக்கலின் நுணுக்கம்.

## அலகு-2, சூத்திரங்கள் பயில்வோம்

### முன்னுரை.

எந்த ஒரு நடனத்திற்கும் முதுகெலும்பு என்று கருதப்படுவது அதன் முறையான நடனமேயாகும். முறையான நடனம் என்று கூறப்படுவது சூத்திரங்களின் ஒரு வடிவமாகும். அதனால் தான் சூத்திரத்தை சாதகம் செய்தல் அந்த நடனத்தை அறிவதற்கான மிக முக்கிய காரணியாகக் கருத வேண்டும். கூடுதல் இலக்கிய நடனவடிவங்களிலும் நடிப்புகள் ஏறக்குறைய ஒரே போலிருக்கும். என்றால் சூத்திரங்கள் முழுவதும் மாறுபட்டிருக்கும் அதாவது ஒரு நடனத்தின் தனித்தன்மையை வெளியிடுவதற்கு அதனுடைய சூத்திரங்களை மிகவும் ஒழுங்கான முறையில் பயிற்ச்சி பெற்றே தீர வேண்டும்.

### கற்றல் அடைவுகள்.

- முறையான சூத்திரங்களைப் பார்த்துப் பயிற்சி பெறுகின்றனர்.

### கருத்து, திறன்.

- இலக்கிய நடனவடிவங்களில் ஏராளமான அடிப்படை சூத்திரங்கள் உண்டு.
- சூத்திரங்களைப் பலவித தாளங்களில் முறைப்படுத்தியிருக்கின்றனர்.
- சூத்திரங்களைக் குறிப்பிட்ட முறையில் தாளத்தோடு வெளியிடுவதற்கான் திறமை.

### கற்றல் செயல்பாடுகள்.

- நம்முடைய நாட்டில் பழக்கத்திலுள்ள எராளம் இலக்கிய நடனவடிவங்கள் உண்டு, எனினும் ஆண் குழந்தைகளுக்கும், பெண்குழந்தைகளுக்கும் ஒரே மாதரி செய்ய முடிகின்ற பரத நாட்டியத்தின் சூத்திரங்களையே வகுப்பறையில் பயிற்சி அளிக்கச் செய்யவேண்டும். பரத நாட்டியத்தின் சூத்திரங்களான தட்டு, நாட்டு முறை, பரவல் போன்றவை பயிற்சி அளிக்கப்படுகின்றன.
- இவை பயிற்சி அளிக்கப்படுவதோடு ரூபதாளம், ஆதி என்பவையை அறிமுகப் படுத்த வேண்டும்.

அத்துடன் அவற்றின் காலம்( ஒன்று இரண்டு, மூன்று காலங்கள்)

- 1. ................– எட்டு வகைகளும் பயிற்ச்சி அளிக்க வேண்டும். 1, 2, 4, 5, 6, 7 என்பவை ஆதி தாளத்திள் பயன்படுத்தப்படுகிறது.
- ..........–

*தைய் தைய்*
R L *(வலது கால், இடது கால்.)* (place R and L)
R *தைய்யா, தைய்* L *தைய்யா, தைய் – 2*
R *தைய்யா தைய்யா தைய்,* L *தைய்யா தைய்யா தைய்– 3*
R *தைய்யா தைய்யா தைய்யா தைய்,* L*தைய்யா தைய்யா தைய்யா தைய் –4*
R *தைய்யா தைய்யா தை தை தாம்,* L *தைய்யா தைய்யா தை தை தாம் – 5*
R *தை தை தாம்...... தை தை தாம்...* L *தை தை தாம்...... தை தை தாம்– 6*

R *தைய்ய தைய்ய தைய்ய* L *த* R *தைய் தைய் தாம்...* L *தைய்ய தைய்ய தைய்ய* R *த* L *தை தை தாம்–7*
R *தை* L *தை* R *தை* L *தை (*R *தி* L *தி* R *தை)*
L *தை* R *தை* L*தை* R *தை (*L *தி* R *தி* L *தை )*

} IInd speed

- நாட்டடவுகள்

இந்தப் பகுதியிலுள்ள எட்டு சூத்திரங்களுக்கும் ஒரே சொற்றொடர்களே பயன் படுத்தப்படுகிறது.

*தைய்யும் தத்த தைய்யும் தாஹ*
*தைய்யும் தத்த தைய்யும் தாஹ*

- இந்தப் பகுதியில் நான்கு சூத்திரங்கள் உண்டு

*தா தை தை தா*
*தி தை தை தா*

இது போன்ற சொற்களே எல்லா சூத்திரங்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றன. இந்தச் சூத்திரங்களைப் பயிற்சியளிப்பதற்கு நல்ல பயிற்சி பெற்றவரின் உதவியை நாட வேண்டும்

## மதிப்பிடுதல்.

*குறிப்புகள்*

- சூத்திரங்களின் ஒழுங்கமைப்பு.
- பங்களிப்பு.
- தாளத்தின் வேறுபட்ட காலங்கல்.

# அலகு–3: முத்திரை மொழி

## முன்னுரை.

ஒரு மனிதனில் வளர்ச்சி நிலைகளில் மொழி முக்கிய பங்கு வகுக்கிறது. வாய் மொழிக்கும், எழுத்து மொழிக்கும் முன்பே சைகை மொழியின் வாயிலாக அவன் கருத்து பரிமாற்றம் நடத்த ஆரம்பித்தான். சைகை மொழியின் மேம்பட்ட பகுதியாகவே கை முத்திரைகளைக் காணவேண்டும்.

கை முத்திரைகளின் வாயிலாகக் கருத்துப் பரிமாற்றம் செய்வதற்கான திறமை இலக்கிய நடனங்களின் ஒரு சிறப்பம்சமாகும். அதனால் தான் இந்தக் கருத்துப்பரிமாற்ற முறை. குழந்தைகள் கற்கும் முறையில் செயல்பாடுகளை நடத்த வேண்டும்.

**கற்றல் அசைவுகள்.**

- சுற்றிலுமுள்ள பொருட்களைக் கை முத்திரைகளின் வழியாகக் காண்பித்தல்.

**கருத்து, திறன்.**

- அன்றாட வாழ்க்கையில் கை முத்திரைகளுக்கு முக்கியத்துவம் உண்டு.

நடனத்தில் கைமுத்திரைகளை இலக்கிய முறையோடு ஒழுங்கு படித்தியுள்ளனர்.

**கற்றல் செயல்பாடுகள்.**

- பூ, மண், மழை, காற்று போன்ற பெயர்களை எவ்வாறு முத்திரை வடிவத்தில் காட்டலாம்?
- இரண்டு குழுவாகப் பிரிந்து முத்திரை காண்பித்து பொருள் கூறி விளையாட்டைத் தொடர்தல்.
- சிறிய வாக்கியங்களை இது போல் செய்யவைக்க வேண்டும். ஆசிரியர் ஒரு குழுவிற்கு குறிப்பு எழுதி கொடுக்கின்ற எளிய வாக்கியத்தை முத்திரை வடிவத்தில் காண்பிக்கின்றனர். மற்ற குழுக்கள் அதனுடைய பொருளைக் கூறுகின்றனர். இவ்வாறு இரண்டாவது குழுவிற்கு எழுதிகொடுத்து விளையாட்டை தொடரவேண்டும். குறிப்பு எழுதி கொடுக்க வேண்டியவை.

    *எங்கே செல்கிறாய்?*
    *கையில் பணம் இருக்கிறதா?*

## அலகு–4

**முன்னுரை**

இலக்கிய நடனங்களில் முத்திரைகளைப் பற்றி எடுத்துரைக்கின்ற ஏராளமான புத்தகங்கள் உண்டு. அவற்றில் முக்கியத்துவம் வாய்ந்ததே நாட்டிய சாஸ்திரம், அபிநய தர்பனம் என்பவை. இந்த நூல்களிலுள்ள முத்திரை முறைகளைக் குழந்தைகளுக்கு கற்றுத் தரவேண்டும். இதற்காகக் கணினி தொழில் நுட்பத்தையும் பயன்படுத்தலாம்.

**கற்றல் அடைவுகள்.**

- அடிப்படை முத்திரைகளை (முழுமையில்லாததுமான) காண்கின்றனர், பயிற்சி பெருகின்றனர். இவற்றைப் பயன்படுத்திக் கருத்துப் பரிமாற்றம் செய்கின்றனர்.

**கருத்து, திறன்.**

- இலக்கிய நடனவடிவங்களுக்குப் பலவிதத்திலுள்ள அடிப்படை முத்திரைகள் உண்டு.

- ஒவ்வொரு முத்திரைக்கும் சரியான பொருளும், பயன்படுத்தும் முறையும் உண்டு

## கற்றல் செயல்பாடுகள்

- ஆசிரியர் பரதநாட்டியத்திற்குப் பயன்படுத்தும் முத்திரைகளைக் காண்பிக்கிறார்.
- குழந்தைகள் ஒவ்வொருவராகப் பயிற்சி எடுக்கின்றார்.
- முறைகளை அறிமுகப்படுத்துகின்றார்.( குறுந்தட்டு பயன்படுத்துகின்றனர்.)

  *அசம்யுக்த சமுத்திரசோகம்*
  *பாதக்திரிபதாகே*
  *அர்த்த பாதக கத்தரிமுகா*
  *மயாராவேத்திய சந்திரேஞ்சா*
  *ஆராள சகதுண்தக*
  *கபிதம கடாகமுக*
  *சுபி சந்திரகலா பத்மகோச*
  *சர்பசிரங்கமா*
  *மிருகாசீர்சோ சிங்கமுகா*
  *காம்சுலஞ்ச அலபத்கமா*
  *சதுரே பிரமரசென்சவ*
  *ஹம்சஸாஸோல் ஹம்சபக்ஷக*
  *சம்தம்சோ முகுள சென்சம*
  *தாமரசூட திரிசூலக*
  *இதியாசம்யுக்த*
  *ஹஸ்தானாம்*
  *அஷ்டபிம் சதி ரீரிதம்*

- 1. பதாகம்- கொடி
  2. திரிபதாகம்- முக்கொடி
  3.அர்த்த பதாகம்- அரைக்கொடி
  4. கர்தாரிமுகம்- கத்திரிக்கோல் முகம்
  5. மயூரம் - மயில்
  6.அர்த்த சந்திரன்- அரை சந்திரன்
  7.அராளம்- விதையின் முளை
  8. சுகதுண்டம்- கிளிச்சுண்டு
  9.முஷ்டி -முறுக்கிய கை
  10.சிகரம்- மேற்பகுதி
  11.கபித்தம்- விளாம்பழம்
  12.கடாகாமுகம்- வளையல்
  13. சூசி- ஊசி
  14.சந்திர கலை- பிறைச் சந்திரன்
  15. பத்மகோசம்- தாமரையின் உட்பகுதி
  16.சர்ப சிரஸ்- பாம்பின் தலை
  17.மிருக சீர்ஷம்- மானின் தலை
  18. சிங்கமுகம்- சிங்கமுகம்
  19. காங்குலம்- சிறியது, வால்

20. அளபத்மம்- மலர்ந்த தாமரை
21. சதுரம்- சதுரம்
22. பிரமரம்- வண்டு
23. ஹம்ஸாஸியம்- அன்னச்சுண்டு
24. ஹம்சபக்ஷம்- அன்னச்சிறகு
25. ஸம்தம்ஸம்- சவனை
26. முகுளம்- மலர்மொட்டு
27. தாமரசூடம்- கோழி
28. திரிசூலம்- திரிசூலம்




**தொடர்செயல்பாடுகள்.**

முத்திரைகளின் முறைகளைக் கண்டுபிடித்துப் பயிற்சியளிக்கின்றனர்.

மேற்கோள்: குறுந்தட்டுகள்.

# அலகு–5: கதகளியின் அலங்காரம்

## முன்னுரை

கதாபாத்திரங்களின் தனித்தன்மையைப் பார்வையாளர்கள் புரிந்து கொள்வதற்கான முதல்நிலையே அவர்களின் ஆடை அலங்காரமும். வேடங்களும். நடனமாடுபவர்கள் அணிகின்ற ஆடைகள், ஆபரணங்கள் என்பவையும் அவர்கள் பயன்படுத்துகின்ற வாள், செங்கோல், தலைப்பாகை போன்றவையும் அலங்காரத்தில் வருகின்றன. அரங்கமைப்புகளும் அலங்காரத்தின் ஒரு பகுதியாகும். பாரதத்தில் பலவித நடனப்பழக்கங்கள் வேறுபட்ட வேடங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. கதாபாத்திரங்களுக்குப் பொருத்தமான வேடங்கள் நாட்டியத்தில் தான் பயன்படுத்தப்படுகின்றன. ஒரே கதாபாத்திரத்தின் வேடம், பலவித நடனவடிவங்களுக்கு பலவித முறையிலாகும். நாட்டுப்புற நடனம் என்றால் ஏறக்குறைய வட்டார வேடங்களே பயன்படுத்தப்படுகின்றன. காலடிகள் வைப்பதிலும், அசைவுகளிலும் உள்ள வேறுபாட்ட தன்மையே அலங்காரத்திற்குக் காரணமாகிறது.

## கற்றல் அடைவுகள்.

- கதகளி அலங்காரங்கள், செயற்கையான நடிப்பு என்பவற்றைக் குறித்துள்ள விவரங்களை சேகரித்தல்.

## கருத்து, திறன்.

- கதகளியில் அலங்காரத்திற்கு முக்கியத்துவம் உண்டு.
- கதகளியில் செயற்கையான நடிப்பு சிறப்பு வாய்ந்ததாகும்.

## கற்றல் செயல்பாடுகள்.

- நடனவிழாவின் பாகமாக பள்ளியில் கதகளி ஏற்பாடு செய்யப்படுகின்றது. கதகளி அரங்கத்திற்கு வருவதற்கு முன்பு மூன்று, நான்கு மணி நேரம் அலங்காரங்களைக் காண்பதற்கும், குறிப்புகள் தயாராக்கவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.
- கதகளி அலங்காரத்தைப் பற்றிய கண்காட்சி பள்ளியில் நடத்தல்.
- ஒரு வட்டார வல்லுநரின் உதவியோடு ஒவ்வொரு வகையான வேடங்களைப் பற்றி எழுதுதல்.
- கதாபாத்திரத்தின் குணங்களுக்கு ஏற்ப கதகளியில் வேடங்களைப் பச்சை, கத்தி, கரி, தாடி, மினுக்கு எனப்பிரிவுகளாக்கும் போது ஒவ்வொன்றிற்கும் உள்ள அலங்காரத்தைக் குறித்துள்ள குறிப்பு எழுதுதல்.
- படத்தொகுப்பு தயாரித்தல்.
- ஒவ்வொரு ஆடை, ஆபரணங்களுக்கும் கதகளியிலுள்ள சிறப்புப் பெயர்களை தெரிந்திருக்க வேண்டும். எ டு : கிருஷ்ணமுடி, கழுத்தாரம், நெற்றிநாட, கிரீடம், மனயோல, நீலம், படியரஞ்ஞாணம், ஒற்றநாக்கு, உடுத்திகெட்டு, தோல்பூட்டு, ஹஸ்தகடகம், பருத்திக்காமணி, கண்டப்பூ, கச்சமணி போன்றவை.

### மதிப்பிடுதல்.

- கதகளியைப் பற்றிய சொற்பொழிவுகள் நடத்தி, அதைக்குறித்துள்ள குறிப்புகள் தயாராக்க வேண்டும். உற்றுநோக்கல் குறிப்புகளையும், சேகரிப்புகளையும் மதிப்பிட வேண்டும்

*குறிப்புகள்*

- முழுமை.
- ஒழுங்கு.
- மொழி.
- முறை

## அலகு–6: வாய்மொழிச் சிந்துவிற்கு சுவடு வைத்தல்

### முன்னுரை.

இலக்கிய நடனத்திற்கும், வாய்மொழிச் சிந்துவிற்கும் முதுகெலும்பாக இருப்பது தான் வாய்மொழிச் சிந்து பயன்படுத்துவதிலுள்ள வேறுபாடுகள் மட்டுமே இந்த இரண்டு பிரிவுகளிலும் காணப்படுகின்றன. இலக்கிய நடனங்களில் தூய்மையான நடனமுறையில் வாய்மொழிச் சிந்துவிற்கு முக்கியத்துவம் உண்டு. எ.கா; ஜதி, ஜதிஸ்வரம், அலாரிப்பு, தில்லான போன்றவை.

பஞ்ச நடைகளும், அடவுகளும் கற்ற குழந்தைகள் அவை உபயோகித்து வாய்மொழி சிந்துக்கு ஏற்ப தாள வித்தியாசங்களை ஒழுங்குபடுத்துகின்றனர்.

### கற்றல் அடைவுகள்.

- சுயமாகத் தயாரித்த வாய்மொழிச் சிந்துவிற்கு ஏற்ப நடனச் சுவடுகள் வைக்கின்றனர்.

### கருத்து, திறன்.

- இலக்கிய நடனவடிவத்தில் வாய்மொழி சிந்துவிற்கு முக்கியத்துவமுண்டு.
- வாய்மொழிச் சிந்து தாளங்களுக்குட்பட்டது.

### கற்றல் செயல்பாடுகள்

- முன் வகுப்பில் பயிற்சி பெற்ற வாய்மொழிச் சிந்துவுடன் தொடர்புடைய செயல்களை மீண்டும் மீண்டும் செய்கின்றனர்.
- புதிய எளிதான வாய்மொழிச்சிந்துக்களை ஒழுங்கு படுத்தக் கேட்கின்றனர்.( குழுச் செயல்பாடுகள் ஆகலாம்)
- இந்த வாய்மொழிச் சிந்துவிற்கு ஒரு பொதுவான குணத்தை கொண்டுவருவதற்காக பயன்படுத்தக்கூடிய வார்த்தை.

எ. கா; த, தி, தோம், கிட, தரிகிட, நம் என்பவை.

- பொதுவாக ஆதிதாளத்தில் ஒழுங்குபடுத்தினால் போதும்.
- ஒவ்வொரு குழுவிலும் ஒழுங்குபடுத்திய வாய்மொழிச் சிந்துக்கள் சரியானதா என்று திட்டப்படுத்த வேண்டும்.
- அதன் பிறகு இந்த வாய்மொழிச்சிந்துவை வைத்து சூத்திரங்களை ஒழுங்கு படுத்தி நடனவடித்திலாக்கி வெளியிடவேண்டும்.

## மதிப்பீடு.

- ஒவ்வொரு குழுக்களின் வெளியிடல் ஒருவருக்கொருவர் மதிப்பிடுகின்றனர். ஆசிரியரின் மதிப்பிடல், வார்த்தைகளின் சிறப்பு, தாளவரிசை, பயன்படுத்திய சூத்திரங்களின் சிறப்பு போன்றவைகளைக் குறிப்புகளாக்கலாம்.

# ஏழாம் வகுப்பு

## அலகு-1

### முன்னுரை ;

பாரதம் கலைகளின் ஒரு கூடாரமாகும். இதில் நடன வடிவங்கள் அதிகமாகும். முக்கியமாகத் தென்னிந்தியாவில்தான் இலக்கியநயம் வாய்ந்ததும் இல்லாததுமான ஏராளம் நடனவடிவங்களைப் பார்க்க முடிகின்றது. இவையெல்லாம் எந்தெந்த காரியங்களால் மற்றவையிலிருந்து வேறுபடுகிறதோ அதேபோல் எந்தெந்த காரியங்களில் ஒன்றுமை காணப்படுகிறது என்பதைக் குறித்து நுணுக்கமான ஆராய்தலின் முலம் தெரிந்து கொள்ள வேண்டும். என்றாலும் நமக்கு இவற்றின் ஆன்மாவைத் தொட்டுப்பார்க்க முடியும். இவற்றின் அடிப்படைநிலைகளைக் குறித்து மாணவர்கள் அறிவு பெற்றிருக்கிறார்கள். இங்கிருந்துகொண்டு இலக்கியத்திற்கு அறிவுகளைக் கொடுக்கின்ற முறையில் செயல்கள் நடத்தப்பட வேண்டும். மாணவர்களுக்கு பழக்கமுள்ள காரியங்களைக் கூடுதலாகக் கூறுக்கொண்டு நடனத்தின் சிக்கலான நிலையையும் கூறவேண்டும்

### கற்றல் அடைவுகள்.

- கேரளத்தின் நடனங்களை இலக்கியநயம் வாய்ந்தது. நாட்டுப்புற நடனம் என்ற முறையில் வகைப்படுத்தலாம்.

### கறுத்து, திறன்

- கேரளத்தில் பழக்கத்திலுள்ள நடனங்களை இலக்கிநயம் வாய்ந்த நடனம், நாட்டுப்புற நடனம் என இரண்டாக பிரிக்கலாம் என்று புரிந்து கொள்கிறார்கள்.

### உள்ளடக்கம்.

நடனத்திற்கான வேடம், நடனத்திற்கு பயன்படுத்தப்படும் சுவடுகளின் முறை, முத்திரைகள், பலவித தாளங்கள் என்பவைக்கு அனுசரித்து அவற்றை வகைப்படுத்துகின்றனர். நாட்டுப்புற நடனம் வட்டாரத்திற்குகேற்ப வேறுபடுகிறது. இலக்கிய நடனம் வட்டாரத்திற்கேற்ற மாற்றங்களைவிடக் கூடுதலும் ஒரே போலிருக்கும். ஒவ்வொரு நடனத்தின் சிறப்புகளைப் பற்றியும் தெளிவு பெறுகின்றனர்.

### கற்றல் செயல்பாடுகள்.

- ஆசிரியர் ஒரு எளிமையான வாய்மொழிச் சிந்துவிற்கு வேறுபட்ட முறையில்

சுவடுகளைப் பதிக்க வேவ்வேறு குழுக்களுக்குக் குறிப்புகள் கொடுக்கின்றனர். முன்வகுப்புகளிலிருந்கு கிடைத்த தெளிவுகளிலிருந்து தங்களுடைய சுவடு பதித்தல் இலக்கிய நடனத்திற்கு உட்பட்டதா, நாட்டுப்புற நடனத்திற்கு உட்பட்டதா என்று கண்டுபிடிக்கின்றனர். இவ்விரு நடனத்திலுமுள்ள அசைவு வித்தியாசங்களை புரிந்து கொள்கின்ற முறையில் செயல்களை ஒழுங்குபடுத்த வேண்டும்.

- குறுந்தட்டின் உதவியோடு கேரளத்தின் பல நடனங்களை அறிமுகப்படுத்துகின்றனர். இவற்றை வகைப்படுத்துமாறு கூறுதல்.

# அலகு–2

## முன்னுரை ;

பாடல்களுடன், தாளங்களும் சேர்ந்த சொற்களுக்குப் பொருத்தமான சுவடுகள் வைக்கவும், நடனம் ஆடுவதற்கான திறமை எல்லா மாணவர்களிடமும் மறைமுகமாக காணப்படுகிறது. மனதிற்குப்பிடித்த பாடல்களையும், இராகங்களையும் மீண்டும், மீண்டும் கேட்பதற்கு முதியவர்கள் கூட விருப்பப்படுவார்கள். இந்த ஆர்வம் மாணவர்களிடம் கூடுதலாகும். இந்த விருப்பம் மனதையும், தொடர்ந்து உடலையும் ஈர்க்கின்ற நிலையில் நடனம் ஆடுகின்றனர். தெரிந்த பாடலுக்கு நடனம் ஆடக்கூடிய இந்த மனநிலையைக் கூடுதல் பயன்படுத்தியே இந்த அலகில் செயல்கள் வரிசைப் படுத்தப்படுகின்றன.

## கற்றல் அடைவுகள்

- குறிபிட்ட பாடலுக்கு ஒற்றுமையோடு நடனம் ஆடுகின்றனர்.

## கருத்து, திறன்.

- பொருத்தமான நடன ஒருங்கிணைப்பை தேர்வு செய்து பயன்படுத்துகின்றனர்.
- பார்த்துப் பழகிய சூத்திரங்களையும், நடன ஒழுங்குமுறைகளையும் பயன்படுத்துகின்றனர்.

## உள்ளடக்கம்.

குழுவாக நடனம் ஆடுவதற்கான திறமை என்பது நடனக்குழுவினர் தம்மிலுள்ள பொருத்தமேயாகும் என்பதைப் புரிந்து கொள்கின்றனர். நடனம் ஆடுவதற்கு அடிப்படையாக எடுத்திருகின்ற பாடலைக் குறித்துள்ள தெளிவு, பாடலுக்குப் பயன்படுத்திய தாளங்களுக்குப் பொருத்தமான சூத்திரங்களைத் தகுந்தமுறையில் பயன்படுத்துகின்றனர்.

## கற்றல் செயல்பாடுகள்.

- குறுந்தட்டின் உதவியோடு ஆசிரியர் ஒரு தெரிந்த பாடலுக்கு குழு நடனத்தை குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்துகின்றனர். தொடர்ந்து இதுபோன்று

வேறொரு பாடலுக்குக் குழுவாக நடனமாடுவதற்கு மாணவர்களை உற்சாகப் படுத்துகின்றனர். குழுக் கலந்துரையாடலுக்குப் பிறகு மாணவர்கள் அவர்களுக் குத் தேவையான பாடலைத் தேர்ந்தெடுக்கின்றனர். அவர்களுக்குத் தெரிந்த சூத் திரங்களையும், சுவடுகளையும், முத்திரைகளையும், சுவடுகளையும் பயன்படுத்தி பொருத்தமான முறையில் நடனத்தை ஆடுகின்றனர். தொடர்ந்து ஆசிரியரின் அறிவுரைப்படி இந்தப்பாடலுக்குப் பொருத்தமான நடனவடிவங்களை உட்படுத் தியும். தேவையான மாற்றங்களை ஏற்படுத்தியும் நடனத்தை வெளிப்படுத்துகின் றனர். ஆசிரியரின் உதவி இந்தச் செயலுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இசை யில் திறமையான குழந்தைகளையும் குழுநடனத்திற்கு உதவியாகப் பயன்படுத் தலாம்.

## அலகு-3

### முன்னுரை;

வட்டாரத்திற்கேற்ப நடனங்கள் வேறுபடுகின்றன. இதைப்போன்று பரத நாட்டியம், மோகினியாட்டம், குச்சிப்புடி போன்ற நடனவடிவங்கள் கருத்துப்பரிமாற்ற முறையி லும் வேறுபடுகிறது. அரங்கேற்ற வேலையில் ஒரு கருத்தைப் பரிமாற்றம் செய்வ தற்கு மிகவும் பொருத்தமானதைத் தேர்ந்தெடுத்து நடைமுறைப்படுத்துவதற்கான திற மையைப் பெற வேண்டும் என்பதே இந்த அலகின் வாயிலாகக் கருதப்படுகிறது.

### கற்றல் அடைவுகள்.

- பலவித நடன வடிவங்களைப் பயன்படுத்திக் கருத்துக்களை வெளியிடுகின்ற முறையிலுள்ள அரங்கேற்றம் நடத்துகின்றனர்.

### கருத்து, திறன்.

- நடன அரங்குகளைக் குறித்துள்ள கருத்து.
- இவற்றைப் பயன்படுத்தி கருத்துக்களை வெளியிடுவதற்கான திறமை.

### உள்ளடக்கம்.

முக்கியமான நடனங்களில் கருத்துப் பரிமாற்றம் இரசனைக்குரியதாக நடத்துவதற் கும், மகிழ்ச்சிகரமாக்குவதற்கும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு நடனத்திற் கும் அதற்குரிய அழகின் வாயிலாகக் கருத்துப்பரிமாற்றம் செய்யும்முறை உண்டு,. மேலே தரப்பட்டுள்ள கருத்துப்பரிமாற்ற முறையை அரங்கேற்றத்திற்கு பயன்படுத்த வேண்டும். ஒரே கருத்தை வெளிப்படுத்துவதற்கு பலவித நடனவடிவங்கள் பயன் படுத்தகின்ற அழகைப் புரிந்துகொள்கின்றனர். பொருத்தமான திறன்/திறமை தேர்ந்தெடுப்பதற்கான திறனைப் பெறுகின்றனர்.

### கற்றல் செயல்பாடுகள்

- ஒரு குறிப்பிட்ட கருத்தை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நடனவடிவங் களின் மூலம் வெளியிடும் முறைகளில் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளைக் குழந்தைகள் புரிந்துகொள்கின்றனர்.

எந்தெந்தப் பகுதியில் வேறுபாடு உள்ளது

- அட்டவணைப்படுத்தல்.

  நடிப்பு.

  முத்திரை.

  சுவடுகள்.

  வேடங்களின் சிறப்பு.

  .  ........

- இது போன்று ஆசிரியர் வேறொரு கருத்தைக் கொடுக்கின்றார். மாணவர்களுக்கு தெரிந்த கருத்துக்களில் பல குழுக்களாகப்பிரிந்து பல முறையில் நடனத்தை வெளிப்படுத்துகின்றனர். இந்தச் செயல்களில் சரியான நேரத்தில் ஆசிரியர் ஈடு பட வேண்டும்.

### மதிப்பிடுதல்.

வெளிப்படுத்துதலின் சிறப்பு, முழுமையாக வெளியிடுதல் போன்றவற்றை விதிகளாக வைத்து மதிப்பிட வேண்டும்.

## அலகு–4

### முன்னுரை.

கை விரல்களைப் பலமுறைகளில் விரித்தும், சேர்த்தும் முத்திரைகள் உருவாக்குகின் றனர். இதில் ஒரு கையை வைத்து முத்திரைகள் தோற்றுவிக்கும் முறையை குறித்து நாம் முன்வகுப்பில் புரிந்துகொண்டுள்ளோம். இது போன்று இரண்டு கைகளையும் பயன்படுத்தி முத்திரைகள் காண்பிக்க வேண்டும். இவற்றையே கூட்டு முத்திரை என்கின்றனர். நம்முடைய மொழி வாய்மொழியிலிருந்து எழுத்து வடிவத்திற்கு வளர்ச் சியடைந்துள்ளது. எழுத்தும் உருவானது. நாட்டியக்கலை வளர்ச்சியடைந்த தோடு முத்திரைகளுக்கு அவற்றின் வடிவத்திற்கேற்ற பெயர்கள் சூட்டி அழைத்தனர். நாட் டிய சாஸ்திரத்லிருந்து தான் முத்திரைகளைத் தகுதி உடையதாக்கி அவற்றின் பயன் களை தீர்மானித்தது. என்றால் இது மட்டுமல்லாமல் முத்திரைகளையும், பயன்களை யும் குறிப்பிடுகின்ற வேறு நூல்களும் பிற்காலத்தில் உருவாகியுள்ளது. அபிநயநிர்த் தம்,ஹஸ்தலக்கூன தீபிக, மகாபாரத சூடாமணி என்பவை இவற்றில் சில. இந்த அல கின் வாயிலாக தெளிவான முத்திரைகளைப் பற்றி கூடுதல் தெரிந்து கொள்ளலாம்.

### கற்றல் அடைவுகள்.

- அடிப்படை முத்திரைகளைப்பற்றித் தெரிந்துகொள்கின்றனர்

### கருத்து, திறன்.

- முத்திரைகள் பலவிதமுண்டு.
- முத்திரைகளைச் சரியாகச் செய்வதற்கான திறன்.

## கற்றல் செயல்பாடுகள்.

- இரண்டு கைகளையும் சேர்த்துவைத்துக்கொண்டு காண்பிக்கின்ற வடிவங்களை மாணவர்கள் காண்பிக்கின்றனர். சிலவற்றை ஒரு கை மட்டுமே பயன்படுத்தி காண்பிக்கலாம் என்றாலும். இரண்டு கைளையும் சேர்த்துப் பயன்படுத்தும் போது கூடுதல் சிறப்படைகிறது

  எ. கா ; பூ, நதி, என்பவை.


- கூடுதல் காரியங்களை இரண்டு கைகளையும் பயன்படுத்திச் செய்யுமாறு கூறுதல். கிளி பறக்கிறது, நமஸ்காரம், கயறு (கொடி)
- இதுபோன்று இலக்கிய நடனங்களில் 24 ஒருங்கிணைந்த கை முத்திரைகள் பயன்படுத்தப்படுகின்றன. அபிநயதர்ப்பணம் கூறும் இந்த 24 ஒருங்கிணைந்த கை முத்திரைகளின் சுலோகங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

  *“அஞ்சலின்ச கபோதன்ச*  
  *கர்க்கிட சஸ்திகஸ்ததா*  
  *டோலா ஹஸ்த புஷ்ப பூட*  
  *உத்சம்க சிவலிங்கக*  
  *கடகாவர்த்தன சேன்சவ*  
  *கர்த்தரி சுவஸ்தி கஸ்கதா*  
  *சகடம் சங்கு சங்கரச*  
  *சம்பூட பாசகீலகௌ*  
  *மங்கிய கூர்ம வாராகஞ்ச*  
  *கருடோ நாக பந்தக*  
  *ஜடா பேரண்ட காவியன்சா*  
  *அவகிஸ்த ஸ்ததைவஷா*  
  *சதுர்விம்சவதி சம்விக்கா*  
  *சம்யுக்த கதை த கர”*

- 1. அஞ்சலி. 2. கபோதம். 3. கர்கடகம். 4. ஸ்வஸ்திகம். 5. டோலா. 6. புஷ்பபுடம் 7. உத்ஸங்கம் 8. சிவலிங்கம் 9. கடகாவர்தணம் 10. கர்த்தரிஸ்வஸ்திகம். 11. சகடம் 12. சம்க். 13. சக்கரம். 14.ஸம்புடம். 15. பாசம். 16. கிலகம். 17. மல்ஷியம். 18. கூல்மம். 19. வராகம். 20. கருடன். 21. நாகபந்தம் 22. கட்வா. 23. பெருண்டம். 24. அவஹித்தம்.
- வகுப்பில் தெரிந்ததும், தெரியாததுமான கை முத்திரைகள் அடங்கிய சார்ட்டைத் தொங்க விட வேண்டும். சுலோகத்தின் அடிப்படையில் ஒவ்வொன்றையும் கை முத்திரைகள் காண்பித்து படிக்க வேண்டும்.
- இந்த முத்திரைகள், முத்திரை கற்றலுக்கு மிகவும் அடிப்படையானதினால் இவற்றை சரியான முறையில் பயன்படுத்தும் வரை கூடுதல் செயல்பாடுகளை வரிசைப்படுத்த வேண்டும்.

## மதிப்பிடுதல்.

- ஆசிரியர் முத்திரைகளின் பெயர் சொல்லும் போது முத்திரைகளைக் காண்பிக்க வேண்டும். முத்திரைகளை காண்பிக்கும் போது அவற்றின் பெயரைக் கூறும் விதத்தில் மதிப்பிடுதல் நடத்தப்பட வேண்டும்.




## அலகு–5

நடனத்தில் பலவித தாளவரிசைகளைப் பயன்படுத்தவேண்டும் என்பதை அறிகின்றனர். வேறுபட்ட தாளங்களைக் குறித்தும் அறிகின்றனர். சூழ்நில்களுக்கு ஏற்றவாறு பயன்படுத்த வேண்டிய தாள வரிசைகளைக் குறித்தும் அறிகின்றனர். நடனம் என்பது தாளத்தின் அசை வாகும். பலவிதமான தாளங்கள் நடனத்தை இரசனைக்குரியதாக்குகின்றன. ஒரு சூழ்நிலைக் கேற்றவாறு அரங்கேற்றம் நடத்தும் போது, அதற்கு பொருத்தமான தாளவரிசைகளைத் தேர்ந் தெடுப்பது என்பது நடனமாடுபவர்களின் தவிர்க்க முடியாத திறமையாகும்.தாளத்தைக் குறித் துள்ள அடிப்படை அறிவு என்பது நடனமாடுபவர்களின் உயிர்நாடியாக கருதப்படுகிறது.

### கற்றல் அடைவுகள்

- வேறுபட்ட தாளத்திற்கு சுவடு பதிப்பதற்கான திறமையைப் பெறுகின்றார்கள்.

### கருத்து, திறன்.

- நடனத்தில் பலவிதத்திலுள்ள தாளங்களைப் பயன்படுத்துக்கின்றனர்.
- வேறுபட்ட தாளங்களைக் குறித்துள்ள அறிவு.
- தாளத்திற்கு ஏற்றவாறு சுவடு வைப்பதற்கான திறமை.

### கற்றல் செயல்பாடுகள்.

- நடனமாடுபவர்களுக்கு தாளத்தைக் குறித்துள்ள சிறந்த அறிவு இருக்க வேண்டும். எனவே தாளத்தைக் குறித்துள்ள அறிவை மாணவர்களில் உருவாக்கவும். இந்த நிலையில் மிகவும் பழக்கமுள்ள எளிமையானதுமான இரண்டு தாளங்கள் இங்கு அறிமுகப்படுத்தப்படுகின்றன.

  *ஆதிதாளம் என்று அறியப்படும் சதுரஷ்ற ஜைதி திரிபுடதாளம்.*
  *ரூபகதாளம் என்றறியப்படும் சதுஷ்ற ஜாதி ரூபக தாளம்.*

- இந்த இரண்டு தாளங்களிலும் உள்ள வார்த்தைகளை வடிவமைத்து மாணவர்களைக் கொண்டு சொல்லிப்படிக்கவும். தொடர்ந்து அதற்கேற்ற சுவடுவைக்கவும், உடல் அசைவுகளையும் பயிற்சி எடுத்து உறுதிப்படுத்தவும்.

### மதிப்பிடுதல்.

தாளத்தைப் பயன்படுத்துவதற்கான திறன். முழுமை என்பவையை அடிப்படையாக்கி மதிப்பிடல் நடத்த வேண்டும்.



# நாடகம்



# நாடகம்

## முன்னுரை

இசை, நாடகம், நடிப்பு, படம், சிற்பம், இலக்கியம், துவங்கி அனைத்துக் கலைவடிவங்களும் நாடகக்கலையில் ஒன்றிணைந்துள்ளது. கல்விச்செயல்பாட்டில் நாடகக்கலையை பயன்படுத்துவது முக்கியமானதாக மாறியது. அதனால் தான் அழகை இரசிப்பதற்குள்ள சூழ்நிலையும் நாடகத்தை இரசிப்பதற்கான பயிற்சியும் உட்கொள்கின்ற நாடக பாட ஏற்பாடு தேவையானதாகும்.

நாடக மேடைகள் முக்கியமாக மூன்று விதத்தில் ஆகும். வகுப்புச் செயல்பாடுகளில் பயன்படுத்தப்படுகின்றன. ஆசிரியர் வகுப்பில் ஒரு நடிகனாகவும் வகுப்பு ஒரு அலங்காரமாகவும் சாராரணமாக மாறுகிறது என்பதே முதல் நிலை. நாடக மேடையின் சில பகுதிகளைக் கற்றல் செயல்பாட்டின் ஒவ்வொரு நிலையிலும் தேவைக்கேற்ப பயன்படுத்த வேண்டுமேன்பதே இரண்டாவது நிலை. நாடக வடிவத்திலுள்ள பாடப்பகுதிகளுக்குகாகக் கற்றல் செயல்முறைகள் வடிவமைக்கும் போது வெளியீட்டுனுடையவும் அரங்க மொழியுடையவும் இடத்தைப் பயன்படுத்த வேண்டி வருவதே மூன்றாம் நிலை.

வாசிக்கும் போது மனதில் சில காட்சிகள் உருவாகிறது. இந்த காட்சியின் வெளிப்படுத்தலே நாடகமும் பிற கலைகளும். எழுத்தை காட்சியாக்கும் போது, ஆழத்திலுள்ள பகுப்பாய்வும் பட உருவாக்கமும் நடக்கிறது. மொழியின் வேறுபாடும், கருத்துமான வேறுபாடுகளைப் புரிந்துகொண்டு சொந்த பாரம்பரியத்தைக் குறித்துள்ள அறிவு உருவாக இது உதவுகிறது. நாடக வெளிப்படுத்தல்களிலும் இத்தோடு தொடர்புடைய கலை வடிவங்களோடுள்ள தொடர்பிலும் சிறப்பு மாணவர்களுக்கு ஒரே போன்று பங்குபெற முடிவதனால் அவர்களுக்கு அதிகமான தன்னம்பிக்கை உருவாகிறது.

மாணவர்களின் நாடகம் பெரியவர்களிடமிருந்து சிறிது வேறுபட்டதாகும். உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் குழந்தைகளுக்குப் பல தனித்தன்மைகளுண்டு. அவர்களுடைய உணர்ச்சியிலும், பேச்சியிலும் வேறுபாடுண்டு. அதனால்தான் மாணவர்களின் நாடகத்தில் அந்தத் தனித்தன்மையை பார்க்கமுடிகிறது உரையாடலை விட சைகைக்கு முக்கியத்துவம். நாடகச் சூழ்நிலைகளுடையவும், உரையாடல்களுடையவும் சுதந்திரம் என்பவையே அது. இதனைப் புரிந்துகொண்டு குழந்தைகளுக்கு நாடகம் கற்பதற்கான வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும்.

# கற்றல் அடைவுகள்

## ஐந்தாம் வகுப்பு.

- இயற்கையிலுள்ள உயிரினங்களையும், மனிதர்களையும் உற்றுநோக்கி அவர்களின் அசைவு களை உட்கொண்டு தேவையான சூழ்நிலைகளில் வெளிப்படுத்துகின்றனர்.
- சூழ்நிலைக்கேற்றவாறு தாளம் பயன்படுத்தப்படுகிறது.
- கருத்துக்கள், சூழ்நிலைகள் என்பவற்றோடும் ஒலி, அசைவு, நடிப்பு என்பவற்றையும் உட்ப டுத்துகின்றனர்.
- உற்றுநோக்கலின் வழியாகப் பலவித ஒலிகள், அசைவுகள் ஆகியவற்றைப் பின்பற்றுகின்றனர்.
- கருத்துக்கள் / சூழிநிலைகள் என்பவற்றை உட்கொள்ளும்போது குழு உறுப்பினர்களோடு ஒற்றுமையுடன் சொந்த கதாபாத்திரத்தை வெளியிடுகின்றனர்.
- நாடக மேடைகளில் கைமெய் மறந்து உடல், ஒலி, பாவனை என்பவற்றைப் பொருத்தமான முறையில் செயல்படுத்துகின்றனர்.
- எளிய முறைகள், நல்ல கருத்துக்கள் என்பவற்றைச் சாதாரணமாக வகுப்பில் வெளியிடுகின்றனர்.
- சூழ்நிலைக்கேற்ப வாய்மொழியாகவும், எழுத்து வடிவிலும் சாதாரண கலந்துரையாடல் நடத்து கின்றனர்.
- பாவனையோடு கூடி நடித்துக் காட்டுகின்றனர்.
- சினிமா, நாடகம் என்பவற்றைப் பார்த்து இரசிக்கின்றனர்.

## ஆறாம் வகுப்பு.

- மனிதர்களின் வேறுபட்ட அசைவுகளைப் பார்த்துப் புரிந்துகொண்டு தனித்தன்மைகளைத் தேவையான சூழ்நிலைகளில் பயன்படுத்துகின்றனர்.
- தாள அசைவுகளுடன் கருத்துப்பரிமாற்றம் நடத்துகின்றனர்.
- இலக்கிய வடிவங்களுக்கு காட்சி வெளியீடு நடத்த ஒலி, அசைவு, நடிப்பு போன்றவற்றைப் பொருளறிந்து பகிர்ந்து கொள்கின்றனர்.
- உயிரினங்கள் வேறுபட்ட சூழ்நிலைகளில் உட்கொள்கின்ற செயலின் தனித்தனைமைகளைப் பின்பற்றுகின்றனர்.
- காட்சி வெளியீடுகளில் உணர்ச்சியை நிலை நிறுத்துவதன் தேவையை அறிகின்றனர்.
- சூழ்நிலைக்கேற்ப கைபாவைகளுக்கு ஒலி அளித்து வெளியிடுகின்றனர்.
- சிறிய சூழ்நிலைகள், கருத்துக்கள் என்பவையை வெளியிடும் போது சிறந்த நடிப்பைக் காண் பிக்க உடல் அசைவுகள், பாவனைகள் என்பவற்றைப் பயன்படுத்துகின்றனர். சூழ்நிலைக்கேற்ப உணர்ச்சியை உட்கொண்டு சைகை நடிப்பு நடத்துகின்றனர்.
- சூழ்நிலைக்கேற்ப கை பாவைகளுக்கு குரல் கொடுத்து வெளியிடுகின்றனர்.
- சரியான நிலை அறிந்து குறிப்புகளுடையவும் உருவங்களுடையவும் கருத்துகளை வெளியிடு கின்றனர்.
- சினிமா, நாடகம் போன்றவற்றைக் காணும்போது பிம்பங்களும் குறிப்புகளும் அறிந்து இரசிக்கின்றனர்.

## ஏழாம் வகுப்பு.

- கதாபாத்திரங்களை நடித்துக் காட்டும்போது மனிதர்களுடையவும், மற்றுள்ள உயிரினங்களுடை யவும் அசைவுகளை உற்றுநோக்கிப் புரிந்து கொண்ட தனித்தன்மைகளைப் பயன்படுத்தவும்.

- காட்சிகளை வடிவமைக்கும் போது தாள அசைவுகளை உருவாக்கி முறைப்படுத்தி பயன்படுத்துகின்றனர்.
- இலக்கிய வடிவங்களுக்கு காட்சி வெளியீடு தயாரிக்கும் போது ஒலி, அசைவு, நடிப்பு என்பவைகளை ஏற்ற வகையில் பயன்படுத்துகின்றனர்.
- கதாபாத்திரத்திற்கு ஏற்ற அசைவுகளையும், தனித்தன்மைகளும் கொடுத்து ஆளுமையை ஏற்படுத்துகின்றனர்.
- கருத்துக்கள், சூழ்நிலைகள் என்பவையை வகுப்பில் வெளியிடும் போது ஒருவருக்கொருவர் உதவி செய்தல். சார்ந்திருத்தல், விட்டுக்கொடுக்கம் மனப்பான்மை என்னும் விதத்தில் குழுவோடு செயல்படுகின்றனர்.
- உடல் அசைவுகள், ஒலி, முகபாவனைகள், வேடங்கள் என்பவையை பொருளறிந்து பயன்படுத்தி வெளியிடுகின்றனர்.
- பொருள்– உணர்ச்சியைப் புரிந்து உரையாடுகின்றனர்.
- உரையாடல், இசை என்பவைகளை சேர்த்துப் பாவை நாடகம் வெளியிடுகின்றனர்.
- கருத்து வெளியிட பயன்படுத்திய பிம்பங்கள், குறிப்புகள் என்பவைகளை பிரித்தறிந்து கலந்துரையாடல் குறிப்புகள் தயாராக்குகின்றனர்.

# ஐந்தாம் வகுப்பு

## அலகு–1: முறைப்படுத்திய அசைவுகள்

### முன்னுரை ;

சைகை நடிப்பு, வாய்மொழி, வேடம், பாவனை என்றிவ்வாறு நாடகக் கலைஞன் நடிப்பை தரம் பிரித்துள்ளான். உடல் அசைவுகளை முறைப்படுத்தி முழுமையாக் கும் போது பேச்சு சைகை நடிப்பாக மாறுகிறது. அசைவுகளை முறைப்படுத்த வேண்டு மெனில் சொந்த உடலின் தன்மையையும், சக்தியையும் அறிந்திருக்க வேண்டும். விளையாட்டுகள் வழியும், பயிற்சியின் வழியாகவும் மாணவர்கள் இதனை அறிந்துகொள்கின்றனர். வாய்மொழி என்றால் பேச்சு என்பதாகும். தேவை யான உணர்ச்சியும் முன்னுரிமையும் கொடுக்கும் போதே பேச்சு பொருளுடைய தாக மாறுகிறது. கதாபாத்திரங்களின் உள்முகம் வெளிவருவதற்காகப் பயன்படுத் தும் நடிப்பின் வேறொரு பகுதியே வேடம் முகத்தில் சாயம், வேட முறைகள் என்பவை. பாவனைகளை எடுத்துகாட்டுகின்ற இரசனையோடுள்ள நடிப்பே பாவனை.

### கற்றல் அடைவுகள்.

- இயற்கையிலுள்ள உயிரினங்களையும், மனிதர்களையும் உற்றுநோக்கி அவர்க ளின் அசைவுகளை உட்கொண்டு ஏற்ற சூழ்நிலைகளில் வெளியிடுகின்றனர்.
- சூழ்நிலைகேற்ப தாளத்தைப் பயன்படுத்துகின்றனர்.

### கருத்து, திறன்.

- உயிரினங்களுடையவும், மனிதர்களுடையவும் அசைவுகள் வேறுபட்டதாகும். அவற்றைப் பின்பற்றி வெளியிடுவது வழி அந்த உயிரினத்தையோ, மனித னையோ நினைவுகூற முடியும்.
- தாளத்தோடுகூடிய அசைவுகள் அழகாகக்காணப்படும்.
- சூழ்நிலைக்கேற்ப தாளத்தைப் பயன்படுத்துவதற்கான திறன்.

## கற்றல் செயல்பாடுகள்.

### *நிலை –1*

- ஆசிரியர் வகுப்பில் அசைவைக்குறித்துள்ள கலந்துரையாடலுக்குத் துவக்கமிடுகிறார். –நாம் அனைவரும் அசைந்துகொண்டிருக்கிறோம். அமரும்போது, நடக்கும் போது, போகும் போதெல்லாம்..... நமது அசைவுகளெல்லாம் சரியாக முறைப்படுத்தியவையல்ல. ஆனால் முறையாகப் பயிற்சி எடுக்கப்பட்ட அசைவுகளோடு சில நபர்கள் ஒன்றிணைந்து போவதை பார்த்திருக்கிறீர்களா?

- நாம் காலையில் வகுப்பிற்கு வருவதும், கலைக்கூட்டத்திற்குச் செல்வதும் ஒரே போலா? அவைகளுக்கு இடையிலான வேறுபாடு என்ன? மாணவர்கள் கூட்டமாகவும், தனியாகவும் வகுப்பிற்குச் செல்கின்றனர். ஆனால் காலைக் கூட்டத்திற்கு செல்வதும், வருவதும் வரிசையாகத்தான். இது சிறிது முறைப்படுத்தப்பட்ட அசைவுகளாகும். இவ்வாறு முறைப்படுத்திய அசைவுகளை வேறு எங்காவது நீங்கள் பார்த்ததுண்டா?
- குடியரசு தின அணிவகுப்புகள், விமான அணிவகுப்புகள், குதிரைப்படையின் அணிவகுப்பு, வலசைப் பறவைகளின் வரவு, காவலர்களின் அணிவகுப்பு போன்றவைகளில் சில நேரடியாகவோ, தொலைக்காட்சியிலிருந்தோ மாணவர்கள் பார்த்திருப்பார்கள்.
- அவ்வாறு முறைப்படுத்திய ஒரு குழுநடையை குழந்தைகள் நடித்துக்காட்டட்டும், ஆசிரியர் அதற்கான வாய்ப்பை உருவாக்க வேண்டும். எடுத்துக்காட்டாக ஆசிரியர் கூறுகிறார் நான் காலையில் பள்ளிகூடத்திற்கு வரும்போது இரண்டு வரிசாயாக ஒரு அணிவகுப்பு செல்வதைக் கண்டேன். இந்த அணிவகுப்பை குழந்தைகள் நடித்துக்காட்டுகின்றனர். ஆசிரியர் மீண்டும் கூறுகிறார். சிறிது நேரம் கடந்த பிறகு காவலர்களின் அணிவகுப்பு வருவதைக் கண்டேன். குழந்தைகள் உடனே காவலர்களின் அணிவகுப்பை நடத்திக் காட்டினார்கள், நடைகள், கைவிரல்கள், உடல் அசைவுகள் எல்லாம் இணைந்து அனைத்துக் குழந்தைகளும் ஒன்றாக மாறுகின்ற நிலை உருவானது. சிதறிக்கிடந்த, ஒழுங்கற்ற அசைவுகளாக இருந்த வகுப்பு இப்போது முறையான அசைவுகளில், தாளத்தில் மாறியுள்ளது. தனித்தன்மையார்ந்த விதத்தில் பறக்கின்ற வலசைப் பறவைகளைக் குழந்தைகள் பார்த்திருப்பார்கள். அது போன்று குதிரைப்படை, தேசிய சாரணர் இயக்கம், விமான அணிவகுப்பு போன்றவையை நடித்துக்காட்ட குழந்தைகளை கூறலாம். சொந்த அசைவுகளை கூட்டமான அசைவுகளுடன் இணைப்பதற்கு இது வழி முடிகிறது.

### *நிலை–2*

- <u>கதையை நாடகமாக நடிக்கலாம்.</u>

  இயற்கையும், மிருகங்களும், மனிதர்களும் உட்படும் ஒரு கதையை சரியான முறையில் ஆசிரியர் வகுப்பில் வெளியிடுகிறார். எடுத்துக்காட்டாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையைக் கூறலாம்.

  *அழகான ஒரு காட்டில் விலங்குகளும், பறவைகளும் சகோதரர்களாக வாழ்ந்திருந்தனர். காட்டின் ராஜா சிங்கம். ஒரு முறை சிங்கம் உறங்கும்போது ஒலி எழுப்பிய எலிகள்*

*சிங்கத்தின் மேல் விழுந்தது. விழித்தெழுந்த சிங்கம் எலியைப் பிடித்தது. சிங்கத்தின் காலைப்பிடித்து கெஞ்சிய எலியை சிங்கம் விட்டுவிட்டது. நன்றியுடன் எப்பேதாவது உதவுவேன் என்று கூறிய எலியை சிங்கம் ஏளனமாகப் பார்த்துச் சிரித்தது. ஒரு நாள் காட்டில் வேட்டைக்கு வந்த வேடர்கள் விரித்த வலையில் சிங்கம் விழுந்தது. தப்பிப்பதற்கான வழிகள் வெற்றிபெறவில்லை. தளர்ந்து விட்ட சிங்கம் மரணத்தைக் காத்துக்கிடக்கும் போது அந்த வழியாக எலி வந்தது. உதவி செய்வதற்கான வாய்ப்பு இதுதான் என்று நினைத்த எலி ஓடிச்சென்று நண்பர்களை அழைத்து வந்தது. அனைவரும் ஒன்றிணைந்து வலையை முறித்து சிங்கத்தை காப்பாற்றினர். வேடர்கள் வந்த போது சிங்கமும் எலியும் தப்பின. சிங்கம் எலிகளோடு நன்றி கூறியது.*

- இந்தக்கதையை 5 பாகங்களாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு பாகத்தையும் ஒவ்வொரு குழுவும் காட்சி அமைத்து வெளியிடட்டும்

    1)அழகான காடு, விலங்குகள் ,பறவைகள், சிங்கம்.

    2)சிங்கமும் எலியும்.

    3)வேடர்கள் வந்து வலையை விரிக்கின்றனர்.

    4)வலையில் விழுந்த சிங்கம்-உதவிசெய்ய வந்த எலிகள்

    5)எலி சிங்கத்தின் நிலைமையை பார்க்கிறது. காப்பாற்றுகிறது.

- அனைவரும் ஒன்றுகூடி விலங்குகளின் சந்தோசத்தையும், வேடர்களின் சங்கடத்தையும் வெளியிடுகின்றனர்.
- சரியான பயிற்சிக்குப் பிறகு இந்த பாகங்களையெல்லாம் சேர்த்து நாடகமாக வெளியிடுகின்றனர்.

## அலகு-2 முறையான உரையாடல்

### முன்னுரை.

சாதாரணமாக வாழ்க்கையில் நடத்துகின்ற உரையாடல்களுக்கு உணைமையான உணர்ச்சிகரமாக இருக்கும். ஒரு சந்தர்ப்பம் நடிக்க வேண்டி வரும் போது எல்லாவற்றையும் கவனிக்க வேண்டும். கதாபாத்திரங்கள் பேசும் போது உற்றுநோக்கல்களும், நிரந்தர பயிற்சியின் மூலம் அதைப் பெறலாம். அதற்காக சரியாகவும், உணர்ச்சி ததும்ப பேசியும் பயிற்சி பெற வேண்டும்.

### கற்றல் அடைவுகள்.

- கருத்துகள், சூழ்நிலைகள் என்பவையோடு ஒலி, அசைவு, நடிப்பு என்பவைகளை உட்படுத்துகிறது.

**கருத்து, திறன்**

- ஒலி, அசைவு, நடிப்பு என்பவை உட்புகும்போது கருத்துகளுக்கும் சூழ்நிலை களுக்கும் தெளிவு உண்டாகும்.

**கற்றல் செயல்பாடுகள்.**

- உரையாடல் என்பது வாழ்கையில் முக்கியமான பாகமல்லவா. வீட்டிலும், நாட் டிலும், வகுப்பிலும் நான் உரையாடுவதுண்டு. எடுத்துக்காட்டாக ஒருபொருளை வாங்கக் குழந்தை கடைக்குச் செல்கிறது. போகும் வழயில் தெரிந்தவர்களிடம் பேசும், கடைக்காரர்களிடண் பேசும். அக்குழந்தை கடைக்காரர்களிடன் என் னென்ன பேசியிருக்கும்? குழந்தைகள் சதாரணமான உரையாடலை உருவாக் கட்டும். அத்துடன் சில குழந்தைகள் கடைக்காரனும், குழந்தையுமாக மாறி உரை யாடலை நடத்தக் கூறவும். பலகுழந்தைகளுக்கும் சாதாரண உரையாடலை உரு வாக்க முடியும்.
- இதன் பிறகு ஒரு விளையாட்டிற்குச் செல்லலாம். ஐந்தோ ஆறோ குழந்தைகளை உட்படுத்திக் குழுக்களை உருவாக்கவும். ஆசிரியர் பல இடங்களில் பெயர் எழு திய துண்டுகளை (*எடுத்துக்காட்டாக முடிவெட்டும் இடம், குளக்கரை, மருத்துவமனையில் தகவல் அறியும் மையம், பேருந்து நிலையம், உண வகம், பெண் பார்க்கும் நிகழ்வு*)கையில் வைக்கவும்.
- குழுவிலுள்ள ஒரு குழந்தைக்கு ஒரு துண்டைக் கொடுக்கவும். துண்டிலுள்ள இடத்தோடு தொடர்புள்ள ஒரு நிகழ்ச்சியைக் குழந்தை நடத்துகிறது. அதற்குப் பிறகு குழுவிலுள்ள வேறொரு குழந்தையிடம் அந்தத் துண்டைக் கொடுக்கிறது. எடுத்துக்காட்டாக குளக்கரை என்ற குறிப்பு கிடைத்த குழந்தை பக்கத்திலுள்ள வோறொரு குழந்தையிடம் இந்தத் துண்டைக் கொடுத்துக் குளிப்பது போன்று நடிக்கின்றனர்.

- இவ்வாறு எல்லாக் குழந்தைகளும் வெளியிட்ட பிறகு உரையாடலின் தனிச்சி றப்பை ஆசிரியர் வகுப்பில் கலந்துரையாட வேண்டும். சில சாதாரணமாகத் தோன் றலாம். ஆனால் வேறு சில உரையாடலுக்குத் தொடர்பில்லாமல் இருக்கலாம். இவை அனைத்தும் குழந்தைகளிலிருந்து கலந்துரையாடல் வழி கொண்டுவர ஆசிரியர் கவனிக்க வேண்டும்.

## அலகு-3 கவிதையிலிருந்தும் பல மொழியிலிருந்தும் நாடகம் உருவாக்கலாம்.

**முன்னுரை.**

சுருக்கப்பட்ட கவிதைகளே பழமொழிகள். ஒரு கருத்த மிகவும் சிறிய வார்த்தையில் எடுத்துரைப்பதே பழமொழிகள். சரியான பகுப்பாய்வின் வழி ஒவ்வொரு பலமொழி யிலிருந்து மிப்பெரிய ஒரு கருத்தை உணரலாம். பல வயதிலுள்ள குழந்தைகளின் உலக அறிவிற்கும், பாவனைக்குமேற்ப பலமொழிகளில் உள்ள கருத்துலகை நாடக மாக வெளியிடலாம்

## கற்றல் அடைவுகள்.

- சிறிய சூழ்நிலைகள், சிறந்த கருத்துக்கள் என்பவை சாதாரணமாக வகுப்பில் வெளி யிடுகின்றனர்.
- சூழ்நிலைக்கேற்ப வாய்மொழியாகவும், எழுத்து வடிவிலும் சாதாரண உரையா டலைத் தயாரிக்கின்றனர்.
- உணர்ச்சிபூர்வமாக உரையாடி நடிக்கின்றனர்.

## கருத்து, திறன்.

- மேடை அறிவோடும், ஒழுக்கமுடமையோடும் செயல்படுவது கருத்துக்களை சாதா ரணமாகக் காட்டுகிறது.
- கருத்துக்களை உட்கொள்ளும் திறன்.
- சூழ்நிலைகளுக்குத் தெளிவு உருவாக உரையாடல் தேவையாகும். வாய்மொழி யாகவும். எழுத்து வடிவிலும் உரையாடல் தயாராக்குவதற்கான திறன்.
- உணர்ச்சிகரமான உரையாடலே வாய்மொழி நடிப்பாக மாறுகிறது.
- வாய்மொழி நடிப்பின் வழி கருத்துப்பரிமாற்றம் பொருளுடையதாகிறது.

## கற்றல் செயல்பாடுகள்.

- *"இ வல்லியில் நின்னு செம்மே பூக்கள் பாறுந்நித பறன்னம்மே... "*

  இந்த வரிகளை காட்சிபூர்வமான வரிகளின் தனித்தன்மை அல்லவா. இதுபோன்ற வரிகள் பாடப்பகுதியிலிருந்தோ வெளியிலிருந்தோ கண்டுபிடிக்க முடியும்.
- குழந்தைகளைப் பல குழுக்களாகப் பிரித்து இப்படிப்பட்ட சில வரிகளைக் கொடுத்து கதை நிகழ்வுகளாக மாற்றக் கூறவும். கிடைத்தது சில வரிகள் எனி னும் பலகதைகள் உருவாகின்றன. இதனை ஆசிரியர் வகுப்பறையில் கலந்துரை யாடவும்.
- இனி குழந்தைகள் கண்டடைந்ததோ, ஆசிரியர் கூறியதோ ஆன கவிதை வரிக ளோ, சிறிய கவிதைகளோ ( எடுத்துக்காட்டாக வைரமுத்துவின் சிறுகவிதை) பயன் படுத்திக் கதைகளை உருவாக்கி நடித்து காட்டட்டும்.
- வெளியிடம்போதுள்ள குறை, நிறைகளை வகுப்பில் கலந்துரையாடவும்.
- இதுபோன்று வெளியிடுவதற்கு வாய்ப்புள்ளதே பழமொழிகள். இவைகளை மேம் படுத்திக் காட்சிவடிவில் வெளியிடக் குழந்தைகளால் முடியும். (எடுத்துக்காட்டாக மின்னுவதெல்லாம் பொன்னல்ல என்ற பழமொழி. வெளிப்படையைக் கண்டு ஏமா றும் நிலையை சூழ்நிலையாக்கி, கதையாக மாற்றி எடுக்க ஆசிரியரின் உதவி இருக்கமானால் குழந்தைகளால் முடியும்.)

- அவ்வாறு உருவாக்கிய கதைகளுக்கு ஏற்ற உரையாடல் எழுதி நடித்துக் காட்டட்டும்.
- குழந்தைகளைக் குறிப்பிட்ட குழுக்களாகப் பிரிக்கவும்.
- குழந்தைகளின் எண்ணத்திற்கேற்ப பழமொழிகள் எழுதிய துண்டுகள் ஆசிரியர் எழுதி வைக்கவும். ஆசிரியரின் விருப்பத்திற்கேற்பக் குழுக்களாக்குவதற்கான பழமொழிகள் எழுதிய துண்டுகள் இருக்க வேண்டும். வகுப்பில் 35 குழந்தைகள் இருக்குமானால் ஏழு குழந்தைகள் வீதம் 5 குழுக்கள் உருவாக்கலாம்.
- ஒரே பழமொழி கிடைத்த ஏழு குழந்தைகள் ஒரு குழுவாக மாறலாம். அந்தப் பழமொழியின் கருத்து வெளியிடும் விதத்தில் சிறிய கதைகள் அவர்கள் உருவாக்கட்டும். அவ்வாறு உருவாக்கப்பட்ட கதைகளே ஒவ்வொரு குழுவும் நடித்துக்காட்டட்டும்.

## அலகு–4 காலநிலைகளுடன்.

### முன்னுரை.

பல இயற்கை நிலைகள், காலநிலைகள் என்பவையை நேரத்திற்கேற்ப வெளியிடும் போது நடிகனின் உடல் உறுதியும், முக பாவனையும் முக்கியமானதாகும். மழையில் நனையும் போதும், பாலைவனத்தின் வழி நடக்கும்போதும் மனிதனின் பாவனையும், மேன்மைக்களும் வேறுபட்டதாகும். வேறுபட்ட சூழ்நிலைகளில் உடல், ஒலி, பாவனானை என்பவைகள் சரியான முறையில் உட்கொள்ளக்கூடிய செயல்பாடாகிறது.

### கற்றல் அடைவுகள்

- நாடக மேடைகளில் கைமெய் மறந்து உடல், ஒலி, பாவனை என்பவைகளைச் சரியான முறையில் பயன்படுத்துகின்றனர்.

### கருத்து, திறன்.

- உடல், ஒலி, பாவனை என்பவைகளைப் பொருத்தமான முறையில் பயன்படுத்துவதற்கான திறன்.
- தன்னை மறந்து விளையாட்டுகளில் ஏற்படுவது வழி உடல், ஒலி, பாவனை என்பவையில் வழக்கம் ஏற்படுகிறது.

### கற்றல் செயல்பாடுகள்.

- வகுப்பிலுள்ள எல்லாக் குழந்தைகளும் வெவ்வெறாக நடக்குமாறு கூறவும். அவர்களை வேறுபட்ட காலநிலைக்கேற்ப கொண்டு செல்லவும். அதற்கு ஆசிரியர் தேவையான சூழ்நிலையை வாய்மொழியாக உருவாக்கவும்

  *எடுத்துக்காட்டாக நாம் இப்போது ராஜஸ்தானிலாகும். தார் பாலைவனத்தில் சுட்டுபொள்ளும் பாலைவனத்தின் வழியாக பயணம். மேலே சுட்டெரிக்கும் சூரியன்,சுற்றிலும் பரந்து கிடக்கும் மணற்பரப்பு. தொண்டை வரளுகிறது. கால்கள் மணலில் தாழ்ந்து போகிறது. சுட்டுபொள்ளும் மணல்...... தூரத்தில் ஏதோ ஒரு விலங்கு....... அது எது? கழுத்தை*

*உயர்த்தி அது பார்க்கிறது..........*

- ஆசிரியர் பாவனையோடு உருவாக்கும் இந்தச் சூழலுக்கேற்பக் குழந்தைகள் செல்கின்றனர். திடீரென்று அந்த வர்ணனை மழைக்காலத்திற்கு மாறுகிறது.... பின்னர் குளிர்பகுதிக்கு..... அவைகளுக்குப் பொருத்தமான வர்ணனையை ஆசிரியர் வகுப்பறையில் உருவாக்க வேண்டும்.
- குழந்தைகள் இந்த வேறுபட்ட காலநிலைகளுக்கேற்ப நடிக்கட்டும். எல்லாக் குழந்தைகளும் இதில் பங்குபெறச்செய்ய வெண்டும். நாட்டிற்கும், காலநிலைக்கும் வரும் நுட்பமான தனித்தன்மைகளை அறிந்து நடித்துக்காட்டக் குழந்தைகளுக்கு உதவவும்.

## அலகு–5: சினிமா காண்பித்தல் / இரசனைக்குறிப்பு தயாரித்தல்.

### முன்னுரை

ஒரே போன்றதெனினும் நாடகத்திலுள்ளதும், சினிமாவிலுள்ளதுமான நடிப்புகள் வேறுபட்டதாகும். குழந்தைகளே பல செயல்பாடுகளின் பாகுதியாக நடித்த நாடகங்களின் வழி நடிப்பைப் பற்றி அறிந்திருப்பர். இது போன்று சினிமாவிலுள்ள நடிப்பையும் புரிந்து கொள்ள வேண்டும். நாடக மற்றும் சினிமா நடிப்புகளை ஒப்புமைப்படுத்தி புரிந்து கொள்வதற்கான செயல்பாடே இது.

### கற்றல் அடைவுகள்.

- சினிமா, நாடகம் என்பவற்றைக் கண்டு இரசிக்கின்றனர்.

### கருத்து, திறன்.

- ரசிக்கும் திறன்.
- சினிமா என்பது தொடர்ச்சியான காட்சிகளைக் கொண்ட கலை வடிவமாகும். கருத்துப்பரிமாற்றத்திற்கான முப்பரிமாண குணமுள்ள காட்சி கேள்வி கலையே நாடகம்.

### கற்றல் செயல்பாடுகள்.

- நாம் பல சூழ்நிலைகள்/நிலைகளை நடித்துக்காண்பித்தோம். நடிப்பின் உயர்ந்த வடிவமே நாடகம். நடிப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் வேறொரு கலை வடிவத்தைக் குறித்து குழந்தைகளிடம் கேட்கலாம். கண்டிப்பாக சினிமாவைக் கூறுவார்கள். சினிமாவில் உள்ளதும், நாடகத்திலுள்ளதுமான வேறுபாடு என்ன?
- நாடகம் என்பது பார்வையாளர்களின் முன்னில் குறிப்பிட்ட இடத்தில், நேரத்தில் வெளியிகின்றனர். சினிமாவில் நடிப்பு படம்பிடித்து பின்னர் காண்பிக்கப் படுகிறது. நாடகம் போல் சினிமாவிலுள்ள நடிகர்களுக்கு பார்வையாளர்களுடன் தொடர்பில்லை. சினிமாவில் நடிப்பிலுள்ள குறைகளை மீண்டும் நடித்து மேம்படுத்துவதற்கான வாய்ப்புண்டு. நாடகத்தைப் போன்ற தொடர்பு சினிமாவுக்கு தேவையில்லை.

- இந்தக் கலந்துரையாடலின் அடிப்படையில் சினிமா நடிப்பையும், குறிப்புக ளையும் அறிந்து இரசிப்பதற்கான சிறிய சினிமாவைக் குழந்தைகளுக்குக் காண் பிக்க வேண்டும். அவைகளைக்குறித்து சிறு இரசனைக்குறிப்பு தயாரிக்கவும். சினிமாவின் ஒரு சுருக்கம், சினிமாவை விரும்பினால் அதற்கான காரணம் என்ன? நடிப்பு, காட்சி, இசை. சிறந்த இயக்கம் போன்றவையில் எந்த மண்ட லம் சிறந்தது? இப்படிப்பட்ட தகவல்களை உட்படுத்தி இரசனைக்குறிப்பு தயா ரிக்கவும்.
- நாடகங்களின் வீடியோ படங்களைக் காண்பிக்கலாம். இரசனைக் குறிப்பு தயாரிக்கக் கூறலாம்.

# ஆறாம் வகுப்பு

## அலகு–1

## வாய்மொழிச் சிந்து

சாதாரண நடிப்புக்கு அப்புறம், நடிப்பின் வேறுபட்ட நுணுக்கமான பகுதிகளை மாண வர்கள் முன் வகுப்பில் தெரிந்துகொண்டுள்ளனர். ஒலி, அசைவு, என்பவை உற்று நோக் கலின் வழி அறிந்து கொள்ளவும், சிறப்பான சூழ்நிலைகளில் கருத்துத் தெளிவோடு அவற்றை மேடையில் வெளியிடவும் செய்வதற்கான திறனை பலசெயல்பாடுகளின் வழி குழந்தைகள் அறிந்துள்ளனர். சைகை, வாய்மொழி, செயற்கை அழகு,பாவனை என்றிவ் வாறுள்ள நால்வகை நடிப்புகளின் நுட்பத்தில் பயிற்சி எடுப்பதுடன், நாடகம் எழுதுவ தின் பல நிலைகளையும் குழந்தைகள் தெரிய வேண்டியுள்ளது. ஒரு கருத்தை நாடக வடி வில் ஆக்குவதற்கான செயல்பாடுகளுக்கே ஆறாம் வகுப்பில் முன்னுரிமை கொடுக்கப் பட்டுள்ளது. இத்துடன் சினிமாவின் வாய்புகளை கொஞ்சம் கூட உயர்ந்த நிலையில் குழந் தைகள் அறியவேண்டியுள்ளது.

### கற்றல் அடைவுகள்.

- மனிதர்களின் வேறுபட்ட அசைவுகளைப் பார்த்து புரிந்துகொண்டு தனித்தன் மைகளை உட்கொண்டு தேவையான சூழ்நிலைகளில் பயன்படுத்துகின்றனர்.
- தாள அசைவுகளுடன் கருத்துப்பரிமாற்றம் நடத்துகின்றனர்.
- இலக்கிய வடிவகளுக்கு காட்சி வெளியீடு கொடுப்பதில் ஒலி, அசைவு, நடிப்பு என்பவையை பொருளுணர்ந்து வெளியிடுகின்றனர்.

### கருத்து,திறன்.

- ஒவ்வொரு மனிதனுடையவும் அசைவு முறைகள் வேறுபட்ட தனித்தன்மையு டையதாகும். உற்றுநோக்கலின் வழி உட்கொண்ட அசைவுகள் பயன்படுத்து வது வழி எளிய முறையில் கதாபாத்திரத்தின் தனித்தன்மையை வெளியிடலாம்.
- அசைவுகள் தாளத்துடன் ஆகும்போது கருத்து பாரிமாற்றத்திற்கு அழகும், தெளி வும் ஏற்படும்.
- இலக்கிய வடிவங்களுக்குக் காட்சி வெளியீடு நடத்த முடியும்.
- ஒலி, அசைவு, நடிப்பு என்பவையை சரியான பொருளுணர்ந்து காட்சி வடிவங் களில் வெளியிடுவதோடு கருத்துப்பரிமாற்றம் தெளிவும், நுட்பமாகிறது.

**கற்றல் செயல்பாடுகள்.**

- ஆசிரியர் வகுப்பில் வள்ளம் விளையாட்டின் வாய்மொழிச் சிந்துவை வெளியிடுகிறார்.

  *(தித்தித்தாரோ தித்தித்தை... தித்தைய்...தித்தைய் தகதெய்தோம்.......)*

- குழந்தைகளும், ஆசிரியரும் ஒன்றாக வள்ளம் விளையாட்டின் வாய்மொழியைப்பாடவும் நடித்துக்காட்டவும் செய்கின்றனர். பலவித தொழில்களுடன் தொடர்புடையதும், இல்லாததுமான பல தாளங்களும்,வாய்மொழி சிந்துவும் பழக்கத்திலுண்டு. தாளங்கள் வேறுபடுவதற்கேற்ப அதனை அடிப்படையாக் கொண்டு உருவாக்கபடுகின்ற உடல் அசைவுகள் மாறுபடும்.
- இது போன்ற வாய்மொழிகளைக் கண்டறிந்து அதனை நடத்துகின்றனர். வேறுபட்ட தொழில்களை அடிப்படையாக கொண்ட நடிப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்க மெல்ல மெல்ல வாய்மொழி சிந்துவிலிருந்து இசை கருவிகளுக்கு குழந்தைகளின் கவனத்தை ஈர்க்க வேண்டும் இசைக்கருவிகளின் இசைக்கேற்ப குழந்தைகள் ஆடுகின்றனர்.
- இந்தச் செயல்பாட்டின் தொடர்ச்சியாக வஞ்சிப்பாட்டின் 4 வரிகளைக் கொடுத்து அதன் கருத்தை நடித்துக்காட்டுமாறு கூறலாம்.
- அதன் பிறகு குழந்தைகளை 4 குழுக்களாக்கி 4 தொழில் பாட்டுக்களை கொடுத்து நடிக்க கூறவும். பலவித மனிதர்களின் செயல்களை நடித்துகாட்டுவதற்கு உதவும் வகையிலுள்ள பாட்டுகள்.
- குழந்தைகள் பங்குகேற்கும் கருத்துப்பரிமாற்றத் திறன்களையும் மதிப்பிட வேண்டும்.
- பலவிதமான பாட்டுக்கள்.

  எ கா ; வேளாண் பாட்டுக்கள், வள்ளப்பாட்டுக்கள், மீனவர்களின் பாரம்பரிய பாட்டுக்கள், அறுவடைப்பட்டுக்கள். பளு தூக்கும்போது பாடும் தாளத்தோடு கூடிய பாடல், தேக்கு பாட்டு.

## அலகு-2 சொல்லிச் சொல்லி

**கற்றல் அடைவுகள்.**

- பொம்மைகள் தயாரிக்கவும், அததை வைத்து விளையாடுவதாகும் பயிற்சி எடுக்கின்றனர். உருத்தான உரையாடல் நடத்தவும் பயிற்சி எடுக்கின்றனர்.
- அரங்க வெளியீடுகளில் உணர்ச்சியை நிலைநிறுத்துவதற்கான திறன்.
- சூழ்நிலைக்கேற்ப உணர்ச்சிகரமாக வாய்மொழியாக நடித்துக் காட்டுகின்றனர்.

**கருத்து, திறன்.**

- பல சூழ்நிலைகளில் உயிரினங்கள் வேறுபட்ட முறையில் செயல்படுகின்றன.

- நடித்துக்காட்டும் போது சூழ்நிலைகளை சிறப்பாக வெளியிடுவதற்கு உயிரினங்களின் செயல் சிறப்புகள் உதவுகின்றன.
- முழுமையான உணர்ச்சிகரமான நிலைகள் அரங்க, அரங்க வெளியீடுகளை மேன்மையுள்ளதாக மாற்றுகிறது.
- உரையாடலுடன் ஒலிகளும் சேரும்போது கருத்துப்பரிமாற்றம் எளிமையாகுமென அறிந்து கொள்கின்றனர்.

## கற்றல் செயல்பாடுகள்.

- குழந்தைகளை இரண்டு நபருள்ள குழுக்களாக்கவும். எல்லாக் குழந்தைகளும் ஒரே நேரத்தில் முகத்தோடு முகம் பார்த்துத் தனிப்பட்ட விஷயம் முதல் கோபம் வரையிலான உரையாடல்களை நடித்துக்காட்டுகின்றனர். ( அன்பு, கருணை, இரக்க குணம், கோபம், பிச்சை எடுத்தல் போன்ற எல்லா உயிரினங்களையும் குறிப்பிட்ட இடைவேளைகளில் ஆசிரியரின் அறிவுரைக்கேற்ப உட்படுத்தவும்.) ஒரே உரையாடல் முறையை வேறுபட்ட உணர்ச்சிபரமாக வெளியிடப்படுகிறது. இதற்கு பிறகு ஒன்றோ இரண்டோ குழுக்களை நடுவில் வைத்து வெளியிடப்படுகிறது. (கைப்பொம்மைகளை வைத்து இந்த விளையாட்டை விளையாடலாம்.)
- விளையாட்டிற்குப் பிறகு குழந்தைகளிடம் தரையில் மல்லாந்து படுக்குமாறு ஆசிரியர் கூறுகிறார். கண்களை மூடி ஒலிகளை கேட்குமாறு கூறுகிறார். முதலில் அருகில் உள்ளதும் பின்பு தூரத்தில் உள்ளதுமான மிகச்சிறிய ஒலியைக் கூட கேட்ட பிறகு அதனைக் குறித்து குழந்தைகள் பேசட்டும். சில குழந்தைகள் துள்ளியமான ஒலியைக் கேட்டிருப்பார்கள்.
- குழந்தைகளின் பங்கேற்பு, விருப்பம், ஒலிகளை பயன்படுத்தும் முறை என்பவற்றை உற்றுநோக்கி அடையாளப்படுத்த வேண்டும்.

***நிலை–2***

அனைத்துக் குழந்தைகளும் வட்டவடிவத்தில் இருக்கின்றனர், முன்னரே விளையாடிய விளையாட்டில் ஏதாவது ஒரு ஜோடியை குழுவின் நடுவில் முகாமுகம் இருத்தி தொடரவும். பார்வையாளர்கள் இரண்டு பக்கமும் சேர்ந்து உற்சாகப்படுத்தவும்.

- பாடப்புத்தகத்தில் உள்ளதோ இல்லாததோ ஆன ஒரு சூழலை குழந்தைகள் வானொலி நாடகவடிவில் நடித்துக்காட்டட்டும்.
- வானொலி நாடகத்தின் வழி வெளியிட்ட கருத்துக்களையே காட்சிமொழி உருவாக்கி கைப்பாவை விளையாட்டாக வெளியிடலாம்.
- நாடக வாசிப்பு- சிறந்த நாடகத்தில் தேர்ந்தெடுக்கப்பட பாகங்களைக் குழந்தைகளைக் கொண்டு நாடக வெளியீட்டை வாசித்துக் கொண்டே வாசிக்க வேண்டும்.

  எ.கா லங்கா லட்சுமி ( ஜி. சங்கர பிள்ளை)பாக்ன பவனம் ( என். கிருஷ்ண பிள்ளை) பொன்னும் குடம், ஒரு கூட்டம் உறும்புகள் ( ஜி. சங்கரபிள்ளை)

**வானொலி நாடகம்.**

வானொலி நாடகம் என்பது ஒரு கேள்வி நாடக வெளியீடாகும்,. கண்டும் கேட்டும் அரங்கில் பார்க்கின்ற நாடகத்திலிருந்து கிடைக் கின்ற அனுபவத்தை பெரும்பாலான ஒலியின் வாய்ப்புகளை பயன் படுத்தி அனுபவிப்பதற்கான முயற்ச்சி வானொலி நாடகத்தில் உள் ளது.தேவையானதும் உண்மையானதுமான ஒலிகளை பதிவு செய்தும். இசைக்குளுவின் உதவியோடும் ஒலியின் எல்லா வாய்ப் புகளையும் பயன்படுத்துகின்றனர். பார்க்க முடிவதில்லை கேட்பதற்கு மட்டுமே முடியும் என்ற அறிவு நடத்துபவர்களுக்கும், கேட்பவர்க ளுக்கும், நடிப்பவர்களுக்கும் இருக்க வேண்டும். அமைதியான நிலையைப்போலும் சிறப்பாக பயன்படுத்த வேண்டும். அதிகமாக நிலவிலுள்ளதும் பார்வையாளர்களை ஈர்க்கவும் வித்திலுள்ள இந்த நாடகம் தனக்கென ஒரு சிறப்பைக் கொண்ட பகுதியாக நிலை கொள்கிறது.

## அலகு-3படைப்பாற்றல் நாடகம் Creative Drama)

### முன்னுரை

இது ஒரு குழுச் செயல்பாடாகும். சுதந்திரமாக வெளியிடுவதற்கு அனுமதி நல் கின்ற மனசாட்சிபரமான நாடக நடிப்பை படைப்பு நாடகம், நாடக ஒருங்கிணைப் பு,(கதையோ. கருத்தோ ஆகலாம்) வேகமாக நாடகம் உருவாக்குதல் என்றெல்லாம் கூறலாம், ஒரு தலைவரின் அல்லது உதவியாளரின் குறிப்புகளின் அடிப்பையில் மேம்படுத்திய ஒரு நாடகத்தயாரிப்பே இது. குழந்தைகளின் சாதாரண விளையாட்டி லிருந்து படைப்பு நாடகம் உருவாகிறது, மனசாட்சிபரமான நாடக நடிப்பே இங்கு நடக்கிறது. இதன் வழியாக வேகமாக நாடகம் உருவாகுவதற்கு திறன் உருவாகவும், உருவாகின்ற மகிழ்ச்சியை அனுபவிப்பதற்கும் வாய்ப்பு கிடைக்கிறது. குழந்தைக ளுக்கு இது ஒரு தன்னம்பிக்கையாகும். அதாவது அனுபவத்தின் வெளிப்படுத்து தல். இந்த செயல்பாட்டிற்கு மேடை தேவையில்லை. இருக்கின்ற இடத்தை சுதந்திர மாக பயன்படுத்துகின்றனர். கருத்துக்களை வெளியிடவும் அவைகளை பொருத்தமான பயிற்சியின் வழியாக நாடக வடிவத்தில் ஆக்கவும் ஒரு தலைவர் அவர்களுடன் இருத்தல் வேண்டும்.

*இலட்சியம்*

இறுதி வெளியீட்டை விட பங்களிப்பிற்கே முக்கியத்துவம்.

இலட்சியத்தை விட மார்க்கம்

அனுபவத்தின் வழி

முன்னரே தயாரித்த கை எழுத்துப்படிவமோ, தொழில்நுட்பமோ இல்லை. குழந் தைகளின் பிறவித்திறனின் அடிப்படையில் பாவனைக்கேற்ப மனசாட்சியின் வழி உருவாகுவதே கை எழுத்துப்படிவம். அரங்க அலங்காரமோ, வேடங்களோ ஒன்றும் தேவையில்லை. கிடைத்த பொருட்களை அலங்காரத்திற்கோ இடங்களுக்கோ

பயன்படுத்துவதும் தவறில்லை

இயக்குநரை விட வழிகாட்டியே இந்த செயல்பாட்டிற்குத் தேவை. வெளியிலுள்ள பார்வையாளர்கள் அவர்களின் திறனை நாசம் செய்து விடுவார்கள் என்பதால் குழுவில் உள்ளவர்களே பார்வையாளர்களாக இருத்தல் போதும்.

*நாடக எழுத்தின் வளர்ச்சி நிலைகள்*

1- படைத்தல் : ஒரு பாவனையைப் படைத்தல். குழந்தைகளின் பிரதிபலிப்புகளை வெளியிட அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும்.

2- சங்கம் : தேடுதலும், கண்டடைதலும், நடைமுறைப்படுத்தலும் இங்கு நடக்கிறது நிகழ்விலிருந்து நாடக சூழ்நிலைக்கும் அதிலிருந்து மீண்டும் நிகழ்விற்குமுள்ள ஒரு பயணமே இது. அதற்காக குழந்தைகளின் புலனறிவை தொட்டுணத்துவதற்காக வாய்ப்பு கொடுக்க வேண்டும். வாழ்க்கை அனுபவங்களை மீண்டும் படைப்பதற்கும் (Conflict) போராட்டத்தை வெளியிடுவதற்கும் எதிர்த்து நிற்றல்களை ஏற்றெடுக்கவும் ஆசைகளைப் பகிர்ந்து கொள்வதற்கும் வாய்ப்பு உருவாக்க வேண்டும் எளிமையானவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவை கற்பனையானதோ, வாழ்க்கை அனுபவங்களிலிருந்தோ எடுக்கப்பட்டதாகும்.

-தாளத்தை அடிப்படையாக கொண்ட விளையாட்டுக்கள்.

-செயல்முக்கியத்துவமுள்ள கதாபாத்திரங்களை உருவாக்குதல்.

-நாடக வெளியீட்டிற்கு உதவுகின்ற கருத்துக்களின் வெளியீடு.

-உருவாக்கி எடுக்கும் நிகழ்வுகள்.

-வாழ்க்கை அனுபவங்களிலிருந்து வாய்ப்புகளைத் தேர்ந்தெடுத்தல். பிறவித்திறனை உணர்த்தி குழந்தைகளில் ஒளிந்திருக்கும் நாடத்திறனை வளர்த்தி எடுக்கவும் படைப்பு நாடக செயல்களால் முடியும்.

## கற்றல் அடைவுகள்.

- எளிய சூழல்கள், கருத்துக்கள் என்பவையை வெளியிடும் போது, வெளியிடும் திறன் மேம்பட உடல் அசைவுகள், பாவனைகள் என்பவையை பயன்படுத்தவும்.
- சரியான பகுதியை அறிந்து குறிப்புகளின் அடிப்படையிலும், உருவங்களின் வழியாகவும் கருத்துக்களை வெளிப்படுத்துகின்றனர்.

## கருத்து, திறன்.

- சூழல்கள், கருத்துக்கள், என்பவைக்கு வாய்மொழி மற்றும் காட்சிபரவுமான நிலைகள் உண்டு.
- பொருத்தமான பாவனைகளை ஏற்றுக்கொண்டால் வாய்மொழியும் காட்சிபரவுமான வெளியிடுதல்கள் சிறப்பாகும்.
- உடல் அசைவு, வாய்மொழி நடிப்பு, பாவனைகள், என்பவற்றைச் சிறந்த முறையில் ஒன்றிணைத்து அரங்கத்தில் வெளியிட வேண்டும்.
- கருத்துக்கள் உண்மையானதும், வாழ்ககையோடு தொடர்புடையதுமாகும்.

- உருவங்கள், குறிப்புகள் என்பவையைப் பயன்படுத்திக் கருத்துக்களை வெளியிட முடியும்.
- உருவங்கள், குறிப்புகள் என்பவையை சிறந்த முறையில் பயன்படுத்தினால் கருத்தின் உண்மையான பகுதி வெளிவரும்.

**கற்றல் செயல்பாடுகள்.**

- கதைகளை விருப்பப்படாத மனிதர்களே இருக்கமாட்டார்கள். நாம் ஏராளமான கதைகளை வாசிக்கவும், கேட்கவும் செய்திருக்கிறோம். எந்தெந்த கதைகள் குழந்தைகளுக்குத் தெரியும்? ஆசிரியர் வகுப்பில் கேட்கிறார். குழந்தைகள் பல கதைகளையும் கூறுவர். அவர்களுக்கு மனிதர்களும், விலங்குகளும் கதாபாத்திரங்களாக வரும் பல கதைகளும் தெரியும். பாடப்புத்தகத்திலும் ஏராளமான கதைகள் உண்டல்லவா. கதைகளை நடிப்பதற்கான வாய்ப்பு கூடுதலாகும். மனநிலைகள். உணர்ச்சிகள் வெளிவருகின்ற கதைகளுக்கு நடிப்பின் வாய்ப்பு குறைவாகும்.
- குழந்தைகளின் முன்னிலையிலுள்ள கதைகளில் நன்றாக நடிப்பதற்கு வாய்ப்புள்ள கதையை அவர்களாகவே தேர்ந்தெடுக்கட்டும். இப்படித் தேர்ந்தெடுப்பது குழுக்களில் நடக்கவேண்டும். தேர்ந்தெடுத்த கதையை எவ்வாறெல்லாம் அரங்கத்தில் வெளியிடலாம் என்று கலந்துராயாடட்டும். கதாபாத்திரங்கள். அவர்களுடைய உரையாடல்கள். அவர்கள் ஏற்படுத்தும் செயல்கள். சூழல்கள் இவையெல்லாம் சாதாரணமாக நடக்கட்டும். பயிற்சியின் இறுதியில் இது நாடகமாக வெளிவருகிறது.
- நாடக வெளியீட்டைக்குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுகின்றனர்.
- வெளியிடுதல் எவ்வாறு அமைந்தது?
- தவறுகள் ஏதாவது நடந்ததா?
- நேரம், காலநிலை, உரையாடல் தேர்ந்தெடுப்பதில் ஏதாவது குறைபாடு இருந்ததா?
- இப்படிப்பட்ட வினாக்களும் கலந்துரையாடலுமாக ஒரு கதை நாடகமாகும் போது கவனிக்க வேண்டியவையைக் குறித்து குழந்தைகளுக்கு ஒரு தெளிவு உருவாக்க வேண்டும். சொல்கின்ற கதையை காட்சியாக மாற்றும் போது ஒரு குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நேரத்தில் கதையைக் கொண்டு செல்கிறோம். எழுதுவதற்கு பதிலாக உரையாடலும், செயல்களுமே இங்கு நடக்கின்றன. எடுத்துக்காட்டாக ஆமையுடையவும், முயலுடையவும் கதையில் முயல் பெரிய கர்வமுடையதாக இருந்தது என்று கதையில் கூறுகின்ற கருத்தை நாடகத்தில் எவ்வாறு வெளியிடலாம்? அதற்கு ஒரு இடம் வேண்டும். அதனுடன் உள்ள கதாபாத்திரங்கள் யாரெல்லாம் என்றி முடிவெடுக்க வேண்டும். முயலின் கர்வத்தை யாருடைய செயல்வழியாக அல்லது உரையாடல் வழியாக வெளியிடலாம் எனக் கண்டறிதல் வேண்டும். எடுத்துக்காட்டாக காட்டிலுள்ள ஒரு கதை ஆகலாம். அங்கு முயலும், யானையும்,கரடியும் எல்லாமிருந்தது தனது வேகத்தைக் குறித்து முயல்

கர்வத்தோடு போசிகிறது. அந்த நேரம் அதுவழி ஆமை வருகிறது. ஆமை ஊர்ந்து செல்வதைப்பார்த்த முயல் ஏளனமாகச் சிரித்தது.

- இவ்வாறு கருத்துக்களைச் செயல்வழியாகவும்,உரையாடல் வழியாகவும் மாற்றுவதே நாடகம். கதையிலுள்ள எல்லா நிகழ்வுகளும், இடங்களும் நாடகத்தில் பயன்படுத்த வேண்டியதில்லை. சரியாக தேவையான இடங்களும், கதாபாத்திரங்களும், உரையாடல்களும் ஒன்றிணைந்து நாடகத்தை வடிவமைக்க வேண்டும். ( இந்த கலந்துரையாடல் வழி முன்னரே வெளியிட்ட நாடகத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து மேம்படுத்தி மிண்டும் வெளியிட முயற்சிக்கவும். வெளியிட்ட நாடகத்தின் கையெழுத்துப் படிவம் தயாராக்க வேண்டும்.)
- *கருத்துக்களைக் குறிப்புகளின் வழி வெளியிடும் முறை நாடகத்தில் உள்ளதா? இதற்கான எடுத்துக்காட்டுகளை நாடகத்திலிருந்து கண்டைய முடிந்ததா?*
- குழந்தைகள் சில குறிப்புகளைக் கண்டடைவார்கள், முயலுடையவும், ஆமையுடையவும் ஓட்டப்பந்தயத்தை வெளியிட வேண்டியதில்லை. பார்வையாளர்களின் கைதட்டும் ஓசை மட்டும் போதுமானதாகும். ஒரு கோழியின் கூவலிருந்து விடியக்காலையை குறித்துள்ள குறிப்புகள் கிடைக்கின்றது, ஒரு சட்டுகம் சமயலறையைக்குறித்துள்ள குறிப்புகளைத் தரும். இவ்வாறு சிறு குறிப்புகளின் வழியும், உருவங்கள் வழியும். கருத்துக்கள் நாடகத்தில் வெளிப்படுத்தப் படுகின்றன.

## அலகு-4 திரைப்படம்

நிகழ்கால சூழ்நிலைகளில் முக்கியமான ஊடகமும், கலைவடிவமுமாகும் திரைப்படம். நாடகத்துடன், திரைப்படத்தையும் முக்கியமானதாகக் காணவேண்டும். திரைப்பட இரசனைக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற செயல்பாடாகுமிது.

### கற்றல் அடைவுகள்.

- திரைப்படம், நாடகம் என்பவற்றைப் பார்க்கும் போது உருவங்களையும், குறிப்புகளையும் பார்த்துப் பிரித்தறிந்து இரசிக்கின்றனர்.

### கருத்து, திறன்

- உருவங்களையும், குறிப்புகளையும் பொருளோடு வெளிப்படுத்தியே திரைப்படங்களும், நாடகமும் கருத்துப்பரிமாற்றம் நடக்கிறது.
- உருவங்களுடையவும், குறிப்புகளுடையவும் பொருளை உணர்ந்துகொண்டே திரைப்படத்தையும்,நாடகத்தையும் இரசிக்கின்றனர்.

### கற்றல் செயல்பாடுகள்.

- குழந்தைகளின் வயதிற்கும், பாவனைக்கும் ஏற்ற திரைப்படங்களைத்

தேர்ந்தெடுத்து வகுப்பில் வெளியிடலாம்.

திரைப்படத்தில் உருவங்களுக்கு முக்கியத்துவமுள்ள பகுதிகளை மீண்டும் மீண்டும் காண்பிக்க வேண்டும். நாடகத்திலுள்ள குறிப்புகள் திரைப்படத்தில் எவ்வாறு செயல்படுகிறது என்ற முறையில் கலந்துரையாடலாம். வெளியீடுகளிலும், கலந்துரையாடல்களிலும் குழந்தைகளின் பங்கேற்பு, மேன்மை என்பவையை ஆசிரியர் மதிப்பிட வேண்டும்.

- திரைப்படத்துடன் சிறந்த நாடகங்களின் ஒளிப்படகாட்சியையும் காண்பிக்க வேண்டும்.
- இரசனைக்குறிப்புகளில் இருக்க வேண்டியவை.

  -கதை.

  -திரைப்படத்தை இரசனையாக்கும் நிலைகள்.

  -பின்னணி இசையின் தாக்கம்.

  -சிறந்த காட்சிகள்
- இந்த முறையில் நாடகங்களின் இரசனைக் குறிப்பும் தயாரிக்கலாம்.

# ஏழாம் வகுப்பு

### முன்னுரை.

நாடகம் எழுதும் பலநிலைகளை அறிந்துகொண்டும், பயிற்சி எடுத்துக்கொண்டும் குழந்தைகள் ஏழாம் வகுப்பிற்கு வருகிறார்கள். பாவனையின் நுட்பத்தை உறுதிப்ப டுத்தும் செயல்பாடுகளே இந்த வகுப்பில் உட்படுத்தப்பட்டுள்ளன. பல பாடப்பகு தியின் நாடக வடிவ வெளியீடும், நடித்துக்காட்டுவதும். நாடகத்தின் நுட்பமான பகுதி களைப் பயிற்சி எடுப்பதற்கான வழியாவதுடன், கற்றல் செயல்பாடுகள் கூடுதல் பயனுள்ளதாக்கவும் உதவுகிறது. மொழிப்பாடங்களுடன், அறிவியல், கணிதம் என் பவையும் நாடகமாக நடித்துக்காட்டலாம். பொம்மை தயாரித்தல், பொம்மை விளை யாட்டு என்பவையும் கற்றல் செயல்பாடாகக் கொடுக்கப்பட்டுள்ளது. சினிமாவை இரசிக்க இந்த நிலையில் கூடுதல் வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

## அலகு-1 தலைவரைப்போல

அரங்கத்தில் தாளமும், அசைவும் தம்மிலுள்ள பொருத்தம் முக்கியமானதாகும். சூழ்நி லைக்கும், கருத்திற்கும் ஏற்ப தாளமும் அதற்கேற்ற அசைவும் அழகைக் கூட்டுகிறது. இவ்வாறான தாள அசைவின் ஒற்றுமையார்ந்த பயிற்சியே இந்தச் செயல்பாடு.

### கற்றல் அடைவுகள்.

- அரங்க அசைவுகளை வடிவமைக்கும்போது தாளத்தோடு கூடிய அசைவுகளை முறைப்படி பயன்படுத்த வேண்டும்.

### கருத்து, திறன்.

- தாளத்திற்கேற்ப அரங்க அசைவுகளை வடிவமைக்கலாம்.
- சூழநிலைக்கும், கருத்திற்கும் பொருத்தமான தாளத்தோடு கூடிய அசைவுகள் அழகைக் கூட்டும்.
- அசைவுகளைத் தாளமாக்கி முறைப்படுத்துவதற்கான திறன்.

### செயல்பாடுகள் :

குழந்தைகளை நான்கோ ஐந்தோ குழுக்களாகப் பிரிக்கவும். ஒவ்வொரு குழுவிற் கும் ஒரு பாட்டு கொடுக்கவும், முதல் குழந்தை பாடலுக்கேற்ப உடல் அசைவுகளை முறைப்படுத்துகிறது. குழுவிலுள்ள உறுப்பினர்கள் அதனைப் பின்பற்றுகின்றனர். அதனைத் தொடர்ந்து இரண்டாவது குழந்தை அதே பாட்டிற்கு புதிய உடல் அசைவுகளை உருவாக்குகிறது.

மற்றுள்ளவர்கள் அதனைப் பின்பற்றுகிறார்கள். குழவிலுள்ள அனைத்துக் குழந்தை களுக்கும் வாய்ப்பு கிடைக்கும்வரை செயல்பாடு தொடரவும். மற்றுள்ள குழுக்களும் தங்களுக்கு கிடைத்த பாடலை இந்த முறையில் வெளியிடுகின்றனர்.

ஒவ்வொரு குழந்தையின் உடல் அசைவும் தலமைதாங்குவதற்கான திறனையும் மதிப் பிட வேண்டும்.

## அலகு-3: ஒவ்வொரு காலகட்டத்திலும்.

வேறுபட்ட மனிதர்களுக்கும் உயிரினங்களுகக்கும் தெளிவற்ற அசைவுகளும் தனித்தன் மைகளும் உள்ளன. உற்றுநோக்கல், உட்கொள்ளுதல். பின்பற்றுதல் போன்ற நிலைகளின் வழி கடந்து செல்லும் குழந்தைகள் நடிப்பின் ஆரம்ப நிலையைப் படிக்கிறான். கதாபாத் திரங்களை உட்கொள்ளும் போது தெளிவு வருவதற்கு உதவுவது இந்தச் செயல்பாடுகளே ஆகும்.

### கற்றல் செயல்பாடுகள்.

- கதாபாத்திரங்களுக்குச் சிறப்பு அசைவுகளும், சிறந்த குணங்களும் கொடுத்து தனித்துவம் உருவாக்குகின்றனர்.
- கருத்துக்கள், சூழ்நிலைகள் என்பவையை வகுப்பில் வெளியிடும் போது ஒருவ ருக்கொருவர் உதவிசெய்தல், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை போன்ற குணங் களோடு குழுவில் செயல்படுகின்றனர்.
- கதாபாத்திரங்களை வெளியிடும் போது உற்றுநோக்கலின் வழி உட்கொண்ட மனிதர்களுடையவும், வேறு உயிரினங்களுடையவும் அசைவுகளின் சிறப்பு நிலைகளைப் பயன்படுத்தவும்.

### கருத்து, திறன்.

- வேறுபட்ட மனிதர்களுக்கும் உயிரினங்களுக்கும் தெளிவற்ற அசைவுகளும் தனிதன்மையும் உண்டு.
- கதாபாத்திரத்திற்குச் சிறப்பான தனித்தும் கொடுப்பதற்கு முறைப்படுத்திய அசை வுகளும், குணங்களும் தேவையானதாகும்.
- கதாபாத்திரத்தை உருவாக்குவதன் வழி படைப்புத்திறன் வளர்கிறது.
- குழுசெயல்பாட்டின் வெற்றிக்கு ஒருவருக்கொருவர் உதவுதல். ஒருவரை ஒரு வர் சார்ந்திருத்தல், விட்டுக்கொடுத்தல் என்பவை தேவையாகும்.
- அரங்க வெளியீடு பொறுப்பான ஒரு குழு வெளியீடாகும்.
- அரங்கவெளியீட்டின் வழி சுய கண்ணோட்டமும், படைப்புத்திறனும் வளர்கிறது,
- மனிதர்களிலும் பிற உயிரினங்களிலும் உள்ள அசைவுகளின் வேறுபாட்டினை புரிந்து கொள்ள உதவுகின்ற சிறப்புகுணங்களுண்டு.
- உயல்நலக்குறைவு உள்ளவர்களிலும உயிரினங்களிலும் உள்ள சிறப்பு மேன் மைகளை ஒன்றிணைத்து கதாபாத்திரங்களின் மேன்மையை வெளிப்படுத்தலாம்.

- கதாபாத்திரத்தை வெளிப்படுத்தும் போது தெளிவு வருவதற்கு இவ்வாறு உருவாகின்ற மேன்மைகள் உதவுகிறது.

**கற்றல் அடைவுகள் :**

1) ஒரு காட்டின் ஒளிப்படக்காட்சி, பலதரப்பட்ட விலங்குகளும், குறைபாடுள்ள மனிதர்களும் அங்கு உள்ளது. அவர்களிடைய குணங்களையும் அசைவுகளையும் வெளியிடுகின்றனர்.
2) அங்காடி, நதியோரம், மருத்துவமனை என்பனவிலுள்ள நிகழ்வுகளை காட்சியாக வெளியிடுகின்றனர்.

## அலகு-3 பாடப்பகுதிகளின் நாடக வடிவம்

வெளியிடும்திறன் என்பதைப் போன்று பாடப்பகுதிகளை குழந்தைகளிடம் கொண்டு செல்வதற்கான கற்பித்தல் ஊடகமாகவும் நாடகமாகவும் மாறுகிறது. பாடப்புத்தகத்திலுள்ள கவிதைகள் காட்சி வடிவில் அரங்கத்தில் வெளியிடும் போது, கருத்துக்களை நாடகவடிவிலாக்கும் பாடப்பகுதிகளை நாடகம் என்ற ஊடகத்தின் வழி புரிந்துகொள்ளவும் குழந்தைகளுக்கு வாய்ப்பு கிடைக்கிறது.

**கற்றல் அடைவகள்.**

- இலக்கிய வடிவங்களுக்குக் காட்சி வடிவம் தயாரிக்கும் போது ஒலி, அசைவு, நடிப்பு என்பவையை தேவையான வித்ததில் பயன்படுத்துகின்றனர்.

- வாய்மொழி நடிப்பு, இசை என்பவையை பயன்படுத்தி பொம்மை நாடகம் வெளியிடுகின்றனர்.

**கருத்து, திறன்.**

- குழுச்செயல்பாட்டின் வெற்றிக்கு ஒருவருக்கொருவர் உதவிசெய்தல், ஒருவரைவொருவர் சார்ந்திருத்தல், விட்டுக்கொடுத்தல் என்பவை தேவையாகும்.
- அரங்க வெளியீடு என்பது பொறுப்பான ஒரு குழுச் செயல்பாடாகும்.
- அரங்க வெளியீட்டின வழி சுய கண்ணோட்டமும், படைப்புத்திறனும் வளர்கிறது.
- .வெளியீடுகளுக்கு காலம் தேவை.
- இடத்திற்கும் கால நிலைக்கும முக்கியத்துவமுள்ள அரங்க வெளியீடுகளை அனைவரும் ஏற்றுக்கொள்வர்.

**கற்றல் செயல்பாடு.**

தமிழ், ஆங்கிலம், ஹிந்தி பாடப்புத்தகத்திலுள்ள கவிதைகளைக் குழந்தைகள் வெளியிடுவதற்காகத் தேர்ந்தெடுக்கின்றனர். கவிதையை குழுவிலுள்ளவர்கள் தேர்ந்தெடுக்கின்றனர்.

- எந்தெந்த இடங்களில்,
- எந்தெந்த நிகழ்வுகள்,
- யாரெல்லாம் கலந்துகொள்கின்றனர்,
- அவர்கள் என்ன கூறுகிறார்கள், செய்கிறார்கள்

என்றிவ்வாறு முறையாக உரையாடல்களை எழுதி தயாராக்கின்றனர். தேவையான தயாரெடுப்புகள் நடத்தி அலங்கரத்துடன் நாடகத்தை வெளியிடுகின்றனர்.

## அலகு-4 பொம்மை தயாரிக்கலாம்

பலவகையான கருத்துகளை அலங்காரத்தில் வெளியிடுவது என்பது பெரிய சவால் ஆகும்,. குறிப்புகளின் வழியாக உண்மைகளை உட்கொள்வதற்கான பார்வையாளர் களின் திறனே இப்படிப்பட்ட நிலைகளில் பயன்படுகிறது. உண்மையான மனிதர்க ளுக்கும் சிறு உயிரினங்களுக்கும் பதில் பொம்மைகளைப் பயன்படுத்தி உள்ள பொம்மை நாடகங்கள் குறிப்புகளின் வழியான வெளிப்படுத்தலுக்கு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

### கற்றல் அடைவுகள்.

- கருத்துப்பரிமாற்றத்திற்கு குறிப்புகள், பயன்படுத்திய உருவங்கள் என்பவையை அறிந்து கலந்துரையாடல் குறிப்புகள் தயாரிக்கின்றனர்.

### கருத்து, திறன்.

குறிப்புகள், உருவங்கள் என்பவையை பயன்படுத்தி கருத்துக்களுக்குக் காட்சிப் பாடங்கள் தயாராக்குகின்றனர்.

- குறிப்புகளுடையவும், உருவங்களுடையவும் பொருத்தமும் பொருள் உட்கொள் ளும் திறனும் அரங்க வெளியிடலுக்கு அழகு கூட்டுகிறது.
- விளக்குவதற்கான திறன்.
- கருத்துப் பரிமாற்றத்திற்குப் பயன்படும் சிறந்த வழியே பொம்மை நடகங்கள்.

### செயல்பாடுகள்:

- பாடப்பகுதிலுள்ள கதாபாத்திரங்களுக்கேற்ற பொம்மைகளைக் குழந்தைகள் செய் தித்தாள்கள், குப்பிகள், துண்டு துணிகள், நிறங்கள், பசை என்பவையை பயன்ப டுத்தி தயாராக்குகின்றனர். இப்படிப்பட்ட செயல்களில் ஆசிரியரின் சரியான மேற் பார்வையும், அறிவுரைகளும் கொடுக்க வேண்டும்.
- பொம்மை நாடத்திற்கு தேவையான இசையை கண்டறியவும். பள்ளிக்கூடத்தி லுள்ள ஒலி, ஒளி கருவிகளின் உதவியோடு இதனைக் கண்டறியலாம்.

- குழந்தைகள் தயாராக்கிய பொம்மைகளும், கதைச்சூழல்களும், இசையையும் இணைத்து தேவையான பயிற்சி எடுக்க வேண்டும். பயிற்சி நிலையிலும் தேவையான மாற்றம் உருவாக்கலாம். இதன் பிறகு குழுக்களாக வெளியிடவும். எல்லாக் குழுக்களும் வெளியிட்ட பிறகு பொதுவான மதிப்பிடலும், மேம்படுத்து வதற்கான அறிவுரைகளும் கொடுக்க வேண்டும். கலந்துரையாடலை ஆசிரியர் ஒருங்கிணைக்க வேண்டும்.

- கலந்துரையாடல் குறிப்புகளுக்கேற்ப நாடக வடிவத்தை மேம்படுத்தி பொம் மைகளுக்குப் பதிலாகக் குழந்தைகளே கதாபாத்திரங்களாக வேட மணிந்து நாட கத்தை பொது அரங்கில் வெளியிடலாம். முன்கூட்டியே தெரிவித்து கொண் டுள்ள வெளியீடு என்பதால் வேடம், அரங்க ஏற்பாடு, இசை போன்ற காரியங் கள் குறையில்லாத முறையில் அமைக்க வேண்டும்.
- வேடம், அமைப்பு, இசை, உருவங்கள், குறிப்புகள் என்வைகளின் ஒற்றுமை, குழந்தைகளின் பங்கேற்பு என்பவையை ஆசிரியர் மதிப்பிட வேண்டும்.

## அலகு–5: சினிமா இரசனை.

உருவங்களும், குறிப்புகளும் பயன்படுத்தி சினிமா எவ்வாறு கதைத் தொகுப்பை வெளியிடுகிறது என்றறிய உதவுகின்ற செயல்பாடாகும் இது. காட்சி குறிப்புகளி லிருந்து பார்வையாளர் ஒரு கருத்தை வடிவமைப்பது எவ்வாறென புரிந்து கொள்ள ஆசிரியரின் உதவி தேவையாகும்.

### கற்றல் அடைவுகள்.

- சினிமா, நாடகம் என்பவற்றைப் பார்க்கும்போது உருவங்களும், குறிப்புகளும் பிரித்தறிந்து இரசிக்கின்றனர்.

### கருத்து, திறன்.

- உருவங்களையும், குறிப்புகளையும் தொடர்புபடுத்தி வெளியிட்டு சினிமாவும், நாட கமும் கருத்துப்பரிமாற்றமும் நடக்கிறது.
- உருவங்களுடையவும், குறிப்புகளுடையவும் பொருளுணர்ந்து சினிமா, நாடகம் என்பவற்றை இரசிக்க வேண்டும்.

### செயல்பாடுகள்.

*செயல்பாடு*

- குழந்தைகளுக்கான தரம் வாய்ந்த திரைப்படங்களின் ஒரு நாள் திரைப்பட கண் காட்சி நடத்தலாம். கதைத்தொகுப்பு, (ப்ரோசர்) என்பவையை முன்னரே குழந் தைகளைக் கொண்டு தயாராக்கி வெளியிட வேண்டும்.

3 திரைப்படங்கள் வரை கண்காட்சியில் உட்படுத்தலாம். இதனிடையே திரைப்ப டத்தைக் குறித்துள்ள ஒரு கல ந்துரையாடல் நடத்த வேண்டும். சில்டின் ஆப் ஹெவன், கலர் ஆப் பாரடைஸ் போன்ற குழந்தைகளுக்கான தரம் வாய்ந்த திரைப் படங்களை இங்கு காண்பிக்கலாம்

*இரசனைக் குறிப்பு தயாரித்தல்*

- திரைப்படக்கண்காட்சிக்கு பிறகு, பார்த்த திரைப்படங்களைக் குறித்த குறிப்பு தயாரிக்க குழந்தைகளோடு கூறலாம். திரைப்படத்தின் கருத்து, இயக்கம், நடிப்பு உரையாடல் கள், பின்னணி இசை, ஒளிப்பதிவு போன்ற நிலைகளை இரசனைக் குறிப்பில் உட் படுத்த ஆசிரியர் தேவையான அறிவுகளும், பயிற்சியும் கொடுக்க வேண்டும்.

# பிற்சேர்க்கை-1 : செயல்திட்ட நாட்குறிப்பு

## ஓவியக்கலை-ஐந்தாம் வகுப்பு

| மாதம் | அலகு | கற்றல் அடைவுகள் | பிரிவேளைகள் |
|---|---|---|---|
| ஜூன் | 1 | இயற்கையை உற்றுநோக்கி கோடுகளும், நிறங்களும் பயன்படுத்தி படம் வரைகின்றனர். | 2 |
| ஜூலை | 1 | இயற்கையை உற்றுநோக்கி கோடுகளும், நிறங்களும் பயன்படுத்திப் படம் வரைகின்றனர். | 2 |
| ஆகஸ்ட் | 2 | பொருட்களின் வடிவத்தைக் குறித்துள்ள தெளிவு, விகிதம், நிறச்சேர்க்கை என்பவற்றில் அறிவு பெறுகின்றனர் | 2 |
| செப்டம்பர் | 2 | பொருட்களின் வடிவத்தை குறித்துள்ள தெளிவு, விகிதம், நிறச்சேர்க்கை என்பவற்றில் அறிவு பெறுகின்றனர் | 2 |
| அக்டோபர் | 3 | அடிப்படை நிறங்களை பயன்படுத்தி படம் வரைகின்றனர். | 2 |
| நவம்பர் | 4 | சுதந்திரமாகவும் குறிப்புகளின் அடிப்படையிலும் கருத்துக்களைக் கொண்ட படம் வரைதல் | 2 |
| டிசம்பர் | 5 | வடிவியல் வடிவங்களிலிருந்து புதிய வடிவங்கள் உருவாக்குதல். | 2 |
| ஜனவரி | 6 | முப்பரிமாண முறையிலுள்ள பொருட்களைத் தயாரிக்கின்றனர் | 2 |
| மார்ச் | 7 | கணினியில் கிராபிக்ஸின் வாய்ப்புகளை அறிகின்றனர். | 2 |
| மார்ச் | 7 | கணினியில் கிராபிக்ஸின் வாய்ப்புகளை அறிகின்றனர். | 2 |

# ஓவியக்கலை-ஆறாம் வகுப்பு

| மாதம் | அலகு | கற்றல் அடைவுகள் | பிரிவேளைகள் |
|---|---|---|---|
| ஜூன் | 1 | இயற்கையை உற்றுநோக்கி கோடுகளும், நிறங்களும் பயன்படுத்திப் படம் வரைகின்றனர். | 2 |
| ஜூலை | 2 | வடிவத்தைக் குறித்துள்ள தெளிவு,விகிதம், நிறச்சேர்க்கை என்பவற்றில் திறன் பெறுகின்றனர். | 2 |
| ஆகஸ்ட் | 3 | அடிப்படை நிறங்களிலிருந்து மூவர்ணங்கள் தயாரிக்கின்றனர். | 2 |
| செப்டம்பர் | 4 | உயிரினங்களின் நிலை, அளவு என்பவற்றை உட்கொண்டு படம் வரைகின்றனர். | 2 |
| அக்டோபர் | 5 | மனித உடல்நிலையைப் புரிந்துகொண்டு படம் வரைகின்றனர். | 2 |
| நவம்பர் | 6 | நுடபம், வடிவம், அழகு என்பவை ஒருங்கிணையும் மாதரிகளை தயாரிக்கின்றனர். | 2 |
| டிசம்பர் | 7 | பல ஊடகங்களில் முப்பரிமாணத்திலுள்ள சிற்பங்கள் தயாரிக்கின்றனர். | 2 |
| ஜனவரி | 7 | பல ஊடகங்களில் முப்பரிமாணத்திலுள்ள சிற்பங்கள் தயாரிக்கின்றனர். | 2 |
| பெப்ரவரி | 8 | தற்போதய நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு கோலிச்சித்திரம் தயாரிக்கின்றனர். | 2 |
| மார்ச் | 8 | தற்போதய நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு கோலிச்சித்திரம் தயாரிக்கின்றனர் | 2 |

# ஓவியக்கலை-ஏழாம் வகுப்பு

| மாதம் | அலகு | கற்றல் அடைவுகள் | பிரிவேளைகள் |
|---|---|---|---|
| ஜீன் | 1 | இயற்கையிலுள்ள பொருட்களை உற்றுநோக்கி அவையிலுள்ள வடிவியல் வடிவங்களை கண்டறிந்து படம் வரைந்து நிறம் கொடுக்கின்றனர். | 2 |
| ஜீலை | 2 | முப்பரிமாண வடிவங்களின் நிழலும் ஒளியுமாக தொடர்புள்ள கற்றல் முறைகளைப் புரிந்து கொண்டு சாதாரண முறையில் படம் வரைகின்றனர். | 2 |
| ஆகஸ்ட் | 3 | விகித முறையில் உள்ள மனித வடிவங்கள் சிறு வேலைகளைச் செய்கின்ற படம் வரைகின்றனர். | 2 |
| செப்டம்பர் | 4 | உற்று நோக்கலின் தனித்தன்மைகளை உட்கொண்டு படம் வரைகின்றனர். | 2 |
| அக்டோபர் | 5 | விகித முறையிலுள்ள மனித வடிவங்கள் சிறு வேலைகளைச் செய்கின்ற படம் வரைகின்றனர். | 2 |
| நவம்பர் | 6 | உற்று நோக்கலின் தனித்தன்மைகளை உட்கொண்டு படம் வரைகின்றனர். | 2 |
| டிசம்பர் | 7 | முப்பரிமாண சிற்பங்கள் பல ஊடகங்களில் தயாரிக்கின்றனர். | 2 |
| ஜனவரி | 8 | கருத்துக்களை அடிப்படையாக்கி வண்ணப்படங்களைத் தயாரிக்கின்றனர். | 2 |
| பெப்ரவரி | 9 | கருத்துக்களை வெளிப்படுத்துகின்ற கேலிச்சித்திரங்களை வரைகின்றனர். | 2 |
| மார்ச் | 9 | கதை, கவிதை இவைகளிலுள்ள முக்கிய நிகழ்வுகளைக் கருத்திற்கேற்ப வரைகின்றனர். | 2 |

# இசை- ஐந்தாம் வகுப்பு

| மாதம் | அலகு | கற்றல் அடைவுகள் | பிரிவேளைகள் |
|---|---|---|---|
| ஜீன் | 1 | பலவகையான வாய்மொழிச் சிந்துக்களைக் கேட்கின்றனர். தாளம் இடுகின்றனர். | 2 |
| ஜூலை | 1 | பலவகையான வாய்மொழிச் சிந்துக்களைக் கேட்கின்றனர். தாளம் இடுகின்றனர். | 2 |
| ஆகஸ்ட் | 2 | இசைக்கருவிகள், பாடல் என்பவை வழியாக வேறுபட்ட பாடல்களைக் கேட்கின்றனர் கேட்ட பாடல்களை மூளிப்பாட்டாக பாடுகின்றனர். | 2 |
| செப்டம்பர் | 2 | இசைக்கருவிகள், பாடல் என்பவை வழியாக வேறுபட்ட பாடல்களை கேட்கின்றனர் கேட்ட பாடல்களை மூழிப்பாட்டாக பாடுகின்றனர் | 2 |
| அக்டோபர் | 3 | குழுவாகப் பாடும்போது பாடலின் வேகம், ஏற்றம், பாவனை என்பவற்றில் குறிப்புகளுக்கேற்ப ஏற்ற இறக்கம் வருத்திப் பாட முடிகிறது. | 2 |
| நவம்பர் | 3 | குழுவாக பாடும்போது பாடலின் வேகம், ஏற்றம், பாவனை என்பவையில் குறிப்புகளுக்கேற்ப ஏற்ற இறக்கம் வருத்தி பாட முடிகிறது. | 2 |
| டிசம்பர் | 4 | தாய்மொழிப்பாட்டுகளுடன் வேற்றுமொழிப் பாடல்களும், தேசபக்திப் பாடல்களும் கருத்துகளுக்கேற்ற இராகத்திலும், பாவனையிலும் பாடுகின்றனர். | 2 |
| ஜனவரி | 4 | தேசிய கீதம், தேசபக்கதிப் பாடல் இவைகளை சரியான குறிப்புகளின் அடிப்படையில் சரியான நேரத்தில் பாடுகின்றனர். 2 | |
| பெப்ரவரி | 5 | கவிதையின் கருத்திற்கேற்ற இராகத்தைக் கண்டறிகின்றனர். பாவனையோடு பாடுகின்றனர். | 4 |

# இசை- ஆறாம் வகுப்பு

| *மாதம்* | *அலகு* | *கற்றல் அடைவுகள்* | *பிரிவேளைகள்* |
|---|---|---|---|
| ஜீன் | 1 | இசையின் நிலைகளை நிலைநிறுத்திப் பாடுகின்றனர். | 2 |
| ஜூலை | | தனியாகவும், குழுவாகவும் பாடுப்போது வருகின்ற சுருதியின் குறைபாடு, தாளக்குறைவு போன்றவற்றைப் புரிந்துகொள்ள முடிகிறது. | 2 |
| ஆகஸ்ட் | | தேசிய கீதத்தை முறையாகப் பாட முடிகிறது | 2 |
| ஆகஸ்ட் | 2 | சுருதிப்பெட்டியின் உதவியோடு பாட முடிகிறது. | 2 |
| செப்டம்பர் | | மெல்லிசைப்பாடல்களை சிறு இசைக்கருவிகளின் உதவியோடு பாட முடிகிறது. | 2 |
| அக்டோபர் | | வேறுபட்ட நாட்டுப்புற பாடல்களும், வாய்மொழிச் சிந்துக்களும் அதன் தனித்தன்மையோடும் பாடுகின்றனர். | 2 |
| அக்டோபர் | 3 | வேற்றுமொழியிலுள்ள தேசபக்திப் பாடல்களைப் பாடுகின்றனர். | 2 |
| நவம்பர் | | பலவித கவிதைகளுக்கு மெட்டு அமைத்துப் பாடுகின்றனர். | 2 |
| டிசம்பர் | | பலவித மொழிகளிலுள்ள தேசபக்திப் பாடல்களை ஒன்றிணைத்துப் பாடுகின்றனர். | 2 |
| ஜனவரி | 4 | பல்வேறு சிறப்பு நாட்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்களுக்கு இராகமிட்டு பாடுகின்றனர். | 2 |
| பெப்ரவரி | | பல்வேறு சிறப்பு நாட்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்களுக்கு இராகமிட்டுப் பாடுகின்றனர். | 2 |

## இசை- ஏழாம் வகுப்பு

| மாதம் | அலகு | கற்றல் அடைவுகள் | பிரிவேளைகள் |
|---|---|---|---|
| ஜீன் | 1 | பலவித தாளத்திலுள்ள பாடல்களைப் பாடுகின்றனர். | 2 |
| ஜூலை | 1 | பலவித தாளத்திலுள்ள பாடல்களைப் பாடுகின்றனர். | 2 |
| ஆகஸ்ட் | 2 | கர்நாடக இசையோடு தொடர்புள்ள கதைகள், வரலாற்று நிகழ்வுகள் என்பவற்றை விளக்க முடிகிறது. | 2 |
| ஆகஸ்ட் | 2 | கர்நாடக இசையோடு தொடர்புள்ள கதைகள், வரலாற்று நிகழ்வுகள் என்பவையை விளக்க முடிகிறது. | 2 |
| செப்டம்பர் | 3 | பாடல்களை பின்னணி இசையுடனும், இசைக்கருவிகளுடனும் பாடுகின்றனர். | 2 |
| அக்டோபர் | 3 | பாடல்களை பின்னணி இசையுடனும், இசைக்கருவிகளுடனும் பாடுகின்றனர் | 2 |
| அக்டோபர் | 4 | இசையின் அடிப்படைப்பாடல்களான ஏழுஸ்வரங்கள் முதல் அலங்காரம் வரையில் உள்ளவற்றில் சிலதை பாடுகின்றனர். | 2 |
| நவம்பர் | 4 | இசையின் அடிப்படைப்பாடல்களான ஏழுஸ்வரங்கள் முதல் அலங்காரம் வரையில் உள்ளவையில் சிலதை பாடுகின்றனர். | 2 |
| டிசம்பர் | 5 | பாடப்புத்தகத்திலுள்ள கவிதைகளையோ வேறு கவிதைகளையோ வாசித்துக் கருத்தை உட்கொண்டு இராகம் இட்டுப் பாடுகின்றனர். | 2 |
| ஜனவரி | 5 | பாடப்புத்தகத்திலுள்ள கவிதைகளையோ வேறு கவிதைகளையோ வாசித்துக் கருத்தை உட்கொண்டு இராகம் இட்டு பாடுகின்றனர். | 2 |
| பெப்ரவரி | 5 | பாடப்புத்தகத்திலுள்ள கவிதைகளையோ வேறு கவிதைகளையோ வாசித்துக் கருத்தை உட்கொண்டு இராகம் இட்டு பாடுகின்றனர். | 2 |

## நடனம்- ஐந்தாம் வகுப்பு

| *மாதம்* | *அலகு* | *கற்றல் அடைவுகள்* | *பிரிவேளைகள்* |
|---|---|---|---|
| ஜீன் | 1 | உடல் வழக்கமுடைய நடன வடிவங்களின் தனித்தன்மைகளை அறிகின்றனர். | 2 |
| ஜூலை | 1 | உடல் வழக்கமுடைய நடன வடிவங்களின் தனித்தன்மைகளை அறிகின்றனர். | 2 |
| ஆகஸ்ட் | 2 | பஞ்ச நடைகளிலுள்ள சுவடுகளை அறிகின்றனர், | 2 |
| செப்டம்பர் | 2 | பஞ்ச நடைகளிலுள்ள சுவடுகளை அறிகின்றனர், | 2 |
| அக்டோபர் | 3 | கைவிரல்களைப் பயன்படுத்தி சுற்றிலுமுள்ள பொருட்களை நடித்துக்காட்டுகின்றனர். | 2 |
| நவம்பர் | 3 | கைவிரல்களைப் பயன்படுத்தி சுற்றிலுமுள்ள பொருட்களை நடித்துக்காட்டுகின்றனர். | 2 |
| டிசம்பர் | 4 | பள்ளிக்கூடத்திலுள்ள சிறப்பு தினங்களுக்குப் பொருத்தமான நடன வடிவங்களை வெளியிட முடிகிறது. | 2 |
| ஜனவரி | 4 | பள்ளிக்கூடத்திலுள்ள சிறப்பு தினங்களுக்குப் பொருத்தமான நடன வடிவங்களை வெளியிட முடிகிறது. | 2 |
| பெப்ரவரி | 5 | பாடப்பகுதிக்குப் பொருத்தமான நடன வடிவங்களை வெளியிட முடிகிறது. | 2 |
| மார்ச் | 5 | பாடப்பகுதிக்குப் பொருத்தமான நடன வடிவங்களை வெளியிட முடிகிறது. | 2 |

# நடனம்- ஆறாம் வகுப்பு

| மாதம் | அலகு | கற்றல் அடைவுகள் | பிரிவேளைகள் |
|---|---|---|---|
| ஜீன் | 1 | நாட்டுப்புற நடன வடிவங்களை நடித்துக்காட்டுகின்றனர் | 2 |
| ஜூலை | 1 | முறையான சூத்திரங்களைக் கண்டு நடித்துக்காட்டுகின்றனர். | 2 |
| ஆகஸ்ட் | 2 | சுற்றுமுள்ள பொருட்களைக் கை முத்திரைகள் வாயிலாக வெளியிடுகின்றனர். | 2 |
| செப்டம்பர் | 3 | அடிப்படை முத்திரைகள் சிலவற்றைக் கண்டு நடித்துக்காட்டுகின்றனர். | 2 |
| அக்டோபர் | 3 | அடிப்படை முத்திரைகள் சிலவற்றைக் கண்டு நடித்துக்காட்டுகின்றனர். | 2 |
| நவம்பர் | 4 | சில கை முத்திரைகளைப் பயன்படுத்திக் கருத்துப்பரிமாற்றம் நடத்துகின்றனர். | 2 |
| டிசம்பர் | 4 | சில கை முத்திரைகளைப் பயன்படுத்தி கருத்துப்பரிமாற்றம் நடத்துகின்றனர். | 2 |
| ஜனவரி | 5 | கதைகளி அலங்காரம், செயற்கையான நடிப்புகள் என்பவைகளைக் குறித்துள்ள தகவல்களைச் சேகரிக்கின்றனர் | 2 |
| பெப்ரவரி | 6 | சுயமாகத் தயாரித்த வாய்மொழிச் சிந்துவிற்கேற்ப நடனமாடுகின்றனர். | 2 |
| மார்ச் | 6 | சுயமாகத் தயாரித்த வாய்மொழிச் சிந்துவிற்கேற்ப நடனமாடுகின்றனர். | 2 |

# நடனம்-ஏழாம் வகுப்பு

| மாதம் | அலகு | கற்றல் அடைவுகள் | பிரிவேளைகள் |
|---|---|---|---|
| ஜீன் | 1 | கேரள நடன வடிவங்கள் இலக்கிய நடனங்களை, நாட்டுப்புற நடனங்கள் என வகைப்படுத்துகின்றனர். | 2 |
| ஜூலை | 1 | கேரள நடன வடிவங்கள் இலக்கிய நடனங்கள், நாட்டுப்புற நடனங்கள் என வகைப்படுத்துகின்றனர். 2 | |
| ஆகஸ்ட் | 2 | குறிப்பிட்ட பாடல்களுக்கேற்ப ஒற்றுமையாக நடனமாடுகின்றனர். | 2 |
| செப்டம்பர் | 2 | குறிப்பிட்ட பாடலுகளுக்கேற்ப ஒற்றுமையாக நடனமாடுகின்றனர். | 2 |
| அக்டோபர் | 3 | நடனக் குறிப்புகளை பயன்படுத்தி கருத்துக்களை வெளியிடுகின்ற முறையிலுள்ள அரங்கநிலையை நடத்துகின்றனர். | 2 |
| நவம்பர் | 3 | நடனக் குறிப்புகளை பயன்படுத்தி கருத்துக்களை வெளியிடுகின்ற முறையிலுள்ள அரங்கநிலையை நடத்துகின்றனர். | 2 |
| டிசம்பர் | 4 | அடிப்படைமுத்திரைகள் (முழுவதும்) அறிகின்றனர். | 2 |
| ஜனவரி | 4 | அடிப்படைமுத்திரைகள் (முழுவதும்) அறிகின்றனர். | 2 |
| பெப்ரவரி | 5 | வேறுபட்ட தளங்களில் சுவடுகள் வைப்பதற்கு திறனை அடைகின்றனர். | 2 |
| மார்ச் | 5 | வேறுபட்ட தளங்களில் சுவடுகள் வைப்பதற்கு திறனை அடைகின்றனர். | 2 |

# நாடகம்-ஐந்தாம் வகுப்பு

| மாதம் | அலகு | கற்றல் அடைவுகள் | பிரிவேளைகள் |
|---|---|---|---|
| ஜீன் | முறைப்படுத்திய அசைவுகள் | • இயற்கையிலுள்ள உயிரினங்களையும், மனிதர்களையும் உற்று நோக்கி உட்கொண்டு தேவையான சூழ்நிலைகளில் வெளியிடுகின்றனர்.<br>• சூழ்நிலைகளுக்கேற்பத் தாள அசைவுகளைப் பயன்படுத்துகின்றனர். | 2 |
| ஜூலை | முறையான உரையாடல்கள் | • கருத்துக்கள், சூழ்நிலைகள் என்பவைகளோடு ஒலி, அசைவு, நடிப்பு என்பவற்றை நுழைக்கின்றனர். | 2 |
| ஆகஸ்ட் | முறையான உரையாடல் தொடர்ந்து கவிதையிலிருந்தும், பழமொழிகளிலிருந்தும் நாடகம் உருவாக்குதல் | • சிறிய சூழ்நிலைகள், சிறந்த கருத்துக்கள் என்பவையை சாதாரணமாக வகுப்பில் வெளியிடுகின்னர்.<br>• சூழ்நிலைக்கேற்ப வாய்மொழியைகவும், எழுத்துவடிவத்திலும் சாதாரண உரையாடலை நடத்துகின்றனர்.<br>• உணர்ச்சிகரமாக உரையாடி நடிக்கின்றனர். | 2 |
| செப்டம்பர் | தொடர்ந்து கவிதையிலிருந்தும், பவமொழிகளிலிருந்தும் நாடகம் உரருவாக்குதல் | | 2 |
| அக்டோபர் | | • நாடக மேடைகளில் கை மெய் மறந்து உடல், ஒலி, பாவனை என்பவற்றைப் பொருத்தமான முறையில் பயன்படுத்துகின்றனர். | 2 |
| நவம்பர் | காலநிலைகளுடன் | | 2 |
| டிசம்பர் | | | 2 |
| ஜனவரி | சினிமா காண்பித்தல் | • சினிமா, நாடகம் என்பவற்றைப் பார்த்து இரசிக்கின்றனர். | 2 |
| பெப்ரவரி | சினிமா காண்பித்தல் தொடர்ச்சி. இரசனைக் குறிப்பு தயாரித்தல் | | 2 |
| மார்ச் | | | 2 |

# நாடகம்-ஆறாம் வகுப்பு

| *மாதம்* | *அலகு* | *கற்றல் அடைவுகள்* | *பிரிவேளைகள்* |
|---|---|---|---|
| ஜீன் | வாய்மொழிச் சிந்து | • மனிதர்களுடைய வேறுபட்ட அசைவுகளை புரிந்து கொண்டு தனித் தன்மைகளை உட்கொண்டு தேவையான சூழ்நிலைகளில் பயன்படுத்துகின் றனர்.<br>• தாள அசைவுகளுடன் கருத்துப் பரிமாற்றம் நடத்திகின்றனர்.<br>• இலக்கிய வடிவங்களுக்குக் காட்சி வெளியீடு கொடுக்க ஒலி, அசைவு, நடிப்பு என்பவையை பொருளுணர்ந்து உட்புகுத்துகின்றனர். | 2 |
| ஜூலை | வாய்மொழிச்சிந்து சொல்லிச்சொல்லி | | 2 |
| ஆகஸ்ட் | சொல்லிச் சொல்லி (தொடர்ச்சி) | • எளிய சூழ்நிலைகள், கருத்துக்கள், என்பவற்றைப் வெளியிடும் போது அதன் திறன் அதிகரிக்க உடல் அசைவுகள், பாவனைகள் என்பவற்றைப் பயன்படுத்துகின்றனர்.<br>• உண்மையான பகுதிகளைப் புரிந்து கொண்டு குறிப்புகள் வழியாக வும்.....................................கருத்துக்களை வெளியிடுகின்றனர். | 2 |
| செப்டம்பர் | சொல்லி சொல்லி (தொடர்ச்சி) | | 2 |
| அக்டோபர் | .............. | • ........................<br>• ......................................... | 2 |
| நவம்பர்<br>டிசம்பர் | ............ | | 2 |
| | ......................... | • சினிமா, நாடகம் என்பவற்றைப் பார்க்கும் போது....................................., குறிப்புக ளையும் அறிந்து இரசிக்கின்றனர். | 2 |
| ஜனவரி | சினிமா சினிமா | | 2 |
| பெப்ரவரி | சினிமா சினிமா | | 2 |
| மார்ச் | சினிமா சினிமா | | 2 |

## நாடகம்-ஏழாம் வகுப்பு

| *மாதம்* | *அலகு* | *கற்றல் அடைவுகள்* | *பிரிவேளைகள்* |
|---|---|---|---|
| ஜீன் | தலைவரைப்பொறுத்து | • அரங்க அசைவுகளை வடிவமைக்கும் போது தாளத்தோடு கூடிய அசைவுகளை உருவாக்கி முறைப்படுத்தி பயன்படுத்தலாம். | 2 |
| ஜூலை | ஒவ்வொருகாலநிலைகளும் | • நற்குணங்களையும், சிறந்த அசைவுகளையும் கொடுத்து கராபாத்திரத்திற்கு தனித்துவம் உருவாக்கிகின்றனர்.<br>• கருத்துக்கள், சூழல்கள் எனபவையை வகுப்பில் வெளியிடும் போது ஒருவருக்கொருவர் உதவுதல், சார்ந்திருத்தல் விட்டுக்கொடுக்கம் மனப்பானமை போன்றவையோடு குழுவில் செயல்படுகின்றனர்.<br>• கதாபாத்திரங்களை வெளியிடும்போது உற்றுநோக்கலின் வழி உட்கொண்ட மனிதர்களுடையவும் வேறு உயிரினங்களுடையவும் அசைவுகளின் சிறப்புக்களைப் பயன்படுத்துக்கின்னர்.<br>• இலக்கிய வடிவங்களுக்கு காட்சி வெளியீடு தயாரிக்கும் போது ஒலி, அசைவு, நடிப்பு என்பவையை படைப்புகளாகப் பயன்படுத்துகின்றனர்.<br>• வாய்மொழி நடிப்பு, இசை என்பவயை பயன்படுத்தி பொம்மொ நாடகம் வெளியிடுகின்றனர். | 2 |
| ஆகஸ்ட் | ஒவ்வொரு காலநிலைகலும் பாடப்பகுதியின் நாடக வெளியீடு | | 2 |
| செப்டம்பர் | பாடப்பகுதியின் நாடக வெளியீடு (தொடர்ச்சி) | | 2 |
| அக்டோபர் | பாடப்பகுதியின் நாடக வெளியீடு (தொடர்ச்சி) | | 2 |
| நவம்பர் | பொம்மை தயாரிக்கலாம் | • கருத்துப் பரிமாற்றத்திற்குக் குறிப்புகள், பயன்படுத்திய உருவங்கள் என்பவற்றை அறிந்து கலந்துரையாடல் குறிப்புகள் நடத்துகின்றனர். | 2 |
| டிசம்பர் | பொம்மை தயாரிக்கலாம் | | 2 |
| ஜனவரி | பொம்மை தயாரிக்கலாம் தொடர்ச்சி.திரைப்பட இரசனை | • சினிமா, நாடகம், இசை என்பவற்றைப் பயன்படுத்திப் பொம்மை நாடகம் தயாரிக்கின்றனர். | 2 |
| பெப்ரவரி | திரைப்பட இரசனை | | 2 |
| மார்ச் | திரைப்பட இரசனை | | 2 |

# பிற்சேர்க்கை-2: மாதரி வினாத்தாள்

## ஓவியக்கலை

நேரம் : 2 மணி நேரம்

லகுப்பு : ஐந்து

மதிப்பெண் :

*ஆசிரியர்களுக்கான பொது குறிப்புகள் :*

- வரைவதற்கும் நிறம் கொடுப்பதற்குமான பொருட்களை கொண்டுவர குழந்தைகளிடம் முன்கூட்டிய கூறவேண்டும்.
- படம் வரைவதற்கு 1/4 என்னும் அளவிலுள்ள அட்டை கொடுக்க வேண்டும்.
- பதில் எழுதவேண்டிய காகிதமும் கொடுக்க வேண்டும்.

1. அப்புவின் சேகரிப்புப்பெட்டியில் பல வடிவங்களிலும் ( முக்கோணம், வட்டம், சதுரம் போன்ற) நிறங்களிலும் உள்ள பல பொருட்கள் உண்டு. சில பொருட்களில் நிறம் கொடுக்க அப்புவிற்கு உதவுவீர்களா?

(a) உங்களுக்குத் தெரிந்த ஏதாவது மூன்று வடிவங்களை வரையவும்.

(b) அந்த வடிவங்களில் வண்ண மெழுகுகள்/..........பேனா பயன்படுத்தி அடிப்படை நிறம் கொடுக்கவும்.

*அடிப்படை நிறங்கள் எவையென தெரியுமா? நமக்குச் சுற்றிலும் காண்கின்ற பொருட்களில் அடிப்படை நிறங்கள் உண்டு. வேறு நிறங்களை இணைத்து அடிப்படை நிறம் உருவாக்க முடியாது*

(c) நீங்கள் பயன்படுத்திய அடிப்படை நிறங்களை அதன் அடியில் எழுதவும்.

2. நமக்கு சுற்றிலும் பல நிறங்கள் உண்டல்லவா. அவையில் சில இயற்கையானதும், சில மனிதனால் உருவாக்கப் பட்டதுமாகுமல்லவா.

(40 நிமிடம் )

(a) இயற்கையான இரண்டு பொருட்களை வரையவும்.


(b) மனிதனால் உருவாக்கப்பட இரண்டு பொருட்களை வரையவும்.

(c) நீங்கள் வரைந்த படங்களை 'மூன்று நிறங்கள்' பயன்படுத்தி நிறம் கொடுக்கவும். ( வரைவதற்கு வண்ண மெழுகைப்பயன்படுத்தலாம்)

(d) பயன்படுத்திய மூவர்ணங்கள் எவையென்றும், அவற்றை உருவாக்க என்னென்ன அடிப்படை நிறங்களைப் பயன்படுத்தினீர்கள் என எழுதவும்.

3. அப்புவின் வீட்டின் முன்பகுதியில் ஒரு நல்ல பூந்தோட்டம் உள்ளது. ஏராள மான செடிகளும், மரங்களும்,பூக்களும்,வண்ணத்துப்பூச்சிகளும், கிளிகளும் அங்கு உள்ளன. அந்தப் பூந்தோட்டத்தை மனதில் கொண்டு பூந்தோட்டத் தின் படம் வரையவும். தேவையான பின்னணி உருவாக்கி விருப்பமுள்ள நிறம் கொடுத்து வரையவும். *(50 நிமிடம்)*

## விடைகள்

1. (a)  போன்றவை

- வடிவங்கள் 3 சரியாக வரைதல் (perfect drawing) – 4
- வடிவங்கள் 3 வரைதல். – 3
- வடிவங்கள் 3 வரைதல். – 2
- வடிவங்கள் 3 மட்டும் வரைதல். – 1

(b) அடிப்படை நிறங்கள் மஞ்சள், நீலம், சிகப்பு

- வடிவங்கள் 3-க்கு நுட்பமாக நிறம் கொடுத்தல். (perfect drawing) – 4
- வடிவங்கள் 3-க்கு நுட்பமாக நிறம் கொடுத்தல். – 3
- வடிவங்கள் 2-க்கு நுட்பமாக நிறம் கொடுத்தல். – 2
- வடிவங்கள் 1-க்கு நுட்பமாக நிறம் கொடுத்தல். – 1

(c) மஞ்சள், நீலம், சிகப்பு.

- அடிப்படை நிறங்கள் முழுவதும் சரியாக எழுதினால். – 4
- 2 சரியாக எழுதினால். – 3
- 1 சரியாக எழுதினால். – 2

---

2. (a) இயற்கையானவை ( மரங்கள், மலைகள்,நதிகள், பறவைகள், விலங்குகள் போன்றவை)
மனிதர்களால் உருவாக்கப்பட்டவை (வீடுகள், வாகனங்கள், தொழில்கருவிகள், வீட்டு உபரணங்கள் போன்றவை)

- 4 பொருட்களும் முழுமையாக வரைதல். (perfect drawing) – 4
- 3 பொருட்களை அறிந்து கொள்ளும் வகையில் வரைதல். – 3
- 2 பொருட்களை அறிந்து கொள்ளும் வகையில் வரைதல். – 2
- ஒரு பொருட்களை மட்டும் அறிந்து கொள்ளும் வகையில் வரைதல்.– 1

(b) மூன்று நிறங்கள் : பச்சை, ஆரஞ்சு, ஊதா

- 4 பொருட்களும் மூன்று நிறங்களும் சரியாகக் கொடுத்தால் (perfect drawing) – 4
- 2 நிறங்களை சரியாக கொடுத்தால் – 3

- 1 நிறங்களைச் சரியாகக் கொடுத்தால். – 2
- மற்றுள்ளவை. – 1

(c) மூன்று வர்ணங்கள் : பச்சை- மஞ்சள்+ நீலம்
ஆரஞ்சு- மஞ்சள்+சிகப்பு
ஊதா-நீலம்+ சிகப்பு

- எல்லா நிறங்களையும் சரியாக எழுதினால் – 4
- 2 சரியாக எழுதினால் – 3
- ஒரு நிறம் சரியாக எழுதினால் – 2
- மற்றுள்ளவை. – 1

---

3.
- பூக்களும், வண்ணத்துப்பூச்சிகளும், செடிகளும் பின்னணி இயற்கையோடு நிறம் கொடுத்து முழுமையாக்கினால் (perfect drawing) – 4
- படம் வரையவும், பின்னணி தெளிவில்லாமல் நிறம் கொடுத்து முழுமைப் படுத்தினால். (perfect drawing) – 3
- முழுமையில்லாமல் படம் வரையவும் நிறம் கொடுக்கவும் செய்தால்.– 2
- முழுமையில்லாமல் வரைதல்.. – 1

---

# இசை

வகுப்பு : ஐந்து நேரம் 2 மணிநேரம்

*ஆசிரியர்களுக்கான பொதுக் குறிப்புகள்.*

- ஒவ்வொரு கேள்விக்கும் சரியான மூன்று பதில்கள் எழுத வேண்டும்.
- அனைத்துக் குழந்தைகளுக்கும் தேவையான சமமான நேரம் கிடைக்கிறது என உறுதிப்படுத்த வேண்டும்.

1. குழந்தைகள் குழுக்களாகின்றனர். ( ஒரு குழுவில் 5 முதல் 8 குழந்தைகள் ) ஒவ்வொரு குழுவிற்கும் பாட்டின் வரிகள் கொடுக்கப்படுகின்றன.

*குழு-1........................................ (8 வரி)*
*குழு-1........................................ (8 வரி)*
*குழு-1........................................ (8 வரி)*
*குழு-1........................................ (8 வரி)*
*குழு-1........................................ (8 வரி)*

ஒவ்வொரு குழுவும் தயாரெடுப்பதற்கு 10 நிமிடமும்,வெளியிடுவதற்கு 10 நிமிடமும். ஒரு குழு வெளியிடுவதை மற்ற குழுக்கள் பார்க்கக் கூடாது. ஒரு குழு வெளியிடும் போது வேறொரு குழுவிற்கு வரிகள் கொடுத்து தயாரெடுப்பதற்கான நேரம் கொடுக்க வேண்டும்.

2. கீழே கொடுக்கப்பட்டுள்ள பாடல்கள் எந்த வகையில் உட்படுபவை எனக் கூறுக.

(வடக்கன் பாட்டு, வஞ்சிப்பாட்டு, வேளாண்பாட்டு, திருவாதிரைப்பாட்டு, தோற்றம் பாட்டு, மாப்பிள்ளைப்பாட்டு)

- ..................... ......
- ..............................................
- .........................................

---

3. (a) *(இந்தச் செயல்பாடு குழுவாக மதிப்பிட வேண்டியதாகும்-ஒரு குழுவில் 5 முதல் 8 குழந்தைகள்)*

தேசிய கீதம் சரியான இராகத்திலும், சரியான உச்சரிப்புடனும் பாடவும்(ஒவ்வொரு குழுவிற்கும் 5நிமிட நேரம்)

(b) கீழே கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதவும்.

1 தேசிய கீதத்தை எழுதியவர் யார்?

2 தேசிய கீதம் எந்த மொழியில் எழுதப்பட்டது?

3 தேசிய கீதத்தைப் பாடும் இரண்டு சூழல்களை எழுதவும்.

4 தேசிய கீதத்தை பாடுவதற்கு எடுக்கப்படும் நேரம் எவ்வளவு?

---

## விடைகள்

1. *நாட்டுப்புறப்பாடல்*

- சுருதி 4/3/2/1
- தாளம் 4/3/2/1
- தனித்தன்மை 4/3/2/1
- வெளியிடும் முறை 4/3/2/1

  - அனைத்து மேன்மைகளும் உள்ளன - 4
  - ஏறக்குறைய எல்லா மேன்மைகளும் உள்ளன. - 3
  - சில மேன்மைகளே உள்ளன - 2
  - இனியும் மேம்பட வேண்டியுள்ளது. - 1

---

2. *(a) தேசிய கீதம்*

- இராகம் 4/3/2/1
- தாளம் 4/3/2/1
- கருத்து தெளிவு 4/3/2/1
- சரியான உச்சரிப்பு 4/3/2/1
- சரியானநேரம் 4/3/2/1

  - அனைத்து மேன்மைகளும் உள்ளன. - 4
  - ஏறக்குறைய எல்லா மேன்மைகளும் உள்ளன. - 3

- சில மேன்மைகளே உள்ளன. - 2
- இனியும் மேம்பட வேண்டியுள்ளது. - 1

(b-1) இரவிந்திரநாத் தாகூர்

(b-2) வங்காளம்

(b-3) சுதந்திர தினம், குடியரசு தினம் (பொருத்தமான வேறு விடைகளையும் ஏற்றுக் கொள்ளலாம்)

(b-4) 50 முதல் 52 வினாடி

- நான்கும் சரியெனில் - 4
- மூன்று சரியெனில் - 3
- இரண்டு சரியெனில் - 2
- ஒன்று சரியெனில் - 1

## நாடகம்

வகுப்பு ; ஐந்து

நேரம் : 2 மணிநேரம்

*ஆசிரியர்களுக்கான பொதுக் குறிப்புகள்:*

- ஒவ்வொரு கேள்விக்கும் தேவையான முன்னேற்பாடுகள் நடத்த வேண்டியுள்ளது.
- அனைத்துக் குழந்தைகளுக்கும் தேவையான சமமான நேரம் கிடைக்கிறது என உறுதிப்படுத்த வேண்டும்.

1. (a) தாளம் இட்டு தயாரிக்கவும்

   இது ஒரு குழுச்செயல்பாடாகும். ஐந்து குழுக்கள். பஞ்ச நடைகளுக்கு சமமான வாய்மொழிச் சிந்து தாளம் இட்டு காண்பிக்கலாம்.

   (b) விடை எழுதுதல்

   பஞ்ச நடைகளிலுள்ல 'திரிச்ரம்', 'சதுஸ்ஹம்', 'கண்டம்', 'மிஸ்ற்', 'சங்கீர்ணம்' என்பவைகளின் எழுத்து வடிவமும், வாய்மொழிச் சிந்துவும் எழுதவும்

2. வாய்மொழிச் சிந்துவைச் சொல்லிக்கொண்டே பஞ்ச நடைகளுக்கு சுவடு வைக்கின்றனர் ( ஐந்துபேர் அடங்கிய குழுவாக வெளியிடலாம்)

3. நடனமாடுதல்

   ஐந்தாம் வகுப்புக் கேரள பாடநூலில்........................................................ என்ற கவிதைக்கு நடனமாடவும். (குழுச் செயல்பாடாக செய்தால் போதும், 15 நிமிடம் நேரம் எடுக்கலாம்).

## விடைகள்.

1. (a) *தாளம் இட்டுக் காணிக்கவும்*

- தாளத்தோடு கூடிய வெளியீடு.
- சரியா வாய்மொழிச் சிந்து.
- தாளத்திற்கும், வாய்த்தாரிக்கும் இடையிலுள்ள ஒற்றுமை

  - அனைத்து மேன்மைகளும் உள்ளன. - 4
  - ஏறக்குறைய எல்லா மேன்மைகளும் உள்ளன. - 3
  - சில மேன்மைகளே உள்ளன. - 2
  - இனியும் மேம்பட வேண்டும். - 1

(b)

| | | |
|---|---|---|
| திஸ்றம் | - தக்கிட | - 3 எழுத்து |
| சதுஸ்றம் | - தகதிமி | - 4 எழுத்து |
| கண்டம் | - தக தக்கிட்ட | - 5 எழுத்து |
| மிஸ்றம் | - தகதிமி தக்கிட்ட | - 7 எழுத்து |
| சங்கீர்ணம் | - தக திமி தக தக்கிட்ட | - 9 எழுத்து |

- அனைத்தும் சரியெனில் - 4
- 4 சரியெனில் - 3
- 3 சரியெனில் - 2
- ஒன்றோ இரண்டு சரியெனில் - 1

---

2.
- தாளத்தை அறிந்து வெளியிடுதல்.
- சரியான வாய்மொழிச் சிந்து.
- தாளத்திற்கும் வாய்மொழிக்கும் உள்ள ஒற்றுமை.

  - அனைத்து மேன்மைகளும் உள்ளன - 4
  - ஏறக்குறைய எல்லா மேன்மைகளும் உள்ளன - 3
  - சில மேன்மைகள் மட்டும் உள்ளன - 2
  - இனியும் மேம்பட வேண்டியுள்ளது. - 1

---

2.
- சிறப்பாக வெளியிடுதல்.
- முழுமையான கருத்துப்பரிமாற்றம்
- பங்கேற்பு

  - அனைத்து மேன்மைகளும் உள்ளன - 4
  - ஏறக்குறைய எல்லா மேன்மைகளும் உள்ளன - 3
  - சில மேன்மைகள் மட்டும் உள்ளன - 2
  - இனியும் மேம்பட வேண்டியுள்ளது. - 1

# நாடகம்

வகுப்பு : ஐந்து                                    நேரம் : 2 மணிநேரம்

*ஆசிரியர்களுக்கான பொதுக் குறிப்புகள்:*

- ஒவ்வொரு கேள்விக்கும் தேவையான முன்னேற்பாடுகள் நடத்த வேண்டியுள்ளது.
- அனைத்துக் குழந்தைகளுக்கும் தேவையான சமமான நேரம் கிடைக்கி றது என உறுதிப்படுத்த வேண்டும்.

## செயல்பாடு 1

### வாசிப்போம், நடிப்போம்

1. குழந்தைகளை ஐந்துபோர் கொண்ட குழுக்களாக்கவும். ஒவ்வொரு குழுவிற்கும் கீழே கொடுக்கப்பட்டள்ள செயல்பாடுகளை எழுதிக் கொடுக்கின்றனர், குறிப்பில் எழுதியதை நடித்துக்காட்டுமாறு கூறப்படுகிறது.( ஒரு குழு நடித்துக்காட்டும் போது அடுத்த குழு விற்குக் குறிப்பு கொடுக்கவும். அவர்கள் தயாராகட்டும். தயாரெடுப்பதற்கும். வெளியி டுவதற்கும் அனைத்துக் குழுவிற்கும் சமமான நேரம் கொடுக்க வேண்டும்)

குறிப்புகள்

- பூனை இரையைப் பிடிக்க வருகிறது.
- பருந்தப் பார்க்கும் போது கோழிகள் பயந்து ஓடி ஒளிக்கின்றன.
- காகங்கள் உணவுக் கழிவுகளைக் கொத்திக் கொண்டிருக்கிறது.
- குடியரசு தின அணிவகுப்பு.
- வலசைப் பறவைகள் பறந்து வருதல்.
- எறும்பு அணிவகுத்துச் செல்லுதல்.

## செயல்பாடு II

### உரையால் உருவாக்கம்.

2. ஐந்தாம் வகுப்புக் கேரள பாடநூலிலுள்ள அமிழ் தமிழ்து என்ற பாடப்பகுதியைத் தேர்ந் தெடுத்துச் சூழல்கள் ஒவ்வொரு குழுவிற்கும் கொடுக்கப்படுகிறது. அதிலுள்ள உரையாடல் உருவாகட்டும். குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு உரையாடலைக் கூறி வெளி யிடவும்,(ஒரு குழு வெளியிடும் போது மற்ற குழுவிற்கு சூழல் கொடுத்து உரையா டலை எழுத வாய்ப்பு கொடுக்கவும். உரையாடலை எழுதவும், வெளியிடவும் அனைத்து குழுவிற்கும் சமமான நேரம் கொடுக்க வேண்டும்.

**செயல்பாடு 1II**

**ஒவ்வொரு காலநிலைகளிலும்.**

3. ஐந்து போர் அடங்கிய குழு, கீழே கூறப்பட்டுள்ள காலநிலைகளுக்கேற்ப நடக்கின்ற காரியங்களை வேறுபட்ட பாவனையோடு நடிக்கவும். ஒவ்வொரு குழுவும் ஏதாவது மூன்று சூழல்களைத் தொடர்ச்சியாக செய்து காண்பிக்க வேண்டும். குழந்தைகள் செய்துகொண்டிருக்கும் போது ஆசிரியர் திடீரென அடுத்த சூழலைக் கூறவும்.
(ஒரு குழு செய்ததை மற்ற குழுக்கள் மீண்டும் பின்பற்றாமல் இருப்பதற்காக ஒருவருக்கொருவர் பார்க்காத முறையில் வெளியிட வேண்டும் )

சூழ்நிலைகள்;

பெரு மழை.
சுட்டெரிக்கும் தார் சாலை.
அடர்ந்த காடு.
முட்டிற்கு கீழ் வரை தண்ணீர் உள்ள இடம்.
வழு வழுப்பான பாறைகள் உள்ள இடம்.
சேறு நிறைந்த வயல் வரம்பு.

---

## விடைகள்

**செயல்பாடு 1**

**வாசிப்போம் நடிப்போம்**

1.
- உடல் அசைவுகளைப் பயன்படுத்துதல்.
- பொருத்தமான அசைவுகள்.
- செயல்படுவதற்கான மனது.
- நடிப்பு
  - அனைத்து மேன்மைகளும் உள்ளன - 4
  - ஏறக்குறைய எல்லா மேன்மைகளும் உள்ளன. - 3
  - சில மேன்மைகளே உள்ளன - 2
  - இனியும் மேம்பட வேண்டியுள்ளது. - 1

---

**செயல்பாடு II**

**உரையாடல் உருவாக்கம்.**

2.
- கருத்துத் தெளிவு.
- உரையாடல்.
- அரங்கத்தின் பயன்பாடு.
- கதாபாத்திரங்களின் பொருத்தம்.

- அனைத்து மேன்மைகளும் உள்ளன - 4
- ஏறக்குறைய எல்லா மேன்மைகளும் உள்ளன. - 3
- சில மேன்மைகளே உள்ளன - 2
- இனியும் மேம்பட வேண்டியுள்ளது. - 1

---

**செயல்பாடு 1II**

**ஒவ்வொரு காலநிலைகளிலும்**

3.
- ■ பொருத்தமான உடல் அசைவுகள்.
- ■ சூழ்நிலைக்கேற்ற முகபாவனை.
- ■ சூழிநிலைக்கேற்ப செயல்படுவதற்கான திறன்.
- ■ தற்போது சூழ்நிலைக்கேற்றவாறு செயல்படுவதற்கான திறன்.

    - அனைத்து மேன்மைகளும் உள்ளன - 4
    - ஏறக்குறைய எல்லா மேன்மைகளும் உள்ளன. - 3
    - சில மேன்மைகளே உள்ளன - 2
    - இனியும் மேம்பட வேண்டியுள்ளது. - 1